வரு.74 இல. 30 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி
2022 ஜூலை 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை July 24 Sunday, 2022
24 பக்கங்கள் 80/-




06 துரித கதியில் முன்னேறியுள்ள இந்திய தேசம்!
07 நம்பிக்கையைத் தந்துள்ள அரசியல் மாற்றம்!
11 மீண்டும் தீவிரமடையுமா கொவிட் தொற்று
12 எல்லோரும் பதவி விலகினால் நாட்டை நடத்துவது யார்?











இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வியாழக்கிழமை (21) பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார். பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், முதற்பெண்மணி பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## நாட்டில் அமைதியைப் பேண படையினருக்கு அழைப்பு

அதிவிசேட வர்த்தமானி வெளியீடு




**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின்படி நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் 04



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் பிரதமராக சபை முதல்வர் தினேஷ் குணவர்தன நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். கொழும்பு ப்ளவர் வீதியிலுள்ள பிரதமர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உத்தியோகபூர்வ நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் அவர் நாட்டின் 27ஆவது பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

### நாட்டில் அரசியல்,பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த

# சர்வகட்சி அரசாங்கம் விரைவில் அமைக்கப்படும்

### ஜனாதிபதி ரணில் தலைமையில் கூடிய முதலாவது அமைச்சரவையில் தீர்மானம்

**நமது நிருபர்**

நாட்டில் அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த விரைவில் சர்வகட்சி அரசாங்கமொன்று அமைக்கப்படுவதற்காக அனைத்து கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படுமென நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு அரசாங்கமொன்றை அமைக்கும் வரையில் இடைக்கால அமைச்சரவையொன்றே தற்போது நியமிக்கப்பட்டதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்தில் இந்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

#### அமைச்சரவை பேச்சாளராக அமைச்சர் பந்துல குணவர்த்தன நியமனம்



இதேவேளை, பாராளுமன்ற நடவடிக்கைகளை மிகவும் தரமானதாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுப்பது தொடர்பாகவும் அமைச்சரவையில் கவனம் செலுத்தப்பட்டதுடன் அனைத்து அமைச்சர்களும் பாராளுமன்றத்துக்கு காலை சமுகமளிக்க வேண்டுமென்றும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் பாராளுமன்றத்தில் கேட்கப்படும் 04

## நாட்டை கட்டியெழுப்பும் வேலை திட்டத்துக்கு ஒத்துழைப்பு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



நாட்டை கட்டியெழுப்பும் வேவைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாரென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அத்துடன் தேசிய திட்டத்தை தயாரித்து அதனை இலக்கு நோக்கி கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற எம்.பிக்களின் வாக்கெடுப்பில் புதிய ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு எங்களின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன்.

இன்றைய நாளில் இவ்வாறான நேரத்தை ஒதுக்கி ஜனாதிபதியை தெரிவு செய்யும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டது ஏன் என்பதனை தெரிந்துகொள்ள வேண்டும். 04

## நாட்டின் முன்னேற்ற திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

### முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும



நாட்டின் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க தயார். அரசியல் மீது நாட்டு மக்கள் கொண்டுள்ள அவநம்பிக்கையை இல்லாதொழிக்கும் பொறுப்பு சகல தரப்பினருக்கும் உண்டென ஜனாதிபதி தெரிவில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார். பாராளுமன்றத்தில் கடந்த 20 ஆம் திகதி புதன்கிழமை புதிய ஜனாதிபதிக்கான தெரிவு நிறைவடைந்த பின்னர் சபையில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுதந்திரத்துக்கு பின்னரான காலப்பகுதியில் நாடு தற்போது பெரும் நெருக்கடியான காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளது. 04

## காலிமுகத்திடல் சம்பவம் சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

### சங்கத் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவிப்பு



ஜனாதிபதி செயலகத்துக்கு அருகாமையிலுள்ள காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஆயுதப்படையினர் வெள்ளிக்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்தியமைக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அத்தோடு ஒரு சட்டத்தரணி மற்றும் பல ஊடகவியலாளர்கள் உட்பட பலர் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதை அறிந்திருப்பதாக சங்கம் தெரிவித்துள்ளது. சம்பவத்தின் போது சட்டத்தரணி நுவன் போபகே உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.இந் நிலையில் மக்கள் தாக்கப்பட்டதாக 04

## வாகன இலக்கத் தகட்டை மாற்றினால் 03 மாதம் சிறை

### பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு செல்லும் போது வாகனத்தின் இலக்கத் தகடுகளை மாற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் 20,000 ரூபா அபராதம் அல்லது மூன்று மாத சிறைத்தண்டனை விதிக்கப்படுமென பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் குற்றத்துக்காக வாகனத்தின் உரிமையாளரைக் கைது செய்து, அந்தக் குற்றத்துக்கான தண்டனையை நீதிமன்றத்தில் வழங்க முடியுமென்று அதிகாரி கூறினார்.

1984 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது மற்றும் 04

## புதிய ஜனாதிபதி ரணிலுடன் இணைந்து பணிபுரிய விருப்பம்

### சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகள் தெரிவிப்பு



இலங்கையின் புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுடன் எதிர்வரும் காலங்களில் ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு எதிர்பார்த்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகளின் உயர்மட்ட இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் அமைதியானதும் ஸ்திரமானதுமான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு 04



## எங்கள் கருத்து...

### நாட்டை மீட்டெடுப்பதற்கான நம்பிக்கைக்குரிய தெரிவு

இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுள்ள எட்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமையன்று பதவியேற்றுக் கொண்டுள்ளார். அதேசமயம் நாட்டின் பிரதமராக தினேஷ் குணவர்த்தன பதவியேற்றுள்ளார். ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டில் நிலவிய கடுமையான பொருளாதார நெருக்கடியையடுத்து மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் காரணமாக தனது பதவியிலிருந்து விலகியதையடுத்து, நாட்டின் அரசியலமைப்பு விதிமுறைகளுக்கேற்ப பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டதில் ரணில் விக்கிரமசிங்க மிகப்பெரும் வெற்றியை ஈட்டியிருக்கிறார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈட்டியிருக்கும் அவ்வெற்றியை இலங்கையர்கள் மாத்திரமன்றி சர்வதேசமே வியப்புடன் உற்றுநோக்குகின்றது. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற மொத்தம் 225 உறுப்பினர்களில் இருவர் வாக்களிக்கவில்லை, நான்கு வாக்குகள் நிராகரிக்கப்பட்டு விட்டன. எனவே அளிக்கப்பட்ட 219 வாக்குகளில் 134 எம்.பிக்களின் ஆதரவு வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளார் ரணில் விக்கிரமசிங்க.

நாட்டின் ஜனாதிபதியாக அவர் தெரிவானதையிட்டு ஆதரவுத் தரப்பிலும், எதிரணித் தரப்பிலும் எதிரும்புதிருமான விமர்சனங்கள் இருக்கக் கூடும். ஆனாலும் நாட்டின் அரசியலமைப்பு வரையறைகளுக்கு உட்பட்டதாகவும், பாராளுமன்றத்தில் அதிகூடிய உறுப்பினர்களின் ஆதரவு வாக்குகளுடனும் ஜனாதிபதியாக அவர் தெரிவாகியிருக்கின்றார். 04

## நாட்டில் மீண்டும் கொவிட் மரணங்கள் அதிகரிப்பு



### நோயாளர் எண்ணிக்கை 227ஆக உயர்வு
### தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் நேற்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவிக்கையில்:

நாட்டில் கடந்த சில தினங்களாக தினசரி கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 50ஐக் கடந்துள்ளதாகவும் நேற்று முன்தினம் கொரோனா வைரஸ் 04



## 70 ஆண்டு கால வரலாறு கொண்ட கட்சிக்கு இன்று ஒரு சிலரால் வீழ்ச்சி

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை கவலை 04

### அமைதியாக கலைந்து செல்லுங்கள் என பலதடவைகள் கூறினோம்;

## மாற்று வழி இல்லாத நிலையிலேயே ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியேற்றம்

### பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி செயலகத்தை ஆக்கிரமித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கு அமைதியாக விலகிச் செல்லுமாறு பல தடவைகள் தெரிவித்திருந்த போதும் அவர்கள் அதனை நிராகரித்து பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிசாரிடமும் உயர் பொலிஸ் அதிகாரிகளிடமும் 04



## இந்தியாவின் ஜனாதிபதியாக திரௌபதி முர்மு தெரிவானார்

### பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இந்திய ஜனாதிபதித் தேர்தலில் தேசிய ஜனநாயக் கூட்டணியின் வேட்பாளர் திரௌபதி முர்மு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்கு எண்ணிக்கை ஆரம்பமானது தொடக்கம் முதலே திரௌபதி முர்மு முன்னிலை வகித்து வந்தார். 04

## இந்தியா 10 ஆண்டுகளில் இலங்கைக்கு 1800 மில். டொலர்கள் உதவி

அயல்நாட்டுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியா இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா இலங்கைக்கு 1800 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிதி உதவிகளுக்கு அப்பால் இந்தியா இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 04



# ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை பதவியேற்பின் போது...













படங்கள்: ஹிரந்த குணதிலக்க



# யார் இந்த திரௌபதி முர்மு?

## முதல் பழங்குடியின பெண் ஜனாதிபதி

குடியரசுத் தலைவர் தேர்தலில் பாஜக கூட்டணியின் வேட்பாளராக போட்டியிட்டு வென்ற திரௌபதி முர்மு யார்? எந்த இடத்திலிருந்து அவர் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறார் ?

இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் நிறைவடைவதைத் தொடர்ந்து கடந்த ஜூலை 18 ஆம் திகதி நாட்டின் 15 வது குடியரசுத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்ட திரௌபதி முர்மு வெற்றி பெற்றுள்ளார்.



ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவரான திரௌபதி முர்மு பழங்குடியின வகுப்பை சேர்ந்தவர். குடியரசுத் தலைவராக தேர்வு செய்யப்பட்ட இவர் இந்தியாவின் முதல் பழங்குடியின பெண் குடியரசுத் தலைவர் என்ற பெருமையை பெற்று உள்ளார். ஒடிசாவின் மாயுர்பஞ்ச் மாவட்டத்தில் கடந்த 1958 ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் திகதி பிறந்தார் திரௌபதி முர்மு. கடந்த 2017 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலின்போதும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக இவரது பெயர் பரிசீலிக்கப்பட்டது. ஆனால், பீகாரை சேர்ந்த ராம்நாத் கோவிந்துக்கு பாஜக தலைமை வாய்ப்பு வழங்கியது. ஒடிசா தலைநகர் புவனேஷ்வரில் உள்ள ரமாதேவி மகளிர் கல்லூரியில் பட்டம் படித்த இவர் 20 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் மற்றும் சமூக பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார். பட்டப்படிப்பை முடித்த பிறகு ஆசிரியராக பணியாற்றிய இவர், அதன் பின்னர் அரசு ஊழியராக நீர்வளம் மற்றும் மின்சாரத் துறையில் இளநிலை உதவியாளராக பணியாற்றியவர். பின்னர் ஒரு சாதாரண கவுன்சிலராக தனது அரசியல் வாழ்க்கையை தொடங்கிய திரௌபதி முர்மு 2 முறை ஒடிசா மாநில சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்திருக்கிறார். பாஜகவை சேர்ந்த இவர் கடந்த 2000 ஆம் ஆண்டில் ஒடிசாவில் பாஜக, பிஜு ஜனதா தளம் கட்சிகளின் கூட்டணி ஆட்சி நடைபெற்றபோது அமைச்சராக பதவியேற்றார். ஒடிசா மாநிலத்தில் வர்த்தகம் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சராகவும்,



அதைத் தொடர்ந்து மீன்வளம் மற்றும் விலங்குகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சராகவும் திரௌபதி முர்மு பதவி வகித்து இருக்கிறார்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் வென்றதற்குத் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டதன் மூலம், ஒடிசாவிலிருந்து ஆளுநராக நியமிக்கப்பட்ட முதல் பெண் மற்றும் முதல் பழங்குடியின ஆளுநர் என்ற பெருமையை அவர் பெற்றார். இந்த நிலையில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசுத் தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு நாட்டின் 15 வது குடியரசுத் தலைவராக பொறுப்பேற்க இருக்கிறார் திரௌபதி முர்மு. நாளை 25 ஆம் திகதி இவர் பதவியேற்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அரசியல் சாணக்கியம் புரிந்து கொள்ள திராணியற்ற 'தமிழின ஏகபிரதிநிதிகள்!'

**இலங்கை அரசியலில் சிறுபான்மையின அரசியல் கட்சிகளின் வகிபாகம் தொன்றுதொட்டு தீர்மானம் மிக்க சக்தியாகக் காணப்பட்டு வருகின்றது. பிரித்தானிய காலனித்துவத்தி– லிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னரான அரசியல் நகர்வுகளில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் செயற்பாட்டு அரசியிலில் தீவிரமாக செயற்பட்டு வந்துள்ளன என்பதை மறக்க முடியாது.**



எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் தந்தை செல்வா போன்ற சிறுபான்மை அரசியல் தலைவர்கள் அப்போதைய அரசுக்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொண்டிருந்தமை, அதன் பின்னரான காலப் பகுதியில் தமிழ்க் கட்சி பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்பட்டிருந்தமை போன்ற பல்வேறு சம்பவங்களை இதற்கு உதாரணமாகக் கூற முடியும்.

சுதந்திர இலங்கையில் அண்மித்த காலம் வரை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளுமே மத்தியில் ஆட்சியமைக்கும் சக்திகளாகக் காணப்பட்டன. கடந்த ஒரு தசாப்தத்துக்கு உட்பட்ட காலத்திலேயே சுதந்திரக் கட்சியின் அடியொற்றி வந்தவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட பொதுஜன பெரமுன கட்சி ஆட்சியமைக்கும் அரசியல் சக்தியாக மாறியிருந்தது.

பிரதான தேசியக் கட்சிகள் மாறி மாறி ஆட்சிக்கு வரும் போது குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகள் அப்போதிருக்கும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு தமது ஆதரவு யாருக்கு என்பதைத் தீர்மானித்து வந்துள்ளன. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என வரும் போது எந்தத் தரப்பினருக்கு ஆதரவு வழங்குவது என்பதை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாமாகவே தீர்மானித்துக் கொள்வர்.

ஜனாதிபதித் தேர்தல்களை எடுத்து நோக்குகையில், 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க விடாது எல்.ரி.ரி.ஈயினர் தடுத்தமையால் தமிழ் அரசியல்வாதிகளால் இது தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியாது போனது.


எனினும், அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கும், 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கும், 2020 ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கிய சஜித் பிரேமதாசவுக்கும் ஆதரவு வழங்க அநேகமான சிறுபான்மைக் கட்சிகள் தீர்மானம் எடுத்திருந்தன.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதில் பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள அரசியல் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதில் அடங்குகிறது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்போதைய அரசாங்கத்தை ஆதரிப்பதற்கு முடிவெடுத்திருந்தது. நல்லாட்சி அரசாங்கம் பல்வேறு இக்கட்டான சவால்களுக்கு முகங்கொடுத்திருந்த போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பானது அரசுக்குக் கைகொடுத்திருந்தது.

மைத்திரிபால சிறிசேன பிரதமர் பதவியில் மாற்றத்தைக் கொண்டு வந்த வேளையில் பாராளுமன்றத்தில் குழப்பம் ஏற்பட்ட போது, அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்கும், அதன் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட வரவுசெலவுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் தமிழ்க் கூட்டமைப்பினர் நிபந்தனையற்ற ஆதரவுகளை வழங்கியிருந்தனர்.

இவ்வாறு ஆதரவு வழங்கும் போது அரசியல் கைதிகளின் விடுதலை, அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களை நிபந்தனையாக முன்வைத்திருந்தாலும் அவற்றை நிறைவேற்றியிருப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டன. இருந்தாலும் தமிழ் மக்கள் நலன்களைப் பொறுத்தவரை மிகவும் குறைந்தளவு பலன்களையே அக்காலத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்தது.



## மக்களின் விருப்புகளை மக்கள் பிரதிநிதிகள் புரிந்து கொள்வது எப்போது?



இவ்வாறான சூழ்நிலையில் கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவைத் தொடர்ந்து வெற்றிடமான ஜனாதிபதி பதவிக்கு பாராளுமன்றத்தின் ஊடாக புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்றமையை நாம் அறிவோம்.

இதில் பதில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் முன்மொழியப்பட்ட டலஸ் அழகப்பெரும, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக ஆகியோர் போட்டியிட்டனர்.

போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவரும் தமக்கு ஆதரவு கோரும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். இது தொடர்பில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பெரும்பாலான சிறுபான்மைக் கட்சிகள் எதிர்க்கட்சித் தலைவரினால் முன்மொழியப்பட்ட பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்திருந்தன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை நிராகரித்திருந்த சிறுபான்மைக் கட்சிகளே இப்போது மீண்டுமொரு பொதுஜன பெரமுன வேட்பாளரை ஆதரிக்கும் முடிவை எடுத்திருந்தன.

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை டலஸ் அழகப்பெரும மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் நேரடியாகச் சென்று சந்தித்து ஆதரவு கோரியிருந்தனர்.

இது விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பினருக்கிடையில் இருவேறு நிலைப்பாடுகள் காணப்பட்ட போதும், ஒரு சிலருடைய விருப்பிற்கு அமைய டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் நிலைப்பாடு எடுக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இவ்வாறு ஆதரவு வழங்கும் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் டலஸ் அழகப்பெரரும தரப்பிடமிருந்து கூட்டமைப்பினர் எவ்வித உறுதிமொழிகளையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லையென்ற விமர்சனமும் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதேநேரம், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர் ஒருவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மிகவும் நெருக்கமாக செயற்பட்டு வந்திருந்த போதும் தற்போது அந்த அரசியல்வாதி இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முரண்பட்டுக் கொண்டிருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் பாராளுமன்றத்திலும் முரண்பட்டுக் கொண்டுள்ளனர். இவ்வாறானவர்களின் விருப்புக்களே தமிழ்க் கூட்டமைப்பு டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் முடிவை எடுப்பதற்குத் தள்ளியிருக்கலாம் என்ற பார்வையும் காணப்படுகிறது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக மக்களின் எதிர்காலம் குறித்து சிந்தித்து செயற்படும் பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குக் காணப்படுகிறது. தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் தங்களது சமூகம் தொடர்பிலான கூட்டுப்பொறுப்பு அவர்களுக்கு உண்டு என்பதையும் மக்களின் பிரதிநிதிகளாகிய அவர்கள் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்.

மறுபக்கத்தில் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்டவர்களுக்கு ஆதரவு வழங்கும் விடயத்தில் ஒரு சில வெளிநாட்டு அரசுகளின் அழுத்தங்கள் இருந்ததாகக் கூறப்பட்டாலும், அது எந்தளவுக்கு உண்மை என்பது உறுதியாகத் தெரியவில்லை.

இவ்வாறான பின்னணியில் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க அதிகூடிய வாக்குகளைப் பெற்று நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர்களை ஆதரிக்கும் விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் தீர்மானம் வேறாக இருந்த போதும், வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இரு கட்சிகளின் தலைவர்கள் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தியிருப்பதாகவே தெரிகிறது.

## என்றும் தொடருகின்ற எதிர்ப்பு அரசியலால் விளையப் போகும் அனுகூலம் எதுவுமில்லை!

எனவே, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக் கொள்பவர்கள் தமது சொந்த விருப்புவெறுப்புக்களுக்கு அப்பால் நடைமுறைச் சாத்தியமாக செயற்பட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் தீர்மானங்களை எதிர்காலத்திலாவது எடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பாகும்.

அதேசமயம் சுதந்திர இலங்கையின் வரலாற்றில் எதிர்ப்பு அரசியல் நடத்துவதே தமிழ்க் கட்சிகளின் பாரம்பரியம் என்றாகிவிட்டது. நிறைவேற முடியாத வாக்குறுதிகளை மக்களுக்கு முன்பாக வைத்து காலத்தை வீணடிப்பதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் கொள்கையென்று வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் கருதுவதை தமிழ்க் கூட்டமைப்பு இனிமேலாவது கவனத்தில் கொள்வது அவசியம்.

நாட்டின் அரசியல் தலைமை மாற்றங்களுக்கேற்ப சிறுபான்மையினத்தின் ஏனைய கட்சிகள் தங்களது முடிவுகளை மாற்றிக் கொண்டு தங்களது இனத்தின் முன்னேற்றத்துக்காகச் செயற்படுவது பாராட்டத்தக்க விடயமாகும். அவ்வாறான அரசியல் சாணக்கியத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்காலத்திலாவது கடைப்பிடித்தாலேயே தமிழ் மக்களுக்கு விமோசனம் ஏற்படும். இல்லையேல் தமிழினத்தின் தலைவிதியானது எதிர்ப்பு அரசியலிலேயே எக்காலமும் நிலைத்து நிற்கும் என்பதுதான் உண்மை.

**நடைமுறைச் சாத்தியமற்ற நம்பிக்கைகளை தமிழ் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருப்பதால் இனத்தின் எதிர்காலமே பாழாகின்றது. நாட்டின் அரசியல் தலைமை மாற்றங்களைப் புரிந்து கொண்டு, முரண்பாடுகள் களைந்து, முன்னோக்கிச் செல்வதன் மூலமே மக்களின் அபிலாஷைகள் நிறைவேறும்**

---




# வன்முறையிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய நாட்டின் ஜனநாயகம்

இலங்கையின் சரித்திரத்தில் அண்மைக் காலமாக மோசமான பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. நடுத்தர வருமானமுள்ள நாட்டில் ஜனநாயக ஆட்சி முறை முகம் கொடுத்த பாரிய பிரச்சினையை பகுத்தறிவுடன் ஆராய வேண்டும். பொருளாதாரம் மோசமான வீழ்ச்சியைச் சந்தித்துள்ள வேளையில், அமைதியிழந்தவர்கள் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் இறங்கினர். அந்த வேளையில் பல சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் காரியாலயம் என்பவற்றை போராட்டக்காரர்கள் கைப்பற்றியதோடு, பிரதமரின் தனிப்பட்ட இல்லத்தை தீயிட்டுக் கொளுத்தியுமுள்ளார்கள். ஒரு மாதத்திற்கு முன்னரும் உயிர்களைக் காவு கொண்டு, வீடுகள் மற்றும் சொத்துக்களை எரித்த சம்பவங்கள் இடம்பெற்றன.

அரசாங்கத்துக்கு எதிரான அமைதியான போராட்டம் என ஆரம்பமாகிய போதிலும், போராட்டக்காரர்களில் ஒரு தரப்பினர் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு மேற்கொண்ட செயல்களால் ஏற்பட்ட சேதங்கள் அதிகம். அவ்வாறான சம்பவங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அரசுக்குச் சொந்தமான சொத்துகளைக் கைப்பற்றியமை மற்றும் கைப்பற்றிய இடங்களில் தங்கியிருந்த விதம் ஒழுக்கமான சமூகத்தை வெட்கப்பட வைத்துள்ளது. ரூபவாஹினியில் நுழைந்து அவர்கள் நடந்து கொண்ட விதம் ஊடக சுதந்திரம், ஊடக கலாசாரத்தை மதிப்பவர்களை கவலை கொள்ளச் செய்தது. மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட அலைவரிசைகளை கூட அச்சுறுத்துவதற்காக விரல் நீட்டப்பட்டது. ஜனநாயகத்தை மதிக்கும் சமூகம் இவ்வாறான வன்முறைகளை அனுமதிக்கக் கூடாது என்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

பொருளாதாரம் பாதிப்புக்குள்ளாகும் வேளையில், வறுமை அதிகரிகரிப்பதால் உருவாகின்ற அழுத்தம் எமக்குத் தெரிகிறது. கல்வி சீர்குலையும் போது மற்றும் வைத்தியசாலைகளில் மருந்து மாத்திரைகள் கூட தட்டுப்பாட்டுக்குள்ளாகும் வேலையில் மக்கள் அமைதியிழப்பது புதுமையான ஒன்றல்ல. மக்களால் அதிகாரம் வழங்கப்பட்ட அரசாங்கம் தோல்வி அடையுமானால், அந்த அரசாங்கத்தை வெளியேற்றுவதற்கு முறையொன்று உண்டு, நாட்டிற்கு அரசியலமைப்பு ஒன்று உள்ளது. அரசியலமைப்பின்படி முடிவு எடுக்க முடியும். அரசியலமைப்பை ஒரு புறம் வீசிவிட்டு போராட்டத்தை சட்டமாக மாற்றுவது முன்னுதாரணமாக மாறக் கூடும். நாளை அதிகாரத்துக்கு வரும் அரசாங்கம் கூட போராட்டத்தின் பின்னர் வெளியேற்றப்படக் கூடிய சந்தர்ப்பம் உருவாகலாம். வன்முறையால் அரசாங்கத்தைக் கைப்பற்றுவது ஒரு போதும் நல்ல நிலைமையல்ல.

கடந்த நான்கு தசாப்தங்களாக பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட கலவரங்கள் மற்றும் பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்து அவற்றால் பாடங்களைக் கற்ற சமூகத்தை மீண்டும் மீண்டும் பீதியால் அந்த இடத்துக்கே தள்ளுவதற்கு இடம் அளிக்கக் கூடாது. அரசாங்கமொன்றின் சில கொள்கைகளை விமர்சனம் செய்வதையும், அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போராட்டத்தையும் நியாயப்படுத்தலாம் என்றாலும், சிறிய அணியினர் சட்டத்தை மீறி நடவடிக்கைகளில் ஈடுபடுவது பெரும்பான்மையானவர்களைஆபத்துக்குள் தள்ளும் செயலாகும்.

ஒரு குழுவினர் நாட்டை ஆட்சி செய்வது, ஊழல் மற்றும் மோசடி போன்ற விடயங்களில் ஆட்சியாளர்களுக்கு எதிரான எதிர்ப்புகள் உள்ளன. அரசாங்கத்தை மாற்றும் விதம் பற்றி அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்போடியா, பொல்பொட் பின்பற்றிய முறை இன்றைய சமூகத்திற்கு பொருந்தாது. சீனாவின் கலாசார புரட்சியோ வேறு நாட்டின் அடிப்படைவாத கொள்கையோ இலங்கை போன்ற நாடுகளுக்கு தாங்கக் கூடியதல்ல. நீண்ட வரலாறு உள்ள கலாசார தனித்தன்மையுடனான இலங்கையின் மக்களை மீண்டும் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிக்க வற்புறுத்துவது பொருத்தமானதல்ல.

உலகில் சில நாடுகள் பரிசோதித்து அவற்றால் எதுவித பலனும் இல்லை என உறுதி செய்யப்பட்ட கோட்பாடுகளை பலாத்காரமாக சமூகத்தில் புகுத்த முயற்சி செய்வது மோசமான நிலைமையாகும். மக்கள் நியமித்த ஆட்சியாளர்கள் மக்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாக்க வேண்டியுள்ளதோடு, பாதுகாப்புப் பிரிவினர் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் பேரழிவுகள் குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும். ஜனநாயகத்துக்கு அமைய மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்தி சமமான சந்தர்ப்பங்களை உறுதி செய்வது முக்கியமென்றாலும், அதனை செய்ய வேண்டியது மக்களின் ஆணை மூலமாக என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

பாராளுமன்றத்தில் நிகழும் மாற்றங்களை தாங்கிக் கொள்ள எமக்கு தைரியம் அவசியம். குறைபாடுகளை நிவர்த்தி செய்து மீண்டும் எழுச்சி பெறத் தேவையான ஒற்றுமை மிகவும் முக்கியமாகும். அழிவின் மூலம் பொற்காலம் உருவாகாது. ஒரு சிறு அணியினரின் கோஷத்தால் பெரும்பான்மையானோரின் குரல் அடங்கிப் போகக் கூடாது. சமாதானமாக, இணக்கப்பாட்டுடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டியதோடு பொதுமக்களின் உடைமைகளை அழித்து மக்களை தவறாக வழி நடத்துபவர்களை மீண்டும் சரியான பாதைக்கு கொண்டு வர வேண்டும். ஜனநாயகத்தை தவிர வேறு முறைகளை ஏற்றுக் கொள்ள இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் சமூகம் தயாராக இல்லை. அவ்வாறான ஒருமைப்பாடு உள்ளதா என்பது அரசியல் அமைப்பு ரீதியாக நடத்தப்படும் தேர்தலில் மூலம் எடுக்க வேண்டிய முடிவாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...✍

# 70 ஆண்டு கால வரலாறு கொண்ட கட்சிக்கு இன்று ஒரு சிலரால் வீழ்ச்சி

## இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை கவலை

70 ஆண்டு கால அனுபவத்தை கொண்டுள்ள ஒரு கட்சியாக நாம் இருக்கும் போது, தந்திரோபாயமற்ற, பொறுப்பற்ற, தன்னிச்சையான செயற்பாடுகள் விபரீதத்தை ஏற்படுத்தி இருக்கின்றதென இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கவலை தெரிவித்துள்ளார். சமகால நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற கூட்டம் நடைபெற்றபோது அங்கு சென்ற டலஸ் அழகப்பெரும மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோருடன் எழுத்து மூலம் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. நான் அந்த நிகழ்வுக்கு போக முடியவில்லை. இந்த விடயம் இரவோடு இரவாக ஊடகங்களுக்கு செய்திகளாக சென்றிருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தல் நடக்கின்ற நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டாக பிளவுப்பட்டு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் டலஸ் அழகப்பெரும மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உடன்பாட்டை ஏற்படுத்தி இருக்கிறார்களென்ற செய்தியை இரவில் தெரியப்படுத்தும் நிலை உருவானது.

இது பாரதூரமான நிலைமை, அவ்வாறு உடன்பாடு ஏற்பட்டிருந்தால் அதனை வெற்றி பெற்றதற்கு பின்னர் வெளியிட்டிருக்க முடியும். பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு அது தெரிந்தால் போதுமானது. அதற்கிடையில் அதனை வெளியே கூறியதை ஏற்கமுடியாது. இதன் காரணத்தினாலும் எதிர்பாராத தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கலாம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இந்தியா நிர்பந்தித்து தான் ரணிலுக்கு எதிரான தீர்மானத்தை எடுக்க வேண்டுமென்ற கருத்து அங்கு பேசப்பட்டு இருக்கின்றதென தகவல் வெளியாகியுள்ளது.

அதன் உண்மை எனக்கு தெரியாது. எதுவாக இருந்தாலும் அவ்வாறு இந்தியாவினுடைய பெயரை உச்சரித்து அந்த தீர்மானத்தை எடுத்ததை நான் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றேன்.

இது இராஜதந்திரமற்ற, மூலோபாயமற்ற விடயம் என்பதுடன் ஒரு பிரச்சினையை உருவாக்கியிருக்கின்றது.

இவ்வாறான செய்திகள் காரணமாக பலர் என்னுடன் சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு செய்தி வெளியான நிலையில் மறுநாள் காலையில் அவ்வாறான எந்த ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை என்று சுமந்திரனுடைய பெயரில் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இவை எல்லாம் தந்திரோபாயமற்ற, பொறுப்பற்ற செயல்களாகும். இதன் காரணமாக டலஸ்



அழகப்பெரும எதிர்பார்த்த வாக்குகளை பெற முடியாமல் ரணில் எதிர்பார்த்த அளவுக்கு 134 வாக்குகள் பெறுகின்ற நிலைமையை உருவாக்கி இருக்கின்றது.

அவ்வாறு பாவித்துதான் டலஸ் அழகப்பெருமவுக்கு வாக்களிக்க வேண்டுமென்று தீர்மானம் எடுத்திருந்தால் அது பாரதூரமானது.

இந்த கருத்து மிகவும் பாதகமானது. முழுமையான எங்களுக்கு பலமாக இருக்கின்ற இந்தியாவினுடைய பெயரை கூறுவது மிகவும் தவறான செய்தியாகும். இதனால் பாரிய விளைவுகளை எதிர் நோக்க வேண்டி வரும் என்றார்.

## சர்வகட்சி அரசாங்கம்...

கேள்விகளுக்கு பதிலளிப்பதற்காக சபை முதல்வர் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் சமுகமளித்து பதிலளிப்பது சிறந்ததென்றும் தெரிவிக்கப்பட்டது.விரைவில் பாராளுமன்ற நிறைவேற்றுக் குழுக்களை நியமிப்பது தொடர்பாகவும் அமைச்சரவையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இன்னும் இரண்டு வாரத்தில் சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா 10 ஆண்டுகளில்...

இந்திய லோக்சபாவில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(ஸ)

## நாட்டின் முன்னேற்ற திட்டங்களுக்கு...

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலகட்டம் இது. நாட்டின் 22,000 மில்லியன் மக்களும் எம்மோடு இருப்பார்கள்.

ஜனாதிபதிக்கான தெரிவில் தம்மை முன்மொழிந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, வழிமொழிந்த அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் உள்ளிட்ட அனைவருக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

குணமடைந்த நாட்டுக்கு எழுந்து நிற்க முடியும். ஆனால் நோய் உள்ள நாடு எழுந்து நிற்க முடியாது. சூழ்ச்சியான அரசியல் கலாசாரத்தை நிறைவு செய்வதற்காகவே நான் ஜனாதிபதி தெரிவில் போட்டியிட்டேன். அரசியல் கலாசாரம் சீரழிந்துள்ள நிலையில் அதன் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவது அனைவரதும் பொறுப்பு .

தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு பதிலாக தனியான நிகழ்ச்சி நிரலை முக்கியமாக்கிக் கொண்டு அரசியலமைப்பிலும் அரசியலமைப்பு திருத்தத்திலும் செயற்பாடுகளை மேற்கொண்டு மக்களின் இறைமையை காட்டிக் கொடுத்து சுதந்திரம் அடைந்த தினத்திலிருந்து நாம் அனுபவித்த வஞ்சகமான அரசியல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே நான் போட்டியிட்டேன்.

அந்த வகையில் வாக்குகள் மற்றும் இலக்கத்தின் மூலம் தோல்வியடைந்தாலும் எனக்கு தைரியமூட்டிய, ஒத்துழைப்புகள் வழங்கிய அனைவருக்கும் நான் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வரலாற்றில் முதல் தடவையாக சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான அவசியம் எமக்கு இருந்தது.நாம் தோல்வியடைந்தாலும் அதற்கான நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு பாதிப்படையாது.பெறுபேறுகள் எதுவாக இருந்தாலும் இந்த ஒன்றிணைப்பு உலகிற்கே முன்னுதாரணத்தை வழங்கியுள்ளது.

## மாற்று வழி இல்லாத நிலையிலேயே...

ஆத்திரமூட்டும் வகையில் செயல்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் பெறுமதிமிக்க பொருட்கள் மற்றும் ஆவணங்களை பாதிப்படையாமல் பாதுகாக்க வேண்டியதை கவனத்தில் கொண்டும் வேறு மாற்று வழி இல்லாத காரணத்தினாலுமே நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டக்காரர்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, அமைதி மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அரசியலமைப்பின் மூலம் நாட்டின் பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளின் மட்டுப்படுத்தலை கவனத்திற்கொண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுமாறும் பொலிசாரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகப் பகுதியில் தங்கியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று முன்தினம் அதிகாலை அங்கிருந்து வெளியேற்றப்பட்டமை தொடர்பில் விரிவான தெளிவுபடுத்தலை பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

அச்சுறுத்தல்களை விடுத்தல், அழுத்தங்களை பிரயோகித்தல், வன்முறை அல்லது கலகங்களை மேற்கொண்டு அமைதி மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்புகளை ஏற்படுத்தல், துன்புறுத்தும் வகையில் செயற்படுதல் ஆகியவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அதே வேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல் மற்றும் பாதிப்புகளை ஏற்படுத்தி அவர்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பிரிவு அது தொடர்பான வீடியோ காட்சிகளையும் வெளியிட்டுள்ளது.

## நாட்டில் அமைதியைப் பேண

சட்டத்தின் 12ஆவது சரத்துக்கிணங்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி அமைதியை முன்னெடுப்பதற்கும் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும் அனைத்து இராணுவத்தினரையும் கடமைக்கு அழைக்கும் வகையில் அந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை நேற்று முன்தினம் அதிகாலை ஜனாதிபதி செயலக சுற்றுப் பகுதியிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். முப்படையினரும் நேற்று முன்தினம் அதிகாலை இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைக்கிணங்க அது இடம்பெற்றுள்ளது.

அந்த நடவடிக்கைகளில் முப்படையினர், பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட செயலணியும் இணைந்து செயற்பட்டுள்ளனர். அதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு ஜனாதிபதி செயலக பிரதேசம் படையினரின்

கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

## வாகன இலக்கத் தகட்டை...

அதில் காட்டப்பட்டுள்ளபடி இந்த அபராதங்களைச் செயல்படுத்தலாம்.

இந்தக் குற்றத்தின் இரண்டாவது அல்லது அதற்குப் பிறகு பிடிபட்ட நபருக்கு 30,000 ரூபாவுக்கு குறையாத ஆனால் 50,000 ரூபாவுக்கு அதிகரிக்காத வகையில் அபராதம் அல்லது 03 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரமுள்ளது.

கடந்த 21ஆம் திகதி எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், வாகன இலக்கத்தின் கடைசி இலக்கத்துடன் தொடர்புடைய திகதிகளில் சிலர் வாகனங்களின் இலக்கத் தகடுகளை மாற்றிக்கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வந்ததாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதனையடுத்தே பொலிஸ் தலைமையகம் இவ்வாறு அறிவித்துள்ளது.

# நாட்டில் உணவு பாதுகாப்பற்ற நிலையில் 06 மில்லியன் மக்கள்

இலங்கையில் 6.3 மில்லியன் மக்கள் உணவு பாதுகாப்பற்ற நிலைமையிலுள்ளனர். நெருக்கடி நிலைமை ஏற்படும் போது இந்த நிலைமை மேலும் அதிகரிக்குமென்று உலக உணவு திட்டம் எச்சரித்துள்ளது. இலங்கையின் உணவு பாதுகாப்பு நிலைமை தொடர்பில் கடந்த 15 ஆம் திகதி உலக உணவு திட்டம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 6.7 மில்லியன் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய உணவு வகைகளை உட்கொள்வதில்லை. விவசாயிகளுக்கு விதைகள், உரம் மற்றும் நிதியுதவி கிடைக்காவிட்டால், வரவிருக்கும் பெரும்போகத்தில் நெற் செய்கை 50 சதவீதமாகக் குறைவடையும் அபாயமுள்ளது. அத்தோடு மீன்பிடி மற்றும் கால்நடைத் துறைகளுக்கு மீளமுடியாத நிலைமை ஏற்படும்.

## நாட்டில் மீண்டும் கொவிட்...

தொற்று நோயாளர்கள் 57 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் அதிகரிப்பு தொடர்பில் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வருவதுடன் நாட்டில் இதுவரை மொத்தமாக கொரோனா வைரஸ் தொற்று க்குள்ளானவர்களின் எண்ணிக்கை 6,64,647 ஆகும் என்றும் தெரிவித்துள்ளது.

அதே வேளை கொரோனா தடுப்பூசிகளை விரைவில் பெற்றுக் கொள்ளுமாறு அந்த பிரிவு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

அதற்கிணங்க 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் முதியவர்களுக்கு கொழும்பு மாநகர சபையின் தடுப்பூசி மையங்களில் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

முற்பகல் 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை முதலாவது இரண்டாவது மூன்றாவது மற்றும் நான்காவது தடுப்பூசிகளையும் இந்த மையங்களின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

## காலிமுகத்திடல் சம்பவம்....

கூறப்பட்டுள்ளது. அதிகாரிகள் அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும்.அவர்கள் இருக்கும் இடம் தெரியப்படுத்தப்பட வேண்டுமென்று சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேவையற்ற மிருக பலத்தை பயன்படுத்துவது இந்த நாட்டுக்கும் அதன் சர்வதேச நற்பெயருக்கும் உதவாதென்றும் அவர் கூறியுள்ளார்.நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் பொலிஸாரும் காலி முகத்திடலுக்கான நுழைவு வீதிகளை அடைத்து பொதுமக்களை அந்த பகுதிக்குள் நுழையவிடாமல் தடுத்திருந்தனர். அத்துடன் அங்கு செல்ல முயன்ற சட்டத்தரணிகள் படையினரால் தடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## புதிய ஜனாதிபதி ரணிலுடன்...

ஒன்றுகூடுதல் மற்றும் கருத்துவெளிப்பாட்டு சுதந்திரம் உள்ளடங்கலாக ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றுக்கு மதிப்பளித்தல் என்பன இன்றியமையாதவையாகும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக 20 ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பெரும்பான்மை ஆதரவுடன் இலங்கையின் 08 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, 21 ஆம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். அதனைத் தொடர்ந்து சர்வதேச நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளும் இராஜதந்திரிகளும் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கப்பதிவுகளின் ஊடாகப் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்திருப்பதுடன் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அவர் முன்னெடுக்க வேண்டிய பணிகளையும் நினைவு கூறியுள்ளனர்.

பிரிட்டனின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகார அமைச்சர் தாரிக் அஹமட் தெரிவிக்கையில்,

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுடன் எதிர்வருங்காலங்களில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எதிர்பார்க்கின்றேன். தற்போது இலங்கை முகம் கொடுத்திருக்கும் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண்பதற்கு அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கப் பொறிமுறையொன்று இன்றியமையாததாகும். அதன்படி அத்தியாவசியமான மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவதுடன் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை உள்ளடங்கலாக அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்குமாறு அனைத்துத் தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர்

அமைதியானதும் ஸ்திரமானதுமான இலங்கைக்கு பேச்சுவார்த்தைகள், ஒன்றுகூடுதல் மற்றும் கருத்துவெளிப்பாட்டு சுதந்திரம் உள்ளடங்கலாக ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றுக்கு மதிப்பளித்தல் என்பன இன்றியமையாதவையாகும். அந்தவகையில் இலங்கை மக்களின் அபிலாஷைகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்பினருடனும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

அதேவேளை அரசியலமைப்பிற்கு அமைவாக புதிய ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் கைமாற்றப்பட்டுள்ளமை தொடர்பில் நாம் அறிந்துள்ளோம். எனவே தற்போது அனைத்துத்தரப்பினரும் பொருளாதார நெருக்கடிக்கும் மக்களின் துன்பங்களுக்குத் தீர்வுகாண்பது குறித்த செயற்திறன்மிக்க கலந்துரையாடல்களில் ஈடுபடவேண்டியது அவசியமாகும்.

இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங்

நாம் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். சவால் மிகுந்த தற்போதைய சூழ்நிலையில் பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்தல், ஜனநாயகம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்தல், அனைத்து இலங்கையர்களுக்கும் ஸ்திரமானதும் பாதுகாப்பானதுமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு அனைத்துத் தரப்பினரும் தமது முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டியது அவசியமாகும்.

**இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன்**

அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு உள்ளடங்கலாக அனைத்து இலங்கையர்களினதும் தேவைகளைப் பூர்த்திசெய்வதை முன்னிறுத்திய நடவடிக்கைகள் உள்ளடங்கலாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம்.

**கனேடிய உயர்ஸ்தானிகராலயம்**

இலங்கையின் அரசியலமைப்புக்கு அமைவாகப் பாராளுமன்ற வாக்கெடுப்பின் ஊடாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். நாட்டுமக்கள் முகம்கொடுத்திருக்கும் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணக்கூடிய வகையில் உடனடி அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதை நாம் ஊக்குவிக்கின்றோம். அத்தோடு இந்நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதை இலக்காகக் கொண்டு செயற்படும்போது ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு இலங்கை அரசாங்கம் மதிப்பளிப்பதுடன் அவற்றை மேம்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

**ஐரோப்பிய ஒன்றியம்**

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டிருக்கின்றார். இது தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுடன்கூடிய, அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என்று நம்புகின்றோம். அதேவேளை பொருளாதார மறுசீரமைப்பு, தனிநபர் சுதந்திரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய முயற்சிகள் என்பன அவசியமாகும். இலங்கை மக்களுக்கான எமது ஆதரவு தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எங்கள் கருத்து...

# நாட்டை மீட்டெடுப்பதற்கான நம்பிக்கைக்குரிய தெரிவு

என்பதே இங்கு நோக்கத்தக்கது. அதாவது சட்டவாக்கசபையில் அதிகூடிய பெரும்பான்மையுடன் அவர் தெரிவாகியுள்ளார். அதுவே ஜனநாயக முறைமையும் ஆகும்.

அவருக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்ததற்கான வலுவான காரணிகளை ஆராய்வது முதலில் முக்கியம். மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியினால் முழு இலங்கையுமே முடங்கிக் கிடக்கின்ற வேளையிலேயே புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். இன்றைய வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கக் கூடிய வல்லமை மிகுந்த தலைவராக அவர் மீதே பாராளுமன்றம் நம்பிக்கை வைத்துள்ளதென்பதே இதன் வெளிப்படையான அர்த்தமாகும். அதாவது அரசியல் பேதங்களுக்கு அப்பால் அவர் மீது எம்.பிக்கள் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளனரென்றும் குறிப்பிடலாம்.

ஆசிய பிராந்தியத்தில் நிறைந்த கல்வித் தகைமையும், ஆற்றலும், அரசியலில் ஆழ்ந்த அனுபவமும் கொண்ட அரசியல் தலைவராக ரணில் விக்கிரமசிங்க மதிக்கப்படுகின்றார். சர்வதேச நாடுகளின் அரசியல் தலைவர்களுடனும், உயர் அமைப்புகளுடனும் நெருங்கிய தொடர்பும் நம்பகத்தன்மையும் கொண்டவர் அவர். எனவே எமது நாட்டின் இன்றைய நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்காக சர்வதேசத்திடமிருந்து ஆதரவையும் உதவிகளையும் அவர் பெற்றுக் கொள்வாரென்ற நம்பிக்கையை பொருளாதார நிபுணர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

இன்றைய நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் இருந்து நாட்டை முன்கொண்டு செல்வதாயின் அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்ட பயணமே முதலில் அவசியம். ஜனாதிபதியாக வெற்றி பெற்றதையடுத்து ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய சுருக்கமான உரையிலும், ஒற்றுமைப் பயணத்தின் அவசியத்தையே வலியுறுத்தியிருக்கின்றார்.

நாட்டின் இன்றைய நிலைமை தொடர்பில் அரசியல்வாதிகளும், பொது மக்களும் புரிந்து கொள்ள வேண்டிய யதார்த்தமொன்று உள்ளது. அரசியல் நிகழ்ச்சித் திட்டங்களின் பேரில் செயற்படுவதற்கான தருணம் இதுவல்ல. முதலில் எமக்கெல்லாம் சுமுகமானதொரு நாடு அவசியம். அதன் பின்னரே அரசியல் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது!

## இந்தியாவின் ...

இதில் மொத்தம் பதிவான 4,754 வாக்குகளில் 53 வாக்குகள் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 4,701 வாக்குகள் எண்ணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மொத்த வாக்குகளின் 2,824 வாக்குகள் பெற்று திரௌபதி முர்மு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அவருக்கு மொத்தம் 6,76,803 வாக்குகள் மதிப்பு கிடைத்துள்ளது. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சிகள் கூட்டணியின் பொது வேட்பாளர் யஷ்வந்த் சின்ஹா 1,877 வாக்குகள் பெற்றுள்ளார். அவரின் மொத்த வாக்குகள் மதிப்பு 38,0,177 ஆகும். இதன்மூலம் திரௌபதி முர்மு நாட்டின் 15ஆவது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். திரௌபதி முர்மு ஜனாதிபதியானதன் மூலம் நாட்டின் முதல் பழங்குடி பெண் ஜனாதிபதி எனும் பெருமையை அவர் பெறுகிறார்.

திரௌபதி முர்முவை நேரில் சந்தித்து பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்தார். பாஜக தேசிய தலைவர் ஜேபி நட்டாவும் திரௌபதி முர்முவை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அதேபோல், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். தமிழக முதல் அமைச்சர் மு.க ஸ்டாலினும் வாழ்த்து தெரிவித்துள்ளார். திரௌபதி முர்மு ஜனாதிபதியாக நாளை 25ஆம் திகதி பதவியேற்க உள்ளார். இதற்கான ஏற்பாடுகளை பா.ஜ.க, செய்து வருகிறது. இதையடுத்து அவரது சொந்த மாநிலமான ஒடிசாவில் பழங்குடியினர் ஆடிப்பாடி கொண்டாடி வருகின்றனர். ஒடிசாவைச் சேர்ந்த பழங்குடி இனப் பெண்ணான திரௌபதி முர்மு, ஜார்கண்ட் ஆளுநராக இருந்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் திரௌபதி வெற்றிப் பெற்றதால், நாட்டின் முதல் பழங்குடியின ஜனாதிபதி என்னும் பெருமையை பெற்றார்.

## நாட்டை கட்டியெழுப்பும் வேலை...

2019 இல் 69 இலட்சம் மக்களின் வாக்குகளுடன் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதுடன், 2020இல் 148 இற்கும் அதிகமான எம்.பிக்களை பெற்று அரசாங்கத்தை அமைத்து 20 ஆவது திருத்தத்தையும் செயற்படுத்தி ஆட்சியை நடத்தினர்.

ஜனாதிபதியொருவர் மக்கள் வாக்குகளின் மூலமே தெரிவு செய்ய வேண்டும். இந்த நாட்டின் ஜனநாயக வரலாற்றில் அண்மைக்காலத்தில் முதற்தடவையாக குற்றப் பிரேரணை, அரசியலமைப்பு ரீதியலான நடவடிக்கைகள் அன்றி மக்கள் எதிர்ப்புகளால் பதவி விலக நேரிட்டது. இதனை 225 பேரும் புரிந்துகொண்டால் சிறந்தது.

அரசியலமைப்புக்குட்பட்டதாகவே எதுவும் நடக்க வேண்டும். நாட்டில் காட்டுச் சட்டம் இருக்க முடியாது.

இதனால்தான் டளஸ் அழகப்பெரும வேட்பாளராக இறங்கினார்.

நானும் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருந்தேன். பல்வேறு விடயங்களை ஆராய்ந்து மொட்டுக் கட்சியிலிருந்து வந்த டளஸுக்காக புதிய நோக்கங்களுடன், புதிய கலாசாரத்தை உருவாக்குவதற்காக நாங்கள் ஒரு அடி பின்வாங்கினோம்.

இதேவேளை ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் நாங்கள் எடுத்த தீர்மானத்தில் எந்தக் கவலையும் இல்லை. நாங்கள் சரியான தீர்மானத்தையே எடுத்தோம் என்பதனை கூறிக்கொள்கின்றேன்

முன்னர் எடுத்த தீர்மானத்திலேயே எப்போதும் இருக்க வேண்டும் என்று யாரும் அர்த்தப்படுத்தலாம். நாங்கள் தனியாக போட்டியிட்டிருக்கலாமென்று கூறலாம். இந்த சபையில் மக்களின் கோரிக்கைகள் இருக்கின்றதா? என்பது கேள்விக்குரியதே. இங்கு அனைத்தும் அரசியலமைப்பு ரீதியில் இருக்க வேண்டும்.

இதனை ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது பாராளுமன்றத்தில் பெறுபேறு எப்படி இருந்தாலும் பாராளுமன்றத்துக்கு வெளியில் மக்களின் விருப்பம் இதற்கு மாற்றமாகவே இருக்கின்றது என்பதை நாங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

கடந்த சனிக்கிழமை பாராளுமன்றம் கூடியது. வேட்பு மனுக்களுக்கு காலம் ஒதுக்கப்பட்டது. அதன்பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆனால் வெளியில் மக்கள் என்ன நிலையில் இருக்கின்றனர்.

எரிபொருள், மருந்து இல்லை. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. உணவுப் பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

69 இலட்சம் வாக்குகளை பெற்றவர்கள் இன்று தான்தோன்றித்தனமாக பொருளாதாரத்தை வழிநடத்துகின்றனர். இவ்வாறான நிலைமையில் நாட்டை கட்டியெழுப்பும் தேசிய திட்டத்தை நாங்கள் தயாரிக்க வேண்டும். அதனை இலக்கு நோக்கி எமது பயணத்தை முன்னெடுக்க வேண்டும். நேர அட்டவணையை ஏற்படுத்த வேண்டும்.

பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு ரீதியிலான செயற்பாடு நடந்தாலும் மக்கள் துன்பத்திலேயே இருக்கின்றனர். இதனை தீர்க்க வேண்டும். இதில் அரசியல் மறுசீரமைப்புகள் நடக்க வேண்டும். இதனை புதிய ஜனாதிபதி செய்வாரென்று நினைக்கின்றேன். 20 ஆவது திருத்தத்தால் நடந்த நிலைமையே இப்போது ஏற்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

## மக்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட அப்பழுக்கற்ற ஜனநாயகவாதி; நிர்வாகி

சரியோ பிழையோ, தீர்மானம் எடுக்கப்படவேண்டிய தருணத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டேயாக வேண்டும். அவ்வாறு தீர்மானத்துக்கு வராதவன் ஏமாளியாகவே இருப்பான் என்பார்கள். கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் நாம் உரிய சமயத்தில் உறுதியான தீர்மானம் எடுக்கத் தவறியதால் எதை எல்லாம் கோட்டை விட்டிருக்கிறோம் என்பதை புரிந்து கொள்ளலாம். அல்லும் பகலும் தெருக் கல்லாய் இருந்துவிட்டு அதிர்ஷ்டம் இல்லை என அலட்டிக் கொண்டான் என்ற பழைய எம். ஜி.ஆர் படப்பாடலை இங்கே நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும். வீழ்ந்து கிடக்கும் இந் நாடும் மக்களின் பொதுவான மனப்பான்மையும் முற்றிலுமாக திருந்தாவிட்டால், புது இரத்தம் பாய்ச்சப்படவிட்டால் மீண்டெழுவது மிகக் கஷ்டமாகவே இருக்கப்போகிறது.

இந்த வகையில் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து கற்றுக்கொள்வதற்கு பல விஷயங்கள் உள்ளன.

ரணில் விக்கிரமசிங்க தேர்ந்த அரசியல்வாதி. பொருளாதாரம் தெரிந்தவர். அரசு நிர்வாகம் அவருக்கு அத்துப்படி. வாத விவாதங்களில் வெகு சூரர். அமைச்சராகவும் ஆறு தடவைகள் பிரதமராகவும் பதவி வகித்தவர். மேற்குலகு என இலங்கையரால் அறியப்படும் முன்னேறிய நாடுகளுடன் நெருக்கமான உறவு கொண்டிருக்கும் ஒரு

என்பது மத்திய வங்கி ஆளுநரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இந்த நிலையிலேயே, பாராளுமன்றத்தில் எவருமே எதிர்பாராவகையில் 134 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகவும் தெரிவாகியுள்ளார் இந்த அரசியல் வித்தகர். மக்களால் நிராகரிக்கப்பட்டவர் எவ்வாறு ஜனாதிபதியாகலாம் என்ற கேள்வி இருந்தாலும், சந்தர்ப்பங்களை மிகச் சரியாக பயன்படுத்துபவனே சரியான அரசியல்ஞானி என்பதற்கு அமைய ஸீரோவில் இருந்து ஹீரோவான ரணில் விக்கிரமசிங்க பாராட்டுக்குரியவரே.

அவசியம் என்ற மனவோட்டம் அச் சமூகத்தில் இன்றைக்கும் உள்ளது.

அரசியல்வாதி என்றால் அவர் தேசிய உடை அணிந்தவராக இருக்க வேண்டும். சிங்களத்தில் நன்றாக பேசத் தெரிந்திருக்க வேண்டும். உணவுகளை குறைந்த விலைக்கு அல்லது இலவசமாக வழங்க முன்வர வேண்டும். தமிழர்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இருக்கக் கூடாது. எவை சாத்தியப்படாதோ அவற்றை சாத்தியப்படுத்துவேன் எனப் புளுகத் தெரிந்திருக்க வேண்டும்.

றைக்கும் தமிழகத்தின் அடிநாதம். தந்தைபெரியார் கல்லாதவர். ஆனால் தமிழர் மத்தியில் பெரிய அளவில் சிந்தனை மாற்றத்தை தோற்றுவித்தவர்.

ரணில் விக்கிரமசிங்க அடிப்படையில் ஒரு சட்டத்தரணி. இலங்கை மற்றும் உலக அரசியலை துறைபோகக் கற்றவர். அறிவாளி. ஒரு நாட்டை நடத்துவதற்கான எல்லா தகுதிகளும் கொண்டவர். ஆனால் ஏற்கனவே மக்களுக்கு அணிவிக்கப்பட்டிருக்கும் மாய மூக்குக் கண்ணாடி வழியாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிம்பங்கள் வழியாகவும் பார்த்துப்

மாக அழைக்கப்பட்ட அவர் தான் தன் சொத்துகளை மக்களுக்காக எழுதி வைத்த ஒரே அரசியல்வாதி!

கடந்த ஒன்பதாம் திகதி கொழும்பில் கலவரநிலை ஏற்பட்ட அன்றைய இரவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு கயவர்களினால் எரிக்கப்பட்டபோது கொத்தலாவலையே



### தருணத்தைப் பயன்படுத்த தமிழ்த் தரப்பு முன்வர வேண்டும்

முதலாளித்துவவாதி. தனக்கு அரசியலில் ஏற்படும் தொடர் தோல்விகளால் துவண்டு போகாமல் கொண்ட கொள்கையில் பற்று மாறாதவர். கட்சியில் இருந்து பலர் விலகிச் சென்ற போதும் துவண்டு விடாதவர். கடந்த தேர்தலில் அவரது ஐ.தே.க. கட்சி ஒரு இடம்கூட வெல்ல முடியாமல் காணாமல் போனதோடு அவரும் தன் கொழும்பு தொகுதியில் தோற்றுப் போனார்.

எனினும் தனது கட்சிக்குக் கிடைத்த ஒரே ஒரு தேசிய பட்டியல் வாய்ப்பை பயன்படுத்தி பாராளுமன்றத்துக்கு வந்த அவரை பின்கதவால் வந்தவர் என்ற பரிகாசம் தொடர்ந்தாலும் அவர் கவலைப்படவில்லை. தனி ஆளாக நின்று வீழ்ந்த கட்சியை நிமிர்த்தி பழைய நிலைக்கு கொண்டுவர வேண்டிய அவசியம் அவருக்கு இருந்தது. அவரை நம்பியிருந்தவர்கள் அவர் என்ன செய்யப் போகிறார் என்பதற்காகவே காத்திருந்தார்கள்.

'த பிரின்ஸ்' என்ற அரசியல் நூலை எழுதிய மாக்கியவெலியாக இருக்கட்டும்; அர்த்த சாஸ்திரத்தை படைத்த சாணக்கியனாக இருக்கட்டும், இருவருமே அரசியல் என்பது சூது விளையாட்டைப் போன்றது. தருணங்களைப் பயன்படுத்துபவனே வெற்றி பெறுகிறான் என்றெழுதியுள்ளார்கள். மகாபாரதமும் அதையே சொல்கிறது. இது, அரசியல் வரலாற்றில் சாகாவரம் பெற்ற ஒரு உத்தி. அதை புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகக் கச்சிதமாக கையாண்டிருக்கிறார். அவர் தனி ஒரு மனிதராக பாராளுமன்றம் வந்தார். கோட்டாபய அரசாங்கம் மக்கள் எழுச்சியால் அதிர்ந்து நின்ற பொழுதில் பிரதமரான மஹிந்த ராஜ

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலில் வாய்ப்புகளைத் தவறவிட விரும்பாதவர் என்பது உண்மையானாலும் அவரது செல்வாக்கு சிங்கள மக்கள் மத்தியில் ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டது. அவர் வெள்ளைக்காரரைப் போன்றவர்; மேட்டுக்குடி மனிதர், சோஷலிசத்துக்கு எதிரானவர்; கோட் சூட் காரர்; புரியும்படி பேசத் தெரியாதவர்; யதார்த்தம் விளங்காதவர் எனப் பல்வகையான விமர்சனங்களை சிங்கள மக்கள் முன்வைக்கிறார்கள். இவை அனைத்தும் மக்களிடமிருந்து அவரை கொஞ்சம் அந்நியப்படுத்தத்தான் செய்கின்றன.

பிரச்சினை என்னவென்றால் தொடர்ச்சியாக மக்கள் அரசியல்வாதிகளினால் ஏமாற்

இவை எல்லாம் ஒருவருக்கு அத்துப்படி என்றால் அவரை 'எங்கள் அரசியல்வாதி' யாக ஏற்றுக் கொள்ளும் தன்மை மக்களிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மாற்றம் வேண்டும் என்று சொல்கிறார்களே, அந்த மாற்றங்களில், அரசியல்வாதி தொடர்பான மக்களின் பொது எண்ணத்தில் மாற்றம் முழுமையாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதும் உள்ளடக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பாக மக்கள் கருத்துகள் பெரும்பாலும் மாய உலகில் நின்று உருவாக்கப்பட்டவையே. ஏன் கோட் சூட்? வெள்ளைக்காரன் நெஷனல் உடுத்துகிறானா? என்றெல்

**அவர் பதவிக்கு வந்த பின்னர் நாளாந்தம் ஏறு முகமாக இருந்த டொலர் ஸ்திர நிலையை அடைந்தது. பங்குச் சந்தை ஏறுமுகம் காட்டியது. சர்வதேச நாணய நிதியம் ஆரம்ப பேச்சுவார்த்தைகளை கொழும்பில் நடத்தியது. அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் கொழும்பு வந்து சென்றனர். காலிமுகத்திடல் போராட்டம் வலுவிழந்தது**



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பாக மக்கள் கருத்துகள் பெரும்பாலும் மாயா உலகில் நின்று உருவாக்கப்பட்டவையே. ஏன் கோட் சூட்? வெள்ளைக்காரன் நெஷனல் உடுத்துகிறானா? என்றெல்லாம் விதண்டா வாதம் எழுப்பப்படுகிறது. ஐரோப்பியரின் உடைகள் அவர்களின் கால நிலையோடு சம்பந்தப்பட்டவை. மேற்கத்திய பாணி, ஆடை அணிதல் என்பது போர்த்துக்கேயர் காலத்தில் இருந்தே ஆரம்பித்த ஒன்று, அப்படி விமர்சிப்பவர்களும் 'ஆரிய சூட்' அணிந்து கொண்டா இருக்கிறார்கள்?**

லாம் விதண்டா வாதம் எழுப்பப்படுகிறது. ஐரோப்பியரின் உடைகள் அவர்களின் கால நிலையோடு சம்பந்தப்பட்டவை. மேற்கத்திய பாணி, ஆடை அணிதல் என்பது போர்த்துக்கேயர் காலத்தில் இருந்தே ஆரம்பித்த ஒன்று, அப்படி விமர்சிப்பவர்களும் 'ஆரிய சூட்' அணிந்து இருக்கிறார்கள்? இலங்கையில் ஆண்களில் 95சதவீதமனோர் ஷர்ட், டிரவுசர் அணிபவர்கள்தான். உயர் பதவி வகிக்கும் அனைவருமே கோட்சூட் அணிபவர்கள்தான், அது இலங்கையில் ஒரு கௌரவமான உடையாகவும் 'நெஷனல் டிரஸ்' என்பது அதிகம் படிக்காத கிராமவாசிகள், நாட்டு வைத்தியர் போன்றோரின் உடையாகவும் சிங்கள மக்களால் பார்க்கப்படுகிறது என்பதே உண்மை.

ஒரு அரசியல்வாதி நடையுடை பாவனைகள் மூலம் தீர்மானிக்கப்படுவது மிக

பார்த்தே பழகிப்போன வாக்காளர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க என்ற அரசியல்வாதி தங்களுக்கு ஏற்புடையவராக இருக்க மாட்டாரோ என்ற எண்ணத்தையே தோற்றுவித்து வந்துள்ளது.

முன்னர் சர்.ஜோன் கொத்தலாவலையை மக்கள் அப்படித்தான் பார்த்தார்கள். டட்லி சேனநாயக்க ஹார்த்தாலுக்கு முகம் கொடுக்க முடியாமல் 1953இல் பதவி துறந்ததும் பிரதமர் பதவிக்கு வந்தவரே ஜோன் கொத்தலாவல. வெளிப்படையாகக் கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடிய திறமையான நிர்வாகி. எனினும் 1956 பொதுத் தேர்தலில் அவரது ஐ.தே.கட்சி தோல்வியடைந்தது. ஏனெனில் பண்டாரநாயக்க முன்வைத்த சிங்களம் மட்டும் சட்டம் மற்றும் சிங்கள பௌத்தவாதம் சாதாரண மக்களை ஈர்த்தது. அன்றைய மக்களுக்கு பொருளாதார அபிவிருத்தி பற்றிப் பேசினால் புரியாது. சிங்களம், தமிழரின் உரிமை கோரிக்கை, பௌத்தம் என்றால் தெளிவாகப் புரியும். என்பதை புதுக் கட்சியை ஆரம்பித்திருந்த எஸ்.

அருள் சத்தியநாதன் ...

டபிள்யூ. ஆர்.டீ. பண்டாரநாயக்க தெரிந்து வைத்திருந்தார். 1956 தேர்தலில் பண்டாரநாயக்க வெற்றிபெற்றார். அவரது வருகையின் பின்னரேயே தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீவிரமடையத் தொடங்கி இனக்கலவரமாகவும் வெடித்தது.

இங்கே இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டும். கோட் சூட் அணிந்த வெள்ளைத்துரை என சாதாரண மக்களால் அறியப்பட்ட ஜோன் கொத்தலாவல, இந்த இலங்கை அரசியல் நமக்கு சரிபட்டு வராது என்று லண்டனில் தங்கி விட்டார்.

தன் இறுதிக் காலத்தில், 1977 ஜே.ஆர்.

நினைவுக்கு வந்தார். ஏனெனில் ரணில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனக்கு சொந்தமான ஒரே வீடு இது மட்டுமே என்று கூறியிருந்தார். தனி மனிதர்களுக்கு சொந்தமான அவர்கள் வசிக்கும் வீடுகளை எரிப்பது எவ்வளவு ஈனத்தனமான செயல். ரணில் தம்பதியினர் தமக்குப் பின்னர் அந்த வீடு றோயல் கல்லூரிக்கு சொந்தமாக வேண்டும் என்றும் அவரது வீட்டு நூலகம் பேராதனை பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் ஏற்பாடு செய்து வைத்திருந்தனர். அதாவது மக்களுக்கு சொந்தமாக்கப்பட்ட வீட்டையும் நூல்களையும் தான் ஆர்ப்பாட்டக்காரர்கள் எரித்திருக்கிறார்கள்!

ரணில் விக்கிரமசிங்க எளிமையான மொழியில் பேசக் கூடியவரானாலும் கண்டிப்பான ஒரு ஜனநாயகத் தலைவர். எப்போதுமே அரசியலமைப்பு, பாராளுமன்ற ஜனநாயகம் பற்றியே பேசக் கூடியவர். நல்ல நிர்வாகி எனப் பெயரெடுத்தவர். மதத்தையும் மொழியையும் வைத்து அரசியல் செய்பவர் அல்ல என்பது குறிப்பிடத்தக்க முக்கியமான விஷயம்.

ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அவர் 2024 வரை பதவியில் நீடிக்க முடியும். அதற்குள் அவர் தன்னை நிரூபிக்க வேண்டும். நிரூபிப்பார் என்ற நம்பிக்கை இப்போது சிங்கள மக்கள் மத்தியில் உள்ளது. அவரை ஏற்றுக் கொள்ளாதவர்கள்கூட, இந்தச் சமயத்தில் இவர்தான் பொருத்தமானவர் என கிராமங்களில் பேசுகிறார்கள். ஏனெனில் நாட்டின் பொருளாதார நிலை அவ்வளவுக்கு மோசம்!

அவர் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீழ்ந்து கிடக்கும் ஐக்கிய தேசிய கட்சியை மீளவும் கட்டியெழுப்பி அடுத்து வரக்கூடிய பொதுத்தேர்தலில் நம்பிக்கையுடன் போட்டியிடச் செய்ய வேண்டும். அதற்கு, இரண்டு வருட காலத்துக்குள் நாட்டின் பொருளாதாரத்தை நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் தூக்கி நிறுத்த வேண்டும். சவால்களிலேயே மிகப் பெரிய சவாலை Acid Test ஐ புதிய ஜனாதிபதி எதிர்கொண்டிருக்கிறார்.

இக்காலப்பகுதியைத் தமிழ்ச் சமூகம் எப்படி பயன்படுத்திக் கொள்ளப்போகிறது என்பது முக்கியம்.

புதிய ஜனாதிபதி தமிழர்களால் இனவாதியாகவோ மதவாதியாகவோ பார்க்கப்பட்டவர் அல்ல. கடந்த இரண்டரை ஆண்டுகளாக தமிழர்களின் எந்தவொரு கோரிக்கையும் அரசினால் கவனத்தில் கொள்ளப்படவில்லை. தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையும் நடத்த பழைய நிர்வாகம் முன்வரவும் இல்லை.

இதோ இப்போது சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. ஜனாதிபதி ரணில் எப்போதுமே பேச்சுவார்த்தைக்கு தயாராகவே இருக்கக் கூடியவர். பல வந்தமான சிங்களக் குடியேற்றம், தெல்லியல், வன பாதுகாப்பு என்ற பெயர்களில் நடைபெற்றுவரும் ஊடுருவல்கள் என்பன தொடர்பாக அவருடன் பேச முடியும். இனப் பிரச்சினை தொடர்பான நம்பிக்கையூட்டும் பேச்சுகளை மறுபடியும் ஆரம்பிக்கலாம்.

இது ஒரு நல்ல சந்தர்ப்பம். வட புலத்து அரசியல் கட்சிகள் ஏன் இப் புதிய அரசியல் அமைச்சர் பதவிகளை ஏற்கக்கூடாது? எதிர்ப்பு அரசியலை இரண்டு வருட காலத்துக்கு ஒத்தி வைக்கலாம் அல்லவா? கோட்டா கோ கம ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்த் தரப்பின் ஆதரவு போதியதாகவும் வெளிப்படையாகவும் இருக்கவில்லை. அதையே ரணில் விக்கிரமசிங்கவின் புதிய ஆட்சி விடயத்திலும் கடைப்பிடித்து பாராமுகமாக இருந்து விடுவது புத்திசாலித்தனமாகாது.

**தனிச்சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டதில் தவறு கிடையாது. ஆனால் ஆங்கிலத்தையும், விரும்புவோர் தமிழையும் கற்கலாம் என்றிருந்த ஒரு சூழலை இச்சட்டம் முற்றிலுமாக குலைத்துப் போட்டு விட்டது. பெரும்பாலான சிங்களவருக்கு இன்றைக்கும் ஆங்கிலம் வராது. சமாளிக்கும் அளவில் தான் அவர்களின் ஆங்கில அறிவு உள்ளது. மொழி என்பது ஒரு அறிவு. அதிக மொழிகளை கற்று வைத்திருப்பது ஒரு செல்வம். அது வருமானத்தையும் தேடித்தரும் என்ற சிந்தனைக்கான வாய்ப்புக்கே இச்சட்டம் இடம் தரவில்லை.**

பக்ஷ பதவி விலக நேர்ந்தது. அடுத்த பிரதமராக யாரை நியமிக்கலாம் என்ற கேள்வி எழுந்தபோது ராஜபக்ஷமாருக்கு மிதவாதியாகவும் பாதுகாப்பானவராகவும் தெரிந்தவர் ரணில் விக்கிரமசிங்கவே. ஆனால் அச் சமயத்தில் பாராளுமன்றத்தில் தனியாளான அவர் பிரதமர் பதவியை ஏற்பது என்பது கடும் சவாலான விஷயம். ஆனால் அவரது அரசியல் அனுபவமும் துணிச்சலும், சந்தர்ப்பத்தை கை நழுவ விடாமல் பயன்படுத்த வேண்டும் என்ற சாணக்கியமும் அப் பதவியை ஏற்கத் தூண்டியிருக்க வேண்டும்.

அவர் பதவிக்கு வந்த பின்னர் நாளாந்தம் ஏறு முகமாக இருந்த டொலர் ஸ்திர நிலையை அடைந்தது. பங்குச் சந்தை ஏறு முகம் காட்டியது. சர்வதேச நாணய நிதியம் ஆரம்ப பேச்சுவார்த்தைகளை கொழும்பில் நடத்தியது. அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் கொழும்பு வந்து சென்றனர். காலிமுகத்திடல் போராட்டம் வலுவிழந்தது.

தற்போது பெட்றோல், டீசல், எரிவாயு வரிசைகள் பெருமளவில் இல்லை. உலக வங்கி உதவியுடன் எரிவாயு கப்பல்கள் வந்து கொண்டிருக்கின்றன. நாட்டின் பண வீக்கம் அதிகரித்துச் செல்லும் அதேசமயம் பொருளாதார வீழ்ச்சியில் எந்த நம்பிக்கையான சமிக்ஞையும் தென்படவில்லை என்பது உண்மையானாலும் ஆறு மாத காலத்துக்குள் நம்பிக்கை ஏற்படுத்தும் மாற்றங்கள் வரலாம்

றப்பட்டு வந்துள்ளதோடு இலங்கை அரசியல்வாதி என்பவர் இப்படித்தான் இருக்க வேண்டும்; இப்படித்தான் பேசிப்பழக வேண்டும் என்றொரு மாயை இலங்கை தேசிய அரசியலில் வெற்றிகரமாக கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதுதான்.

தனிச்சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டதில் தவறு கிடையாது. ஆனால் ஆங்கிலத்தையும், விரும்புவோர் தமிழையும் கற்கலாம் என்றிருந்த ஒரு சூழலை இச்சட்டம் முற்றிலுமாக குலைத்துப் போட்டு விட்டது. பெரும்பாலான சிங்களவருக்கு இன்றைக்கும் ஆங்கிலம் வராது. சமாளிக்கும் அளவில் தான் அவர்களின் ஆங்கில அறிவு உள்ளது.

மொழி என்பது ஒரு அறிவு. அதிக மொழிகளை கற்று வைத்திருப்பது ஒரு செல்வம். அது வருமானத்தையும் தேடித் தரும் என்ற சிந்தனைக்கான வாய்ப்புக்கே இச்சட்டம் இடம் தரவில்லை. அச்சட்டம் அமுலுக்கு வந்து ஐம்பது வருடங்கள் கழிந்த பின்னரேயே ஆங்கிலத்தின் அவசியத்தை சிங்கள இளைய தலைமுறை புரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கிறது. எனினும் சிறுபான்மையினர் மத்தியில் காணப்படும் அளவுக்குக் கூட அவர்கள் மத்தியில் ஆங்கிலத்தில் ஆர்வம் இன்னும் முழுமையாக ஏற்படவில்லை. சிங்களம் தெரிந்திருந்தால் இலங்கையில் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும் என்றிருக்கையில் ஏன் ஆங்கிலம் படிக்க வேண்டும்? எதற்கு தமிழ்

மோசமான நடைமுறை. எந்தவொரு மனிதரையும் அவரது செயல்கள், சிந்தனைகள், செயற்பாட்டுத்திறன் என்பனவற்றை வைத்தே தீர்மானிக்க வேண்டுமே தவிர அவரது தோற்றப் பொலிவை வைத்து அல்ல. தமிழகத்தில் புரட்சிகமான மாற்றங்களையும் சிந்தனைகளையும் கொண்டு வந்த காமராஜர் போதிய படிப்பறிவற்றவர். தமிழகத்தில் கல்விப் புரட்சியை அவர்தான் கொண்டு வந்தார். தமிழ் மொழிக்கு ஏற்றம் தந்த சி.என். அண்ணாதுரை படித்தவர்தான். ஆனால் மிகமிக எளிமையானவர்.

அண்ணாவின் கோட்பாடுகள் தான் இன்

ஜயவர்தன அரசின் போது அவர் கொழும்பு திரும்பியது. சக்கர நாற்காலியில். தன் மரணத்தின் பின்னர் இரத்மலானையில் அமைந்துள்ள 48 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தனது கந்தவல தோட்டத்தையும் தன் வீட்டையும் இராணுவ பயிற்சி நிலையம் ஒன்றை உருவாக்கு முகமாக அரசிடம் நன்கொடையாக வழங்கினார் கொத்தலாவல. 1980ம் ஆண்டு கொத்தலாவல இராணுவ கல்விக் கல்லூரி ஆரம்பமானது. இன்று ஜெனரல் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமென அது அழைக்கப்படுகிறது.

மக்களால் வெள்ளைத்துரை என ஏளன

# நாட்டின் பொருளாதார வீழ்ச்சி வேளையில் ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள பெரும் சவால்!

**களனி தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக 1970 ஆம் ஆண்டு அரசியல் பயணத்தை ஆரம்பித்த ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.**

பியகம தேர்தல் தொகுதி ஆசனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி முதலாவது தடவையாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு சரியாக 45 வருடங்களின் பின்னர் (1977 ஜூலை 21) அவர் ஜனாதிபதியாகியுள்ளார். அது மாத்திரமன்றி இலங்கையில் அதிக தடவைகள் பிரதமர் பதவியை வகித்தவர் என்ற பெருமையையும் அவருக்குக் காணப்படுகிறது.

1970 ஆம் ஆண்டு களனி தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர், பின்னர் பியகம தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1977 ஆம் ஆண்டில் முதன் முறையாக பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அவர், ஜே.ஆர். ஜயவர்தன அரசின் அமைச்சரவையில் இளம் அமைச்சராக இருந்ததுடன் இளைஞர் விவகாரம் மற்றும் தொழிற்துறை அமைச்சராக அப்போது கடமையாற்றினார். 28 வயதில் வெளிவிவகார பிரதியமைச்சராக நியமிக்கப்பட்ட அவர், பின்னர் இளைஞர் விவகாரம், கல்வி மற்றும் தொழில், விஞ்ஞான மற்றும் தொழிநுட்பம் போன்ற கபினட் அமைச்சு பதவிகளை வகித்தார்.

1989 மார்ச் 06 முதல் 1993 மே 07 வரையான காலப் பகுதியில் பாராளுமன்ற சபை முதல்வராக பணியாற்றிய ரணில் விக்கிரமசிங்க, 1994 முதல் 2001 வரை மற்றும் 2004 முதல் 2015 வரை இலங்கை பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவராக பதவி வகித்துள்ளார்.

அவர் முதன் முறையாக 1993 மே மதம் 07 ஆம் திகதி பிரதமராக தெரிவு செய்யப்பட்டதுடன் 1994 ஒகஸ்ட் 19 வரை அந்தப் பதவியை வகித்தார். அவர் இலங்கையில் அதிக தடவை பிரதமராக பணியாற்றியவராக (5 தடவை) வரலாற்றில் பதிவாகியுள்ளார்.

இரண்டாவது முறையாக 2001 டிசம்பர் 09 ஆம் திகதி முதல் 2004 ஏப்ரல் 06 ஆம் திகதி வரையும், மூன்றாவது முறையாக 2015 ஜனவரி 09 முதல் 2015 ஒகஸ்ட் 17 வரையும், நான்காவது முறையாக 2015 ஒகஸ்ட் 17 முதல் 2018 ஒக்டோபர் 26 வரையும், ஐந்தாவது முறையாக 2018 டிசம்பர் 16 முதல் 2019 நவம்பர் 21 வரையும் பிரதமராக பதவி வகித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான ரணில் விக்கிரமசிங்க பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டு சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதுடன், இலங்கை பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்று இந்நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்ட ஒரே ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## கல்வித்துறையில் கடந்த காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அறிமுகப்படுத்திய முன்னேற்றகரமான சீர்திருத்தங்கள் ஏராளம். நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதிலும் அவர் எதிர்கொண்டுள்ள சவால்கள் அதிகம்!




அவர் 1980 முதல் 88 வரை கல்வி அமைச்சராக பணியாற்றினார். தொலைதூர ஆங்கில ஆசிரியர் பயிற்சி எனப்படும் டெலின் ஆசிரியர் பயிற்சி, பூரண கால தொலைதூர சேவை ஆசிரியர் பயிற்சி, பாடசாலைகளுக்கான பகலுணவு, மீப்பே அழகியல் நிறுவனத்தை ஆரம்பித்தல், முறைசாரா கல்வியை விரிவாக்குதல், ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக மாவட்ட ஆசிரியர் சேவையை ஆரம்பித்தல், ஆசிரியர் சேவையை 60 வயது வரை நீடித்தல், பிக்குகளுக்கான ஆசிரியர் பயிற்சி, பாடசாலை அபிவிருத்தி சங்கங்களை ஆரம்பித்தல், பாடசாலை மேற்பார்வை அலகுகளை உருவாக்குதல், பாடசாலை திட்டமிடல் அலகு, இலவச பாடப்புத்தக விநியோகம், வலயக்கல்வி அலுவலகங்களை நிறுவுதல், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் மாணவர் ஆலோசனை சேவையை ஆரம்பித்தல் என்பவற்றை அவரது கல்வி மறுமலர்ச்சிகளாக குறிப்பிடமுடியும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

## அரசியல் முரண்பாடுகளை ஒதுக்கி வைத்து, எதிரணியினரும் ஒத்துழைத்தாலேயே அதலபாதாளத்திலிருந்து இலங்கை மீண்டெழும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்து வந்த பாதை...



- எஸ்மண்ட் விக்கிரமசிங்க மற்றும் நளினி விக்கிரமசிங்க தம்பதிகளுக்கு மகனாக 1949 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி கொழும்பில் பிறந்தார்.
- கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்று, கொழும்பு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சட்டப் பட்டம் பெற்று சட்டக்கல்லூரி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து 1972ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தின் வழக்கறிஞராகப் பதவியேற்றார்.
- 1977 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் பியகம தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பிரதி வெளிவிவகார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.
- 1978 இல், நிறைவேற்று அதிகார முதலாவது ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அமைச்சரவையில் இளம் அமைச்சரவை அமைச்சராக, இளைஞர் விவகாரம் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சராகப் பதவியேற்றார்.
- 1980ஆம் ஆண்டில் கல்வி அமைச்சரானார்.
- ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் அமைச்சரவையில் 1989 இல் கைத்தொழில் அமைச்சராகவும், 1990 இல் கைத்தொழில், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சராகவும் இருந்தார்.
- 1993ஆம் ஆண்டில் பிரதமரானார்.
- 1994 பொதுத் தேர்தலில் பிரதமர் பதவியை இழந்தார்.
- 1994 இல் களனி பல்கலைக்கழகப் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவை திருமணம் செய்து கொண்டார்.
- 1995 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.
- 2001 இல் நடந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக பிரதமரானார்.
- 2004 ஆம் ஆண்டு மீண்டும் எதிர்க்கட்சித் தலைவரானார்.
- 2015 இல், மூன்றாவது முறையாக பிரதமரானார். 2015 ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நான்காவது முறையாக பிரதமரானார்.
- 2017 இல் 52 நாட்களில் பிரதமர் பதவியை இழந்தார்.
- 2018 இல் ஐந்தாவது முறையாக மீண்டும் பிரதமரானார்.
- 2019 இல் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்.
- 2020 பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவில்லை, பின்னர் தேசியப் பட்டியலிலிருந்து பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 2022 மே 12 அன்று, அவர் ஆறாவது முறையாக பிரதமரானார்.
- 2022 ஜூலை 15, அன்று பதில் ஜனாதிபதியாக பதவியேற்றார்.
- 2022 ஜூலை 20 அன்று, பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் நாட்டின் நிறைவேற்று அதிகாரமுள்ள எட்டாவது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# கொரோனாவினால் வீழ்ச்சியடைந்த உலகில் துரித கதியில் முன்னேறியுள்ள இந்திய தேசம்!

**கொரோனா தொற்று தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் உலக நாடுகள் அனைத்துமே மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன, பெரியளவில் உயிரிழப்புகளை எதிர்கொண்டன, பொருளாதார ரீதியாக இழப்புகளைச் சந்தித்தன.**

இந்தியாவும் அதற்கு விதிவிலக்கு இல்லாமல் பல்வேறு சவால்களை எதிர்கொண்டது. ஆனால், கொவிட் தொற்றை சிறப்பாகக் கையாண்டது. உலக ஊடகங்கள் போட்டி போட்டபடி இந்தியாவை இகழ்ந்து கொண்டே இருந்தன. ஆனால், இவை அனைத்தையும் கடந்து இந்திய அரசு செயற்பட்டுள்ளது.

வல்லுனர்களும், ஊடகங்களும் இந்தியாவில் இவ்வாறு நடக்கும் என்று பயமுறுத்தியவாறு எதுவுமே நடக்கவில்லை. அனைவரும் கூறுகின்ற எரிபொருள் விலையேற்றம் அதிகமாகி விட்டது என்பது நியாயமான குற்றச்சாட்டு. இதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஆனால், இப்பிரச்சினையானது இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் இருக்கக் கூடிய பிரச்சினையாகும். ஐரோப்பா நாடுகளிலும் கடுமையான விலையேற்றம் ஏற்பட்டுள்ளது. எரிபொருள் வரி மூலம் மத்திய அரசு மக்கள் பணத்தைக் கொள்ளை அடிக்கிறது என்று அரசியல் செய்து வருகிறார்கள்.

ஆனால், அப்பணத்தை இந்திய மத்திய அரசு எப்படிப் பயன்படுத்தியது என்பதைப் பற்றி யாரும் பேசுவதில்லை. எதிர்க்கட்சிகள் பேசப் போவதில்லை. ஏனென்றால், அதுதான் அவர்களின் அரசியல். ஆனால், பா.ஜ கவினர் கூட தங்களது மக்கள்நலப் பணிகளை முறையாக மக்களிடம் கொண்டு சேர்க்கவில்லை.

கடந்த இரு வருடங்களில் அனைத்து மக்களுக்கும் விலையில்லா உணவுப் பொருட்களை பா.ஜ.க அரசு கொடுத்தது, தடுப்பூசி வழங்கியது, சிறுதொழில் செய்பவர்களுக்குக் கடனுதவி வழங்கி பாதிப்புகளைக் குறைத்தது என்றெல்லாம் மிகச்சிறந்த பணிகளை மத்திய அரசு செய்துள்ளது.




## பிரதமர் நரேந்திர மோடியின் டிஜிட்டல் இந்தியா & தற்சார்பு இந்தியா ஆகிய இரண்டுமே இந்திய பொருளாதார வளர்ச்சிக்கான சிறந்த திட்டங்கள்

ஆனால் மத்திய அரசு செய்த சிறப்பான நடவடிக்கைகள் தொடர்பாக இந்தியாவிலுள்ள பல ஊடகங்கள் பா.ஜ.க எதிர்ப்பு மனநிலையையே மக்களிடம் பரப்பி வருகின்றன.

எத்தனை குற்றச்சாட்டுகளையும் எதிர்க்கட்சிகள் மத்திய அரசு மீது முன்வைக்கலாம். ஆனால் எட்டு வருடங்களாகியும் இன்னமும் ஏன் ஊழல் குற்றச்சாட்டுகளை எதிரணிகளால் முன்வைக்க முடியவில்லை?

அரசின் வருமானத்தை மக்களுக்கேதான் பல்வேறு வழிகளில் செலவிடுகின்றது இந்திய அரசு என்பதை எதிர்க்கட்சிகள் கூறுவதில்லை. மக்களின் வரிப்பணத்தை விரயமாக்காமல் சரியான வழியில் மக்களுக்கு நேரடியாகக் கொண்டு சேர்க்கிறார்கள், உட்கட்டமைப்பை மேம்படுத்தப் பயன்படுத்துகிறார்கள். அவைதான் பிரதானம்.

கொரோனா தொற்று தாண்டவமாடிய வேளையில், 130 கோடி மக்களைக் கொண்ட சீனா போன்ற நாடுகளே திண்டாடின. ஆனால் பெரிய சிக்கல்கள் இல்லாமல் இந்தியா சமாளித்துள்ளது. இது மிகப் பெரிய சாதனை.

இலங்கையில் தற்போதுள்ள நிலையென்ன? பாகிஸ்தானின் நிலையென்ன? அவை தவிர வல்லரசாக இருக்கும் சீனா தற்போது கொரோனா பிரச்சினைகளைக் கையாள முடியாமல் திணறி வருகிறது. அங்கு ஊடகங்களால் செய்திகளை உலகுக்குக் கூற முடியாது. செய்திகள் வெளியே தெரியவில்லையென்பதால் சீனா சிறப்பான நாடெனக் கூற முடியுமா?

இவை அனைத்தையும் தாண்டி சீனாவில் மக்கள் படும் துன்பங்கள், உணவுக்காக மக்கள் நடத்தும் கலவரங்கள், மனஉளைச்சல்களால் கூச்சலிட்ட மக்களின் நிலை சமூகத்தளங்கள் வழியாகக் கசிந்து வருகின்றன.

சீனா போல இந்தியா ஒரே தலைமையின் கீழ் இயங்கவில்லை. பல மாநிலங்களை அதன் அரசியல்களை உள்ளடக்கி ஆட்சி புரிகிறது. இந்திய குடிமக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது சாதாரண விஷயம் அல்ல. பல்வேறு உள்நாட்டு அரசியல்களையும் தாண்டி இந்தியா சவால்களை வென்று சாதித்துள்ளது.

சீனாவில் தற்போது ஷாங்காய் நகரில் மிக மோசமான நிலை நிலவுகிறது. ஆனால் உலக ஊடகங்கள் சீனாவின் நிலைமையை வெளிப்படுத்துவதில் அமைதியாகவே உள்ளன? இந்தியாவில் எது நடந்தாலும் அதனை சில ஊடகங்கள் பூதாகரமாக்குகின்றன.

இந்தியாவில் பிரச்சினைகள் உள்ளன என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆனால் இவ்வளவு பிரச்சினைகளுக்கு இடையேயும் மத்திய அரசு டிஜிட்டல் இந்தியாவை மேம்படுத்தியுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...



## உலகப் பொருளாதாரத்தில் வல்லரசாகவிருந்த சீனா கொவிட் தாக்கத்தினால் வீழ்ச்சியடைந்து செல்கையில், இந்தியா சவால்களை முறியடித்து முன்னேற்றம்

# நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு நம்பிக்கையைத் தந்துள்ள அரசியல் மாற்றம்!

வார இறுதி
அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

## புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்பையடுத்து மக்கள் மத்தியில் உருவாகியுள்ள எதிர்பார்ப்புகள்

**இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் மக்கள் பிரதிநிதிகளின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதி என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.**

இதற்கு முன்னர் ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஆர். பிரேமதாசவின் மறைவைத் தொடர்ந்து டி.பி. விஜேதுங்க பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், அவர் வாக்கெடுப்பு இன்றி மக்களின் பிரதிநிதிகளின் ஏகமனதான தீர்மானத்தின் ஊடாகவே தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இருந்த போதும் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டு வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ மக்களின் எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து பதவி விலகியதும் ஏற்பட்ட வெற்றிடத்துக்குப் புதிய ஜனாதிபதி ஒருவரை பாராளுமன்றத்தின் மூலம் தெரிவு செய்ய வேண்டி ஏற்பட்டது.

அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டு 2ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய பாராளுமன்றத்தின் மூலம் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் வரை பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதிப் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டதும் கூடிய விரைவில் புதிய ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்றத்தின் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. இதற்கமையவே புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கு வேட்புமனுக்கள் கோரப்பட்டதுடன், ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திஸாநாயக ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டன.

ஆரம்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் ஜனாதிபதிப் பதவிக்காகப் போட்டியிடுவதாகக் கூறப்பட்ட போதும், இறுதி நேரத்தில் டலஸ் அழகப்பெருமவுக்குத் தனது ஆதரவை வழங்கி போட்டியிலிருந்து அவர் விலகிக் கொண்டார்.

சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதற்கிணங்க வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் முயற்சிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பொதுஜன பெரமுன கட்சியினர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியும் அதன் பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து, பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சுயாதீனமாக இயங்கும் விமல் வீரவன்ச, கம்மன்பில போன்றவர்கள் உள்ளடங்கலான குழுவினரும் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

ஆரம்பத்தில் எவருக்கும் ஆதரவு வழங்குவதில்லையென்ற நிலைப்பாட்டிலிருந்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்தது. அதேநேரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்குவதாகத் தீர்மானித்தது.

தமிழ், முஸ்லிம் கட்சிகள் உள்ளிட்ட பல தரப்பினரதும் ஒத்துழைப்பு டலஸ் அழகப்பெருமவுக்கு என அறிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில், கடந்த புதன்கிழமை மிகவும் பரபரப்பாகப் பாராளுமன்றம் கூடியிருந்தது. பாராளுமன்றத்தின் ஊடாக வாக்கெடுப்பை நடத்தி ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வரலாற்று நிகழ்வுக்காக இலங்கை மாத்திரமன்றி உலகின் பல நாடுகளும் எதிர்பார்த்திருந்தன. சட்ட விதிகளுக்கு அமைய வாக்கெடுப்புப் பணிகளுக்கு பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராகச் செயற்பட்டிருந்தார்.

சபா மண்டபத்தில் பாராளுமன்ற செயலாளர் தலைமையிலான அதிகாரிகளுக்குத் தனியான மேசை போடப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு முன்னால் வாக்குப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் முதல் எழுத்துடன் கூடிய கையொப்பம் இடப்பட்ட வாக்குச் சீட்டு ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரின் பெயரும் அழைத்து வழங்கப்பட்டது.

பெயர் அழைக்கப்படும் போது ஒவ்வொரு உறுப்பினரும் சபைக்கு நடுவில் வந்து வாக்குச் சீட்டைப் பெற்று மறைவான பகுதியில் தமது வாக்கைப் பதிவு செய்து வாக்குப் பெட்டியில் வாக்குகளை இட்டனர். அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்களான குமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் வாக்களிப்பதிலிருந்து விலகியிருந்தனர். இதற்கமைய 223 பேர் வாக்களித்திருந்தனர். இதில் இரு உறுப்பினர்கள் சுகவீனமாக இருந்த போதும் சபைக்கு வந்து தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர்.

வாக்களிப்பு முடிவடைந்ததும் வாக்கு எண்ணும் பணிகள் இடம்பெற்றன. வாக்கு எண்ணும் செயற்பாட்டைக் கண்காணிப்பதற்கு வேட்பாளர்களின் சார்பில் பிரதிநிதிகளை நியமிக்க முடியும். இதற்கமைய ரணில் விக்கிரமசிங்கவின் பிரதிநிதியாக ஹரீன் பெர்னாண்டோவும், டலஸ் அழகப்பெருமவின் பிரதிநிதியாக டிலான் பெரேராவும், அநுரகுமார திஸாநாயக்கவின் பிரதிநிதியாக விஜித ஹேரத்தும் வாக்கு எண்ணும் பணிகளைப் பார்வையிட்டனர்.

வாக்குகள் ஒவ்வொன்றாக ஆராயப்பட்டு எண்ணப்பட்டன. அளிக்கப்பட்ட 223 வாக்குகளில் 4 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இதற்கமைய அளிக்கப்பட்ட செல்லுபடியான 219 வாக்குகளில் அரைவாசிக்கு மேல் பெற்றுக் கொண்டவர், அதாவது 110 வாக்குகளுக்கு மேல் எடுத்தவர் வெற்றி பெறுவார் என்ற நிலை ஏற்பட்டது.

வாக்குகள் எண்ணப்பட்டு முடிந்ததும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் அதனை அறிவித்தார். இதற்கமைய ரணில் விக்கிரமசிங்கவுக்கு 134 வாக்குகளும், டலஸ் அழகப்பெருமவுக்கு 82 வாக்குகளும், அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 3 வாக்குகளும் அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. டலஸ் அழகப்பெருமவை விட 52 மேலதிக வாக்குகளைப் பெற்று ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றார்.







## அனைத்து பேதங்களுக்கும் அப்பால் அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் அறைகூவல் விடுத்துள்ள ஜனாதிபதி

செயலாளர் நாயகத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, "நாம் அனைவரும் பிரிந்து செயல்படும் காலம் முடிந்து விட்டது, இனிமேல் அனைவரும் ஒன்றாக சேர்ந்து பயணிக்க வேண்டும். நாட்டின் இளைஞர்கள் இன்று இந்த அமைப்பில் மாற்றத்தைக் கோருகின்றனர். இன்று உலகில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கு முகம் கொடுத்து நாம் முன்னோக்கி செல்ல வேண்டும். அதற்காக நாம் புதிய வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும். மக்கள் எங்களிடம் பழைய அரசியலை கேட்கவில்லை. இந்தப் பாராளுமன்றம் ஒன்றிணைந்து புதிய அரசியல் முறையை பணியை நிறைவேற்ற வேண்டும் என்று நான் விசேடமாக கேட்டுக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

"நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய நடைமுறையொன்றை கொண்டுவர வேண்டும் என்று நான் டலஸ் அழகப்பெருமவிடம் கேட்டுக் கொள்கிறேன். எனது நண்பர் அனுரகுமார திஸாநாயக்கவிடமும் இதே கோரிக்கையை முன்வைக்கிறேன். அத்துடன், எனது நண்பர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடமும் இந்தக் கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன்.



இன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய நடைமுறை ஒன்றைக் கொண்டு வருவோம். அதைப் பற்றித் தான் நாம் கலந்துரையாட வேண்டும். அதேபோன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் உட்பட அனைவரிடமும் இதே கோரிக்கையை முன்வைக்கிறேன். எமது பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம், விக்னேஸ்வரன் ஆகியோரிடமும் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்ற இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன்.

அதேபோன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடமும் கட்சியின் சார்பில் இதே கோரிக்கையை முன்வைக்கின்றேன். அதேபோன்று இங்கு வந்துள்ள எமது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடமும் இதே கோரிக்கையை முன்வைக்கின்றேன். இப்போது நாம் பிரிந்திருந்தது போதும். நாம் ஒன்றாக இணைந்து கலந்துரையாடி ஒன்றாக செயற்படுவோம். நான் நாளை முதல் உங்கள் அனைவருடனும் கலந்துரையாட விரும்புகின்றேன்" எனக் கூறினார்.



**பிளவடைந்து நின்று செயற்படுவதால் அனுகூலங்கள் கிடைக்கப் போவதில்லை. ஒன்றிணைந்து பயணம் செய்வதனாலேயே இன்றைய பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்ள வழியேற்படும்**

இதன் பின்னர் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்ட டலஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரும் பாராளுமன்றத்தில் தமது கருத்துக்களை முன்வைத்தனர். நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள நெருக்கடியான சூழலில் இருந்து மீண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் புதிய ஜனாதிபதி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. பாராளுமன்றத்திலேயே தனது பதவிப் பிரமானத்தைச் செய்து கொள்வதற்கு விரும்புவதாகவும் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகரிடம் சபையில் அறிவித்திருந்தார்.

இதற்கமைய கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்துக்கு அருகிலுள்ள மண்டபத்தில் பதவியேற்பு விழா நடைபெற்றது. மிகவும் எளிய முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் சிலர் கலந்து கொண்டிருந்தனர். பாராளுமன்றத்தைப் பலப்படுத்தி, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்குப் பாராளுமன்றம் செயற்பட வேண்டும் என்றும், இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புடன் பங்களிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டிருந்தார்.

நாடு கடந்த சில மாதங்களாக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது. மக்கள் துன்பத்தின் எல்லைக்கே சென்று விட்டனர். இந்நிலையில் புதிய ஜனாதிபதி பதவியேற்றமையானது நம்பிக்கை எதிர்பார்ப்புகளை பல தரப்பினர் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் அனுபவமும்,ஆற்றலும், பொருளாதார நிபுணத்துவமும் மிக்கவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னேற்றமான மாற்றங்களைக் கொண்டு வருவாரென்பதே அந்த எதிர்பார்ப்பாகும்.

# கடுமையான விலைவாசி உயர்வை பெருந்தோட்ட சமூகம் எப்படிச் சமாளிக்கப் போகிறது?

**ஓர் ஆய்வு**

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் சோஷலிச கூட்டரசாங்கம் 1970ம் ஆண்டில் மிகப்பெரிய வெற்றியுடன் ஆட்சியில் அமர்ந்தது. ஸ்ரீமாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 91 பாராளுமன்ற ஆசனங்களும் கூட்டணிக் கட்சிகளான சமசமாஜ கட்சிக்கு 19 இடங்களும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆறு இடங்களுமாக மொத்தம் 116 இடங்களுடன் பாராளுமன்றத்தில் இக் கூட்டணிக்கட்சி அசுர பலத்துடன் அமர்ந்தது.

எதிர்க்கட்சியான ஐ.தே.க வெற்றிபெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை வெறும் 17மட்டுமே. பெரும் சோஷலிச புரட்சியையும் சாதாரண மக்களுக்கான ஆட்சியையும் இந்த அரசு அமைக்கப் போகிறது என்று மக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஏனெனில் நாட்டின் முன்னணி சோஷலிச மற்றும் கம்யூனிச தலைவர்கள் அந்த ஆட்சியில் அமர்ந்திருந்தனர். என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டீ. சில்வா, எஸ்.ஏ. விக்கிரமசிங்க, பீட்டர் கெனமன், வாசுதேவ நாணயக்கார ஆகிய இடதுசாரிகள் ஸ்ரீமாவின் கூட்டரசில் அங்கம் வகித்தனர்.

ஆனால் அந்த அரசினால் நான்கு ஆண்டு காலம் கூட மக்கள் அபிமானத்தை தன் வசம் வைத்திருக்க முடியவில்லை. 1971 ஜே.வி.பி கிளர்ச்சியில் பல நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்கள் மாண்டனர். 1974இல் நாட்டில் அரிசிக்கும் மாவுக்கும் பஞ்சம் ஏற்பட்டது. இதே காலப்பகுதியில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுகம்பனிகளுக்கு சொந்தமான பெருந்தோட்டங்களை அரசு சுவீகரித்தது. பின்னர் அவற்றை உசவசம், ஜனவசம மற்றும் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகிய மூன்று நிறுவனங்களின் கீழ் அத்தோட்டங்களைக் கொண்டு வந்தது.

அரசு பெருந்தோட்டங்களை கையேற்றதும் சிங்கள கிராமமயமாக்களுக்கு தோட்டக்காணிகள் விடுவிக்கப்பட்டன. ரூபா மற்றும் ஸ்டேர்லிங் கம்பனிகளும் தேசிய மயமாக்கப்பட்டன. அதே சமயம் பெருந்தோட்ட நிர்வாகம் அரசியல் மயப்பட்டு கண்டவரெல்லாம் அங்கே உத்தியோகம் பெற்றுக் கொண்டதால் தோட்டங்கள் நஷ்டத்தில் இயங்க ஆரம்பித்தன. பெருந்தொகையான தமிழ்த் தொழிலாளர்கள் வீதிக்கு விரட்டப்பட்டனர். ஏராளமானோர் தாயகம் திரும்பினர்.

பெருந்தோட்ட மக்கள் ஏற்கனவே வாய்க்கும் வயிறுக்குமாகவே வாழ்ந்து கொண்டிருந்தனர். திடீரென ஏற்பட்ட சூழ்நிலைகளால் கைக்கு கிடைத்தால்தானே வாய்க்கு என்ற நிலை ஏற்படவே அவர்களை பட்டினி நிலை சூழ்ந்தது. அத்தகைய பட்டினி நிலையை அவர்கள் அதற்கு முன்னர் சந்தித்தது கிடையாது. அக் காலத்தில் அவர்கள் நாடற்றவர்கள். தோட்டங்களுக்கு வெளியிலும் மக்கள் அரிசிக்கும், அரை இறாத்தல் பாணுக்காகவும் அலைந்து கொண்டிருந்தபோது நாடற்றவர்களான தமிழர்களுக்கு எப்படி அரசு வழங்கக்கூடிய சகாயங்கள் வந்து சேரும்? நாட்டில் பஞ்ச நிலை வரக்கூடிய ஒரு சூழல் இப்போது திரும்பவும் எழுந்துள்ளது. சாப்பாட்டுக்கு கஷ்டம் வரலாம்; வராமலும் போகலாம். ஆனால் இன்றைய சிரமதசை இன்னும் ஓராண்டுக்கு இப்படியே நீடிப்பதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. பொருட்களின் விலை நம்பமுடியாத அளவில் அதிகரித்துச் செல்கிறது. கடந்த மாதம் இருநூறு ரூபாவுக்கு விற்ற உருளைக் கிழங்கு இப்போது 550 600 ரூபாவுக்கு போகிறது. அத்தியாவசிய உணவுகளான மா, சீனி, பருப்பு என்பன அதிரடிப் பாய்ச்சலில் இருக்க, இந்த எதிர்பாரா சூழலை சமாளிக்கும் நிலையில் பெருந்தோட்ட சமூகம் உள்ளதா? என்பதே கேள்வி.











பெருந்தோட்டங்களில் கொவிட் நேரத்திலும் அரசியல் சூறாவளி வீசும் இன்றைய சூழலில் வேலைகள் வழமை போலவே நடைபெற்று வருகின்றன. இது ஒரு ஆறுதலான விஷயம். முடிவு எடுக்கப்பட்டதைப் போல ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட்டா விட்டாலும், பெருந்தோட்டங்கள் இயங்கிய வருகின்றன.

ஒரு வீட்டில் மூன்று அல்லது நான்குபேர் தொழிலுக்கு சென்றால் அந்த வீட்டில் பெரும்பாலும் பொருளாதாரப் பிரச்சினைகள் எழுவதில்லை. வசதிகளுடன் வாழலாம். தோட்ட வேலைகள் போக மேலதிக வருமானமாக மாடு, ஆடு, கோழி வளர்ப்பு அல்லது காய்கறித் தோட்டம் என்பனவும் இருக்குமானால் பிரச்சினையே கிடையாது. இந்த வசதிகள் இல்லாதவர்கள், தோட்டத் தொழில் வருமானத்தை மட்டும் எதிர்பார்த்திருக்கும் குடும்பங்கள் கஷ்டத்தை எதிர் கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

பெருந்தோட்டக் குடும்பங்களின் தினசரி செலவுகளை வெளியாரின் தினசரி செலவுகளுடன் ஒப்பிடும்போது சில செலவுகளில் இருந்து பெருந்தோட்ட வாசிகள் தப்பிக் கொள்ள முடிகிறது. போக்குவரத்து செலவு வெளியில் உள்ளவர்களுக்கு பெரிய தலைவலியாக இருக்க, தொழிலாளர் குடும்பங்களுக்கு அது பெரும்பாலும் பொருட்டல்ல. தண்ணீர், விறகு, மருந்து அல்லது மருத்துவ சிகிச்சை, உடைகளுக்கான செலவு என்பன மிகவும் குறைவு. உணவை எடுத்துக் கொண்டாலும் எளிமையானாலும் சந்தானதுமான உணவுகளை உண்பதற்காக வசதி அவர்களுக்கு உள்ளது. பொதுவாகவே பிளேன் டீ அருந்தும் வழக்கம் இருந்தாலும் பசும்பாலை பெறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

தோட்டங்களில் மா, பலா, வாழை, ஈரப்பலா, மரவள்ளி, வற்றாளை போன்றவற்றையும் கீரைகள், கத்தரி, வெண்டி, தக்காளி, கிழங்கு வகைகள் என்பனவற்றையும் பயிரிட்டுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு தோட்டங்களில் மிகுதி. கால் நடைவளர்ப்புக்கான வசதிகள் காணப்படுவதால் கால்நடை வளர்ப்பு என்றுமே அங்கே இருந்துவந்த ஒன்றுதான்.

ஆடு வளர்ப்பு தோட்டங்களில் பரவலாகக் காணப்படுகிறது. ஆடுகளின் இனப்பெருக்கம் வேகமானது. குறுகிய காலத்தில் பல்கிப் பெருகும். ஒரு ஆடு சாதாரணமாக 30 ஆயிரத்துக்கும் அதிகமாக விற்பனையாகிறது. குட்டிகளை பத்தாயிரத்துக்கு வாங்கலாம். ஆனால் விசேஷ காலங்களைத் தவிர ஆடுகளை வெட்டி பங்கிட்டுப் புசிக்கும் வழக்கம் தோட்டங்களில் பரவலாக இல்லை. மாடு வெட்டி புசிக்கும் பழக்கம் அரிது. எனினும் ஒருவர் 15 மாடுகளை வளர்த்தால் அவர் இலட்சாதிபதியாக வாழ முடியும். மாடு வளர்ப்பின் மூலம் காணி வாங்கி, வீடுகள்

தலவாக்கலை **பி. கேதீஸ்...**

அமைத்து, வாகன வசதிகளோடு வாழ்வோரை தனிப்பட்ட ரீதியாக நான் அறிவேன்.

எனினும் இவர்களும் தமது தொழிலில் பிரச்சினைகளை சந்திக்கவே செய்கிறார்கள். ஒரு லீட்டர் பாலின் 105 ரூபா, ஆனால் புண்ணாக்கு கிலோ 85 முதல் 100 ரூபா வரை விற்பனைக்கு உள்ளது. புல் அறுத்து போடுவதற்கு பணம் செலுத்த வேண்டும். மருத்துவ செலவும் உண்டு. கோழித்தீனுக்கு அலையவேண்டிய நிலையில் கோழி வளர்ப்போர். தள்ளப்பட்டுள்ளனர். 100, 150 கோழிகள் வளர்த்து வந்த சிறு பண்ணையாளர்கள் கோழித் தீன் பிரச்சினை காரணமாக கோழிகளை விற்றுவிட்டார்கள் என்று அறிய முடிகிறது. தேடித் தேடிப் பார்த்தாலும் சோளம் கிடைப்பதில்லை. கோழித் தீவனம் கிடைப்பதாக இருந்தாலும் யானைவிலை குதிரைவிலை என்கிறார்கள். முன்னர் கோழிகளை திறந்து விட்டு வளர்க்க முடிந்தது. இப்போது இது சாத்தியம் இல்லை.

மொத்தத்தில் பெருந்தோட்டங்கள் ஒரு பஞ்ச நிலையை அல்லது கடுமையான விலை உயர்வை எப்படிச் சமாளிக்கப் போகிறது என்பதைப் பார்ப்போமானால் 1970களில் சந்தித்த மோசமான பட்டினி நிலை ஏற்படாது என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஒரு ஆசிரியரிடம் மாணவ மாணவியர் பகல் உணவாகக் கொண்டு வரும் உணவுகள் எவ்வாறு உள்ளன எனக் கேட்டபோது, பெரும்பாலும் சோறும் ஒரு கறி மற்றும் கீரை அல்லது சம்பலே கொண்டுவருவார்கள் என்றார் அவர். முட்டை கொண்டு வருவோர் குறைவே என்று சொல்லும் இவர் மாமிசம் மிகமிகக் குறைவு என்கிறார்.

ஒரு பெண்ணிடம் உங்கள் ஒரு நாள் உணவு பற்றி சொல்ல முடியுமா என்று கேட்டபோது,

"காலையில் ஒரு பிளேன்டீ, ரொட்டியை சம்பலில் தொட்டு சாப்பிட்ட பின்னர் ரொட்டியையும் சம்பலையும் சுற்றி எடுத்துக் கொண்டு மலைக்குச் செல்வேன். அங்கே வருபவர்களும் பிளேன் டீயையும் ரொட்டியையும் தான் எடுத்து வருவார்கள். வேலை முடிந்து வீடு சென்றதும் சோறு சமைப்பேன். கூடவே பருப்புக் கறி அப்புறம் ஒரு மரக்கறியுடன் இரவு சாப்பாடு முடிந்துவிடும்" என்று பதில் சொன்னார்.

மேலும் சிலரிடம் விசாரித்தபோது ஏறக்குறைய இதே பதில்தான் கிடைத்தது. சிலர் இரவிலும் ரொட்டி சாப்பிடுவோம். அதில் பிரச்சினை கிடையாது என்றார்கள். மரவள்ளி, வற்றாளை, பலா என்பன நிறையவே கிடைக்கக்கூடிய இடமாக தோட்டங்கள் காணப்பட்டாலும் இவை இம் மக்களின் விரும்ப உணவாக என்றைக்கும் இருந்ததில்லை. ஆனால் இவை ஆரோக்கியமான உணவுகள்.

கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, மீன், முட்டை என்பன அடிக்கடி உணவில் இடம் பெறும் உணவுகள் அல்ல. இப் பழக்கம் குழந்தைகளின் போஷாக்கை பாதிக்கிறது என்று சுகாதார உத்தியோகத்தர்கள் எடுத்துச் சொன்னாலும் காதில் போட்டுக் கொள்வதில்லையாம். மீன் விற்போர் தோட்டங்களுக்குள் பெரும்பாலும் செல்வதில்லை. என்றைக்கும் பெருந்தோட்டங்களில் மீன் உணவு என அறியப்படுவது டின் மீன்களைத்தான்.

ரொட்டி பசிதாங்கும் என்பது இம் மக்களின் பொதுவான அபிப்பிராயம். 2500ரூபா கொடுத்து பால்மா வாங்க வேண்டிய அவசியம் கிடையாது. கிடைத்தால் பால் டீ அல்லது பிளேன் டீ என்ற மனப்பான்மையை இம் மக்களின் எல்லா உணவுப் பழக்கங்களிலும் காண முடிகிறது. அதே சமயம் கடுமையாக உழைத்தால் மேலதிக பணம் தேடலாம் என்பதும் இவர்களுக்குத் தெரியும்.

எனவே, ஒரு உணவுப் பஞ்சம், அதாவது வாங்கிப் பாவிக்கக்கூடிய உயரத்தில் அத்தியாவசிய உணவுகள் இல்லாத ஒரு நிலையில், பெருந்தோட்ட சமூகம் எழுபதுகளில் பாதிக்கப் பட்டதுபோல பாதிக்கப்பட மாட்டாது என்று உறுதியாக சொல்ல முடியும். அதே சமயம் பள்ளி மாணவ மாணவியரின் உணவில் சத்துகள் குறைந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது பெற்றோர் கடமை. இப்போதிருந்தே உணவில் அதில் முட்டைகள், கிழமைக்கு மூன்று தடவைகளாவது, சேர்த்துக் கொள்ள வேண்டும். மா மட்டுமே சாப்பிடுவோம் என்று அடம்பிடிக்காமல் மரவள்ளி, வற்றாளை மற்றும் தானியங்களையும் சேர்த்துக் கொள்ளப் பழக வேண்டும். பருப்புடன் கிழங்கு, கத்தரி, தக்காளி, கீரை என்பனவற்றைச் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் ஏற்கனவே அவர்களிடம் உள்ளதுதான்.

தோட்டங்களில் பயிர் மற்றும் கால்நடை வளர்ப்புக்கு வசதி உள்ளது. வீட்டுத் தோட்டங்களை ஏற்படுத்திக் கொள்வது, முடிந்தால் கோழிகளை வளர்ப்பது என்பன உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவுடன் போராடுவதற்கு நிச்சயம் உதவும்.

---

# பசுமை பூமி திட்டத்தை ஜனாதிபதியிடம் எடுத்துச் சொல்லுங்கள்!

'நாட்டுக்கு புதிய தலைமைத்துவம் கிடைத்துள்ளது. நேரம், காலம் பார்க்காமல் சூட்டோடு சூடாக தனிவீட்டுத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும் வகையிலான காய்நகர்த்தலுக்கு மலையக அரசியல் தலைமைகள் தயாராக வேண்டும்'

**'தீர்க்கதரிசனமற்ற தீர்மானங்களால் பசளையைப் பயன்படுத்தும் விவகாரங்களில் விவசாயிகளைப் போலவே பெருந்தோட்டத்துறையினரும் சங்கடத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது. இதனால் தேயிலை விளைச்சல் கணிசமான அளவு இழப்பைச் சந்திக்க வேண்டி நேர்ந்துள்ளது'**



நாட்டில் நிலவும் சமகால பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் அந்நியச் செலாவணி இல்லாமையே ஆகும். தொலைநோக்கற்ற பொருளாதார முகாமைத்துவம் காரணமாகவே நாடு சிக்கலை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. தற்போதைய நிலையில் ஆடை தயாரிப்புத் தொழிலும் தேயிலைத்துறையும் இயங்காதிருந்தால் நிலவரம் மிகமிக மோசமாகிப் போயிருக்கும். எரிபொருள் நெருக்கடி காரணமாக இவ்விரு துறைகளுமே இன்று மந்தகதியை அடைந்திருப்பதாக சம்பந்தப்பட்ட துறையினர் தெரிவிக்கிறார்கள்.

இந்த வகையில் தேயிலை ஏற்றுமதியில் 8 சதவீத சரிவு ஏற்பட்டிருப்பதாக பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. தவிர ரஷ்யா உக்ரைன் யுத்தம் காரணமாக உக்ரைன் நாட்டுக்கான தேயிலை ஏற்றுமதி முற்றிலுமாக ஸதம்பிதமடைந்துள்ளது. ரஷ்யாவிலிருந்து கேள்வி வழமை போலவே இருந்தாலும் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள பின்னடைவு ஏற்றுமதிக்கான தேவையை ஈடுசெய்ய முடியாதுள்ளது. இதன் தாக்கமானது பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் பாதிப்பதாகவே அமையும்.

தொழிற்சாலைகள் இயங்குவதற்கு போதுமான அளவு எரிபொருள் இல்லை. இதேபோல தேயிலையை ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்கு எடுத்துச் செல்லும் வாகனங்கள் எரிபொருள் பிரச்சினையால் இயங்க முடியாத நிலை. தோட்டப் பகுதிகளில் இருந்த பாரிய மரங்களை ஏற்கனவே வெட்டி வீழ்த்தி காசாக்கிக் கொண்டு விட்டன தோட்ட நிர்வாகங்கள். இதனால் விறகுக்காக அலைய வேண்டியுள்ளது. அதற்கும் வாகனங்கள் ஓட வழியில்லை. இதனால் நடப்பது நடக்கட்டும் என்று ஆனமட்டும் ஆலைகளை இயங்க வைக்கும் போக்கை கைக்கொள்கின்றது கம்பனி தரப்பு.

இதன் காரணமாக வேலை நாட்கள் குறைக்கப்படுகின்றன. தோட்ட நிர்வாகங்கள் குறிப்பிட்டளவு கொழுந்து பறித்தாலே போதும் என்னும் நிலைமை ஏற்பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு மேலதிக கொழுந்துக்கான வருமானத்தில் வெட்டு விழுந்துள்ளது. கொழுந்து பறிப்பதில் ஒரு ஒழுங்குமுறை இருக்கின்றது. வாரம் ஒருமுறை பறித்த தேயிலைச் செடியிலேயே மீண்டும் கொழுந்து பறிக்க வேண்டும் என்ற சுற்றுமுறை வழக்கத்தில் உள்ளது. இதனை ஆங்கிலத்தில் Rounds என்று குறிப்பிடுவார்கள். இந்த சுற்று முறைமை சரியாக பின்பற்றப்படாவிட்டால் தேயிலைத் தளிர்கள் முற்றிப் போகும். முற்றாத அரும்புகளோடு முறையாக பறிக்கப்படும் தேயிலையே சுவையான தேயிலையாகி கூடிய விலைக்குப் போகும்.

தற்போது இரசாயன பசளை, கிருமிநாசினியை பெருந்தோட்டங்கள் பயன்படுத்துவது குறைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தீர்க்கதரிசனமற்ற தீர்மானங்களால் பசளையைப் பயன்படுத்தும் விவகாரங்களில் விவசாயிகளைப் போலவே பெருந்தோட்டத் துறையினரும் சங்கடத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது. இதனால் தேயிலை விளைச்சல் கணிசமான அளவில் இழப்பைச் சந்திக்க வேண்டி நேர்ந்துள்ளது. இதனிடையேதான் எரிபொருள் பற்றாக்குறை சமாச்சாரம்.

எனினும் இத்துறையின் அபிவிருத்திப் பற்றி பேசுவோர் அத்துறைச்சார் சமூகத்தின் வாழ்வியல் பற்றி சிந்தித்துப் பார்ப்பதே இல்லை.

சர்வதேச சமூகம் கூட தேயிலை உற்பத்தியாளர்களையும் ஏற்றுமதியாளர்களையுமே கருத்திற் கொள்கின்றது.

ஆயினும் இத்துறைச்சார் தொழிலாளர்களின் பொருளாதார தேடலின் பின்புலத்தில் இத்துறை அபிவிருத்தியடைய வேண்டியது அவசியம் என்பதில் மாற்று கருத்து கிடையாது.

எரிபொருள் விநியோகத்தில் தேயிலைத் தொழிற்றுறைக்கும் முன்னுரிமை வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்திருந்தப் போதிலும் இதுவரை அவ்வாறு நடக்கவில்லை. அந்நியச் செலாவணி அவசியப்படும் பட்சத்தில் அதற்கான வழிவகைகளை முடக்கிவிட வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும்.

பலவருடங்களாக தேயிலைத் தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வந்தவர்கள், வருபவர்கள் பலர். இவர்கள் பணியாற்றும் பிரிவுகள் சார்ந்த தொழில் அறிவைப் பெற்றவர்களாக மட்டுமே பழக்கப்பட்டுள்ளார்கள். இது தவிர தேயிலைத் தயாரிப்பு சம்பந்தமான நுட்பங்கள் எதுவுமே இவர்களுக்கு தெரியாத வகையிலேயே நடத்தப்படுவது அவதானிக்கத்தக்கது.

இதை ஏன் பதிவிடுகின்றோம் என்றால் தொழிலோடு உங்கள் தொடர்பு சரி. அதற்கு மேல் எந்தப் பாத்தியதையும் உங்களுக்கு இல்லை என்ற ரீதியிலேயே இவ்வளவு காலமும் இச்சமூகம் நடத்தப்பட்டு வந்துள்ளது என்பதை சுட்டிக் காட்டுவதற்குதான்.

தவிர பெருந்தோட்டத் துறையில் ஆதிக்க மேலாண்மைப் போக்கு தலைதூக்கி இருப்பதால் பெருந்தோட்டச் சமூகம் ஒரு பொருட்டாக கருதப்படுவதே இல்லை. இதுவே யதார்த்த நிலைமை. முக்கியமாக கிராமத்தவர்கள் போல தோட்டப் புறங்களில் வாழ்வதற்கான வசதிகள் இல்லை. பெரும்பாலும் லயத்து வாழ்க்கை என்பது துயரங்கள் சூழ்ந்த அவலம். ஒரு சிலர் வசதியினாலும் கல்வி விழிப்புணர்வுகளாலும் இந்த இரும்புப் பிடியை உடைத்துக்கொண்டு வெளியே வந்திருக்கலாம். அவ்வாறு வந்தவர்கள் தாம் பிறந்து வாழ்ந்த இடத்தை மறந்து போயிருக்கலாம்.




ஆனால் இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் லயத்துக்குள் முடங்கிப்போய் கிடக்கவே செய்கின்றார்கள். குறிப்பாக வசதியில்லாத வதிவிடம், வாழ்வாதாரம் குறைந்த தொழிற்துறை, ஆரோக்கியமற்ற சூழல் என்று ஆட்டிப் படைக்கப் படுகின்றார்கள்.

நிலவுரிமை என்பது நிச்சயப்படுத்தப்படாத பின்புலத்தில் தற்காலிக குடிகள் போலவே தர்க்கரீதியான விமர்சனத்தை உள்வாங்கிக் கொண்டுள்ளார்கள்.

இதற்கு அடிப்படைக் காரணம் இருக்கின்றது. இச்சமூகத்தின் வாழ்வாதார உரிமைசார் பிரச்சினையை இச்சமூகம் சாராதோரே கையாள வேண்டியுள்ளது என்பது அவதானிகளின் கருத்து.

அதனால்தான் புறக்கணிப்புகள் ஏராளம். 24 மணி நேரங்களில் இந்திய வம்சாவளி மக்களை நாடற்றவர்களாக மாற்றிய பெருமை இந்நாட்டுக்கு உண்டு. அது 1948 ஆம் ஆண்டுகால சங்கதிதானே என்று யாரும் அவசரப்பட்டு விடக்கூடாது. குடியுரிமை இன்றைக்கும் இல்லை!

இச்சமூகம் சாராதவர்களின் கரங்களில் தீர்வு தேங்கிக் கிடப்பதால் இந்த ஓரங்கட்டல்.

அதற்கான அழுத்தம் முறையாக பிரயோகிக்கப்படாது மலையக பிரதிநிதிகளின் காய்நகர்த்தல் யுக்தி மலுங்கடிக்கப்பட்டுக் கிடக்கிறது. இத்தனைக்கும் இடையில் இச்சமூகம் இன்னும் தாம் பிறந்து வாழும் தோட்டங்களை நேசிக்கவே செய்கின்றது. அதுவும் நாலைந்து தலைமுறைகளாக தஞ்சமடைந்து கிடக்கின்றார்கள். கோப்பிக்கும் தேயிலைக்கும் இறப்பர் மரங்களுக்கும் உரமாகிக் கொண்டு வாழ்க்கைக்காக ஏங்கும் ஓர் நிலைமை இன்னும் இங்கு நீடிக்கவே செய்கின்றது. தவிர பெருந்தோட்டச் சமூகம் இந்நாட்டின் மீது விசுவாசம் கொண்டது அல்ல என்னும் கண்ணோட்டத்துடனேயே அரசியல்வாதிகள் பிரச்சினைகளைக் கையாண்டு வந்ததன் பின் விளைவுகளே இன்றைய நிலைக்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்று கூறினால் வியப்பல்ல.

**பன். பாலா ...**

சொந்த வீடு, சொந்தக்காணி, கல்வி, சுகாதாரம் தொழில்வாய்ப்பு, சமவுரிமை கிடைக்காமையினால் தமக்கு தாமே ஓர் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிக் கொண்டு வாளாவிருந்ததன் சாபக்கேடுதான் இன்னும் விடிவுக்காக ஏங்கும் நிலைக்கு வித்திட்டுள்ளது.

அண்மைக்கால தனிவீட்டுத் திட்டம் விழிப்புணர்வுக்கான மனமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இருக்க வேண்டும். ஆயினும் அது இடைநடுவில் நின்று போயிருக்கின்றது.

நாட்டுக்கு புதிய தலைமைத்துவம் கிடைத்துள்ளது. நேரம், காலம் பார்க்காமல் சூட்டோடு சூடாக தனிவீட்டுத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில் காய்நகர்த்த மலையக அரசியல் தலைமைகள் தயாராக வேண்டும்.

அதேநேரம் தேயிலைத்துறை நலிந்து போய்விடாமல் தக்கவைக்கும்படியான ஏற்பாடுகளையும் புதிய ஜனாதிபதியிடம் முடுக்கிவிட வேண்டும். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரலாம். அடிக்கும் அடியின் வலிமையும் சாமார்த்தியத்தையும் சார்ந்த சங்கதி! இது.

ஜனாதிபதி பிரதமராக இருந்த காலத்தில் தான் பசுமை பூமி திட்டம் கொண்டுவரப்பட்டது. பொதுஜன பெரமுன ஆட்சியில் அது கிடப்பில் போடப்பட்டது.

அன்றைய பிரதமர் இன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. அவரிடம் பசுமை பூமி திட்டத்தை எடுத்துச் சென்று பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம் அல்லவா!

LITRO GAS

# PROCUREMENT NOTICE FOR THE SUPPLY OF LIQUEFIED PETROLEUM GAS (LPG) FOR THE YEAR 2022 - 2023 TO LITRO GAS LANKA LIMITED

## PROCUREMENT REFERENCE NO. LGLL/LPG/030/ICB/2022

## INTERNATIONAL COMPETITIVE BIDDING ( ICB)

The Chairman, Standing Cabinet Appointed Procurement Committee (SCAPC) on behalf of Litro Gas Lanka Ltd invites sealed bids from eligible and qualified bidders for the Supply of **280,000 Metric Tons (MT) +/- 20%** of Liquefied Petroleum Gas (LPG) for 12 months' period.

LPG should be supplied in ocean tankers, which will be required to be discharged at the Litro Gas Terminal Lanka (Pvt) Limited Conventional Buoy Mooring (CBM), located off the coast of Kerawalapitiya (7 km North of Colombo) Sri Lanka, or at the Port Discharge Facility of the Hambantota Port situated in the South of Sri Lanka.

To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and not have any conflicts of interest in the business of Litro Gas Lanka Limited or its associated companies. (further details are mentioned in the bid document)

All details pertaining to this procurement are clearly stated in the Bid Document. The said Bid Document may be obtained at the under mentioned address on the payment of a non-refundable fee of LKR 100,000/= or USD 300/= in the form of a pay order from a registered commercial bank in Sri Lanka on any working day (Monday – Friday) between 9.30 a.m. – 2.30 p.m. **from 25th July 2022 to 12th August 2022 (both days inclusive).**

The online pre-bid meeting will be held on **05th August 2022 at 2.30 p.m. (Sri Lanka time)** The bidders are required to register for the Pre bid meeting by submitting their details to the following email addresses: terrence.appuhamy@litrogas.com & Damith.Liyanage@litrogas.com. The online meeting link will be shared accordingly as per the given information.

All bids shall be accompanied by an irrevocable and unconditionally en-cashable Bid Security in the form of a Bank Guarantee issued/confirmed by a licensed commercial bank operating in Sri Lanka, or a bank based in another country. However, the guarantee should be confirmed & assured by a licensed commercial bank operating in Sri Lanka. The Bank Guarantee should be issued in favour of Litro Gas Lanka Ltd. The amount of the **Bid Security is USD 1,000,000 (One Million US Dollars)** and should be valid up to 10th January 2023.

The duly completed Bid Documents should be deposited in the Tender Box on the 03rd Floor of the Litro Gas Lanka Limited Head Office, No 267, union Place, Colombo 02, Sri Lanka on or before **2.30 p.m. on 15th August 2022.** The opening of the bids will take place soon after closing the bids at the 4th Floor auditorium of above premises.

For any clarification please contact – Director Procurement (Direct: +94 11 2 581131 Ex. 214).

The Chairman
Standing Cabinet Appointed Procurement Committee
Litro Gas Lanka Limited
267, Union Place
Colombo 02
Sri Lanka
T.P. - 011 2 581131
Fax - 011-2327698

# லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்

# வேலை வாய்ப்புக்கள்

நீர்கொழும்பில் இருந்து காலி வரை 560,000 பாவனையாளர்களுக்கு சேவையாற்றும் நாட்டின் கடலோர கட்டமைப்பின் செயற்பாட்டு பிரதேசங்களை உள்ளடக்கும் ஏழு கிளைகளைக் கொண்டுள்ள லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட் இலங்கையின் ஓர் விநியோக பயன்பாட்டு நிறுவனமாகும். 1,500 ஊழியர்களின் வேலைப் படையணியைக் கொண்டுள்ள, நிறுவனமானது கீழ்க்காணும் பதவிகளுக்காக தகைமையுள்ள நபர்களைத் தேடுகின்றது.

## களஞ்சிய உதவியாளர் (கிளை)

| | |
|---|---|
| **கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்** | க.பொ.த. (சா/த) ஆறு பாடங்கள் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம், ஆங்கிலம் உள்ளடங்களாக அத்துடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஐந்து திறமைச் சித்திகள் **மற்றும்** க.பொ.த. (உ/த) 03 பாடங்கள் (ஒரே அமர்வில்) **அத்துடன்** ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பொருட்கள் முகாமைத்துவத்தில் சான்றிதழ் பாடநெறி |
| **அனுபவம்** | ஓர் களஞ்சியநபர்/ களஞ்சிய பொறுப்பாளர்/ களஞ்சியம் மற்றும் வழங்கல்கள் இலிகிதர் ஆக 5 வருட அனுபவம் அல்லது ஓர் நம்பகமான கம்பனியில் சமமான பதவிகள் |
| **மேலதிக தகைமைகள்** | (அ) கணனி தேர்ச்சி (ஆ) சுயாதீனமாக ஆங்கிலம் போன்ற சிங்களத்திலும் தொடர்பாடல் மற்றும் அறிக்கைகளை எழுதுவதில் தேர்ச்சி (இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் |
| **வயது** | 2022 ஒகஸ்ட் 02 திகதிக்கு 40 வயதிற்கு குறைவாக இருத்தல். |
| **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | இரண்டு (02) |

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு ஓர் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும் அத்துடன் பரந்த அளவிலான சலுகைகளும் கிடைக்கும்.

உங்களது விபரமான சுயதரவுகளுடன் சான்றிதழ்களின் பிரதிகளும் உள்ளடங்களாக இரண்டு உறவினரல்லாத பரிந்துரைப்பவர்களின் பெயர்கள், முகவர்கள் மற்றும் தொடர்பு தொலைபேசி இலக்கங்களுடன் 2022 ஒகஸ்ட் 02ம் திகதி அல்லது அதற்கு முன்பு கீழேயுள்ள முகவரியை அடையுமாறு தயவு செய்து சமர்ப்பிக்கவும்.

விண்ணப்பிக்கும் பதவியை சுயதரவுப் பத்திரம் மற்றும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**மேலதிக பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்)**
**லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்,**
**1ம் மாடி, E.H. குரே கட்டிடம், 411, காலி வீதி, கொழும்பு-03.**

# பெண்களாகிய உங்களுக்கு இஸ்ரேல் நாட்டில் தொழில் வாய்ப்பு

# இஸ்ரேலில் கூடிய சம்பளத்துடன்

**வீடுகளில் நலம்பேணல் சேவைகளுக்காக ஆட்சேர்ப்பு இடம் பெறுகிறது**

**ஆகக்குறைந்த சம்பளம் 575,000.00 ரூபா (NIS 5300)**

**இஸ்ரேல் அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையில் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் இஸ்ரேலுக்கான நலம்பேணல் சேவையாளர்கள் உடனடியாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.**

**நீங்கள் பின்வரும் தகைமைகளுடன் இலங்கைப் பெண்ணொருவராக இருந்தால் இதற்கு விண்ணப்பிக்கலாம்.**

❖ நலம்பேணல் கற்கை நெறியொன்றைக் கற்று NVQ Level III அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தாதி அல்லது நலம்பேணல் சேவை தொழிலில் 11 மாதத்திற்குக் குறையாத தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல்
❖ 25 - 45 வயதிற்கிடைப்பட்ட பெண்ணொருவராகவிருத்தல்.
❖ க.பொ.த. (சா.தர) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்
❖ உயரம் 1.5 மீட்டருக்குக் குறையாமலும் எடை 45 கிலோ கிராமிற்கும் குறையாமலும் இருத்தல்.
❖ இதற்கு முன் இஸ்ரேலில் பணிபுரிந்திருத்தல் கூடாது.
❖ ஆங்கில மொழிக் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் (இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகததின் மொழிப் பயிற்சி கற்கை நெறியில் இணைந்துகொள்ளலாம்)
❖ இஸ்ரேலுக்கு தொழிலொன்றுக்காக புறப்படுவதற்கு உள்நாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமொன்றுக்கு விண்ணப்பமோ கடவுச்சீட்டையோ வழங்கிறாருத்தல் வேண்டும்.
❖ விண்ணப்பதாரரின் கணவர் / பெற்றோர் அல்லது பிள்ளைகள் தற்போது இஸ்ரேலில் பணிபுரிந்தபடியோ அல்லது வதிபவராகவோ இருத்தல் கூடாது.
❖ உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமானவராகவும் சயரோகம், மஞ்சற் காமாலை, HIV எயிட்ஸ் போன்ற பாலியல் நோய்கள் உள்ளடங்கலாக (ஆனால் இதற்கு மட்டும் வரையறுக்கப்படாத) நாற்பட்ட நோய்களுக்கு உட்படாதவராகவும் பெரிய பாரத்தை சுமக்கக்கூடிய இயலுமையுள்ள இஸ்ரேலில் சிரமான நிலையில் நலம்பேணல் சேவை செய்வதற்கான இயலுமையும் இருப்பவராக இருத்தல் வேண்டும்.

பின்வரும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கிளை அலுவலகங்களுக்கு வருகை தந்து உங்களது சுய விபரங்கள், விண்ணப்பப் படிவங்கள் மற்றும் இயைபுடைய சான்றிதழ்களை ஒப்படைக்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 0252237995 | காலி | 0912235828 | மத்துகம | 0342247188 |
| பதுளை | 0553053760 | யாழ்ப்பாணம் | 0212220682 | பன்னிபிட்டிய | 0112846904 |
| மட்டக்களப்பு | 0652228770 | கண்டி | 0812068101 | பொலன்னறுவை | 0272227499 |
| சிலாபம் | 0322224056 | குருநாகல் 01 | 0372223661 | இரத்தினபுரி | 0452223077 |
| தம்புள்ள | 0662284074 | குருநாகல் 02 | 0372232640 | தங்காலை | 0472240667 |
| திருகோணமலை | 0262242107 | வவுனியா | 0242225909 | அம்பாறை | 0632222188 |

**முன்வரும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இஸ்ரேஸ் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் குளுக்கல் முறையின் பிரகாரம் தொழிலுக்காக தேர்ந்தெடுக்கப்படுவர்.**

ஆங்கில மொழிப் பயிற்சி தேவையான பெண்கள் மற்றும் நலம்பேணல் சேவையாளர் மற்றும் தாதியர் துறையில் தகைமைகள் இல்லாத பெண்கள் பயிற்சிக்கான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 0112789257 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் மட்டுமே ஆட்சேர்க்கப்படுவர்.**

**தலைவர் - இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்**
**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்.**


Trusted Marketplace of Classified Advertisers




For 15 Words Rs. 500/-
* Cost of each additional word Rs. 20/-
Ramani - 077 7 278 948 / Gayani - 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361


# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### மோட்டார் வாகனங்கள்

### 130 சைக்கிள்களும் மவுண்டன் பைக்குகளும்

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு சேகரிக்கப்பட்ட சைக்கிள்கள் மொத்தமாக விற்பனைக்கு. ரூ. 45000/ முதல் 077 3544855. 042566

### வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

யூடியூப் இற்கு சென்று யூனியன் அஸ்ஸூரன்ஸ் ஆட்சேர்ப்பு வீடியோவை பாருங்கள். அது போன்று வாழ்க்கையை வெல்லுவதற்கு தேவையாயின் அழையுங்கள். டேமியன் 0773719580. 041046



### 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

கணக்காய்வு/ கணக்காளர் பயிலுநர்கள் விண்ணப்பிக்கவும். முகாமையாளர் 891/2, பேங்ஷால் வீ தி, கொழும்பு 11. தொலைபேசி / வட்ஸ்அப் 075 5030954. மின்னஞ்சல் :agapeaccservices@gmail.com 038819

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

வீட்டுப் பணிப்பெண் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 30 இற்குக் கீழ் அனுபவம் தேவையில்லை. நல்ல சம்பளம் வேலை நிபந்தனைகளுடன் தொடர்பு 75/ 1, W.A. சில்வா மாவத்த, கொழும்பு 06 தொலைபேசி 2591116 9, 0777 452447, 0 75 5091379. 040927

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

விலங்குப்பண்ணைக்கு குடும்பம் அல்லது ஊழியர்கள் தேவை. கம்பஹா 0722 880255, 071 9962505. 042687

### காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொள்ளுப்பிட்டி முகாந்திரம் பாதையில் இரு மாடிக்கட்டிடம் விற்பனைக்குண்டு. 3 அறைகள். 2 குளியலறைகளுள்ள வீடு விற்பனைக்கு. (பிரதமர் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு பின்னாலுள்ளது. 077 5262362. 042780



### 618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

பாணந்துறையில் 19 பேர்ச் நேசன் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட இரு மாடி வீடு மற்றும் காணி விற்பனைக்கு. விலை தொடர்பான விசாரணை 2022.08.07ஆம் திகதிக்கு முன்னராக விஷேட ஆதன முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் இடம், கொழும்பு 02 என்ற முவரியில் விபரங்களை பெறலாம். ஆகக் குறைந்த விலை 25 மில்லியன். 077 3427535. 042789

### 619 வீடு சொத்து குருணாகல் மாவட்டம் விற்பனைக்கு

அளவ்வ கொஸ்சின்ன வீதியிலுள்ள 7 ஏக்கரின் ஒரு பகுதியில் தென்னை மரம் நாட்டப்பட்டுள்ளது. நேசன் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. 2022.8.7ஆம் திகதிக்கு முன்னராக விலை தொடர்பாக விசாரிக்கவும். விஷேட ஆதன முகாமைத்துவ பிரிவு 242 யூனியன் இடம், கொழும்பு 02 என்ற முகவரிக்கு அனுப்பவும். ஆகக் குறைந்த விலை 38.5 மில்லியன் 077 3427535. 042795

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

வென்னப்புவவில் 71.5 பேர்ச் நேசன் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீரிக்கப்பட்ட வீடும் காணியும் விற்பனைக்கு. 2022.8.7 இற்கு முன்னர் விலை தொடர்பாக விசாரிக்கவும் விஷேட ஆதன முகாமைத்துவ பிரிவு 242 யூனியன் இடம் கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பவும். ஆகக் குறைந்தது 35.8 மில்லியன். 077 3427535. 042793

### 626 வீடு சொத்து பதுளை மாவட்டம் விற்பனைக்கு

பண்டாரவளை வெலிமடை பிரதான வீதியில் 24.7 பேர்ச் நேசன் டரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்குண்டு. 2022.08.07ஆம் திகதிக்கு முன்னராக விலை தொடர்பாக விசாரிக்கவும். விஷேட ஆதன முகாமைத்துவ பிரிவு 242, யூனியன் இடம், கொழும்பு 02 என்ற முகவரிக்கு ஆகக்குறைந்த கேள்வி 2.5 மில்லியன். 077 3427535. 042803

### 629 வீடு சொத்து இரத்தினபுரி மாவட்டம் விற்பனைக்கு

தரணியகல பேர்ச் 434 நேசன் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு 2022.08.07ஆம் திகதிக்கு முன்னராக விலை தொடர்பாக விசாரிக்கவும் விஷேட ஆதன முகாமைத்துவ பிரிவு. 242, யூனியன் இடம், கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பவும். ஆகக் குறைந்த கேள்வி 4.7 மில்லியன். 077 3427535. 042799

### 632 வீடு சொத்து ஹம்பாந்தோட்ட மாவட்டம் விற்பனைக்கு

திஸ்ஸமஹாராம கதிர்காம வீதியில் 171 பேர்ச் நேசன் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட இடம் விற்பனைக்கு. விலை தொடர்பான விசாரணை 2022.08.07ஆம் திகதிக்கு முன்னதாக விஷேட ஆதன முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் இடம், கொழும்பு 2 என்ற முகவ ரியுடன் தொடர்பு கொள்ளவும். ஆகக் குறைந்த விலை 34.2 மில்லியன். 077 3427535. 042790

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

3 படுக்கையறை மாடி வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு. வாடகை ரூபா 25, 000/ = மாதாந்தம். முற்பணம் 1 வருடம். குத்தகை ரூபா 20, 000/ = மாதாந்தம், 2 வருட முழு முற்பணம். சாராஸ் கார்டன் பள்ளிவாசலுக்கு அடுத்ததாக. 23/ 10, 99, Watter, மெகொட கொலன்னாவ, வெல்லம்பிட்டிய. 0724342374, 07794 891 8 1. 042202

### திருமண சேவைகள் — மணமகன்

நீர்கொழும்பில் பிறப்பிடமாக கொண்ட கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த மகனுக்கு மணமகள் தேவை. வயது 32, உயரம் 5.9 தற்போது சவூதியில் தொழில் பார்ப்பவர் (லேத் மெசின்) மணமகன் சிங்கள மீடியம் படித்தவர் என்பதால் மணமகள் சுமாராக சிங்களம் பேச தெரிந்திருக்க வேண்டும். தமிழ், சிங்களம் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும். 075 4827320. G183872




தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் முலமாகவும் செலுத்தலாம்.

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 150/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் முலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

35
## கொழும்பின் கதை



என். சரவணன்

# றோயல் கல்லூரி
## இலங்கையின் முதலாவது அரசாங்க பாடசாலை

இலங்கையின் முன்னணி கல்லூரியாக திகழ்வது கொழும்பு றோயல் கல்லூரி (Royal College). தமிழில் வேத்தியர் கல்லூரி என்று அழைக்கப்படுகிறது. அது மட்டுமல்ல இது தான் இலங்கையின் முதலாவது அரசாங்க பொதுப் பாடசாலை. 1835ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இக்கல்லூரி இலங்கை அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழுள்ள தேசியப் பாடசாலையாக திகழ்ந்தாலும் ஒரு தனியார் கல்லூரியின் வடிவத்தைத் தருவதற்குக் காரணம் இலகுவில் மாணவர்களை சேர்க்கமுடியாத அளவுக்கு போட்டியும், அதன் காரணமாக இறுக்கங்களும் அதிகம் உள்ள இலங்கை பாடசாலையாக இது இருப்பதுதான்.

இக் கல்லூரியில் தமது பிள்ளைகளை சேர்த்துவிட கனவு காணாத பெற்றோர் அரிதென்றே கூறலாம். இலங்கையின் அரசியல் தலைவர்கள் பலர் இங்கே தான் கற்றார்கள்.

இலங்கையின் பணக்காரர்களின் கோட்டையாக அறியப்படும் கறுவாத்தோட்டப் பகுதியில் 15.5 ஹெக்டெயர் பரப்பில் பெரிய விளையாட்டு வளாகம், நீச்சல் தடாகம் என பல வசதிகளைக் கொண்டு இயங்கி வருகிறது. இன்னும் சில ஆண்டுகளில் இரண்டு நூற்றாண்டை எட்டப்போகும் இந்தக் கல்லூரியின் பின்புலம் முக்கிய வரலாற்றுப் பாத்திரத்தையும் கொண்டிருக்கிறது.

ஆங்கிலேயர்கள் இலங்கையைக் கைப்பற்றி சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் இலங்கையில் தமது ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பல மாற்றங்களை செய்யத் தொடங்கினார்கள். கோப்பி, தேயிலை போன்ற பணப்பயிர்களின் உற்பத்தி வேகம் தொடங்கப்பட்டதும் புதிய பாதைகளை உருவாக்குதல்,இலங்கைக்கான அடிப்படை உட்கட்டமைப்பை பலப்படுத்திக்கொள்வது என பல விடயங்களைத் தொடங்கினார்கள். 1833இல் கோல்புறூக் தலைமையிலான ஆணைக்குழு இந்த மாற்றங்களை செய்வதற்கான பரிந்துரைகளை செய்தது. அதன் மூலம் தான் இலங்கைக்கான யாப்பும் முதற்தடவையாக உருவாக்கப்பட்டது. அதன் ஒரு பரிந்துரை தான் பிரித்தானிய பொதுப் பள்ளிக்கூடங்களைப் போல அரசாங்க பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதற்கான முயற்சியாகும்.

ஏற்கெனவே நூற்றுக்கணக்கான மிஷனறி பாடசாலைகள் அப்போது ஆரம்பமாகியிருந்தன. 1812 இல் பெப்டிஸ்ட் பள்ளிகள் தொடங்கப்பட்டன. அவற்றை நடத்த அரசு ஆதரவு வழங்கவில்லை. ஆனால் அவற்றை நடத்த அனுமதியளித்திருந்தது. 1833 இல் 15 பெப்டிஸ்ட் பள்ளிகளும், 90 வெஸ்லியன், 78 அமெரிக்கன் மிஷன் மற்றும் 53 மிஷனரி சொசைட்டி பள்ளிகள் அமைக்கப்பட்டிருந்தன.

### ஜோசப் மார்ஷ் பாதிரியார்

1835 ஆம் ஆண்டு றோயல் கல்லூரி தொடக்கப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஆனால் 1831 இல் மெட்ராசிலிருந்து வந்த ஜோசப் மார்ஷ் (Joseph Marsh) பாதிரியாரால் அது தனிப்பட்ட ரீதியில் தான் தொடங்கப்பட்டது. அரசாங்கத்துக்கும் அதற்கும் எந்த தொடர்பும் இல்லை. 28 வயதேயான ஜோசப் மார்ஷ் பாதிரியார் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர். கோட்டேயில் இருந்த சேர்ச் மிஷனறி சொசைட்டியின் பணியாளராக அவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். குறிப்பாக கணக்கியல், ஆங்கில இலக்கியம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்காக அவர் அனுப்பட்டிருந்தார். 1835 ஆம் ஆண்டு அவர் புறக்கோட்டை, புனித பவுல் தேவாலயத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இங்கே தான் றோயல் கல்லூரிக்கான ஆரம்பம் இடப்பட்டது.

1837ஆம் ஆண்டு அவர் நூலகத்தைத் தொடங்கினார். பாடசாலை சஞ்சிகை ஒன்றையும் தொடங்கினார். இலங்கையின் முதலாவது பாடசாலைச் சஞ்சிகையாக அது தான் கருதப்படுகிறது. அவர் ஒரு அச்சகத்தையும் நிறுவினார். பரிசளிப்பு நிகழ்வுகளையும் நடத்தி மாணவர்களை ஊக்குவித்தார். அப்போதே கிரிக்கெட் விளையாட்டையும் ஊக்குவித்திருக்கிறார். ஆனால் சில நாட்களிலேயே அவர் கடும் சுகவீனமுற்றார். 1838 ஆம் ஆண்டு உடல் நிலை சரியில்லாமல் சொந்த நாட்டுக்கே திரும்பினார். சில வாரங்களில் அவர் அங்கேயே காலமானார். ஆனால் அவரின் குடும்பத்தினர் இலங்கையில் இருந்தனர். அவர் அப்போதைய கொழும்பு மாவட்ட நீதிபதி அன்ரூ வோக்கரின் சகோதரியைத் தான் மணமுடித்திருந்தார். அவரின் மகள் அக்னஸ் ஜேனின் கணவர் பார்குரோப்ட் போக் (ஜோசப் மார்ஷ்) பின்னர் இப்பாடசாலையின் அதிபராக ஆனார். றோயல் கல்லூரியின் வரலாற்றில் அதிக காலம் அதிபராக இருந்தவர் அவர் தான். அவர் பதவி வகித்த 1842 – 1870 காலப்பகுதிக்குள் தான் தங்குமிடம் (Boarding House) உருவாக்கப்பட்டது. கல்கத்தா பல்கலைக்கழகத்தின் இணைக் கல்லூரியாக ஆக்கப்பட்டது. அதுபோல கொழும்பு அக்காடமி, குயின்ஸ் கல்லூரியாக ஆக்கப்பட்டது. மிகவும் கண்டிப்பான அதிபராக இருந்ததுடன், மாணவர்களுக்கு பிரம்படி தண்டனை வழங்கிய ஒருவர். இலங்கையின் சுதேசிய மதங்களான பௌத்தம், சைவம் போன்ற மதங்களின் மீது அவரின் காட்டமும் இருந்தது பற்றிய குறிப்புகளையும் காணக் கிடைக்கிறது.

### றோயல் கல்லூரியின் முதல் இடம்

முதன் முதலில் இந்தப் பாடசாலை எங்கே தொடங்கப்பட்டது என்கிற தகவல் வியப்பாக இருக்கும். புறக்கோட்டையில் ஐந்து லாம்பு சந்தியில் இன்றும் இருக்கிற புனித போல் (Chaplain of St Paul's Church) தேவாலயம் இருக்கிறதல்லவா அந்த தேவாலயத்தின் வராந்தாவில் தான் இருபது மாணவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கப்பட்டது. அப்போது இந்த இடம் வுல்பெண்டால் வீதி (22, Wolfendhal Street)என்று அழைக்கப்பட்டது. அந்த றோயல் கல்லூரியின் ஆரம்பப் பெயர் மேட்டுத்தெரு அக்காடமி (Hill Street Academy).

அடுத்த ஆண்டே 1836 இல் அன்றைய ஆளுநர் சேர் ரொபர்ட் வில்மட் ஹோர்டன் (Sir Robert Wilmot Horton) கொழும்பு அக்காடமி(Colombo Academy) என்று இதன் பெயரை மாற்றி அரசாங்க பொதுப் பாடசாலையாக ஆக்கினார். அவர் தான் இலங்கையில் கட்டாய சேவை என்ற “இராஜகாரிய முறை”யை ஒழித்தார். ஜோசப் மார்ஷ் பாதிரியார் அந்தப் பாடசாலையின் முதலாவது அதிபராக ஆகி அரசாங்க சம்பளம் பெற்றார். அவருக்கான ஆண்டு சம்பளமாக 200 பவுண்டுகள் வழங்கப்பட்டது. அதன் இன்றைய பெறுமதியில் கூறுவதாயின் ஐந்து மில்லியன் எனலாம். ஆளுநர் தான் அதன் புரவலராக இருந்தார்.[1]

ஆரம்பத்தில் ஆங்கில, டச்சு சமூக பின்னணியுள்ளவர்களே கல்வி கற்கத் தொடங்கினார்கள். அதன் பின்னரே சுதேசிய இலங்கையைச் சேர்ந்த வசதி படைத்த மேட்டுக்குடியினர் முதலில் நுழைந்தனர்.

1836 ஜனவரியில் இந்த மேட்டுத்தெரு அக்காடமி கொழும்பு அக்காடமியாக பெயர் மாற்றப்பட்டு கொழும்பு புறக்கோட்டை, மெசேஞ்சர் வீதியில் உள்ள 144 ஆம் இலக்கக் கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது, இன்று அது சன நெருக்கடிமிக்க சந்தைப் பகுதி. சுமார் ஆறு மாதங்களின் பின்னர் அதே ஆண்டு அங்கிருந்து சென் செபஸ்தியன் வீதியில் உள்ள மேட்டுப் பகுதிக்கு மாற்றப்பட்டது. அதற்கு முன்னர் அது பொலிஸ் குதிரை லயமாக இருந்தது. இன்னும் உறுதியாக சொல்வதாயின் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளை வெளிக்கொணர்ந்த “தவச” கட்டிடத்திற்கு பின்னால் அமைந்துள்ள மிகுந்து மாவத்தை சிங்கள வித்தியாலயம் இப்போது அந்த நிலத்தில் தான் அமைந்திருக்கிறது.



அதுமட்டுமல்ல இங்கே தான் சுமார் 75 ஆண்டுகளாக றோயல் கல்லூரி இயங்கியது. தொடக்கத்தில் அங்கிலிக்கனிசத்துக்கு நெருக்கமாக இருந்தாலும் அது ஒரு மத சார்பற்ற பள்ளிகூடமாகவே இயங்கியது.

1859ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது உயர்கல்வி நிறுவனமான குயின்ஸ் கல்லூரி தொடங்கப்பட்டது. ஆங்கில பல்கலைக்கழகங்களுக்கான நுழைவுப் பரீட்சையில் தொற்றுவதாயின் அப்போது கொழும்பு அக்காடமியில் தான் பரீட்சை எழுத வேண்டியிருந்தது. 1865 ஆம் ஆண்டு இலங்கையின் கல்வி நிலை பற்றி ஆராய்ந்த மோர்கன் குழு (Morgan Committee) மேற்படிப்புக்காக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கற்க புலமைப்பரிசில் வழங்கவேண்டும் என்கிற தீர்மானத்தைத் தொடர்ந்து கல்விக் கட்டமைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. பிரித்தானியாவில் உழைக்கும் வர்க்கத்தினரின் போராட்டத்தைத் தொடர்ந்து அங்கே அடிப்படைக் கல்விக்கான உரிமை வென்றெடுக்கப்பட்ட அதே 1870 இல் தான் இலங்கையில் மோர்கன் ஆணைக்குழுவின் கல்வி குறித்த முக்கிய அறிக்கை வெளியிடப்பட்டது. சிங்கள, தமிழ் மொழிக் கல்விக்கான சுதந்திரம், மிஷனறி பள்ளிக்கூடங்களிலும் சொந்த மதங்களைக் கற்கும் உரிமை போன்றவற்றை பரிந்துரைத்த ஆணைக்குழு அது. அதன் விளைவாக 1859 ஆம் ஆண்டு குயின்ஸ் கல்லூரியும், கொழும்பு அக்காடமியும் ஒன்றாக இணைக்கப்பட்டன. குயின்ஸ் கல்லூரி என்றும் பெயர் மாற்றப்பட்டது. இலங்கையின் முதலாவது உயர் கல்வி நிறுவனம் அது தான்.

1881இல் விக்டோரியா மகாராணியின் அரச அனுமதியுடன் கொழும்பு அக்காடமியானது “றோயல் கல்லூரி” (Royal College Colombo) என்று பெயர் மாற்றப்பட்டது. 1881ஆம் ஆண்டு 31 யூலைவர்த்தமானிப் பத்திரிகையில் இதற்கான அறிவித்தலும் வெளியிடப்பட்டது. அப்போது கல்லூரியின் அதிபராக ஜோன் குல் (John Barnabas Cull) இருந்தார். கேம்ப்ரிட்ஜ் பல்கலைகழக பரீட்சை 1880 இல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதும் அதே ஆண்டு 21 பேர் அப்பரீட்சைக்கு தோற்றினர். அவர்கள் அனைவரும் ஆண்கள். ஆனால் 1915 ஆம் ஆண்டு மொத்தம் 2151 மாணவர்கள் அப்பரீட்சைக்கு தோற்றினர் . அதில் 236 பேர் பெண்களாக இருந்தனர். இதன் அறி முகத்தோடு பலர் இங்கிலாந்துக்கு மேற்படிப்புக்காக செல்லும் வாய்ப்பு விரிவானது.[2]



ஜோசப் மார்ஷ்



வில்மட் ஷோர்ட்டன்



ஜோன்' பர்னபாஸ்

றோயல் கல்லூரிக்கான இடவசதியைப் பெருப்பிப்பதற்காக 1911ஆம் ஆண்டு ரீட் அவெனியுவில் பெரிய காணியில் புதிய கட்டிடம் கட்டப்பட்டது. அது கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் தான் இலங்கையின் முதலாவது விமானமோட்டும் முயற்சியின் போது அந்த விமானம் அங்கே விழுந்து கட்டிடத்துக்கும் சிறு சேதத்தை விளைவித்தது. 1913 ஆம் ஆண்டு புதிய கட்டிடத்துக்கு கல்லூரி கொண்டுவரப்பட்டது. இன்றைய கொழும்பு பல்கலைக்கழகத்தின் பிரதான கட்டிடம் தான் அது. 1923இல் ரீட் அவெனியுவில் புதிதாக கட்டப்பட்ட இன்னொரு கட்டிடமான விக்டோரியா கோபுர வடிவத்தில் கட்டப்பட்ட கட்டிடத்துக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டே 1914இல் றோயல் கல்லூரி பல்கலைக்கழகமாக மாற்றப்படவேண்டும் என்று உயர்கல்விக் குழு பரிந்துரைத்தது. ஆனால் அதற்கு பல எதிர்ப்புகள் கிளம்பின. குறிப்பாக அரசாங்க சபையில் பிரெடெரிக் டோர்ன்ஹோஸ்ட் (Frederick Dornhorst, KC) நீண்ட உரையை வழங்கினார். மேலும் அன்றைய ஆளுநர் சார்மர்ஸ் (Lord Chalmers) கூட கொழும்பு பல்கலைக்கழகம் தனியாக இயங்கவேண்டும் என்றார்.

இதன் விளைவாக இந்தக் கட்டிடங்களில் கொழும்பு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. அதே கட்டிடத்துக்கு சற்று அப்பால் கட்டப்பட்ட கட்டிடத்தில் றோயல் கல்லூரி இயங்கத் தொடங்கியது. 1923 ஆம் ஆண்டு ஆளுநர் வில்லியம் மனிங் ஆட்சியின் போது அவரின் கவனிப்பில் தான் தற்போதைய நிலையான கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது. இன்றுவரை அங்கே தான் நிலைத்து இயங்கி வருகிறது.

1940ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தம் நிகழ்ந்துகொண்டிருந்த காலப்பகுதியில் றோயல் கல்லூரி மூடப்பட்டு இக்கட்டிடங்கள் பிரிட்டிஷ் இராணுவத்துக்கான மருத்துவமனையாக இயங்கியது. 1945 இல் யுத்தம் முடிவடைந்ததும் மீண்டும் பழையபடி இயங்கத்தொடங்கியது.

சேர் முத்துக்குமாரசுவாமி,இராமநாதன் சகோதரர்கள், அநகாரிக தர்மபால, ஜே.ஆர், கொல்வின் ஆர் டி சில்வா தொடக்கம் ரணில் விக்கிரமசிங்க வரை பல அரசியல் தலைவர்கள் இங்கு கற்றவர்கள் தான். ரணில் விக்கிரமசிங்க செல்வந்த குடும்பத்தின் வாரிசு என்பதை அறிவீர்கள். ஆனால் அவருக்கு வாரிசுகள் கிடையாது அவரின் தற்போதைய சொத்துக்கள் அவருக்குப் பின்னர் றோயல் கல்லூரிக்கே உயில் எழுதி வைத்துவிட்டார் என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

றோயல் கல்லூரியின் பல செயற்பாடுகளில் தமிழ் விவாத அணியையும் முக்கியமாக குறிப்பட முடியும்.

இலங்கையின் மிகப் பழமை வாய்ந்த தமிழ் விவாத அணி அது. நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், றவூஃப் ஹக்கீம், எம்.ஏ.சுமந்திரன் போன்றவர்கள் றோயல் கல்லூரித் தமிழ் விவாத அணியின் தலைமைப்பொறுப்பை வகித்தவர்கள் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

றோயல் கல்லூரியின் அதிபர்களாக இலங்கை சுதந்திரமடையும் காலம் வரை ஆங்கிலேயர்கள் தான் இருந்து வந்தார்கள். அதன் பின்னர் தான் சுதேசியர்கள் அதிபர்களாக ஆனார்கள். இதுவரை ஒரு தமிழரும் அங்கே அதிபராக பதவி வகித்ததில்லை.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் பலரை ஆண்டு தோறும் உள்வாங்கி அக்கல்லூரியின் தரத்தை மேலும் பலப்படுத்திக்கொண்டே வருகிறது இக்கல்லூரி. பல தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையின் சிவில் அதிகாரிகள் பலரை உருவாக்கிய கல்லூரி அது. ஆரம்பத்தில் உயர் வர்க்க, கொவிகம, வெள்ளாள ஆண்கள் பலர் கற்ற பள்ளிக்கூடமாகத் தான் இருந்தது என்கிறார் L.H.Gratiaen.[3]

20 மாணவர்களுடன் சிறு வராந்தாவில் தொடங்கப்பட்ட அந்தப் பள்ளிக்கூடம் இன்று 9000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கின்றஇலங்கையின் மிகப் பெரிய கல்லூரியாக இயங்கி வருகிறது.

[1] Charles Winston Karimaratna, BUDDHISM and CHRISTIANITY in CEYLON, (1796 1948) Thesis submitted to the Faculty of Theology, in the University of London for the Degree of Doctor of Philosophy, 1974.
[2] REV. J. W. BALDING, C.M.S., One Hundred Years in Ceylon OR The Centenary Volume OF THE Church Missionary Society IN CEYLON 1818 1918, Madras, Diacesan Press, Vepery, 1922.
[3] L. H . Gratiaen, Government Schools in Ceylon 1789 1832, Dehiwala:1929,

## நாட்டின் பொருளாதார வீழ்ச்சி... (06ஆம் பக்கத் தொடர்)

*அதற்கு மேலதிகமாக ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு கல்விக் கல்லூரி முறைமையை ஆரம்பித்த ரணில் விக்கிரமசிங்க, 1988 இல் 09 தேசிய கல்விக் கல்லூரிகளை ஆரம்பித்தும் மற்றும் கல்வி ஆய்வுக்காக தேசிய கல்வி நிறுவகத்தை நிறுவியும் கல்வி அமைச்சராக கல்வியில் புதிய மறுமலர்ச்சிக்கு பங்களிப்பு செய்தார்.*

*ஆழ்ந்த இலக்கிய ஆர்வம் கொண்ட ரணில் விக்கிரமசிங்க வரலாறு, தொல்பொருள், சட்டம், பொருளியல், பௌத்தம் மற்றும் இலக்கியம், உலகளாவிய இலக்கியம் மற்றும் சுயசரிதையில் என்பன தொடர்பில் ஆழ்ந்த அறிவு கொண்டவராவார்.*

*பல்வேறு மதங்கள் மற்றும் தத்துவங்கள் தொடர்பில் அதிக ஆர்வம் கொண்ட அவர் திரிபிடகம், தம்மபத, பௌத்த இலக்கியம் மற்றும் அரசியல் கோட்பாடு தொடர்பில் 'அரசியல் மற்றும் தர்மம்' எனும் புத்தகத்தை எழுதியுள்ளார்.*

*இதுபோன்ற திறமைகளைக் கொண்ட நிறைந்த அனுபவசாலி ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்றிருப்பதுடன், நாடு முகங்கொடுத்திருக்கும் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மீட்டெடுக்கும் பாரிய பொறுப்பு அவர் முன்னிலையில் காணப்படுகிறது.*

*இதற்கு ஏதுவான அமைச்சரவையையும் அவர் அமைத்துக் கொண்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாடசாலை நண்பரும், நீண்டகால அரசியல் நண்பருமான தினேஷ் குணவர்த்தன நாட்டின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சரவையும் வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளது.*

*குறுகிய எண்ணிக்கையிலான இந்த அமைச்சரவை நாடு எதிர்கொண்டுள்ள சவால்களிலிருந்து மீண்டெழுவதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதற்கான கூட்டுப் பொறுப்பைக் கொண்டதாக அமைந்துள்ளது.*

*குறிப்பாக எரிபொருள் மற்றும் எரிவாயுத் தட்டுப்பாட்டை நீக்குவது, அந்நிய செலாவணிக் கையிருப்பை அதிகரிப்பது, விலைவாசி அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை ஓரளவுக்கு சுமுகநிலைக்குக் கொண்டுவருவது போன்ற பல்வேறு சவால்கள் இந்த அரசாங்கத்தின் முன்னிலையில் காணப்படுகின்றன.*

*மறுபக்கத்தில் இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கு எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் தமது அரசியல் வேறுபாடுகளை மறந்து கூட்டாக செயற்பட வேண்டிய தேவை காணப்படுகிறது.*

## எல்லோரும் பதவி விலகினால்... (12ஆம் பக்கத் தொடர்)

*இலங்கையில் குடித்தொகை முதிர்ந்துவருவது உண்மைதான், அதற்காக ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியாத அளவுக்கு தள்ளாத வயதில் ஓய்வு எடுத்து வாழ்க்கையை நிம்மதியாகக் கழிக்காமல் இங்கு வரவேண்டுமா புதியவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாதா என்பது அடுத்த வினா. நாட்டின் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பெண்கள். ஆனால் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில் அது பிரதிபலிக்கிறதா என்பது அடுத்த வினா. இவர்களில் சிலரை டொக்டர்; என்று அழைத்தார்கள் எந்தப் பல்கலைக்கழகங்களில் எந்த ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து இப்பட்டங்களை இவர்களில் சிலர் பெற்றார்கள் என்பது இன்னொரு வினா.*

*இவ்வாறு பல்வேறு வினாக்கள். சிங்கப்பூர் பாராளுமன்றம் கனேடியப் பாராளுமன்றம் என்பவற்றில் மக்கள் பிரதிநிதித்துவம் எவ்வாறு உள்ளது அவர்களது கல்வித்தகுதிகள் என்ன என்பது பற்றி மக்கள் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதனடிப்படையில் அடுத்துவரும் தேர்தலில் மக்கள் சரியானவர்களைத் தெரிவுசெய்து வாக்களிக்க வேண்டும்.*

*அரசியல் கட்சிகள் ஏற்கெனவே தமது குட்டையில் ஊறியுள்ள பழைய மட்டைகளுக்கே வேட்புமனு கொடுப்பார்களாயின் தகுதிவாய்ந்தவர்கள் சுயேட்சையாக தேர்தலில் போட்டியிட வேண்டும். தேர்தல் செலவுகள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்பட வேண்டும். சாதாரண ஒரு பொதுமகனும் தேர்தலில் போட்டியிடக்கூடியவாறு தேர்தல் செலவுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் சரியானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். சோற்றுப் பார்சலுக்கும் போத்தலுக்கும் செல்வாக்குக்கும் ஆசைப்பட்டு அதே கொள்ளைக் கூட்டத்திற்கு முத்திரையிடக் கூடாது.*

*இப்போது வாக்காளர்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் நிலைமைகள் வழமைக்குத் திரும்பி இன்னும் இரண்டரை வருடங்கள் கடந்து தேர்தல் ஒன்று வரும்போது இன்று கொள்ளைக் கூட்டமாகத் தெரிந்த கூட்டம் நாடுகாக்கும் வீரர்களாக தேசியப் பற்றாளர்களாக மக்களுக்குத் தெரியலாம்.*

*ஏனெனில் இலங்கை 1931இலிருந்தே ஜனநாயகம் பேசினாலும் இலங்கையின் பெரும்பான்மை வாக்காளர்களின் அரசியல் கல்வியறிவு பூச்சியம். அதைவிட முக்கியம் என்னவென்றால் பெரும்பான்மை இலங்கையர்களுக்கு பரம்பரை பரம்பரையாக இருந்துவரும் மறதிநோய். இப்போது நிகழ்வது இன்னும் இருவருடங்களில் அவர்களுக்கு நினைவிருக்குமா? இருக்காது என்பது அரசியல்வாதிகளுக்கு நன்கு தெரியும். ஆனால் தமிழர்களும் முஸ்லிம்களும் இதிலிருந்து விதிவிலக்கு. நூற்றாண்டுகள் சென்றாலும் எதையும் அவர்களை மறப்பதுமில்லை மன்னிப்பதுமில்லை. இந்நிலையில் புதிய தலைமை என்ன செய்யப்போகிறது என்பதை காலமே தீர்மானிக்க வேண்டும்.*

## கொரோனாவினால் வீழ்ச்சியடைந்த... (06ஆம் பக்கத் தொடர்)

*தற்சார்பு இந்தியா மூலம் உற்பத்தியை பெருக்கியுள்ளது. இந்தியா முழுக்க தேசிய நெடுஞ்சாலைகள் இணைக்கப்பட்டு வருகின்றன. புதிய பாலங்கள் கட்டப்பட்டு உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு வருகின்றது.*

*ஊழல் செய்வதற்கான வழிகள் டிஜிட்டல் இந்தியா மூலம் தடுக்கப்பட்டு வருகின்றன.*

*விவசாயிகளுக்கு உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகிறது. ஏழை மக்களுக்கு விலையில்லா உணவுப் பொருட்கள் வழங்கி மிகப்பெரிய உணவுப் பற்றாக்குறையைத் தவிர்த்துள்ளது இந்தியா. அத்துடன் வறிய மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.*

*தற்போது அடுத்ததாகக் கோதுமை ஏற்றுமதியில் இந்தியா சாதித்துக் கொண்டுள்ளது. இலங்கையைப் போன்று பொருளாதாரச் சிக்கலில் இந்தியா அகப்படவில்லை. உலக அரங்கில் வல்லரசாக இருக்க நினைக்கும் அமெரிக்காவே தற்போது இந்தியாவிடம் அடங்கிச் செல்கிறது. இது போன்று உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்து வருகிறது.*

*இந்தியாவை வீழ்ச்சிக்கு உள்ளாக்கலாம் என்ற திட்டத்தையெல்லாம் மற்றைய வல்லரசு நாடுகள் இனிமேல் மறந்து விட வேண்டியதுதான்.*

*பிரதமர் நரேந்திர மோடியை பல காரணங்களுக்காகப் பலரும் விமர்சிக்கலாம் ஆனால், அவரின் முன்னோக்கிய திட்டங்கள், சிந்தனைகள், அதற்கான தைரியமான முடிவுகள், செயல்பாடுகள் பாராட்டத்தக்கவை.*

*சில முடிவுகள் தொடக்கத்தில் கடினமான நிலையை ஏற்படுத்தி இருந்தாலும், அதனால் பிற்காலத்தில் கிடைக்கும் பலன்கள் அபரிமிதமானவை. டிஜிட்டல் இந்தியா & தற்சார்பு இந்தியா இவை இரண்டும் இந்தியாவின் வளர்ச்சிக்குக் கொடுத்த, கொடுக்கப் போகும் பங்கு அளவிட முடியாதவை.*

*எதிர்காலத்தில் நன்மை பயக்கும் ஆனால், தற்காலத்தில் சிரமத்தைக்கொடுக்கும் முடிவை ஒரு தலைவர் எடுப்பது கடினம். யாருமே முயற்சிக்கத் துணியாத முடிவை எடுப்பவர்களே சிறந்த தலைவராகக் கருதப்படுகிறார்கள். எனவே, தைரியமான முடிவுகளை எடுக்கும் பிரதமர் மோடி மிகச்சிறந்த தலைவர் என்பதில் இந்திய மக்களுக்குச் சந்தேகமில்லை. மக்கள் விரும்புவதை செயல்படுத்துபவர் நல்ல தலைவரல்ல. மக்களுக்கு எது நன்மை கொடுக்கும் என எதிர்காலத் தேவையை அறிந்து திட்டங்களைச் செயல்படுத்துபவரே சிறந்த தலைவர்.*

*தற்காலச் சிரமங்களைக் கருத்தில் கொண்டு அனைவருக்கும் நல்லவராக இருக்க நினைத்து முடிவுகளைத் தள்ளிப்போட்டால் எதிர்காலம் மிக மோசமாக மாறிவிடும்.*

*பிரதமர் மோடியையும் அவரின் முன்னோக்கிய திட்டங்களையும் குறைத்து மதிப்பிட்டு விடுவது விவேகமல்ல. உலக அரங்கில் முக்கியமான நிலையை இந்தியா வந்தடைந்துள்ளது என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. நினைத்ததை விட மிக வேகமாக இந்தியா வளர்ந்து வருகிறது.*

*தற்போதைய பொருளாதார பிரச்சினைகள் தாற்காலிகமானவையே. சாமானியரும் இந்திய வளர்ச்சியின் முழுமையான பலன்களைப் புரிந்து கொள்ள, அனுபவிக்கச் சில வருடங்களாகும்.*

*டிஜிட்டல் இந்தியா தொடர்பில் பலரும் ஆரம்பத்தில் நம்பவில்லை ஆனால் நன்மையான பலன் நடந்து விட்டது.*

# கொவிட் 19 தொற்று மீண்டும் தீவிரமடையுமா?

## பரவலாக எழுந்துள்ள அச்சம்

நவீன அறிவியல் யுகத்தில் முழு உலகிற்கும் பெரும் சவாலாக விளங்கியது தான் கொவிட் 19 பெருந்தொற்று.



சீனாவின் வூஹான் நகரில் 2019 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தோற்றம் பெற்ற இத்தொற்று குறுகிய காலப்பகுதியில் முழு உலகிலும் பரவி உலகிற்கே பேராபத்தாக அமைந்தது. அதனால் உலகமே பேரதிர்ச்சிக்கு உள்ளானது. மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

இது ஆளுக்காள் தொற்றி பரவும் ஒரு வைரஸ் நோயாகும். அதன் காரணத்தினால் இதன் பரவுதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடுகளும் நகரங்களும் பிரதேசங்களும் கூட தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டன. அதன் ஊடாக இத்தொற்றின் பரவுதல் கட்டுப்பாட்டை அடைந்த போதிலும் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்ட பின்னர் இத்தொற்று மீண்டும் பரவியது.

2020 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் முழு உலகமும் எதிர்கொண்ட இத்தொற்றின் அச்சுறுத்தலுக்கு இலங்கையும் அதேயாண்டு மார்ச் நடுப்பகுதி முதல் முகம் கொடுத்தது. உலகின் ஏனைய பல நாடுகளைப் போன்று இந்நாட்டிலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்பட்டவர்களதும் உயிரிழந்தவர்களதும் எண்ணிக்கை இலங்கையிலும் நாளாந்தம் அதிகரிக்கவே செய்தது. இதனால் மக்கள் நம்பிக்கையற்ற பாரிய அச்ச நிலைக்கு உள்ளாகினர். இந்நிலை 2020 டிசம்பர் வரையும் நீடிக்கவே செய்தது.

இந்நிலையில் முழு உலகிற்கும் பாரிய அச்சுறுத்தலாக விளங்கிய இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை கண்டறியும் நோக்கில் மருத்துவ, விஞ்ஞானத்துறையினர் அயராத முயற்சிகளை முன்னெடுத்தனர். அதன் பிரதிபலனாக இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி ஒரு வருட காலப்பகுதிக்குள் கண்டுபிடிக்கப்பட்டு அவசரத் தேவையின் நிமித்தம் பயன்பட்டும் வந்தன. மருத்துவ விஞ்ஞானத் துறையில் இது ஒரு வரலாற்று சாதனையாகும்.



இப்பின்புலத்தில் 2020 டிசம்பர் முதல் இத்தடுப்பூசி மக்கள் பாவனைக்கு வந்ததன் பயனாக புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் மக்கள் மத்தியில் தோற்றம் பெற்றன. அதற்கு ஏற்ப இத்தொற்றின் தாக்கம் தடுப்பூசியின் ஊடாக கட்டம் கட்டாக வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

2021 நடுப்பகுதி முதல் இலங்கையிலும் வீழ்ச்சியடைத் தொடங்கிய இத்தொற்றின் தாக்கமும் பரவுதல் அச்சுறுத்தலும் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதி முதல் பெருவீழ்ச்சி நிலையை நோக்கி நகர்ந்தது. இந்த சூழலில் நாட்டின் சனத்தொகையில் பெரும்பகுதியினர் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களாகவும் விளங்கினர்.

அதன் விளைவாக இத்தொற்றின் பரவுதலைத் தவிர்ப்பதற்கான சமூக இடைவெளியைப் பேணுதல், முகக்கவசம் அணிதல், கைகழுவுதல், தேவையற்ற பயணங்களைத் தவிர்த்தல் போன்ற அடிப்படை சுகாதார செயற்பாடுகளும் மக்கள் மத்தியில் இருந்து மெதுமெதுவாக நீங்கவும் தொடங்கின.

இவ்வாறான சூழலில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன 2022 ஜூன் 09 ஆம் திகதி 'முகக்கவசம் கட்டாயமில்லை' என்று அறிவித்தார். ஆனாலும் முகக்கவசம் அணியும் கட்டாயத்தை நீக்குவதற்கு பொருத்தமான காலச்சூழல் இதுவல்ல' என்று மருத்துவர்களும் சுட்டிக்காட்டினர். ஆனால் மக்கள் அதனைப் பெரிதாகப் பொருட்படுத்திக் கொள்ளவில்லை. முகக் கவசமின்றியும் சமூக இடைவெளியைப் பேணாதும் பெரும்பாலான மக்கள் தம் செயற்பாடுகளை அமைத்துக் கொண்டனர். இந்நிலைமையை இன்றும் கூட அவதானிக்க முடிகிறது.

ஆனால் இத்தொற்றின் பரவுதலைப் பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வந்திருந்த சீனா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளிலும் இத்தொற்றின் பரவுதல் மீண்'டும் தீவிரமடையத் தொடங்கியுள்ளது. ஆனாலும் இந்நாட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

அதனால் கடந்த சில தினங்களாக இந்நாட்டில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இதனை சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் தரவுகள் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் கொவிட் 19 தொற்றுக்கு நாளாந்தம் உள்ளானவர்களின் விபரம்

2022.07.15 19 பேர்
2022.07.16 25 பேர்,
2022.07.17 25 பேர்
2022.07.18 34 பேர்
2022.07.19 62 பேர்
2022.07.20 62 பேர்

இதன்படி, 2020 மார்ச் நடுப்பகுதியைப் போன்று தற்போதும் இத்தொற்று மெதுமெதுவாக அதிகரித்து வருவதையே இத்தரவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இதேநேரம் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக 651 பேர் வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். அதனால் இத்தொற்று மீண்டும் தீவிரமடையுமா? என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது. ஆனால் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுகின்றவர்களின் எண்ணிக்கையில் நாளுக்கு நாள் அதிகரிப்பு ஏற்பட்டு வருவது ஆரோக்கியமானதல்ல.

இந்நாடு இத்தொற்று பரவுதல் தொடர்பில் பெற்றுள்ள அனுபவங்களின் படி, கொவிட் 19 தொற்றைத் தவிர்த்துக் கொள்வதில் விரைவாகவும் வேகமாகவும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறான காலப்பகுதியில் தான் இந்நாட்டு மக்கள் இருந்து கொண்டிருக்கின்றனர். கொவிட் 19 தொற்று கட்டுப்பாடு தொடர்பில் இயல்புநிலை ஏற்படுத்தப்பட்டிருக்கும் சூழலில் இவை இன்றியமையாதவையாகும்.

ஏனென்றால் சீனாவின் வூஹான் பிரதேசத்தில் இத்தொற்று அடையாளம் காணப்பட்டது முதல் இற்றை வரையும் 553 மில்லியனுக்கும் மேற்பட்டோரை உலகில் பாதித்துள்ள இத்தொற்று, 6.3 மில்லியன் பேரின் மரணத்திற்கும் காரணமாக அமைந்துள்ளது. இலங்கையிலும் 6 இலட்சத்து 64 ஆயிரத்து 510 பேர் இத்தொற்றினால் பாதிக்கப்பட்டதோடு 16 ஆயிரத்து 533 பேர் உயிரிழந்துமுள்ளனர்.

2020 ஆம் ஆண்டின் மார்ச் நடுப்பகுதி முதல் இந்நாட்டவர் மத்தியில் தொடராகப் பதிவாகத் தொடங்கிய இத்தொற்றுக்கு சிறு எண்ணிக்கையினர் தான் நாளாந்தம் பதிவாகினர். ஆனாலும் அது சொற்ப காலத்தில் ஆயிரம், இரண்டாயிரம் என்றபடி அதிகளவில் பதிவாகும் நிலையை அடைந்தது.

அதனால் சமூக இடைவெளியைப் பேணிக் கொள்வதும் முகக் கவசம் அணிந்து கொள்வதும் கைகழுவிக் கொள்வதும் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்வதும் இத்தொற்றை தவிர்த்துக் கொள்வதற்கு மிகவும் அவசியமானதாகும். இதனை சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத்தும் வலியுறுத்தியுள்ளார்.

இருந்தும் கூட கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டிருப்பதால் இத்தொற்று தமக்கு ஏற்படாது என்று கருதுபவர்களாகவே மக்கள் உள்ளனர். அவர்கள் முகக்கவசம் அணிந்து கொள்வதிலும் சமூக இடைவெளியைப் பேணுவதிலும் கைகழுவுவதிலும் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்வதிலும் அசிரத்தையோடு நடந்து கொள்கின்றனர்.

'இத்தொற்றானது தடுப்பூசி பெற்றுக் கொண்டுள்ளவர்களுக்கும் ஏற்படலாம். ஆனால் தடுப்பூசியைப் பெற்றுள்ளவர்களை விடவும் பெற்றிராதவர்கள் மத்தியில் அதன் தாக்கமும் பாதிப்பும் அதிகமாக இருக்க முடியும் என்பது தான் மருத்துவ நிபுணர்களின் அபிப்பிராயமாகும். அதனால் இத்தொற்று தவிர்ப்பு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள முடியாது.

2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை சனத்தொகை மதிப்பீட்டின் படி, இரண்டு கோடியே 15 இலட்சத்து 95 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் இந்நாட்டில், கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் முதலாவது டோஸை ஒரு கோடியே 71 இலட்சத்து 4 ஆயிரத்தும் மேற்பட்டவர்களும் இரண்டாவது டோஸை ஒரு கோடியே 45 இலட்சத்து 55 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களும் பூஸ்டர் டோஸை 80 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களும் தான் பெற்றிருக்கின்றனர்.

இது இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசியின் ஒரு டோஸைக் கூட பெற்றிராதவர்களும் சமூகத்தில் இருப்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது. அதனால் கொவிட் 19 தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் அதிக கவனம் செலுத்தப்படுவது இன்றியமையாததாகும். அதனை ஒரு சமூகப் பொறுப்பாகக் கருத வேண்டிய காலமிது. தவறும் பட்சத்தில் கடந்த காலங்களைப் போன்று இந்நாட்டிலும் இத்தொற்று மீண்டும் தீவிரமடையக்கூடிய நிலையை அடைந்து விடும். இவ்வாறான நிலை உலக நாடுகள் பலவற்றிலும் தற்போது ஏற்படுவது சுட்டக்காட்டத் தக்கதாகும்.



மர்லின் மரிக்கார் ...

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

மஹஜன சம்பத 21.07.2022
ரூ. 7,110,860.00
ரூ. 22,859,805.20
தன நிதானய
ரூ. 1,723,900.00
ரூ. 118,599,513.20
கொவிசெத
ரூ. 3,213,480.00
ரூ. 64,819,060.00
ராசிசப பலன்
ரூ. 4,168,320.00
ரூ. 3,303,101.20
ஜாதிக சம்பத
ரூ. 1,404,660.00
ரூ. 10,444,374.40
Mega Power 26
ரூ. 2,616,960.00
ரூ. 261,691,174.00


இலங்கை வங்கி
விலைமதிப்புள்ள சொத்துக்களின் விற்பனை

| ஆதன இலக்கம் | நகரம் | ஆதனம் காணப்படும் இடம் | ஆதன வகை | பரப்பளவு |
|---|---|---|---|---|
| 412 | | | காணியும் கட்டடமும் | |

தொலைபேசி - 011 238 6080 / 011 220 3410
- 011 232 1170 / 011 220 3429 / 076 962 7068
- 011 220 3470 / 071 841 8898
மின்னஞ்சல் முகவரி : mgrforeclosed@boc.lk
www.boc.lk Special Notices Foreclosed Properties for sale
BOC

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845







போட்டோ குறும் விளம்பரம்



மெக்சிமோ லொறி விற்பனைக்கு
பெயர்வகை: மஹேந்திரா
அமைப்பு: MAXXIMO
பிரயாணம் செய்த தூரம்: 145000 கி.மீ.
பதிவு செய்யப்பட்ட ஆண்டு: 2019
1 ஆம் உரிமையாளர்
072 057 54 00

**பொருளாதார அரசியல்**



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

### ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்பார்ப்பது போல

# எல்லோரும் பதவி விலகினால் நாட்டைக் கொண்டு நடத்துவது யார்?

**இலங்கையின் கடந்த வார ஆட்சி மாற்றம் கலவையான விமர்சனங்களை ஏற்படுத்தியிருக்கிறது. புதிய தலைமைத்துவம் மற்றும் புதிய அரசாங்கத்துடன் நெருங்கிச் செயற்பட விரும்புவதாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் மற்றும் போன்ற சர்வதேச நிறுவனங்களும் அறிவித்திருக்கின்றன.**

உள்நாட்டில் கலவையான விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு சாரார் புதிய தலைமைக்கு நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று கூறுகின்றனர். பாராளுமன்றத்தில் சூழ்ச்சியினால் இந்த மாற்றம் ஏற்பட்டதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இறுதியில் போட்டியிட்ட மூன்று பேரில் மூன்று வாக்குகள் பெற்றவரால் பதவிக்கு வர முடியாது என்பது ஒருபுறமிருக்க எஞ்சியுள்ள இருவரில் யார் இப்போதைய நிலையில் பொருளாதார ரீதியில் நாடு மேலும் சீரழிவதை தடுத்து நிறுத்தக்கூடிய கொள்கைகளை ஆதரிப்பவர் யாருக்கு சர்வதேச சமூகத்தின் மத்தியில் செல்வாக்கு இருக்கிறது யாருக்கு நாட்டின் இரண்டாம் நிலை உயர் பதவியில் நெடுங்காலம் இருந்த அனுபவம் இருக்கிறது. யார் தனது சுய நலனுக்காக பொதுச்சொத்தை களவு செய்யமாட்டார் என்று ஒப்பிட்டுப்பார்த்தால் இப்போது தெரிவு செய்யப்பட்டுள்ளவர் ஒப்பீட்டு ரீதியில் பொருத்தமான தெரிவாகக் கருதப்படமுடியும். முன்வைக்கப்பட்ட மாற்றீடுகளில் ஒன்றையே தெரிவு செய்ய வேண்டியிருந்தது.

எவ்வாறாயினும் புதிய தலைமையின் கீழ் எரிபொருள் எரிவாயு தட்டுப்பாடுகளை நீக்கி உணவுப்பொருள் கிடைப்பனவை வழமைக்குக் கொண்டுவர முடிந்தால் நாடு படிப்படியாக வழமை நிலைக்குத் திரும்ப ஆரம்பிக்கும்.

புதிய தலைமைத்துவத்தின் கீழ் அரசியல் உறுதிப்பாடு ஏற்படுமாயின் நாட்டை குறுகிய காலத்திற்குள் வழமைக்குக் கொண்டுவருவதற்கான கொள்கைத் திட்டங்களை ஏற்கெனவே வகுத்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

புதிய ஜனாதிபதியைப் பொருத்தமட்டில் உலக அரசியல் தொடர்பாகவும் பொருளாதாரக் கொள்கைகள் அவற்றின் போக்குகள் தொடர்பாகவும் ஆழமான வாசிப்பு உண்டு. உலகமயமாக்கலில் இலங்கை தனக்குரிய பங்கினை வகிக்க வேண்டும் என உறுதியாக நம்புபவர். கிணற்றுத் தவளைகளாக இருந்து நாட்டைக்கட்டியெழுப்ப முடியாது எனக்கருதுபவர். இலங்கையில் இருக்கும் புத்திஜீவிகளை விட ஹாவர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் உள்ளவர்களின் ஆலோசனைகளை அதிகம் நம்புபவர்.



> **இப்போது வாக்காளர்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் நிலைமைகள் வழமைக்குத் திரும்பி இன்னும் இரண்டரை வருடங்கள் கடந்து தேர்தல் ஒன்று வரும்போது இன்று கொள்ளைக் கூட்டமாகத் தெரிந்த கூட்டம் நாடுகாக்கும் வீரர்களாக தேசியப் பற்றாளர்களாக மக்களுக்குத் தெரியலாம்.**

நாட்டின் பொருளாதாரக் கொள்கைவகுப்பில் ஏற்கெனவே 2015-2018 காலப்பகுதியில் அத்தகைய ஆலோசனைகள் பெறப்பட்டன. முன்னைய ஆட்சியாளர்களுக்கு இத்தகைய ஆழமான அறிவோ வெளிநாடுகளுடனான தொடர்போ இருக்கவில்லை.

முன்னையவர்களோடு ஒப்பிடுகையில் இவர் நேரடியாக ஊழல் செய்ததாக கூறப்படவில்லை. இவரோடு இருந்தவர்கள் அவற்றைச் செய்தனர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. நடைமுறையில் உள்ள சட்டத்தை மீறாமல் தாம் அடக்கவேண்டும் என நினைப்பவற்றை அடக்க வல்லவர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைக்கப்பட்டமை இதற்கு நல்ல உதாரணம். அவசரகால நிலைமையின் கீழ் சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாக இது காட்டப்படும். ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு விகாரமாதேவிப் பூங்காவில் இடம் ஒதுக்கித் தரப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

நகரத்தின் நிர்வாக மையப்பகுதியில் அதுவும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருமிடத்தில் போராட்டம் நடத்துவது பொருளாதார மீட்சிக்கு தடையாக அமையும் என காரணம் கூறப்படும்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் வரும் வழியில் இறங்கி பாதுகாப்புத் தரப்பினருக்கு நன்றி தெரிவித்தமை புதிய ஒரு சமிக்ஞையாக இருந்தது. இனிமேல் அவர்களும் கையைவீசி செயற்படலாம். எனவே எதிர்ப்பு நடவடிக்கைகளும் போராட்டங்களும் அடக்கப்படும் சூழல் உருவாகும்.

மறுபுறம் நாட்டை வழமைக்கு கொண்டுவர போராட்டங்கள் தடையாக இருக்கும் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இப்போதைய சூழ்நிலையில் பொதுமக்களுக்கு சுவாசிப்பதற்கு ஒரு சிறு கால இடைவெளியாவது தேவை. ராஜபக்ஷ கூட்டம் அகற்றப்படவேண்டும் என்பதில் பெரும்பாலான மக்களுக்கு மாற்றுக்கருத்தில்லை. அக்கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றளவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது ஒரு வகையில் வெற்றியே. மறுபுறம் மற்றைய வேட்பாளர் வெற்றி பெற்றிருந்தால் அவர்களின் கரம் ஓங்கியிருக்கும். அத்துடன் நேரடியாக இனவாதம் பேசும் அதே குழு செல்வாக்கு பெற ஆரம்பித்திருக்கும்.

இப்போதைய தலைமையிடம் நீங்கள் ராஜபக்ஷக்களின் நண்பனா என்று ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்வியினால் கடுப்படைந்த அவர் தாம் மக்களின் நண்பன் என்று பதிலளித்ததுடன் ராஜபக்ஷர்களுக்கு சார்பாக தாம் செயற்படவில்லை என்றும் ஊடகவியலாளராக நன்றாக தயார்படுத்திக் கொண்டு கேள்வி கேட்கவேண்டும் எனவும் ஆலோசனை கூறினார்.

கடந்த காலங்களில் அவர் ராஜபக்ஷர்களை காப்பாற்றினாரோ இல்லையோ இப்போது தனது கனவு மெய்ப்பட்டுள்ள நிலையில் தம்மை பலப்படுத்தி நிலைப்படுத்திக் கொள்ள செய்ய வேண்டியவற்றை கட்டாயம் செய்வார் என நம்பலாம். அடுத்துவரும் இடைப்பட்ட காலத்தில் கூட்டாட்சியோ சர்வகட்சி ஆட்சியோ எதுவோ மேலிடத்தில் இருக்கப்போவது இவர்தான்.

புதிய நிர்வாகத்திற்கு கால அவகாசம் கொடுக்கப்படவேண்டியது அவசியம் என்றே தோன்றுகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்பார்ப்பது போல எல்லோரும் பதவி விலகினால் நாட்டைக் கொண்டு நடத்தப்போவது யார்? அதற்கு அவர்களிடம் உரிய பதில் ஏதும் இல்லை. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பது போல பூமியில் நிலவும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத கோட்பாட்டு ரீதியான அணுகுமுறைகளால் உடனடிப் பயனேதும் ஏற்படப் போவதில்லை.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பை அவதானித்த பலருக்கும் ஏற்பட்ட கேள்வி இவர்களையா பாராளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளோம் என்பது. இத்தனைபேர் இருக்கிறார்களா என்பது அடுத்தது. இவர்களில் பலரை ஒரு தடவையாவது பாராளுமன்றத்தில் உரையாற்றுவதைக் கண்டிருக்கிறோமா என்பது இன்னொன்று.

(10ஆம் பக்கம் பார்க்க)



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# ஜோ பைடனின் மேற்காசிய விஜயமும் ஈரானின் அணுவாயுத அரசியலும்

**உலக அரசியலின் போக்கு அமெரிக்க தலைமையிலான மேற்கு எதிர் சீன-ரஷ்ய தலைமைகளிலான கீழைத்தேய அணி என்ற நியமம் வலுவடைந்து வருகின்றது. சமகாலத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மேற்கு ஆசிய நாடுகளுக்கான விஜயமும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடைய துருக்கி, ஈரான் என்பவற்றுடனான எதிர்கால உடன்பாட்டுக்கான தகவல்களும் சீனா, ரஷ்யா, ஈரானுக்கிடையிலான துறைமுகங்களை இணைக்கும் உடன்பாட்டுக்கான உரையாடல்களும் சமகாலப்பகுதியில் முதன்மை பெறுகின்றன.. மேற்கு ஆசியா நோக்கி பெரு வல்லரசுகள் பொருளாதார இராணுவ நலன்களை கட்டமைக்கும் தளத்தில் அரசியல் உரையாடல்களை மேற்கொண்டு வருகின்றன. இக்கட்டுரை ஜோ பைடனின் மேற்கு ஆசிய விஜயத்தின் அரசியலை தேடுவதாக அமைய உள்ளது.**

அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கை நிச்சயமற்ற உலகத்தை அதிக முரண்நகையை வெளிப்படுத்துவதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இந்திய வழி என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இதனையே அமெரிக்க ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி ஜோ பைடன் அடையாளப்படுத்துகின்றார். அதாவது, குடியரசுக்கட்சியின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மேற்காசிய அணுகுமுறைக்குள்ளாலேயே ஜோ பைடனின் நகர்வுகளும் இடம்பெறுகின்றன. ஜோ பைடன் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் அணுகுமுறைக்கூடாக அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கையை மேற்காசியாவைப் பொறுத்து வகுத்துக் கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஈரான் விடயத்தில் பதவிக்கு வந்த ஆரம்ப காலத்தில் ஓரளவு ஒபாமாவின் அணுகுமுறைகளை பின்பற்றுபவராக காணப்பட்டாலும், படிப்படியாக இஸ்ரேலின் செல்வாக்குக்குள்ளால் மேற்காசியாவை கையாள ஆரம்பித்துள்ளது என்பதை வெளிப்படுத்தியிருந்தார். அத்தகைய நகர்வின் முழுமையான வடிவத்தை மேற்காசிய விஜயத்தில் இஸ்ரேலுக்கு அவர் மேற்கொண்ட விஜயம் முழுமைப்படுத்தியுள்ளது. 2020 செப்டம்பர் 15இல் இஸ்ரேல், ஐக்கிய அரபு எமிரேட் மற்றும் பஹ்ரைனை ஒன்றிணைத்து டொனால்ட் ட்ரம்ப் ஆப்ரகாம் உடன்படிக்கையை மேற்கொண்டு அரபு நாடுகள் மத்தியில் இஸ்ரேலை பலப்படுத்த திட்டமிட்டிருந்தார். இவ்வுடன்பாட்டின் பிரகாரம் பொருளாதாரம், வர்த்தகம், இராணுவ, தொழில்நுட்ப பரிமாற்றங்களை இந்நாடுகளுக்கிடையில் வளர்த்தெடுக்கும் விதத்தில் அவ்வுடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியையே பேணுகின்ற விதத்தில் ஜோ பைடனும் செயற்பட முனைகின்றார். இஸ்ரேலை மையப்படுத்தி இஸ்ரேலுக்கூடாக மேற்காசிய அரசியலை அமெரிக்கா கையாள முனைகின்றமையே அவரது மேற்காசிய விஜயத்தில் இஸ்ரேலை முதல் தரையிறக்கமாக தேர்ந்தெடுத்தமை உணர்த்தி நிற்கிறது.

அதுமட்டுமன்றி இஸ்ரேலில் நிகழ்ந்த உரையாடலில் ஜோ பைடன் கருத்து தெரிவிக்கையில், இஸ்ரேல்-அமெரிக்க உறவின் நீண்டகால வரலாற்றையும் உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள சவால்களையும் முதன்மைப்படுத்தியதோடு அமெரிக்க-இஸ்ரேலிய உறவானது இரு நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவதோடு பிராந்திய அமைதியையும் உறுதிப்பாட்டையும் பலமான பிராந்திய பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்தும் எனக் குறிப்பிட்டார். அதனூடாக மேற்காசிய பிராந்தியத்தில் இஸ்ரேலின் முக்கியத்துவத்தையும் அதன் வகிபாகத்தையும் வெளிப்படுத்தியதோடு ஈரானின் அணுவாயுத செறிவூட்டல் முயற்சிகளுக்கு எதிரான நகர்வுகள் பற்றிய உரையாடல்களை வெளிப்படுத்தியிருந்தார். இரு நாட்டுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்பாடுகளின் போது ஈரானின் அணுவாயுதம் பற்றிய நடவடிக்கைகளை முற்றாக நிராகரிப்பதாகவும், அதெற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் இரு நாட்டு தலைவர்களும் வெளிப்படுத்தியிருந்தனர். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மேற்காசிய விஜயத்தின் உள்நோக்கத்தினை விரிவாக தேடுவது அவசியமானதாகும்.

முதலாவது, இஸ்ரேலின் உள்நாட்டு அரசியல் ஸ்திரமற்று இருக்கின்ற சந்தர்ப்பத்தில் ஜோ பைடன் மேற்காசிய விஜயத்தில் முதல் தெரிவாக இஸ்ரேல் அமைந்திருக்கின்றது. இதனூடாக இஸ்ரேலை பலப்படுத்துதல் நெருக்கடிமிக்க காலப்பகுதியிலும் இஸ்ரேல் பலமான அரசாக விளங்க வேண்டும் என்பதில் கரிசனை கொள்ளும் போக்கு அமெரிக்காவிடம் காணப்படுகின்றது. இஸ்ரேலை பலப்படுத்துவதனூடாகவே ரஷ்ய-சீனா மேலாதிக்கத்தை மேற்காசிய பிராந்தியத்தில் மட்டுப்படுத்த முடியுமென அமெரிக்கா கருதுகின்றது. இஸ்ரேலுக்கும் ரஷ்யாவுக்கும் உள்ள உறவை கடந்து அமெரிக்கா இஸ்ரேலுடன் நெருக்கமான வெளியுறவுக்கொள்கையை கட்டமைத்து வருகின்றது.




இரண்டாவது, இஸ்ரேலுக்கு மாத்திரமின்றி அமெரிக்காவுக்கும் ஈரானின் அணுவாயுத வளர்ச்சி அபாயமானது என்பது தெரிந்த கொள்ளக்கூடிய விடயம். 1979 ஈரானிய புரட்சிக்கு பின்னர் அமெரிக்காவால் ஈரானுடன் ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்த முடியவில்லை. இதனடிப்படையிலேயே ஈரானிய இராணுவ வளர்ச்சியும் அணுவாயுத பரிசோதனைகளும் மேற்காசியாவின் வல்லரசாக எழுச்சிபெற்றுவிடும் என்ற அச்சம் இஸ்ரேலும் அமெரிக்காவுக்கும் உண்டு. ஈரானின் அணுவாயுதம் உலகிற்கு அச்சுறுத்தலாக அமையுமென்ற பிரச்சாரம் இஸ்ரேல் சார்ந்தும் அமெரிக்கா சார்ந்துமே பெரிதும் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனாலேயே ஜோ பைடன் ஈரானின் அணுவாயுத வளர்ச்சிக்கு எதிராக தொடர்ச்சியான பொருளாதார தடைகளையும் இராணுவ இலக்குகளையும் இராணுவ தளபதிகளையும் அணுஉலை மீதான தாக்குதல்களையும் நிகழ்த்தி வருகின்றது. ஜோ பைடனது மேற்காசிய விஜயத்தின் பிரதான நோக்கம் ஈரானிய அணுவாயுதத்தை முற்றாக தகர்த்து அழிப்பதாகும்.

மூன்றாவது, இத்தகைய ஈரான் மீதான தாக்குதலை முன்னகர்த்தும் இஸ்ரேல் தொடர்ச்சியாக ஆயுத தளபாடங்களையும் தொழில்நுட்ப திறன் வாய்ந்த தாக்குதல் விமானங்களையும் உற்பத்தி செய்து பரிசோதித்து வருகிறது. அதற்கான ஒத்துழைப்பை அமெரிக்கா வழங்குவதும், இருநாடுகளும் இணைந்து அத்தகைய துல்லியமான தூர நோக்கு இராணுவ ஆயுத தளபாடங்களையும் தயாரிக்கும் முயற்சியில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதனூடாக இஸ்ரேல் வலுவான இராணுவ ரீதியிலான மற்றும் ஆயுத ரீதியிலான வளர்ச்சி நிலையினை எட்டுவதற்கு முயலுவதோடு மேற்காசிய அரசியலில் இராணுவ வியூகத்துக்குள் மேலும் தீவிரப்படுத்த திட்டமிடுகின்றது.

நான்காவது, ஜோ பைடனின் சவூதி அரேபியாவுக்கான விஜயம் மனித உரிமைவாதிகளாலும் சமூக ஆர்வலர்களாலும் அதிகம் விமர்சிக்கப்படுகிறது. தேர்தல் பிரச்சாரக்காலத்தில் ஜோ பைடன் ஒடுக்கப்படும் இராச்சியமாக சவூதி அரேபியாவை விழித்து கொண்ட நிலையிலிருந்து மூலோபாய உறவுள்ள நாடென்று முன்மொழிய முயல்கின்றார். ரஷ்யா மேற்கு நாடுகளுக்கு எரிவாயு மற்றும் பெற்றோலியத்தை ஏற்றுமதி செய்வதை நிறுத்தியதன் பிரகாரம் எழுந்த நெருக்கடி அமெரிக்காவிற்கும் அதன் உள்நாட்டு பொருளாதாரத்திற்கும் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. அதனாலேயே ஜோ பைடன் சவூதி அரேபியாவின் எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்கான விண்ணப்பத்தோடு ஊடகவியலாளர் ஜமால் ஹாசோமியின் படுகொலைக்கு பின் முகம்மது பின் சல்மானை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் பைடனுக்கு ஏற்பட்டுள்ளது. அரசியல் பொருளாதார தேவைகளுக்காக நாடுகளின் வெளியுறவுக்கொள்கைகள் நிச்சயமற்ற தன்மைக்குள் நகர்ந்து வருகின்றன. சவூதி அரேபியாவை முன்னிறுத்தி நேட்டோ விவகாரத்தில் துருக்கியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது போல் பெற்றோலியம் மற்றும் எண்ணெய் வளத்துக்காக சவூதி அரேபியாவோடு அமெரிக்க ஜனநாயக கட்சி கைகோர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஐந்தாவது, எல்லாவற்றையும் கடந்து அமெரிக்க ஆட்சியாளர்கள் மேற்காசியாவை கையாளவும் உலகத்தை ஏமாற்றவும் பலஸ்தீனத்தை எப்போதும் பயன்படுத்தி வருகின்ற நிலையைக் காண முடிகின்றது. 1947ஆம் ஆண்டிலிருந்து அனைத்து அமெரிக்க ஜனாதிபதிகளும் பலஸ்தீனத்தின் சுயாட்சிக்கு உத்தரவாதம் கொடுக்கும் மரபை பின்பற்றி வருகின்றனர். அந்த வரிசையில் ஜோ பைடனும் பலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸுடன் இரு நாட்டுக்குமான நட்புறவு பற்றிய விடயத்தை மேற்கொள்வாரென எதிர்பார்க்கப்படுகின்றது. அவரது விஜயத்தின் முக்கியத்துவம் ஈரான் சார்ந்தும் சவூதி அரேபியா பெற்றோலிய வளம் சார்ந்தும் முதன்மைப்படுத்தப்பட்டதேயன்றி பலஸ்தீன தேசத்தின் பாதுகாப்பு சார்ந்தோ அல்லது பாலஸ்தீன தேசத்தின் அங்கீகாரம் சார்ந்தோ கட்டமைப்படவில்லை என்பது அவரது மேற்காசிய விஜயத்தின் திட்டமிடல் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. இது தொடர்ச்சியற்ற பலவீனமான உலகத்தை ஏமாற்றும் செய்முறையாகவே காணப்படுகின்றது.

எனவே, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மேற்காசிய பயணம் அமெரிக்க உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் எதிர்நோக்கிவரும் அரசியல்பொருளாதார இராணுவ நெருக்கடிகளை கையாள்வதாகவே தெரிகிறது. அதிலும் குறிப்பாக, ஈரானின் அணுவாயுத செறிவூட்டலை முடிவுக்கு கொண்டு வருவதனூடாக இஸ்ரேலை பலப்படுத்துவதும் அதனூடாக அமெரிக்காவின் மேற்காசிய இருப்பை உறுதிப்படுத்துவதும் நோக்கமாக உள்ளது. ரஷ்ய-சீனா-ஈரான் உறவு அமெரிக்காவிற்கும் மேற்குக்கும் மட்டுமன்றி இஸ்ரேலுக்கும் ஆபத்தானதொன்றாக கணிக்கப்படுகிறது. இதனால் இஸ்ரேலுடனான அமெரிக்க நட்புறவு தொடர்ச்சியானதாகவும் முறியடிப்பு மூலோபாயத்தை கொண்டதாகவும் விளங்குகின்றது.

# வாழ்வாதாரமா சேதாரமா 232



தமிழ்க் கவி பேசுகின்றார்

## 'சுண்டைக்காய் காப்பணம் சுமைகூலி முக்காப்பணம்'

நாட்டின் பொருளாதாரம் பாழ்கிணத்துள் விழுந்து கிடக்கிறது. அதே சமயம் "கிடக்கிறதெல்லாங் கிடக்கட்டும் கிழவனைத் தூக்கி மடியில வை" என்பது போல புதிய புதிய நடைமுறைகளை அறிமுகமாக்கி மக்களின் பணத்தை பிடுங்கும் வேலையும் தாராளமாக நடக்கிறது. உதாரணத்துக்கு ரெண்டொன்று.



ஒரு தொலைபேசி அழைப்பு மின்சார சபையிடமிருந்து. "உங்களுடைய மின்சாரக்கட்டணம். இவ்வளவு இனி போனிலதான் சொல்லுவோம் கட்டிவிடுங்கள்"

இதன்படி நாம் கட்டணத்தை கட்ட இலங்கை வங்கிக்கு போனால் இருபது ரூபா கொமிஷன் அதாவது தரகுப் பணம். நூறு பேர் கட்டினால் இரண்டாயிரம் ரூபா கிடைக்கும். கட்டுவது நூறா என்ன. நாம் பணம் கட்டிவிட்டோம். அதை இல்லை என்று நிரூபிக்கவோ ஆம் என்று ஒத்துக்கொள்ளவோ ஆதாரம் காட்டியாக வேண்டும். அதுசரி இவர்கள் எப்போது வந்து மானி வாசித்தார்கள். இனி எல்லாமே குருடன் பெண்டிலுக்கு அடித்த கதைதான்.

இறுக்கமான காகிதத் தட்டுப்பாடு நிலவும் இந்த வேளையில் பெற்றோல் டீசல் என்பவற்றைப் பெற முண்டியடித்து நிற்க முடியாதவர்க்கும் வசதியாக தமக்குரிய எரிபொருளைப் பெற அட்டை அறிமுகமானது. பெருமளவு மக்கள் பெற்றுக் கொண்டுமுள்ளார்கள் இதற்காக பணம் பொருள், நேரம் என்பற்றை அர்ப்பணித்து வாழ்ந்திருக்கிற, அதாவது வீடுகளில் அடங்கிக் கிடக்கிற மக்கள் தாம் விரும்பியபடியே வாழ முழு உரிமையை கொண்டவராவார், என்பது நாட்டுநடப்பு. ஆனால், புதிய நடைமுறையாக, ஒன்லைனில் பெற்றோலுக்கான பதிவுகளை செய்யப்போவதாக புதிய அறிவித்தல் வருகிறது. அப்படியானால் இதுவரை லட்சக்கணக்கான அட்டைகளை வழங்கிய நேரம் பணம் முயற்சி எல்லாம் என்னவாகப் போகிறது.

அடுத்த வீட்டுப் பிள்ளையொன்றுக்கு உடல்நலமில்லை. வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை. எமது வழமையான முச்சக்கர வண்டிக்காரருக்கு தொலை பேசினேன். வழமையாக நூற்றைம்பது ரூபாவுக்கு ஓடிய வண்டிக்கு அறுநூறு ரூபாவுக்கு மேல் ஆகும் என்றார். சரி என்பதைத்தவிர வேறு வழியில்லை. ஆட்டோ ஓட்டுநர்களிடமே அதிகமாக பெற்றோல் விற்பனை நிலையம் இருந்தது. அவர்கள் போதைப் பொருள் விற்பதைவிட மிக ரகசியமாக கைமாறிக் கொள்கிறார்கள். நாலாயிரம் ரூபாவுக்கு பெற்றோல் வாங்கி எப்படி குறைந்த பெறுமதியில் ஓட முடியும். என்ற முச்சக்கர வண்டிக்காரரிடம் எனக்கு ஒரு லீட்டர் பெற்றோல் வாங்க முடியுமா எனக் கேட்டால் அவர் தந்த தகவல்தான் இது தொகையான வாகனங்களை அடுக்கி பெற்றோலைக் கைப்பற்றியோர் தமது ஜீவனோபாயமாக அதை மாற்றியுள்ளனர். போகட்டும் அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி.

எப்படிப் பார்த்தாலும் மக்கள் ஆரோக்கிய வாழ்வுக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். மருந்தடிக்காத இயற்கை பசளைகள் பூச்சிவிரட்டிகள் என எமது விவசாயம் தளைத் தோங்குகிறது. தனக்குத்தனக்கென்று தோட்டம். மாடு, கோழி என மக்கள் உற்பத்தியில் ஈடுபடுவதைக் காண முடிகிறது. ஆனால் இதையெல்லாம் வல்லரசு நாடுகள் ஒப்புக் கொள்ளப்போவதில்லை. இதோ யூரியா வந்துவிட்டது மேலும் பசளைகள் வரப்போகின்றன. விலையா? மானியமாகவே தருகிறோம் என மந்திரிகள் அறிவிக்கிறார்கள். இப்படியே சைக்கிளா ஓடுகிறீர்கள் என்று ஒரு சாவாலை விட்டு மக்களுக்கு சைக்கிளின் விலையை உச்சத்துக்கு கொண்டு போய் அதையும் செல்வந்தர்களின் வாகனமாக மாற்றியிருக்கிறது வர்த்தக உலகம்.

இல்லை இவ்வளவு காலமும் இவ்வளவு மிதிவண்டிகள் எங்கேயிருந்தன. என்பதும் ஆச்சரியம். புதிய வாகனங்களை பெற விரைவான லீசிங் வசதி என்றொரு விளம்பரம் பார்த்தேன். எப்போதோ பெற்ற கட்டணத்துக்கான விளம்பரத்தை பத்திரிகை செய்து கொண்டிருக்கிறது.

பெருமளவு நோய்கள் குறையப் போவதை காணப்போகிறோம். அப்படியானால் மருந்து வைத்தியம் இவைகளும் தேடுவாரற்றுப் போகுமோ? அதெப்படி கவர்ச்சிகரமான பைக்கற்றுகளில் கவர்ச்சிகரமான உணவுப் பொருட்களும் பால்மாவும் புதிய புதிய பெயர்களில் வருகின்றன. மக்களும் அவற்றை ஆர்வமாக வாங்கி பயன்படுத்துகிறார்கள். பழைய பால்மா கம்பனிகளுக்கு என்ன நடந்தது. இவையெல்லாம் தானாக நடக்கிறதா? அல்லது புதிய வகை நோய்காவிகளா? எனக்கு சந்தேகம்தான்.

வைத்தியசாலைகளில் சில நோய்களுக்கான விசேட முகாம் மாதாந்தம் வாராந்தம் என நடக்கும். தொடர்ச்சியாக குளிகைகள் பயன்படுத்த வேண்டிய நோய்களுக்கு மாத்திரைகள் வழங்குவார்கள். இப்போதும் அவை நடைமுறையில் இருந்தாலும் பல மருந்துகளை பயனாளர்கள் கடைகளில் வாங்கிக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அந்த மருந்துகளும் பெரிய விலை இல்லை சதாரணமாக. எண்பது தொண்ணூறு ரூபாவுக்குள் வாங்கிவிடலாம். ஆனால் இந்தவாரம் அந்த மாத்திரைகளும் உயரத்தில் ஏறிவிட்டன. சாதாரணமாக நான் அறுபது ரூபாவுக்கு வாங்கிய மாத்திரை இருநூறு ரூபாவாகிவிட்டது.

எமது கிராமத்து பழமொழியில் சொல்வதானால் 'புதிய மொந்தையில் பழைய கள்ளு.' இத்தோடு முடியவில்லை. அதே கடைகள் அதே மக்கள். ஆனால் பொருட்களின் உறைகள் நிறம் மாறி பெயர்மாறி வந்திருக்கிறது. இது வழமைதானே. எனது தாய் 'கவ்அன்கேட்; பால்மாவை எமக்கு தந்தாள்; பிறகு என் தம்பிகளுக்கு 'லக்டோஜன்' என் பிள்ளைகளின் காலம் 'எஸ்எம்ஏ' இப்போது என்ன வகை. ஒட்டு மொத்தத்தில் எல்லாமே குழந்தைகளுக்கான பால்மாதான் குழந்தைகளுக்கான பால் இறைவனால் தயாரிக்கப்பட்டு அதன் தாயிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அதிக பிள்ளைகளுக்கு அது கிடைப்பதில்லை என்பது வருத்தம்தான்.

உலகம் மிகவும் சுருங்கி விட்டது. அதனால் பத்திரிகை சஞ்சிகை என்பதெல்லாம் செய்வதை விட ஒவ்வொருவர் கைகளிலுமுள்ள தொ(ல்)லைபேசிகள் நிறையவே செய்கின்றன. தினமும் போனையே நோண்டிக் கொண்டு அச்சப்பட்டுக் கொண்டிருக்கும் பலருக்கும் நான் சொல்லக்கூடியது இதுதான். அந்தத்தில் நிற்கும் மக்கள் நாங்கள்.

ஈரைப் பேனாக்கி பேனை பெருமாளாக்கும் யூரியூப் சானல்கள் நிறைந்த உலகம் இது. நாம் எல்லாவற்றையும் பார்க்கலாம் ஆனால் அவற்றை பார்க்க மட்டுமே வைத்துக் கொண்டால் போதும். வீணாக அவற்றை நம்பி ஏமாறாமல் வாழ பழகிக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையின் அந்தத்தில் நிற்கும் மக்கள் நாங்கள். இதுவும் கடந்து போகும். என்ற நம்பிக்கை நம்மில் அநேகருக்கு இல்லை.

கடந்த காலத்தை நினைவில் கொள்வோம். இருக்கும்வரை உயிரை மட்டும் வைத்துக் கொண்டு போரை எதிர் கொண்டவர்கள் நாங்கள். இப்போது நிலைமை அப்படியல்ல. நமக்கு நம்மை சுதாரித்துக் கொள்ள போதிய அவகாசமும் வசதிகளும் இருக்கிறது.

கற்காலத்திலும் மனிதர்கள் வாழ்ந்தார்கள். இன்று உக்ரைனிலும் மக்கள் வாழ்கிறார்கள். உலகம் முழுதும் மக்கள் ஏதோ சில காரணங்களால் ஓடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். என்றோ ஒருநாள் தாம் சமாதானமாகவும் சந்தோசமாகவும் வாழ்வோம் என்ற நம்பிக்கைதான் அவர்களை விரட்டிக் கொண்டிருக்கிறது.. இதுதான் உயிரினங்களின் பொது இயல்பு.

எழுதப்படாத சட்டங்கள் இருந்தாலும் எழுதப்பட்ட சட்டதிட்டமிருந்தாலும், எல்லாமே மாயம் என்றாகிவிட்ட காலம். பார்க்கலாம் என்று துணிந்து நின்றால் வாழ்க்கை வசந்தமாகும் நிச்சயம்.

# எனது சகோதரியே என் முதல் ஆகர்சிப்பு



கெக்கிராவ ஸுலைஹா என்று வாசகர்களிடையே பரவலாக அறியப்பட்ட ஸுலைஹா பேகம், கவிதை மொழிபெயர்ப்பு, கற்பித்தல் , எழுத்து எனப் பல்வேறுபட்ட துறைகளில் தன் ஆளுமையை வெளிப்படுத்தியவர். தினகரன் வாரமஞ்சரிக்காக தனது பல்துறைகளிலான ஈடுபாட்டை அவர் விபரிக்கிறார்.

**உங்களைப் பற்றிய அறிமுகத்தை தாருங்கள்...**

எனது இயற்பெயர் ஸுலைஹா பேகம். 'கெக்கிறாவ ஸுலைஹா' என்பது எழுத்து நிமித்தம் நானே எனக்கு சூடிக்கொண்ட பெயர். அனுராதபுர மாவட்டத்தில் மரதன்கடவள எனும் கிராமத்தில் 1969 மே 27 இல் பிறந்தேன். அதன் அருகிருக்கும் கெக்கிறாவயில் சின்ன வயதில் இருந்து வாசம்.. தரம் 01 முதல் தரம் 11 வரை கெக்கிறாவ முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் கற்று, தரம் 1213 கண்டி பெண்கள் உயர்நிலைப் பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் கற்றேன். ஆங்கில ஆசிரியராக 1992 களில் நியமனம் பெற்றேன். ஆசிரியர் பயிற்சிக்காக பேராதனை ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் (19971998) இணைந்து, ஆங்கில ஆசிரியர் டிப்ளோமாப் பயிற்சிக்காக இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் மிஹிந்தலை சென்றேன். மேலும், ஆங்கில உயர் தேசிய டிப்ளோமாவுக்காக கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவகம், கல்விமாணி கற்கை நெறி நிமித்தம் ஆங்கிலம் தேசியக் கல்வி நிறுவகம் என்பவற்றில் கற்றேன். ஆங்கில ஆசிரியராக கெக்கிறாவ முஸ்லிம் மஹா வித்தியாலயம், மரதன்கடவல அல்அமீன் முஸ்லிம் வித்தியாலயம், மரதன்கடவல இஹலபுளியங்குளம் முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய இடங்களில் பணியாற்றியுள்ளேன். 2009.11.20. இல் அதிபர் நியமனம்பெற்று அதிபராக மரதன்கடவல அல் அமீன் முஸ்லிம் வித்தியாலயத்தில் கடமையாற்றி விட்டு, தற்போது கெக்கிறாவ முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் பணி செய்கிறேன். கற்ற பள்ளியில் அதிபர் பணி நெஞ்சத்தை நிறைப்பது.



**உங்களது இலக்கிய ஈடுபாட்டையும் மொழிபெயர்ப்பு சம்பந்தமான விடயங்களையும் கூறுங்கள்...?**

இலக்கிய ஈடுபாட்டுக்கு ஊக்குவித்தவர்கள் என்று என் நன்றிக்குரியோர் பட்டியல் மிக நீண்டது. என் மூத்த சகோதரி கெக்கிறாவ ஸஹானா வானொலிக்கும், பத்திரிகைக்கும் என்று ஏதேதோ எழுதிக் கொண்டே இருப்பாள். அவள் எனது முதல் ஆகர்சிப்பு என்பேன். பள்ளியில் எங்கள் ஆங்கில ஆசிரியராக பண்ணாமத்துக் கவிராயர் ஸெய்யத் முஹம்மத் ஃபாரூக் எங்களுக்கு வாய்த்த இன்னொரு பேரருள் என்பேன். ஆதர்சனம் அவர் எங்களுக்கு. ஆங்கில ஆசிரியர் ஆகும் கனவு கூட அவரைப் பார்த்து, நான் நெஞ்சில் சுமந்தது தான். மேமன்கவி அப்துல் ரஸாக், நிறைய புத்தங்கங்களை கொண்டு வந்து தந்து கொண்டே இருப்பார். நிறைய பயிற்சிகள் தருவார். நிறைய பேசிக்கொண்டே இருப்போம். எனக்கு மொழிபெயர்ப்பு கைகூடி வரும் என்று எனக்கே காட்டித் தந்தவர் அவர். என்னை வளர்க்க மும்முனையில் இருந்தும் நீர் பாய்ச்சியோர் என்பேன் இவர்கள் மூவரையும்.. 'மல்லிகை' டொமினிக் ஜீவா ஐயா , மகன் 'ஜீவநதி' கலாமணி பரணீதரன், அனுராதபுரம் அன்பு ஜவஹர்ஷா மற்றும் அவ்வப்போது எனக்குக் கற்பித்த ஆசிரியர்கள், என்னோடு கற்பித்த ஆசிரியர்கள், உறவினர்கள் என பலரைச் சொல்லலாம். முதல் இலக்கிய ஆக்கம் என்று 'மல்லிகை' சஞ்சிகையில் 90களில் பிரசுரமான மொழிபெயர்ப்புக் கவிதை "ஓ! ஆபிரிக்காவே" ஐச் சொல்லலாம்.





**மொழிபெயர்ப்பு என்ற கலையை மற்றவர்களின் சிந்தனைக்கு எட்டி வைத்து விரிவுபடுத்துவதற்கும், உங்களது பொறுமைக்கும் நீங்கள் எடுத்துக் கொள்ளும் நேரகால முகாமைத்துவத்தை குறிப்பிடுங்கள்....?**

நிறைய பேர் "நேரம் எப்படி ஒதுக்கிக் கொள்கிறீர்கள்" என்று கேட்கையில் ஆச்சரயம் விரியும் கண்களால் அவர்களை துளாவுகிறேன். விருப்பம் கொண்ட மனசு, நேரத்தை தனக்கேற்ற வகையில் திருப்பிக் கொள்ளும்.. மொழிபெயர்க்க அல்லது அதுபற்றி எழுத ஏதேனும் ஒரு கரு மனசுக்குள் வந்து விட்டால், கனவுபோல் அது மனவீதி எங்கும் பரவிப் பரவி, புஷ்பங்கள் போல வாசனை பரத்திக் கொண்டே போகிறது. நடு இரவென்றாலும் உட்கார்ந்து அதனோடு கைகுலுக்கிக் கொள்கிறேன். என் சகோதரி கெக்கிறாவ ஸஹானா தமிழில் ஆய்வு, சிறுகதை, கவிதை, கட்டுரை என்று நிறைய எழுதுவாள். அவள் சொல்வாள், உன் திசை மொழிபெயர்ப்பு துறையிலாய் எப்போதும் இருக்கட்டும் என்று. அவளே அத்தனையையும் மேற்பார்வை செய்வாள். திருத்துவாள். நிறைய தேடித் தேடி தருவாள். இருவருமாய் இரவிரவாக குந்திக் கொள்வோம். நேரமும் எங்களோடு கை குலுக்கிக் கொண்டு இருக்கும்... (16 பக்கம் பார்க்க)

பாத்திமா நளீரா ...

# திருச்சியில் நடைபெற்ற உலகத் தமிழ் ஹைக்கூ மாநாடு









ஜப்பானிய கவிதை வடிவமான ஹைக்கூ கவிதை தமிழ்நாட்டில் கால்பதித்து ஒரு நூற்றாண்டை கடந்துவிட்ட நிலையில் ஹைக்கூ கவிதைகளுக்கான முதல் தமிழ் ஹைக்கூ உலக மாநாடு திருச்சியில் அண்மையில் நடைபெற்றது. தூண்டில் ஹைக்கூ கவிதை இதழ், இனிய நந்தவனம் மாத இதழ், தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கமும் இணைந்து நடத்திய மாநாட்டை கல்வியாளர் சௌமாராஜரத்தினம் தொடங்கிவைத்தார்

திரைப்பட இயக்குநர் என். லிங்குசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாநாட்டு நிறைவுரையாற்றினார்

"ஒரு ஹைக்கூ கவிதை எழுதுபவனுடைய மனநிலை எப்படி இருக்கும் என்றால் உலகில் இருக்கும் எல்லா மனிதர்களின் மனநிலையிலிருந்தும் வேறுபட்டிருக்கும் இந்த உலகத்தை பார்க்கின்ற பார்வையும் மற்றவர்கள் மீது காட்டுகின்ற அன்பும் மகிழ்ச்சியும் வித்தியாசமாக இருக்கும். இப்படிப்பட்டவர்களின் ஹைக்கூவை எங்கோ யாரோ சொன்னது இன்றுவரையில் மனதில் நிற்கிறது ஒரு நல்ல ஹைக்கூ கவிதையை படிக்கும் போது அதிலிருந்து தொடர்ச்சியாக இன்னொரு கவிதை ஞாபகத்திற்கு வந்து அப்படியே ஹைக்கூ பயணம் தொடரும்.

நான் சென்னைக்குப் போனால் பிழைத்துக்கொள்ளலாம் என்ற உந்துதலைத் தந்தது மூன்று வரியில் எழுதிய ஹைக்கூ கவிதைதான். என்னை இந்த உயரத்திற்கு உயர்த்தியதும் எனது வெற்றி தோல்வியில் மனதை சமநிலையில் வைத்துக்கொள்வதும் இந்த ஹைக்கூ கவிதைகள் மட்டும்தான் ஒரு நல்ல கவிதை எழுதவேண்டுமானால் கட்டாயம் இருக்கக்கூடாது அதற்காக மெனக்கட கூடாது அது இயல்பாக அமையவேண்டும் ஹைக்கூ கவிதை எழுதுவதைவிட உணரும் போதுதான் முழுமையடைகிறது.

என்று இயக்குநர் என்.லிங்குசாமி நிறைவுரையில் குறிப்பிட்டார். கவிஞர் தங்கம்மூர்த்தி மாநாட்டு சிறப்புரையாற்ற கவிஞர் அமுதபாரதி கவிஞர் ஆரூர் தமிழ்நாடன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். கவிஞர் மு.முருகேஷ் ஹைக்கூ மாநாட்டின் நோக்கத்தயும் பயணத்தையும் குறிப்பிட்டு உரையாற்ற

கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன் மாட்டை ஒருங்கிணைத்து ஏற்புரை நிகழ்தினார் மாநாட்டில் "தூண்டில் " ஹைக்கூ சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

கிருஷாந்தினி ...












## வரிசையாக நின்றோம்

சேவியர்
அவிசாவளை புவக்பிட்டிய

வாக்குரிமை கேட்டு
நெரிசல் இன்றி தந்தார்கள்
நேர்மை இதுவென்று எண்ணி
நில உரிமைக்காக
நேர்மையான ஆட்சிக்காக
வரிசையில் நின்று வாக்களித்தோம்
வாக்குகள் கேட்டு வருவார்கள்
வீட்டு வாசலுக்கு
வரிசைகளாக பிரிந்து வாக்களித்தோம்
எண்ணங்கள் நிறைவேறும் எனும் எதிர்பார்ப்போடு
வாக்கு கேட்டு எங்கள் வாசலுக்கு
வந்தவர்களின் கேட் மூடப்பட்டது

எங்களுக்கு
இன்று வரிசையில் நிற்கின்றோம்
வயிற்றுப் பிளைப்புக்கு
வரலாற்றின் தவறுகளை சுமந்து கொண்டு
மடிந்து போகின்றோம்
மண்ணெண்ணெய் வரிசையில்
எரிந்து விழுகிறோம்
எரிந்து போகும் எரிவாயு வரிசையில்
எல்லாத் தேவைகளையும் பெற
இன்றும் வரிசையில் நிற்கின்றோம்
வரிசைகள் முடியாது
கவிதை வரிகளைப் போல

## மழையாகும் மனம்...

இர்ஷாத் இமாமுதீன்

மழையென்றால்
அவனுக்கு ரொம்ப
பிரியம்

மழைக்குள்
அவன் மழையாவதுண்டு

மழையின்
தூவானத்தில்
அவன் மனம் துவட்டுவதுண்டு

மழையில் நனைந்து
அவன் மனமும்
ஈரமாவதுண்டு

மழையென்பது
அவன் பார்வையில்
பிரபஞ்சத்தின்
ஈரமான சுவனம்

மழையை
அவன் நேசிப்பதுண்டு
மழையை மணிக்கணக்காக
அவன் வாசிப்பதுண்டு

மழையின் இசையில்
அவன் உள்ளம்
நடனமாடுவதுண்டு

மழைக்குள்
இருக்கும்
இரம்மியத்தை
அவன் கவிதைகளுக்குள்ளும்
பிரதி செய்வதுண்டு

மழை தரும்
இன்பம்
நுகர நுகர
உணர்வுகளும்
ஈரமாவதுண்டு

மழைக்குள்
மழலையாகும்
அவன் மழை கண்டு
இன்று
கவலை கொள்கிறான்
தன் பொத்தல் பொத்தலான
வீட்டுக்கூரையை நினைந்து....

## ஆடிப் பெருக்கு.....!

ஷெல்லிதாசன்
திருகோணமலை

அலைகடலென எழுந்து வந்த
மக்கள் எழுச்சி....!
வந்த பல....
தடைகளை யெல்லாம் தாண்டி வந்த
தன்னெழுச்சி இது..!

கட்சிகளின் கொடிகளை எங்குமே
காண முடியவில்லை.!
வண்ணங்களின் வகைகளையும்
எண்ணிப்பார்க்க ஏதுமில்லை.
தலைவர்களென தம்மைத்தாமே
பிரகடனப்படுத்திய பிரபலங்களின்
முகங்களையும் கூடத்
தேடியும் கிடைக்கவில்லை...!

அராஜகங்கள் ஏதும் இல்லை
அவதூறுப் பேச்சுக்களும்
ஓரினத்தின் புகழ்பாடும்
கோஷங்களும் இல்லை

ஆசிவேண்டி மண்டியிட்டு
பாத பூசைசெய்யும்
அடிவருடிப் பழக்கங்களும்
ஓடி எங்கோ ஒழித்துக்கொண்டன

மக்கள் சக்தி ஒன்றே என்றும்
மகத்தானதென்ற
நம்பிக்கையின் ஒளிதான்
நாட்டின் நாலா திசைகளிலும்..!

வேண்டுவதெல்லாம்
மக்கள் இங்கு
ஒரு
வேதனையற்ற வாழ்க்கை
வேறல்ல....
ஆண்டு ஆண்டாய் ஆட்சிசெய்தோர்
அவலத்தையே பரிசளித்தார்
அனைத்து வளங்களும் நிறைந்த நாட்டை
ஏதிலியற்றதாக்கி
கையையும் ஏந்த வைத்தார்

நாளை....
விதியை மாற்றி புதிய விதியும்
எழுதப்படுமா..?
வேற்றுமைகள் அற்றதொரு
ஆட்சியும் மேலெழுமா..?
ஆடிப்பெருக்கின் அர்த்தத்தை
அகிலம் பார்த்து வியந்து போற்றும்
காலமும் கனிந்து வருமா...?
எதிர்பார்ப்புக்களுடன் மக்கள்.....
எப்போ விடியல் வரும்....?



## திட்டம் தீட்டாதே

ரதிதேவி,
மானிப்பாய்

திட்டமிடாது வாழப்பழகு
திமிர் கொட்டமிடாது
அடங்கி நடவே
அகம் புறம் ஈர்த்து ஒருத்தே
நிற்கும் ஒன்றை யானும்
வியத்தே பாட விளைந்தேன்

தவமும் தியானமும்
செய்கின்ற செயலே
ஜெகமும் தேகமும்
அவன் வாழ்விடமே

சந்தோஷம் நம் இயல்பு
அதைத் தேடுவதில் என்ன தவறு?
அகத்தே அது இருக்க
புறத்தே தேடுவதுதான் தவறு

கையில் பாலிருக்க
வெண்ணை தேடும் மூடர்போல்
அகத்தே மகிழ்வின் கிணறிருக்க
அதைப் புறத்தே தேடுதல் முறையோ

புறத்தே மகிழ்வைத் தேடியே
எங்கள் திட்டம் தீட்டுதல் எல்லாம் அன்றோ
திட்டம் தீட்டினில்
அத்திட்டத்தின் வெற்றியில் மகிழ்வும்
தோல்வியில் துக்கமும்
அதுவரை அது பற்றிய கனவும் அச்சமும்
அச்சத்திலிருந்து அநீதியும்
விளைகின்றது அன்றோ

தொலைவான் பார்த்துப்
பழகிய கண்களுக்கு
அருகே இலைமேல் இருக்கும்
மலரோ மங்கும்
அஃது சற்று இமைகளை மூடு

அடுத்தவேளை உணவுக்குக்கூட
திட்டம் தீட்டாத ஞானிகளாய்
வாழமுடியாது விட்டால் கூட
ஆடம்பரத் திட்டங்களைத் தீட்டுவதை
நிறுத்தி நீங்கி நில்

வாழவேண்டும் என்றால்
வாடகைக்காவது வேண்டும் ஒரு அறை
போகவேண்டும் ஊருக்கென்றால்
முன்பதிவு பண்ணத்தான் வேண்டும்
புகையிரத வண்டியை
ஆனால் காரை வாங்கவேண்டும்
வீடு வாங்க வேண்டும்
என்றெல்லாம் திட்டம் தீட்டுதல்
கண்டிப்பாகத் தேவை தானா

கொஞ்சம் கொஞ்சமாய்க்
குறைத்துவர நீயும்
குழந்தையைப்போல்,
நாயைப்போல்,
ஞானியைப்போல்,
உள்ளே இருந்து வழிகாட்டும்
ஒரு உணர்வின் வழி
அனிச்சை மையத்திலிருந்து செயலாற்ற
கற்றுக்கொள்வாய்

திட்டமற்ற ஒருவனுக்கு
வெற்றி என்ன தோல்வி என்ன
மகிழ்ச்சி என்ன துக்கம் என்ன
அவன் வாழ்வின் ஒவ்வெரு நிமிடமும்
அவனை ஆச்சரியப்படுத்தும்

## மகிழ்வினை உலகம் காணாதா?



அ.கௌரிதாசன்

இலக்கணம் கற்று இலக்கியம் செய்வோர்
இத்தரை மீதில் ஏராளம் தூய
இலட்சிய மற்று இந்நிலம் வாழ்வோர்
இசைப்பே னிங்கு தாராளம்!

எழுத்தில் மட்டும் இசைபட வாழ்தல்
என்பது பலபேர் குறியாகும் அவர்
எழுத்தைப் போலும் வாழ்வு தொடர்ந்தால்
எவரும் மதிக்கும் நெறியாகும்!

ஊருக்குத் தான் உபதே சங்கள்
உண்மை வாழ்வு தலைகீழாம் புகழ்
பேருக் காகவும் நடிப்பவர் தம்மில்
புவிவாழ் விலங்கினம் அவை மேலாம்!

அண்ணன் தம்பிகள் அடிபிடி சண்டை
அவனியை விட்டு ஓடாதா? உயர்
திண்ணம் உடைய வாழ்வியல் கண்டு
தென்றலும் வந்து வீசாதா?

இனம்மொழி யென்று வாதிடும் கொடுமை
இல்லையென்றுலகில் ஆகாதா? நிதம்
மனம் மகிழ் வுற்று மனிதர்கள் உலவும்
மகிழ்வினை உலகம் காணாதா?!

## மௌனிக்காத முதல் கவிதை

"ஏரூர்க்கவி"
எச்.எம்.எம்.றசீம்
கிழக்கு பல்கலைக்கழகம்

ஒடுங்கிய பாயொன்றில்
அகந்தை, அடாவடி
களிப்பு, சிரிப்பு மறந்து
புலனுறுப்புக்கள்
உணர்வுச் சுதந்திரமற்று
உறங்கிக் கொண்டிருக்கும் இரவில்,

கற்பனைக் கோட்டைக்குள்
கண்களைக் கசக்கியபடி
துயில் தொலைத்து
பயவுணர்வை,
பக்தியை,
ஆச்சரிய வெளிப்பாட்டை,
அகிலத்தின் அழகை,
இயற்கையின் இன்பத்தை,
மனிதர்கள் பண்பை,
மஞ்சமதில் மகிழ்ந்ததை
சரி பிழை கண்டு
செதுக்க ஆரம்பித்த நாளது,

வெளிப்புறம் முழுதும்
இருள் சூழ்ந்திருந்து
பூட்டியதொரு அறையில்
மின்குமிழொன்றின்
மெல்லிய வெளிச்சத்தில்
கிறுக்கத் தொடங்கிய முதல் கவிதை
என்னோடு பேசுகிறது

இலக்கற்ற என்னை
நீயேன் காதலிக்கின்றாய்,
அவனிவன் உன்னையும்
உன்னாலான என்னையும்
நார் நாராய்ப் பிரித்தாய்ந்து
நடுத்தெருவில் நகைக்கவா?

வாசிக்கத் தெரியாதொருவன்
வாங்கிக் கொண்டு
பாவனைக்குதவாத
பழைய இரும்பு போலென்னை
மூலையில் போட்டுவிட்டு
முட்டாய் வாங்கிச் சாப்பிடவா?

பேசாமல் இத்தோடு நிறுத்திவிடு
ஏனெனில்,
தலைகீழாய்த் தொங்கிக் கொண்டிருக்கும்
தரணியில்
தப்பிப் பிழைத்து
இரைதேடும் பறவையென
இயற்கையிடம் வாங்கி உன்
கற்பனை உயர்வில்
கலந்து சமைத்த என்னை
எவனோ ஒருவன்
எனதாகாரமென
துண்டுகளாக்கிச்
சொருகி அடுக்கிக் கொண்டு
சுவைக்கக் காத்திருக்கின்றான்
என்கிறது

பனி படரும்
ஈரம் காயாத அவ்விரவில்
இருவருக்குமான விவாதம்
இடைஇன்றித் தொடர்கிறது
கவியூற்றில் நனைந்து
சொர்க்கம் கொள்ள நினைந்த
முந்தைய நாளிரவின் கனவு
எரிமலைக் குழம்பான
மெக்மாவின் பாய்ச்சலுக்குள்
எறிந்து விடப்பட்டதுபோல்
கொதி கொள்கிறது,

ஆனால் அதுவோ
என் பேனாவை பிடித்தபடி
நகர்த்தவிடாது
அதன் வியாக்கியானத்தை
நிறுத்தி மௌனிக்கவில்லை

## சமரசம்

சிபானா அஸீம்

எனக்கிந்த வாழ்வோடு
எந்த வருத்தங்களுமில்லை

எனக்கிந்த வாழ்வோடு
எதுவித முரண்பாடுகளுமில்லை

எனக்கிந்த வாழ்வோடு
ஒரு குற்றச்சாட்டுக்களுமில்லை

நானிந்த வாழ்வோடு
எதுவிதமான ஒப்பந்தங்களிலும்
கைச்சாத்திடவில்லை

நானிந்த வாழ்விற்கு
எதுவித நிபந்தனைகளும்
விதிக்கவில்லை

எனக்கு செய்யவேண்டிய
கடமைகள் பற்றியோ
எந்த நினைவூட்டல்களையும்
வழங்குவதில்லை

இருந்தும் ஏனிந்த வாழ்க்கை
என்னை அடிக்கடி சஞ்சலப்படுத்துகிறதோ?

வாழ்வின் சிக்கலான
காலங்களிலெல்லாம்
என்ன இந்த வாழ்க்கை
என்றே கூற நேரிடுகிறதே

என் மீது விழும்
ஒவ்வொரு முடிச்சுக்களிலிருந்தும்
வெளியேறப் பிரயத்தனப்படுகையில்
இப்படியெல்லாம் இந்த வாழ்க்கையை
வாழத்தான் வேண்டுமா?
கேட்டு கேட்டு சலித்துப்போகிறேன்

உடைந்தழ வேண்டிய சந்தர்ப்பமொன்றில்
அங்கிருந்து வெளியேறும்ரை
கண்ணீரை மறைத்து
புன்னகைக்கும் ஒவ்வொரு தடவையும்
இதெல்லாம் ஒரு வாழ்க்கையாவென
இவ் வாழ்வின்
முன் தலைகுனிந்து நிற்கிறேன்

இருந்தும்
இவ்வாழ்க்கையை வாழ்ந்துதான்
பார்த்திட
அதீத வைராக்கியம்
எங்கிருந்துதான்
வருகிறதோ?

அஃதன்றி
நீ
நினைப்பது போல்
எளிதானதில்லை
இவ் வாழ்வினுடனான
சமரசமென்பது!



## இறுதி நாட்குறிப்பு

இணுவில் வாகீசன்

கவலைப்பட வேண்டாம்
வங்கியிலோ
தனி நபர்களிடமோ
நான் யாரிடமும்
கடன்வேண்டவில்லை
தொலை பேசி
நிறுவனங்களில் கூடத்தான்
கடன்வேண்டவில்லை

நான் இல்லை என்பதால்
யாரேனும் பொய்யாக
உங்களிடம் அறவிடலாம்
என் நாட்குறிப்பை
அவர்களிடம் காட்டுங்கள்

என் தொலைபேசி
மடிக்கணிணி மற்றும்
மோட்டார் சைக்கிளினையும்
யாராவது எடுத்துக்கொள்ளுங்கள்

மரணச் சடங்கில் கூட
கடன் வேண்டாம்
வங்கி ஏ.ரி.எம் அட்டையின்
கடவுச் சொல்லும்
பதிந்து வைத்துள்ளேன்
இறுதிக் கிரியையின்
செலவுகளிற்காய்
எடுத்துக் கொள்ளுங்கள்

பெரிதாய் ஒன்றும்
செய்ய வேண்டாம்
என் பணம் அதற்கு போதாது
உயிருடன் இருந்தபோது
எனக்கு செய்தைப்போல்
செய்தால் போதுமானது

மீண்டும் பிறப்புண்டேல் இவன்
பிறவாமை வேண்டும் என
ஆத்மார்த்தமாய்
பிரார்த்தனை செய்யுங்கள்

## மனிதனுக்கு மனிதன் சதி!

கல்லொளுவை பாரிஸ்

பீதி, பயம்
இரண்டும் தினமும்
இதயத்தை வதைக்கிறதா!

சில சந்தர்ப்பங்களில்
மனிதன் மனிதனுக்கு
சதி சமைத்து
யுகம் படைக்கின்றாள்!

இங்கு
அவஸ்தையில்
அந்தரங்கம் பக்கங்கள்
இரகசியமாகவே
நிறம் தீட்டப்படுகின்றன!

மனித நிறங்களில்
அரக்கத்தனம் நின்று
ஆதிக்கம்
செலுத்துகிறது!

## வெறுமையாகிய மனது

அ. ஜெகன்
சுவிஸ்

கோவிலடி அரசமர
நிழல் படிந்த
மணல் தரையில்
இருந்து
ஒலிபெருக்கிப் பாடல்கள்
காதின் உள் நுழைய
கதைப்பதுவும் கேட்காத
மாலை நேரப் பொழுதுகள்

திருவிழாக் கால
இரவு நேரங்கள்
இதமான கிராமத்தின்
காற்றுடன்
இணைத்திருக்கும்
குளிரும் இல்லா
வெப்பமும் இல்லா
உணர்தலில் இருக்கையில்
நீயும் என் அருகில்

மனிதப் பிறவியின்
மகத்துவம் அதுவென
மகிழ்ந்து கொண்ட
பொன்னின் நேரங்களாய்
தந்து சென்ற
மண்ணின் நேசிப்பு


உலகம் அறிந்திடாத
உணர்வும்
உலகமே இதுதான்
என்ற நினைவுமாய்
சிறகுகள் அசைந்த
எண்ணங்களில்
தன்னை மறந்த நிலை

வானத்தில் ஏறி
பூமிக்கு குதித்து
வசந்த காலத்து
மலர்களை எடுத்து
முகர்ந்த பூரிப்பின்
புதிய மனிதனாய்

நீண்ட சந்திப்பின்
நிலைத்திடாத உறவு
பூகம்பம் வந்தாற் போல
என்னை உலுக்கியது
நீ காணாமல் போன
பொழுதுகள்

வாடாது உதிர்ந்த
வசந்த காலத்துப்
பூக்கள்
வாடியது போல
இன்னும் நான்

காரணம் இல்லா
உள் உதிர்வின்
வெறுமையாகிய
மன நிலையாய்
இன்றைய வாழ்வு



කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

# பெறுகை அறிவித்தல்

**சர்வதேச அபிவிருத்தி சம்மேளத்தினால் நிதியிடப்பட்டது - கடன் இலக்கம் 5873 மற்றும் ஐரோப்பிய யூனியன் மானிய இலக்கம்: TF -B 5382 செயற்றிட்ட அடையாள இலக்கம்: P156019**

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தளத்தின் (ICT Platform) மீது உருவாக்கப்பட்ட கற்ற முகாமைத்துவ முறைமையைப் (LMS) பயன்படுத்தி கமத்தொழிலாளர் வியாபார பாடசாலை பயிற்சியை நடாத்த குறுகிய கால சேவை சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்

**பெறுகை இலக்கம்: LK-MOA-PMU-277934-NC-RFB**

விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக (ASMP) சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து 125.00 மில்லியன் அமெரிக்க டொலருக்கு நிகரான பல்வேறு நாணயங்களில் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு, அதில் 58.63 மில்லியன் அமெரிக்க டொலர் கமத்தொழில் அமைச்சுக்கு (MOA) ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 58.63 மில்லியன் அமெரிக்க டொலரில் ஏறத்தாழ 6.20 மில்லியன் அமெரிக்க டொலர் விவசாய பயிற்சி மற்றும் திறனை கட்டியெழுப்புவதற்கான முதலீடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்குப் புறம்பாக மேற்குறிப்பிடப்பட்ட செயற்றிட்டத்திற்கு ஐரோப்பிய யூனியனினால் 26 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதுடன் இதே செயற்பாட்டிற்காக ஏறத்தாழ 2.0 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைவரும் ஒன்றுகூடி பன்னிரண்டு மாவட்டங்களில் மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சிகளை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தளத்தின் (ICT Platform) மீது உருவாக்கப்பட்ட கற்ற முகாமைத்துவ முறைமையைப் (LMS) பயன்படுத்தி கமத்தொழிலாளர் வியாபார பாடசாலை பயிற்சியை நடாத்த குறுகிய கால சேவை சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்த கமத்தொழில் அமைச்சு மேற்படி நிதியில் ஒரு பகுதியைப் பயன்படுத்த விரும்புகின்றது. இந்த ஒதுக்கீட்டிற்கான மொத்த மதிப்பீடு 167.875 மில்லியன் ரூபாவாகும்.

1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தளத்தின் (Cyber FBS) மீது உருவாக்கப்பட்ட கற்ற முகாமைத்துவ முறைமையைப் (LMS) பயன்படுத்தி கமத்தொழிலாளர் வியாபார பாடசாலை பயிற்சியை நடாத்த பொருத்தமான மற்றும் திறமையான குறுகிய கால சேவை வழங்குநரை ASMP-MOA நாடுகின்றது. https://www.asmp.lk/advertisement/ என்ற இணையதள முகவரியில் தரப்பட்டுள்ள குறிப்பு விதிமுறைகளை (TOR) பார்க்கவும்.
2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தளத்தின் (Cyber FBS) மீது உருவாக்கப்பட்ட கற்ற முகாமைத்துவ முறைமையைப் (LMS) பயன்படுத்தி கமத்தொழிலாளர் வியாபார பாடசாலை பயிற்சியை நடாத்த குறுகிய கால சேவை சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்துவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், திட்ட பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| விபரம் | விலைக்கோரல் பிணை முறி | | |
|---|---|---|---|
| | தொகை ரூபா | காலம் | பயன்பெறுநர் |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தளத்தின் (Cyber FBS) மீது உருவாக்கப்பட்ட கற்ற முகாமைத்துவ முறைமையைப் (LMS) பயன்படுத்தி கமத்தொழிலாளர் வியாபார பாடசாலை பயிற்சியை நடாத்த குறுகிய கால சேவை சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்துதல். பெறுகை இல. LK-MOA-PMU- 277934-NC-RFB | 2,000,000.00 | 2022-12-31ஆம் திகதி வரை | செயற்றிட்டப் பணிப்பாளர், விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், கமத்தொழில் அமைச்சு |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கோரல் இடம்பெறும்.
4. ஆர்வமுள்ள தகுதியுடைய விலைமனுதாரர்கள் கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், பெறுகை நிபுணரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு 2022.07.25ஆம் திகதி தொடக்கம் 2022.08.15ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் கொள்வனவு செய்யலாம்.
5. விலைக்கோரலுக்கு முந்திய சந்திப்பு விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் திட்ட அதிகாரியின் அலுவலகம், 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் 2022 ஆகஸ்ட் 05ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.

**சேவை வழங்குநரின் தகைமை மற்றும் அனுபவம்:**

- சிறந்த பயிற்சி முகாமைப் பதிவுகளுடன் இதேபோன்ற பயிற்சியில் குறைந்தபட்சம் 10 வருட அனுபவத்துடன் சேவை வழங்குநர் நன்கு நிறுவப்பட்ட நிறுவனம்/நிறுவகமாக இருக்க வேண்டும்.
- சேவை வழங்குநரிடம் இருக்க வேண்டியவை:
  - i. நுண் மற்றும் சிறு நிறுவனங்களுக்கான நிறுவன மேம்பாட்டுப் பயிற்சியை நடத்துவதில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம்.
  - ii. திட்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு வியாபார திறன் மேம்பாட்டு பயிற்சிகளை நடத்துவதில் அனுபவம்.
  - iii. சமூகம் சார்ந்த நிறுவனங்கள், சங்கங்கள், விவசாயிகள் உற்பத்தி நிறுவனங்கள் உட்பட நிறுவன திறன் மேம்பாட்டு பயிற்சிகளை நடத்துவதில் அனுபவம்.
  - iv. சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள், விவசாயிகள் உற்பத்தி நிறுவனங்கள் உட்பட விபாபாரத் திட்டங்களை உருவாக்குவதில் அனுபவம்.
  - v. சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் உள்ளிட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு நிறுவன மேம்பாட்டுப் பயிற்சியை நடத்துவதில் அனுபவம்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் 20 மில்லியன் இலங்கை ரூபாவிற்கும் அதிகமான மதிப்புள்ள ஒரு ஒப்பந்தத்தையாவது சேவை வழங்குநர் கையாண்டிருக்க வேண்டும்.
- ASMP இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள குறிப்பு விதிமுறைகளின் பிரகாரம் விலைமனுதாரர் தேவையான நபர்கள்/நிபுணர்களை வழங்க வேண்டும்.
- விலைமனுதாரர்கள் சம்பந்தப்பட்ட துறையில் அரச நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வர்த்தகப் பதிவுச் சான்றிதழைச் கொண்டிருக்க வேண்டும்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுக்கான சராசரி விற்றுமுதல் ரூ.50 மில்லியனுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்

B. தேர்வுசெய்யும் மூலப் பிரமாணங்கள்:

i) தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் துறையில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்த அனுபவம். - ஆண்டுகளின் எண்ணிக்கை
ii) வேலையைச் செயல்படுத்துவதற்கான வேலைத் திட்டம் மற்றும் முறை.
iii) முக்கிய ஊழியர்களின் அனுபவம், திறன்கள் மற்றும் திறன்கள்: நிபுணர்களின் இருப்பு மற்றும் அவர்களின் தகுதி.
iv) வாடிக்கையாளர் குறிப்பு- வாடிக்கையாளரின் தொடர்பு விவரங்களுடன் மேற்கொள்ளப்படும் பணி.

(அனுபவங்கள் துணை ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும்)

C. செயற்திட்டத்தின் சிறாப்பருக்கு ரொக்கப்பணமாக 30,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பின்வரும் முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

D. முறையாக பூர்த்தி செய்த விலைமனுக்களை 2022 ஆகஸ்ட் 15ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுவுக்கு அனுமதி இல்லை. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் 2022 ஆகஸ்ட் 15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என இரு தொகுதிகளுடன் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அவை இரண்டும் இரு கடித உறைகளில் வெவ்வேறாக உள்ளிடுதல் வேண்டும் என்பதோடு முறையே மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்விரு கடித உறைகளையும் ஒற்றை கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் LK-MOA-PMU- 277934-NC-RFB என்ற ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்**
**செயற்றிட்ட பெறுகைக் குழு**
**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்**
**கமத்தொழில் அமைச்சு,**
**இல.: 123.˙.2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்லை.**
**2022 ஜூலை 24ஆம் திகதி.**

**www.asmp.lk**




UCSC

## கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகம்

# மாணவிகளின் விடுதியொன்றிற்காகக் கட்டிடமொன்றை குத்தகை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

**கேள்வி இலக்கம் : UCSC/S/NCB/APB/2022/003**

1. கொழும்பு பல்கலைக்கழகக் கணனிக் கற்கை நிறுவகத்தின், திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவரினால், மாணவிகளின் விடுதியொன்றாக உபயோகப்படுத்துவதற்காக தகுதியுள்ள கட்டிடமொன்றை வாடகைக்கு/ குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக, கட்டிட உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வமுள்ள கட்டிட உரிமையாளர்கள், கீழே விபரிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்தும், சிக்கலற்ற உரிமையுள்ள கட்டிடங்களிற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். குத்தகை வாடகைக் காலம் 02 வருடங்களாகும்.
   - i. கொழும்பு பல்கலைக்கழகக் கணனிக் கற்கை நிறுவகத்தின் 35 - 50 மாணவிகள் தங்கக்கூடிய கட்டிடமொன்றாக இருத்தல் வேண்டும். மாணவிகளுக்காக அறைகளிற்குப் புறம்பாக விடுதி நிருவாகிகளிற்காகவும் இரண்டு அறைகள் மற்றும் சமையலறையொன்று அமையப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அன்றாட கல்வி நடவடிக்கைகளிற்கேற்ற இட வசதிகள் அமையப்பெற்றிருத்தல் வேண்டும்.
   - ii. கொழும்பு பல்கலைக்கழகக் கணனிக் கற்கை நிறுவகத்திலிருந்து 10 - 15 கி.மீ. இற்கு மேற்படாத தொலைவில் அமைந்திருத்தல் வேண்டும்.
   - iii. கொழும்பு பல்கலைக்கழகக் கணனி கற்கை நிறுவகத்திற்கு நேரடியாகச் சென்றடையக்கூடிய பஸ் வீதி வசதிகளுடன் கூடிய கட்டிடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   - iv. போதியளவு நீர், மின்சாரம், சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.
   - v. கட்டிடம் அமைந்துள்ள காணியைச் சுற்றிவர குருஞ்சுவர் மற்றும் நுளைவாயில் (GATE) அமையப்பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், பாதுகாப்பான சூழலில் அமைந்து இருத்தல் வேண்டும்.
   - vi. விடுதிக் காணிக்கு தெளிவான மற்றும் சிக்கலற்ற பிரவேசப் பாதையொன்று அமைந்திருத்தல் வேண்டும்.
   - vii. கழிவு நீர் மற்றும் திண்மக்கழிவுகளை அகற்றும் தொகுதியானது, உரிய பராமரிப்பு மட்டம் மற்றும் கொள்ளளவு வசதிகளுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.
   - viii. கட்டிடமானது, சுத்தமாக மற்றும் உரியவாறு கட்டமைக்கப்பட்ட வீட்டுத் தோட்டமொன்றில் அமைந்திருத்தல் வேண்டும்.
   - ix. அன்றாடக் கழிவுகளை வெளியேற்றும் உரிய முறைமையொன்று அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.
3. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் இவ் விலைமனுக் கோரப்படும்.
4. இதற்காக ஆர்வமுள்ள கட்டிட உரிமையாளர்கள் மீளளிக்கப்படாத ரூபா 1,000/- இற்கான வைப்புத் தொகையை, மக்கள் வங்கியின், திம்பிரிகஸ்யாய கிளையில் நடைமுறைப்படுத்தப்படும், கொழும்பு பல்கலைக்கழகக் கணனிக் கல்வி நிறுவகத்தின் கணக்கு இலக்கம் 086-1001-2-1190316 இற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, இதற்கான விலைமனுப்படிவங்களை கொழும்பு பல்கலைக்கழகக் கணனிக்கற்கை நிறுவகத்தின், கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவில் 2022.07.25 முதல் 2022.08.08 அன்று மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம். உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் இரண்டு பிரதிகளாக, 2022.08.09 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, சிரேஷ்ட பிரதிப்பதிவாளர், கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகக் கணனிக் கற்கை நிறுவகம், இல. 35, ரீட் மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு, நேரில் அப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், மாணவிகளின் விடுதிக்காகக் கட்டிடமொன்றை குத்தகை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் - 2022" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
5. இவ்விலைமனுவானது, அது திறக்கப்பட்ட தினத்திலிருந்து 91 நாட்களுக்குச் செல்லுபடியாகும்.
6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.08.09 அன்று பி.ப. 2.15 இற்கு சிரேஷ்ட பிரதிப்பதிவாளரினால், கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவில் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது பிரதிநியொருவர் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கீழ்க்காணப்படும் தொலைபேசி எண்களை அழைத்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தொ.பே. இல. : 011-2589123, 011-2581245 (நீடிப்பு 8995)**
**பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.**

**தலைவர்/ பெறுகைக்குழு,**
**கொழும்பு பல்கலைக்கழகக் கணனிக்கற்கை நிறுவனம்,**
**இல. 35, ரீட் மாவத்தை,**
**கொழும்பு-07.**
2022.07.24

**பாதுகாப்பு அமைச்சு**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**

# விலைமனுக்கோரல்

**KDU பட்டப்படிப்பு திட்டங்களை ஊக்குவிப்பதற்காக மற்றும் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பீரிவில் நடத்தப்படும் பட்டப்படிப்பு திட்டங்களுக்கு சர்வதேச மாணவர்களை சேர்ப்பதற்காக கல்வி முகவர்கள் / ஆலோசகர்களை தேர்வுசெய்வதற்கான விலைமனுக்கோரல்**

**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**

**ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE/129/2022**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு திட்டங்களை ஊக்குவிக்க மற்றும் சர்வதேச மாணவர்களை பட்டப்படிப்பு திட்டங்களுக்கு இணைத்துக்கொள்வதற்காக கல்வி முகவர்கள் / ஆலோசகர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் அதற்கான பட்டப்படிப்பு திட்டங்களை ஊக்குவிக்க மற்றும் சர்வதேச மாணவர்களை பட்டப்படிப்பு திட்டங்களுக்கு இணைத்துக்கொள்வதற்காக பின்வரும் பண்புகளையுடைய கல்வி முகவர்கள் / ஆலோசகர்களை தேடுகின்றனர்.
   - **உள்ளூர் அறிவு மற்றும் கலாச்சார இணக்கம்**
     கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கம் பற்றிய உள்ளூர் அறிவு மற்றும் கல்வித் தகுதிகள், அந்த நாடுகளில் உள்ள நிறுவனங்களின் நற்பெயர் மற்றும் தரவரிசை மற்றும் பாடத்தின் சிறப்புகள் மற்றும் பலம் பற்றிய குறிப்பிட்ட தகவல்கள்.
   - **உள்நாட்டு தொடர்புகள்**
     முகவருடன் தொடர்புடைய நபர் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் குறித்து அறிந்திருத்தல்
   - **எதிர்கால மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்**
     KDU இன் தரக் குறியீட்டினை உயர்த்தும் திறன், கல்வித் துறையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் ஆட்சேர்ப்பு நடைபெறும் நாடுகளில் மாணவர்கள் மற்றும் பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன்.
   - **பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்**
     சந்தையைப் புரிந்து கொள்ளும் திறன் மற்றும் மாணவர்கள் மற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் கருத்துகளை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கான விருப்பம்.

   **ஒப்பந்த காலம்**
   ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் 02 வருடங்களுக்கு ஒரு ஒப்பந்தத்தில் இணைய முன்மொழியும் அவ்வொப்பந்தமானது 01 வருட காலத்திற்கு ஆரம்ப ஒப்பந்த நடைமுறையிலிருப்பதுடன் திருப்திகரமான செயல்திறன் மற்றும் பல்கலைக்கழகத்தின் விருப்பத்தின் பேரில் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்படும்.

   **ஊக்குவிப்புத் தொகை**
   விண்ணப்பித்துள்ள வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முகவர்கள் / ஆலோசகர்களினால் ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டணம் செலுத்தப்படும். KDU இதற்காக விசேடமாக, வெளிநாடுகளில் இருந்து தகுதியான மாணவர்களை தேர்வுசெய்வதற்காக மற்றும் இணைத்துக்கொள்வதற்காக முகவர்கள் / ஆலோசகர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்பாட்டின் கோரல்.
3. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
4. **ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் 2022.08.16 ஆம் திகதி** மு.ப.10.00 மணிக்கு விலைமனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் மனுக்கள் திறக்கப்படும்.
5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **பணிப்பாளர்** (ஏற்பாட்டியல்), **இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி / தொலைநகல் 011 2632430, 0710219449, directorlogistics@kdu.ac.lk ocrepair@kdu.ac.lk** மற்றும் **விலைமனுக் கோரலில் www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம்).

**தவிசாளர்**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
**இரத்மலானை, இலங்கை.**

# பெட்ரோல் கியூ



வீதி மின் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பம் பெற்றோருடன் பிள்ளைகள் வீதியின் இரு மருங்குகளிலும் ஓலைப் பாய்களை விரித்து உறங்கிக்கொண்டிருந்தனர். நாஸிம் சுபஹ் தொழுகையை தொழுத பின்னர் மனைவி கொடுத்த தேநீரை அருந்தி விட்டு தனது வீட்டிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தை நோக்கி நடந்தான். நாஸிமின் மோட்டார் சைக்கிளில் தொங்கிக் கொண்டிருந்த பையில் பிளாஸ்டிக் போத்தலில் குளிர்ந்த தண்ணீர் நிரப்பப்பட்டிருந்தது.

பையைத் துழாவினான். பிஸ்கட் பெக்கெட் ஒன்றும் பையில் இருந்ததை கவனித்தான். எல்லாம் மனைவி ரபீகாவின் வேலை தான்! ரபீகா நாஸிமை பெற்றோல் வரிசைக்கு அனுப்பி வைத்ததே வீட்டுக்கு தேவையான மளிகைச் சாமான்களை உரிய நேரத்தில் மளிகைக் கடைகளுக்கு சென்று வாங்குவதற்குத்தான்! நாஸிம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனின் வரிசையில் நிற்க வேண்டும். வீதியின் வழியே தனது மோட்டார் சைக்கிளை செலுத்திக் கொண்டு நீண்ட கியூ வரிசையில் இணைந்து கொள்ள முயற்சி செய்தான் நாசிம். வீதியின் இரு மருங்குகளிலும் மோட்டார் சைக்கிள்கள் ஆங்காங்கே ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தூக்கத்தினால் மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்களில் பலர் தம்மை மறந்து ஆங்காங்கே உறங்கிக் கொண்டிருந்தனர்.

கடற்கரை ஓரத்தில் காற்று வாங்கிய வண்ணம் உறங்க வேண்டியவர்கள் எரிபொருளை நிரப்பிக் கொள்வதற்கு வீதி ஓரங்களில் உறங்கிக் கொள்கின்றனர். நாஸிமுக்கு சிறிய இடத்தில் தனது மோட்டார் சைக்கிளை கியூ வில் சேர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு கிட்டியது. பெரிய வெற்றி இலக்கை எட்டிய மலர்ச்சி முகத்தில் தெரிந்தது. பெற்றோலைப் பெற அதிகாலையிலேயே மக்கள் கியூ வரிசையை நாடி வந்து கொண்டிருந்ததைப் பார்த்தபோது தான் முந்திக் கொண்ட நிறைவு அவனில் ஏற்பட்டது. எரிபொருள் நிரப்பு நிலையத்தினை சூழ்ந்துள்ள மக்கள் வெள்ளம் கியூ வரிசையில் நுழைவதற்கு பல்வேறு வகையான உத்திகளைக் கையாளும் காட்சிகளும் நாசிமுக்கு தென்பட்டன.

நாசிம் இணைந்து கொண்ட கியூ வரிசையில் தான் நீல் மானப் பெருமா, துவான் கரீம், சமீர பெர்னாண்டோ ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். கிழக்கு வானில் கதிரவன் உதித்து வெளிவந்து கொண்டிருந்த நேரத்தில் நாசிம் கியூ வரிசையின் நீளத்தை மனதால் அளந்து கொண்டான். தனக்கு அருகில் கியூ வரிசையில் நின்று கொண்டிருந்த நீல், துவான், சமீர ஆகியோர் நாசிமுடன் புன்முறுவல் பூத்து கதையை ஆரம்பித்தனர். "நாம் எல்லோரும் அதிகாலையிலேயே இங்கு வந்தோம். எமக்கு பெற்றோல் கிடைக்குமா?" என்று சமீர நாசிமிடம் மிகவும் எதிர்பார்ப்புடன் கேட்டான்.

அப்போது நீல் குறுக்கிட்டு" பல்வேறு தடைகளைத் தாண்டியே இங்கு பெற்றோலைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்" என்று கூறி தலையை சொரிந்து விட்டான்.

அப்போது அங்கே துவிச்சக்கர வண்டியொன்று கியூ வரிசைக்கு மிக அருகே வந்து நின்றது. நீல் துவிச்சக்கர வண்டியின் அருகில் சென்றான். அது நீலின் மனைவி. நீலின் மனைவி பொதி செய்யப்பட்ட உணவுப் பொட்டலமொன்றை நீலிடம் கொடுத்தாள். நீல் மூன்று பிள்ளைகளின் தந்தை என சமீர நாசிமிடம் கூறினான். பெற்றோல் வரிசை அசையவே இல்லை. நாசிம் துவானிடம் "நீங்கள் கொஞ்சம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் சென்று பாருங்களேன்" என்று மிகவும் ஏக்கத்துடன் கூறினான். துவான் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சென்று அதன் முகாமையாளருடன் பேசிவிட்டு திரும்பி வந்தான்.

"நாசிம்! நிறைய மோட்டார் சைக்கிள்கள் கியூ வரிசையில் குறுக்காக நிறுத்தப்பட்டுள்ளன. அவை நேர் வரிசையில் இணைந்து கொள்ள வேண்டும். அப்போது தான் எமது அனைவரது சைக்கிள்களும் முன்னோக்கி அசையும். எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இதே நிலைமை தான் " என்று துவான் கூறினான்.

இப்போது நீலின் மனைவி கொண்டு வந்த காலைப் பலகாரங்களை சமீர அனைவரிடமும் பகிர்ந்தான். இன, மத, மொழி, சாதி, சமயம், வர்க்கம் என எந்த பேதமும் பெற்றோல் கியூ வரிசையில் இல்லை. "சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் பெற்றோல் கியூ வரிசை தான் " என நாசிம் மனதினுள் எண்ணினான். சமீர எங்கள் அனைவரது மோட்டார் சைக்கிள்களையும் கியூ வரிசையில் நேராக வைத்து சரி செய்தான். சைக்கிள்கள் அசைந்தன. காலை பத்து மணி. நாசிம் தனது பையிலிருந்த பிஸ்கட் பக்கட்டை தனது மோட்டார் சைக்கிளின் ஆசனத்தில் வைத்து பிரித்தான். நான்கு பேரும் பிஸ்கட் பக்கட்டிலிருந்து ஒவ்வொரு பிஸ்கட்டாக எடுத்து சாப்பிட்டனர்.

துவான் தனது தண்ணீர் போத்தலின் மூடியைத் திறந்து சமீரவிடம் கொடுத்தான். சமீர ஒரு மிடறு குடித்து விட்டு நாசிமிடம் கொடுத்தான். இவ்வாறாக நான்கு பேரும் ஒவ்வொரு மிடறாக தண்ணீரைக் குடித்து முடித்தனர். தெரியாத இடத்தில் அறிமுகம் இல்லாத மனிதர்கள் மத்தியில் மிகவும் பாதுகாப்பாக இருக்கின்றோம் என நாசிம் உணர்ந்தான். மதிய உணவு யாருக்கும் இல்லை என்ற நிலையில் நால்வரும் கியூ வரிசையில் கால்கள் கடுக்க நின்றனர். மர நிழல்களில் அமர்ந்து கொண்டு தமது பெறுமதிமிக்க நேரத்தையும் அனைவரும் விரயம் செய்து கொண்டிருந்தனர்.

கியூ வரிசையில் தமது மோட்டார் சைக்கிள்களை முன்னோக்கி நகர்த்திய வண்ணம் அனைவரும் செல்கின்றனர். அப்போது அங்கே துவானின் நண்பன் அத்தாஸ் வந்தான்.

துவானுக்கு சில குளிர்பான போத்தல்களை அத்தாஸ் கொடுத்தான். துவான் சக நண்பர்களுடன் அதனை பகிர்ந்து குடித்தான். சூரியன் மறைந்து செல்லும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. எரிபொருள் நிலையம் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் காட்சியளிக்கின்றது. எமக்கு முன்னால் இருநூறு பேர் பெற்றோலைப் பெற்றுக் கொள்ள கியூ வரிசையில் நிற்பதாக கணக்கெடுத்துக் கொண்டனர்.

நீலின் முகத்தைப் பார்த்த நாசிமுக்கு இன்று பெற்றோல் கிடைக்காது என்பதாக உணர்ந்தான். கியூ வரிசை நகர, இருள் சூழ்ந்து கொண்டு வருகின்றது.

இரவு எட்டு மணி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சனநெருக்கம் குறைந்தபாடாக இல்லை. நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸார்,

முப்பது பேருக்கு மாத்திரமே பெற்றோல் இருக்கின்றது என உரக்கச் சொன்னார்கள். ஆயிரம் ரூபாய்க்கு பெற்றோலைப் பெற்றுக் கொள்ள செலவு செய்த நேரம் கானல் நீராகின்றது. நாசிம் நண்பர்களை தேடுகின்றான். நண்பர்கள் அங்கு இல்லை. நாசிம் பேதலித்து போய் நிற்கின்றான். கையை பிசைகின்றான். வாய் புலம்பலுடன் எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து வெளியேறுகிறான் நாசிம். வீடு செல்வதைத் தவிர வேறு வழியில்லை. நாசிமின் மனைவி றபீக்கா பெற்றோல் கிடைத்ததா? என்ற கேள்வியுடன் ஏறிட்டுப் பார்க்கிறாள்.

நல்ல மனித உள்ளங்களைச் சந்திக்கும் வாய்ப்பு மட்டும் தான்

கிடைத்தது. ஆனால் பெற்றோல் கிடைக்கவில்லை என்று கூறினான் நாசிம். மனைவி றபீக்கா அமைதியானாள்.

நீர்கொழும்பு
**ருஸ்மான், ...**

## எனது சகோதரியே என் முதல் ஆகர்சிப்பு... (13ஆம் பக்கத் தொடர்)

**மொழிபெயர்ப்பு என்பதன் மூலம் மற்றவர்கள் கிரகித்தல் என்பது சாதாரண விடயமல்ல. மொழி பெயர்ப்பு ஒரு தெளிவுடன் ஏனையவர்களை சென்றடைய என்ன உத்திகளை கையாளுகிறீர்கள்...?**

எளிமைதான். எப்போதும் வாழ்க்கைக்கும், இத்துறைக்கும் எனக்கு நிறைய கிருபை செய்வது எளிமைதான். அதுவே என் உத்தி என்பேன் தோழி... திட்டமான எளிய சொல்லமைப்பு கொண்டு, மூல ஆக்கம் சுட்டும் கருத்தை லாவகமாக வெளியே கொண்டு வருவதுதான் சிறந்த மொழிபெயர்ப்பின் பெரு வெற்றி என்கிறேன் நான். மற்றபடி, மொழிபெயர்ப்பவர், தன் மொழியில் தனக்கிருக்கும் புலமையை, கெட்டிக்காரத் தனத்தை,பாண்டித்தியத்தை வெளிப்படுத்தப் புறப்பட்டுப் போனால் வாசகனை ஆக்கம் சென்றடையை வாய்ப்பில்லை. எச்சுபெரி என்கிற எழுத்தாளரின் கருத்தை முன்வைத்து சொல்வதாயின், மண்ணை உழுது கொண்டே செல்லும் உழவன் இயல்பான, மென்மையான, வலியற்ற முறைமைகளைக் கையாண்டால் மண்ணிலிருந்து இயற்கையின் ரகசியங்களை தோண்டியெடுக்க முடியலாம் என்பதுதான் பிரபஞ்ச உண்மை. அருவிக் கரையில் கால் நனைத்து போவதால் உருவாகும் குளிர்ச்சியை நனைத்தால் தானே பாதங்கள் அறியும். மொழி பெயர்ப்பு மட்டுமே இன்னொரு மொழியின் அழகியலை நம்மிடம் கொண்டு வந்து சேர்க்கிறது. புரிந்துகொள்ள முடியாத மொழி இறுக்கம் எதற்கு எதுவொன்றையும் மொழி மாற்றுகையில்..?

**ஒரு பாடசாலை உயர் அடைவை பெறவும் உயரிய ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்கவும் அப்பாடசாலையின் அதிபரின் பங்கு மிக முக்கியமானது. அந்த வகையில் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோர்களுடனான திட்டங்கள் மற்றும் வழிகாட்டல்களை எப்படி வடிவமைத்துக் கொள்கிறீர்கள்....?**

எனக்குள் சோலையென விரியும் ஒரு கனவுப் பள்ளி, கல்விப் பள்ளியாய் எப்போதும் கண்களில் இருந்தது. சாளரங்கள் வழியே வானம் நோக்கும் ஒரு வகுப்பறைக் குழந்தை வானத்தோடு எதையோ வாஞ்சை கொள்கிறது. நான்கு சுவர்களுக்குள் அடைக்கப்பட்டு கல்வி மட்டுமே ஊட்டப்படும் பிள்ளைகள் சமூகத்துக்கு உதவாத வகையில் வெற்று வேதாந்திகளாக உருவாகி விடுகிறார்கள். இயற்கையின் ரம்மிய சூழல் மிக முக்கியம். நேயச்சூழல், அன்பு கலந்து மின்னும் பெற்றோர் ஆசிரியர் இடைத்தொடர்பு என்பவற்றோடு விசாலித்த வாசிப்புக்கான சந்தர்ப்பங்கள் நல்ல குழந்தைகளை உருவாக்க உதவும் என்பது என் நம்பிக்கை. இருந்தாலும், மிகைத்த தொழில் நுட்ப சாதனங்களின் வருகை, அவற்றின் பாவனை இன்று வேறுதிசையில் பிள்ளைகளை இட்டுச் செல்கிறது. சிக்கல் மிகுந்த பொருளாதாரப் பின்புலம், நோய்மையின் கெட்ட காலம் என்பது பெரிய சவால். போலவே, இறுகிய கட்டமைப்புக்குள் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருத்தல், மனவாண்மையில் விருத்தியடையா ஆசிரியம் என்பதெல்லாம் எங்கள் கனவுகளுக்கு பெரும் இடர் என்று அமைகிறதுண்டு.

**அடிக்கடி பாடசாலை கல்வி தடைபட்டு வரும் இக்காலகட்டத்தில் இணையதளம் மூலம் கல்வி கற்றல் சமூகத் திறனை மேம்படுத்துமா? அல்லது, உளவியல் ரீதியில் கற்றல் திறனுக்கு அது தடையாக அமையுமா?அதேநேரம் இணையவழிக்கல்வி வெற்றிகரமானதா...?**

இல்லை என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். இத்தகு கற்பித்தல் முறைமை இதைவிட சீரமைக்கப்பட்டு மாணவர்களுக்கு கையளிக்கப்பட வேண்டும். எங்கள் மாணவர்களின் இன்றிருக்கும் பின்புலம், பொருளாதாரச் சிக்கல்கள், அடிப்படை வசதிகள் இல்லாமை அனைத்துக்குள்ளும் வெறுமனே இந்த இணைய வழிக் கற்பித்தல் என்பது புரியாத ஒரு உலகத்துக்குள் அவர்களை இட்டுச் செல்கின்றது என்பதாகவே நான் உணர்கிறேன்.

**உங்களது மொழிபெயர்ப்புக்கான விருதுகள் மற்றும் ஏனைய விருதுகள்....?**

வெளியீடு செய்த நூல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரிய கதைகளை தம் வசம் வைத்திருக்கின்றன. அனுபவமற்ற இந்த சிறு பட்சி பறக்கச் சிறகு விரிக்கையில், அன்பின் தெருவில் நின்று கண்ணியத்துடன் உதவிய பலர் இருக்கிறார்கள். நன்றியறிதல்களின் பக்கங்கள் நீண்டுவிடும். என் முதல் நூல் 'பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும்□' (2009) மொழிபெயர்ப்புக் கவிதைகள் அடங்கியது. பண்ணாமத்துக் கவிராயர் அணிந்துரை தந்த நூல் அது. அந்த நூலுக்காகக் இலங்கை அரசின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்திய மண்டலப்பரிசு கிடைத்தது. மற்றும் மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையமும் அந்நூலுக்கு விருது (2009) வழங்கி கௌரவித்தது என்பதை இங்கு ஞாபகம் கொள்ளலாம். மேலும், இலங்கை இலக்கியப் பேரவையின் 'அந்தப் புதுச் சந்திரிகையின் இரவு' (2010) மொழிபெயர்ப்புக் கட்டுரை நூலுக்காவும் 'இந்த நிலம் எனது' (2011) மொழிபெயர்ப்புக் கவிதைகள் நூலுக்காகவும் கிடைத்த சான்றிதழ்களும் ஞாபகம் கொள்ளத்தக்கன. ஞாபகிக்கத்தக்கதோர் புன்னகை' மொழியாக்கக் கட்டுரைகள் நூலுக்காகக் கிடைத்த 'துரைவி' விருது (2014) மறக்க முடியாதது. 'வானம்பாடியும் ரோஜாவும்' எனது மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் அடங்கிய நூல். அந்த நூலுக்கான அணிந்துரையை உயர்திரு. மன்சூர் ஏ. காதிர் அவர்கள் தந்திருந்தார்கள்.இலங்கை அரசின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்திய மண்டலப்பரிசு (2015) இரண்டாவது முறையாகக் கிடைத்தது. 'தினகரன்', 'விடிவெள்ளி', 'வீரகேசரி', 'தினக்குரல்' போன்ற பத்திரிகைகளில் ஆக்கங்கள் வெளிவந்தன. 'மல்லிகை', 'ஜீவநதி', 'ஞானம்' சஞ்சிகைகள் நிறைய என்னை ஊக்குவித்து வளர்த்தன. இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் 2016 இல் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வுப் பொன்விழா மாநாட்டில் என் இலக்கியப் பணிக்காகக் கிடைத்த விருது பற்றியும் நன்றியோடு ஞாபகிக்க வேண்டும். 'ஞாபகம் உதிராப் பூவென..' (2017) மொழியாக்கக் கட்டுரைகள் அடங்கிய எனது நூல் ஒன்றாகும். சிறப்பான அணிந்துரை ஒன்றை அதற்காக மேமன் கவி அவர்கள் தந்திருந்தார்கள். மேலும் (2019) யாழ்ப்பாண மகளிர் விவகார அமைச்சு, சர்வதேச மகளிர் தினத்தன்று நடத்திய நிகழ்விலே வழங்கப்பட்ட கௌரவ விருது (Inspirational Woman Award ) என்பவற்றைச் சொல்லலாம். 'கிழக்கினை எதிர்கொண்டு..( 2020) எனும் மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் அடங்கிய எனது நூல் இலங்கை அரசின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்திய மண்டலப்பரிசை மூன்றாவது முறையாகப் பெற்று கொண்டது. அதே ஆண்டில் இன்னொரு மொழிபெயர்ப்புக் கவிதைகள் அடங்கிய தொகுதி ஒன்றும் வெளியிட்டிருந்தேன்.'பூக்களின் கனவுகள் '.( 2020)

**மறைந்த உங்களது சகோதரி கெக்கிராவ ஸஹானா பற்றியும், உங்களது இலக்கிய ஈடுபாட்டிற்கு ஊக்குவித்தவர்கள் பற்றியும் கூறமுடியுமா...?**

என் சகோதரியின் இயற்பெயர் சித்தி ஜஹானறா. கெக்கிறாவ சஹானா என்ற பெயரில் எழுதி வந்தார். எங்கள் ஊர் பள்ளி கெக்கிறாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், கம்பளை ஸாஹிராக் கல்லூரியில் உயர்கல்வியையும் கற்றார். ஆங்கிலமொழி ஆசிரியையாக நியமனம் பெற்று, பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் வெளிவாரிப் பட்டப்படிப்பையும், இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளமாவையும் பெற்றுக்கொண்டார். எண்பதுகளில் வானொலிக்கு எழுதத் தொடங்கி, பின்னர் தேசிய நாளிதழ்களிலும், இலக்கிய சிற்றேடுகளிலும் எழுதினார். 1997இல் அவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 'ஒரு தேவதைக் கனவு' வெளிவந்தது. அதைத் தொடர்ந்து கவிதை, ஆய்வு, குறுநாவல் உட்பட பதினொரு நூல்களை வெளியிட்டுள்ளார். 2002இல் இலங்கையில் நடந்த உலக இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் 'பாராட்டப்படும் இளங்கலைஞர்' என்ற சான்றிதழைப் பெற்றுக் கொண்டதுடன், சிறுகதைக்கான 'தகவம்' பரிசு, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கவிதைக்கான பரிசு, மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது, மற்றும் அரச சாகித்திய மண்டலத்தின் சான்றிதழ், யாழ்ப்பாண கலை இலக்கியப் பேரவையின் சான்றிதழ் என்பவற்றையும் பெற்றுள்ளார். சஹானாவின் முயற்சி காரணமாக, தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தனின் சிறுகதைத் தொகுப்பு ஒன்று 'போனிக்கா' என்ற பெயரில் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 'கொடகே' சகோதரர்கள் பதிப்பகத்தால் வெளியிடப்பபட்டுள்ளது. 2016 இறுதியில் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த புலம்பெயர் எழுத்தாளரான அருண் விஜயராணியின் மறைவையொட்டி 'அக்கினிக்குஞ்சு' இணையத்தளம் அவரது ஞாபகார்த்தமாக நடாத்திய சர்வதேச சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசு பெற்றார்.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 33

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | ■ | 03 | 04 | |
| 05 | | ■ | ■ | 06 | | | ■ |
| 07 | | 08 | 09 | ■ | 10 | | 11 |
| 12 | | | | ■ | | ■ | |
| ■ | ■ | 13 | | ■ | ■ | 14 | |
| 15 | 16 | ■ | 17 | 18 | | | ■ |
| 19 | | 20 | ■ | | ■ | 21 | 22 |
| 23 | | | ■ | 24 | | | |

**திரு/திருமதி.செல்வி** ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

**முகவரி** ..........................................

..........................................

..........................................

.......................... ..........................

**திகதி** **கையொப்பம்**

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 33**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 33

**இடமிருந்து வலம்**

*(01) நலன் விசாரித்தல்.*
*(03) ஒத்துழைப்பு.*
*(05) பெண் பறவை இனம்.*
*(06) கறிச்சரக்குகளில் ஒன்று.*
*(07) மனித இனத்தோடு ஒற்றுமை இருப்பதாக சொல்லப்படும் பிராணி. (குழம்பியுள்ளது)*
*(10) இறைவன் மீதுள்ள பற்று. (குழம்பியுள்ளது)*
*(12) சில பிராணிகளின் ஆண் இனம். (குழம்பியுள்ளது)*
*(13) யாழ். குடாநாட்டிலுள்ள ஒரு இடம். (திரும்பியுள்ளது)*
*(14) பணம்.*
*(15) போதை தரும் பானம்*
*(17) உறவு. (திரும்பியுள்ளது)*
*(19) மரக்கோல்.*
*(21) இரண்டு.*
*(23) வாக்கியத்தின் இறுதியில் இடப்படுவது, மதிப்பெண் என்றும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)*
*(24) அமைதியான சுபாவம்.*

**மேலிருந்து கீழ்**

*(01) பெரும் பணக்காரன்.*
*(02) கபடி விளையாட்டு.*
*(03) கிராமிய இசைக்கருவிகளுள் ஒன்று.*
*(04) பதவியொன்றுக்கு பொருத்தமானவர் என்பதற்கான அனுபவம்.*
*(08) நீர் குடிப்பதற்கு பயன்படுவது.*
*(09) கேடு, களங்கம். (குழம்பியுள்ளது)*
*(11) வெகுமதி.*
*(14) பாதுகாப்பு குழம்பிவிட்டது.*
*(15) புதல்வி.*
*(16) கயிறு தயாரிப்பதற்கு பயன்படுவது.*
*(18) பொருத்தமற்ற*
*(20) இதுவும் ஒரு சுவைதான். கறிக்குச் சேர்க்கப்படுவது.*
*(22) திறப்பு. (தலைகீழ்)*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 32

### விடைகள்

**இடமிருந்து வலம்**

*01. வேந்தன் 03. சாபம் 05. பாதுகை*
*06. புத்திரன் 09. தரகர் 10. அகம்*
*12. பசு 13. தீனி 14. கேசம்*
*17. கதவு 19. கடுகதி 21. திண்ணை*

**மேலிருந்து கீழ்**

*01. வேம்பு 02. தந்திரம் 03. சாது*
*04. பகை 05. பாகன் 07. தர*
*08. சிப்பந்தி 10. அதீதம் 11. கனிவு*
*15. சகதி 16. கேடு 18. கணை 20. கழி*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 31

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**இராமன் கந்தையா,**
*21/1, தயா வீதி,*
*ஹெந்தல, வத்தளை.*

**இரண்டாம் பரிசு**
**ஏ.எல். அப்துல் ஜலீல்,**
*61/1A/1, மஹபுத்கமுவ,*
*கொட்டிகாவத்தை.*

**மூன்றாம் பரிசு**
**ஏ.டபிள்யூ.எம். நியாஸ்,**
*A 29/5, சமித்திய வீதி,*
*மாவனெல்ல*

### பாராட்டு பெறுவோர்

**1. எஸ். விஷாஹினி,**
*91/1, மெயின் வீதி,*
*கொழும்பு 11.*

**2. இல்யாஸ் தாஸிம்,**
*இல. 23ஏ, இப்றாஹிம் வீதி,*
*தொட்டவத்தை,*
*பாணந்துறை.*

**3. பி. மகேந்திரன்,**
*கிளனமேறா டிவிசன்,*
*தலவாக்கலை.*

**4. ரஞ்சனி நிரஞ்சன்,**
*இல : 155/1/1, காலி வீதி,*
*தெஹிவளை.*

**5. வி. கனகரத்தினம்,**
*சுதந்திரபுரம்,*
*உடையார்கட்டு,*
*முல்லைத்தீவு.*

**6. கஸ்தூரி கலியபெருமாள்,**
*2/27A, வெலிக்கந்த,*
*கண்டி.*

**7. எம்.டபிள்யூ.எம். நபாஸ்,**
*ஹஸன்ஸ்தான்,*
*நாங்கல்ல,*

**8. எஸ்.எச்.எம். ஜிப்ரி,**
*இல. 155/32,*
*மொஹிதீன் மஸ்ஜித் வீதி,*
*மருதானை,*
*கொழும்பு 10.*

★ ★ ★



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 15

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# ஈழத்து உருவகக்கதை முன்னோடி சு.வே.

"உருவகக் கதை என்கிற கடினமான கதை சொல்லுந்துறையுட் புகுந்து, முதலாவது வெற்றியை ஈட்டிய பெருமை சு.வேலுப்பிள்ளை (சு.வே)யைச் சாரும். பாரதரத்தினம் சக்கரவர்த்தி இராஜ கோபாலச்சாரி ராஜாஜியால் புகழப்பட்ட மணற்கோவிலையும் வாசகர் பலராற் பாராட்டப்பட்ட வெறுங் கோவிலையும் எழுதித் தானொரு பண்பாடான சிந்தனைமிக்க ஒர் எழுத்தாளர் என்பதை நிலை நாட்டிவிட்டார். இவருடைய வர்ணனை அழகுகள், கற்பனை நயங்கள், தனிச்சிறப்பு வாய்ந்தன. நடையிலே சுத்தமும் ஓட்டமும் உண்டு. பாற்காவடி, மண்வாசனை போன்ற பல நல்ல சிறுகதைகளை எழுதி, தாம் ஒரு சிறுகதையாசிரியர் என்பதையும் நிரூபித்துள்ளார்" என கனக செந்திநாதன் தனது ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்றஆய்வு நூலில் சு.வே. பற்றிக் குறிப்பிட்டுள்ளார் (பக்கம்: 42).

தமிழக மூதறிஞரான ராஜாஜி சு.வே. எழுதிய மணற் கோயில்| என்ற உருவகக் கதையைப் படித்துவிட்டு, தன்னுடன் இருந்த அறிஞர்களுக்கு அதனைக் காண்பித்து,"ஆஹா! இதுவல்லவா சிறந்த உருவகக்கதை" என விதந்து பாராட்டினாராம். இக்கதை கலைச்செல்வி சஞ்சிகையில் வெளியானது.

வாழ்க்கை வெளிப்படுத்துகின்ற உண்மைகளையும் இயற்கையின் தன்மைகளையும் எடுத்துக்கூறி மக்களின் உள்ளங்களில் பதியவைப்பதற்கும் அவர்களைச் சிந்திக்க வைப்பதற்கும் உருவகக்கதைகள் இலக்கிய உலகில் பெரும் பங்களிப்பினைச் செய்கின்றன. வாழ்க்கைத் தத்துவங்களையும் அதன் உண்மைகளையும் பல்வேறுபட்ட மிருகங்கள், ஜீவராசிகள், இயற்கை சக்திகள் வழியாக காண்பிப்பது உருவகக்கதை.

சுப்பிரமணியம் தையல்நாயகி தம்பதியினருக்கு 24051921இல் மகனாகப் பிறந்த சு. வேலுப்பிள்ளை ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியர். ஒரு தமிழ்ப் பண்டிதர். திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்ற பின்னணி இவரைப் புத்திலக்கியப் படைப்பாளியாக உருவாக்கியது.

1946முதல் 1981வரை ஆசிரியப் பணிபுரிந்தசு. வே, தான் பெற்ற அனுபவங்களையே கருப்பொருள்களாகக் கொண்டு தனது படைப்புகளை ஆக்கித் தந்துள்ளார்.

சு.வே. சிறுகதை,உருவகக்கதை, கட்டுரை, நாடகம் ஆகிய இலக்கியத்துறைகளில் தடம் பதித்தவர். ஈழத்து உருவகக்கதைத் துறையின் முன்னோடிஇவரே. இவரது உருவகக் கதைகள் மித்ர வெளியீடாக 1999இல் மணற்கோயில் என்ற மகுடத்தில் தொகுப்பாக வெளிவந்தது.

உருவகக் கதைகள் பற்றி சு.வே. தனது



மணற்கோயில் தொகுப்பின் கபாடம் திறமினோ| என்ற முன்னுரையில் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

"இன்று உருவகக் கதைகள் எனப்படுபவற்றை உற்று நோக்கினால், உருவகக் கதைகளிலே சாதாரண உருவகத்தின் அமைப்பு உண்டு. உள்ளுறை உவமத்தின் சாயல் குறிப்பிடத்தக்க அளவு படிகிறது.

இறைச்சிப் பொருளின் நிழல் பெருமளவில் விழுகிறது. எனவே இந்த உருவகக் கதை என்ற பண்டமானது உருவகம், உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் என்ற மூன்றின் கூட்டுறவால் பிறந்த ஒன்று எனக்கொள்ளல் பொருத்தமுடைத்து. இது சிறுகதையை வடிவமாக – உருவகமாகக் கொண்டு உலாவிவருவதால் அந்தப் பெயர் பூண்டிருக்கலாம். உருவகக் கதை, தன்னாற் கொள்ளப் பட்டுக் கருவுயிர்க்கப்பட்ட வித்தின் வன்மையிலேயே உயிர் வாழ்கிறது. அந்த உயிர்ப் பொருளே உரிப்பொருள். உரிப்பொருள் சம்பிரதாய எல்லைகளுக்குட்பட்டோ, வழிவழியாகப் பலராலும் எச்சிற் படுத்தியவற்றைச் சுற்றியோ எழ வேண்டுமென்ற நியதியில்லை. அவ்வாறு எதிர்பார்ப்பது பிணத்துக்கு மாலைசூட்டி அழகு பார்ப்பதையொத்தது. முக்கால உலக நிகழ்ச்சிகளுக்குள்ளே பலபல வேளைகளிலே பலபல பொருள்கள் மின்னற் கீற்றுப்போலத் துடித்து நெளிவதைச் சிந்தனையாற்றல் கொண்டு காணல் முடியும். அந்தப் பொருள்களே தத்துவங்கள். உண்மையென்பது அவற்றின் மறுபெயர். அந்த உண்மை சமய தத்துவமாகவோ அரசியற் தத்துவமாகவோ பிறவாகவோ அமையலாம். தத்துவங்கள் கால தேச வர்த்தமானங்களையும் மரபுகள் என்று பெரிதுபடுத்துவனவற்றையுங் கடந்து நிற்கும் நிலைபேறுடையவை. கூர்த்த மதிகொண்டு தேடிக்கண்டறிய வேண்டியவை. அந்தத் தத்துவங்களுளொன்றை மையப் பொருளாக, உரிப் பொருளாகக் கொண்டு அதனை அழகாகவுந் தெளிவாகவும் காட்டுவதற்கு எழுந்த ஓர் உத்தியே உருவகக் கதை. எனவே, அதன் உரிப்பொருள் மிகமிக வலுவுடையதொன்றாக அமைய வேண்டும். அக்கினியைப் போன்ற தூய்மை வாய்ந்த உரிப்பொருளின் வன்மையே உருவகக் கதையின் ஆயுளை நிர்வகிக்கிறது என்று கூறினால் அதுவே எற்புடையதுபோலத் தோன்றுகிறது.





உருவகக்கதையின் உரிப்பொருளாகிய தத்துவம் மனங்கவரக் கூடிய, அழகியதோர் உருவமாக வடிவங்கொள்ளுதல், அடுத்து இன்றியமையாததாகின்றது. நிர்ச்சலனமான குளத்தின் நடுவிலே எறியப்பட்ட கல்தோற்றுவித்த அலைவட்டங்கள், ஒன்றையொன்று உந்தி விரிவடைந்து பெரியதொரு வட்டமாகக் கரையைத் தொட்டு முடிவதுபோல, மனத்திலே கொள்ளப்பட்ட தத்துவப் பொருளான உரிப்பொருள் கருப் பொருள்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, கற்பனை அலைகளை எழுப்பி விரிபு பட்டுச் செல்லும். நீரிலெழுந்த வட்டங்களின் மையம் கல்லெறியப்பட்ட இடமாகி விடுவது போல மனத்தெழுந்த கற்பனையலைகளின் மையம் தத்துவப் பொருளாக அமைகிறது. இந்நிலையில் உரிப்பொருளை விரிவு படுத்தற்கேற்ற கருப்பொருளும் அதனைப் பற்றிப் படர்ந்து செல்லும் கற்பனைத் திறமும் உருவகக்கதையின் மற்றைய அமிசங்களாக விளங்குவதைக் காணல்முடியும்.அந்தக் கருப்பொருள் மனிதனாகவோ, மரமாகவோ, மிருகமாகவோ, முகிலாகவோ, நதியாகவோ அன்றி உலகியலக் கப்பாற்பட்ட கடவுளாகவோ, சாத்தானாகவோ இருக்கலாம். இயங்கும் திணைப்பொருளாகவோ, நிலைத்திணைப் பொருளாகவோ இருக்கலாம். ஆனால் அவை கற்பனையின் பூரண மதர்ப்பினாலே ஆட்கொள்ளப்பட்டுப் பேசும், பிணங்கும், உயர்வுதாழ்வு காட்டி வாதிடும், மோனத்தவம் பரியும், சிரித்துக் கும்மாளங்கொட்டும். அவை எச்செயலைச் செய்தாலும் அவைகளும் அவைகளுக்குச் செயல்களைக்கற்பித்து, அவைகளை ஆட்கொண்ட கற்பனையும், தாம்பிறந்த இடத்தை, தத்துவப் பொருளை குறிப்பாகக் காட்டிக் கொண்டிருக்கும்.

உரி, கரு, கற்பனை என்ற மூன்றின் சேர்க்கையாலும் மனத்தகத்து உருவகக் கதையென்றொரு கர்ப்பம் விளைந்து விட்டாலும் அதனை வெளிக்கொணர்ந்து வாசகர்களிடையே பரிமாற்றஞ் செய்வதற்கேற்ற சொல்லுந்திறன் உருவகக் கதையின் மற்றோரம்சமாக அமைகிறது."

சு.வே.யின் முதற் சிறுகதை கிடைக்காத பலன் 1943ல் ஈழகேசரியில் வெளியானது. இவரது சிறுகதைகள் மண்வாசைன, பாற்காவடி ஆகிய மகுடங்களில் தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

இவரது சிறுகதைத் தொகுதி பாற்காவடிக்கு முன்னுரை எழுதிய செங்கை ஆழியான் தனது முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "சு.வே.யின் சிறுகதைகள் வெறும் கற்பனாவாதப் பிரசவங்களல்ல. அவை இந்த மண்ணின் வாழ்வையும் வளத்தையும் அவலத்தையும் ஆழமாகப் பேசுவன. யதார்த்தப் படைப்புகள், தேசிய இலக்கியம் என்பதற்குத் தக்க எடுத்துக் காட்டுகளாக அமைவன. 19431950 களிலேயே சு. வே.யின் படைப்பிலக்கிய நோக்கு மிகத் தெளிவாக, இந்த மண்சார்ந்ததாக இருந்திருக்கிறதென்பதற்கு பாற்காவடி(1947), மனித மிருகம் (1944), கிடைக்காத பலன் (1943) என்பன தக்க உதாரணமாகும் கதைகளாகும். அந்தத் தேசிய இலக்கிய நோக்கு 19501970களில் மிகவும் ஆழமாகவும் கனதியாகவும் மண்வாசனை (1963), பெரியம்மா (1962) ஆகிய சிறுகதைகளில் படிமப்பட்டுள்ளது. சு.வே. தனது சிறுகதையில் இந்த நாட்டினையும் அதில் வாழ்ந்துவரும் மக்களையும் மட்டுமே சித்தரித்துள்ளார் என்பது மிக முக்கியமான அம்சம். மண்வாசனைக் கதைகள் அவருடையவை. நவீன சிறுகதையின் அழுத்தமான பண்புகளைக் கொண்டவை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

சு. வே. நாடக பிரதியாக்கத் துறையிலும் ஆழமாகத் தடம்பதித்துள்ளார். 1965இல் இலங்கைக் கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் வஞ்சி என்ற ஓரங்கநாடகம் முதற்பரிசு பெற்றது. அடுத்த ஆண்டில் எழிலரசி என்ற முழுநீள நாடகம் முதற்பரிசு பெற்றது. 1960இல் இலங்கை வானொலி நாடகப் போட்டியில் இவரின் மண்வாசனை முதற்பரிசு பெற்றது. 1968இல் ஒருமை நெறித்தெய்வம் என்ற நாடகம் பரிசு பெற்றது.

சு.வே. பல வானொலித் தொடர் நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய, ஏட்டிலிருந்து (16 வாரங்கள்), கிராமராஜ்யம் (32 வாரங்கள்), பொன்னாச்சிக் குளம் (97 வாரங்கள்), நவயுகம் (12 வாரங்கள்) தொடராக ஒலிபரப்பட்ட நாடகங்களாகும்.

இலங்கை வானொலியில் சு.வே. தொடர் உரைகளையும் நடத்தியுள்ளார். இலக்கிய இரசனை' (32 வாரங்கள்),'திருக்குறட் சித்திரம்'(36 வாரங்கள);,'நாட்டுக்கு நல்லது'(24 வாரங்கள); என்பன இவரது வானொலித் தொடர் உரைச் சித்திரங்களாகும்;.

சு.வே. எழுதிய சந்திரமதி, குகன் ஆகிய சிறுவர் கதைகள் சு.வே.யின் சிறுவர் இலக்கியத்துக்கான பங்களிப்புகளாகும். சு. வே. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் கடமை ஆற்றியவேளை மாணவர்களுக்கான பல பாடநூல்களையும் எழுதியுள்ளார்.

பிரமச்சாரியாகத் தவவாழ்வு வாழ்ந்த சு.வே, 22.06.2007இல் அமரரானார்.




## கண்டு பிடியுங்கள் கொலைகாரனை கொண்டு செல்லுங்கள் நூல்களை

உங்கள் துப்பறியும் திறனுக்கு ஒரு சவால்.
கொல்லுவதோ இளமை கதையின் கொலைகாரன் யார்?
என்பதைக் கண்டுபிடித்து
24.07.2020ஆம் திகதிக்கு முன்பு எழுதி அனுப்புங்கள்.
**ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதலாம்.**

**சரியான பதிலை எழுதும் மூவருக்கு அதிக விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.**

அனுப்பவேண்டிய முகவரி:
**கொல்லுவதோ இளமை**
தினகரன் வாரமஞ்சரி, லேக்ஹவுஸ்,
கொழும்பு10.
வட்ஸ்அப்: 0777686741



# 37 முடியப் போகிறதே கொல்லுவதோ இளமை! சூழ்ந்து கொள்ளுமே உங்களை தனிமை!

"வட்டவல பொலிஸில் இருந்து, இன்ஸ்பெக்டர் ராகவன் என்று சொன்னார்!"

"ஓ... அப்படியா... சரி நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் இருங்கள் மது... எனக்குத் தெரிந்த ஒரு பொலிஸ்காரர் அந்த பொலிஸில் இருக்கிறார். ஆனாலும் நான் அங்கே வருவதற்கு கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலமாவது செல்லும்!"

"ஐயோ பிரசன்னா... அதற்குள் நான் அங்கே போய் விடுவேனே. எனக்கு பயமாக இருக்கிறது பிரசன்னா!"

"பயப்படாதீங்க மது என்ன பிரச்சினை வந்தாலும் நான் வந்து உங்களைக் காப்பாற்றுவேன்...!"

"ம்... சரி... அப்ப நான் தனியா போறேன்...!"

"அப்ப நான் போன வைக்கிறேன்!"

'"ஓகே..!"

சுமார் அரை மணித்தியாலத்திற்குப் பிறகு பொலிஸ் தலைமைக் காரியாலத்தை வந்தடைந்தது மதுமிதாவின் கார்.

அதேநேரம்

பின்னால் வந்து நின்றது.

இன்ஸ்பெக்டர் ராகவனின் கார்.

கீழே இறங்கிய அவர்,

மதுமிதாவை பொலிஸ் நிலையத்துக்குள் அழைத்துச் சென்றார்.

உள்ளே இருந்த அந்த பொலிஸ் நிலையத்தில் பொறுப்பாளர் அவளுடன் அன்பாகவே பேசினார்.

"ம்... நீங்கதானே மது என்கிற மதுமிதா?"

"ஆமாம் சேர்!"

"உங்களிடம் ஒரு சிறிய வாக்கு மூலம் பெற வேண்டியுள்ளது. அதோ அந்த அறைக்குப் போங்கள்!"

"ஆகட்டும் சேர்!" என்று சொல்லி விட்டு,

அவர் காட்டிய அந்த இரண்டாம் அறைக்குள் சென்றாள் மதுமிதா.

உள்ளே அமர்ந்திருந்த கம்பீரமான பொலிஸ் அதிகாரி,

புன்னகை பூத்த படியே அவளைப் பார்த்தார்.

மதுமிதாவைப் பார்த்ததும் அவர் தனது தலையில் அணிந்திருந்த பொலிஸ் தொப்பியைக் கழற்றி பக்கத்தில் வைத்தார்.

வியப்புடன் அவரைப் பார்த்தபடியே,

அவர் காட்டி ஆசனத்தில் அமர்ந்தாள் மதுமிதா.

"என்ன மிஸ் மதுமிதா

என்னை உங்களுக்குத் தெரிகிறதா?" அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடியே கேட்டார்.

அந்த உயர் பொலிஸ் அதிகாரி அவர் இப்படிக் கேட்டதும்,

ஆடிப் போனாள் மதுமிதா!"

அவள் மேனியில் இலேசான ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

இப்போது,

மீண்டும் அவரை உற்றுப் பார்த்தார்.

"நீ... நீங்க... பிரசன்னா தானே!"

வியப்பை விழுங்கிய படியே கேட்டாள் மதுமிதா!

"ஆமாம்... நீங்க... சரி.. மிஸ் மதுமிதா... சிறிது நேரத்திற்கு முன்பு நீங்கள் என்னை பிரசன்னா என்று கூப்பிட்டீங்க... ஆனா உண்மையில் நான் பிரசன்னா அல்ல...!"

"என்னது... நீங்கள் பிரசன்னா இல்லையா...? அப்போ நீங்க யாரு சேர்?"

"நான் துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜ். பிரசன்னா என்ற பெயரில் ஒரு கம்பெனியின் உரிமையாளராக உங்கள் முன்னால் தோன்றிய தொழில் நிமித்தமாகத் தான்!"

"தொழில் நிமித்தமாக அது என்ன சார்.. அது... எனக்கு புரியவில்லையே... அப்போ சிறிது காலம் என்னும் நெருக்கமாக பழகியதெல்லாம்"


"அதுதான் பொலிஸ் விளையாட்டு"

"தீபன், தீபிகா இருவரும் மதுமிதாவின் மிக நெருங்கிய நண்பர்கள். அவர்களுக்கு நடந்த துயரமான சம்பவத்தைப் பற்றி ஒன்றுவிடாமல் என்னிடம் மிஸ் மதுமிதா எடுத்துச் சொன்னீங்க... இந்த விஷயத்தில் உண்மையான கொலைகாரனை கண்டு பிடிக்கவேண்டிய கட்டாயம் பொலிசாருக்கு இருந்தது. அதற்காக நீங்கள் எங்களுக்கு நிறையவே உதவி செய்திருக்கிறீர்கள். உங்கள் உதவியினால் உண்மையான கொலைகாரனை நாங்கள் கண்டு பிடித்துவிட்டோம்... இன்னும் சிறிது நேரத்தில் உண்மையான கொலைகாரன் யாரென்று நான் உங்களுக்கு சொல்லுகிறேன்!"

"அப்படியானால்... இந்த விபரங்கள் எல்லாம் ரஞ்சனுக்கு தெரியமா சேர்?"

"ஆமாம்.... இன்னும் சிறிது நேரத்தில் அந்த ரஞ்சன் இங்கே வருவார். அதற்கு முன்பு உங்களுக்கு முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றி சொல்ல வேண்டும்!"

"அது என்ன சேர் அது... எனக்கு



எல்லாமே ஒரு கனவு போல் இருக்கிறது!"

"இந்த விஷயத்தில் நான் உங்களுக்கு உதவி செய்வதாக ஏற்கனவே நான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன். அதாவது உங்கள் வாழ்க்கையில் எந்த விதமான பிரச்சினைகளுக்கு ஏற்படாமல் நான் உங்களை பாதுகாப்பேன். இன்னும் சிறிது நேரத்தில் எந்த மாதியான பாதுகாப்பு உங்களுக்கு தேவைப்படும் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீங்கள். நீங்கள் எதற்கும் பயப்படத்தேவையில்லை மிஸ் மது மிதா. உங்களுக்கு வாக்கு கொடுத்ததைப் போல் கண்டிப்பாக நான் உங்களை பாதுகாப்பேன்!"

"என்ன சேர் இது நீங்கள் சொல்வதைப் பார்த்தால் விஷயம் ரொம்ப பாரதூரமாக இருக்கும் போல் தெரிகிறதே...!" பதற்றத்துடன் சொன்னாள் மதுமிதா.

இலங்கை பொலிசில இருந்த புகழ்பெற்ற ஒரு துப்பறியும் நிபுணரான இன்ஸ்பெக்டர் இன்பராஜ் தான் இவ்வளவு நாட்களும் நெருங்கிப் பழகி வந்திருக்கிறார் என்பதை மதுமிதாவால் நம்பவே முடியவில்லை.

பழகிய இந்த கொஞ்ச நாட்களில்,

அவர் தனக்கு எவ்வளவு உதவிகளை செய்திருக்கிறார்?

தனது காருக்கு டயரை மாற்றிக் கொடுத்தது.

தினமும் காலையிலேயே கோல்பேஸ் ஓட்டலுக்கு வந்து,

தன்னுடன் உணவருந்தியது.

ஓட்டலுக்கு அழைத்துச் சென்று,

தனியாக அமர்ந்து தன்னுடன் பேசியது,

இந்த நேரத்தில் எல்லாம்,

தன்னிடம் கண்ணியமாகவே நடந்து கொண்டிருக்கிறார்.

மதுமிதா இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கும்போது.

இன்ஸ்பெக்டர் ராகவன், உயரமான ஒரு மனிதனை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார்.

அவர் கையில் விலங்கு மாட்டப்பட்டிருந்தது.

அவர் முகம் மதுமிதாவிற்கு தெரியவில்லை.

'மிஸ் மதுமிதா" இன்ஸ்பெக்டர் இன்பராஜ் தான் அழைத்தார்.

சேர்...!

"இவரை உங்களுக்குத் தெரியுமா என்று பாருங்களேன்!"

"ஏன் சேர்" என்று கேட்டபடியே திரும்பிப் பார்த்தாள்.

அடுத்து,

அவள் அலறி விட்டாள்.

(இளமை வளரும்)

விழிகளில் ஆரம்பித்து
புன்னகையில் சங்கமித்து
கண்ணீரில் அஸ்தமிக்கும்
ஒரு காதல் காவியம்!



இனியவனே என்று பாடி வந்தேன்!
காதலர்களுக்கு பனி மழை
காதலிப்பவர்களுக்கு தேன்துளி
விரைவில் உங்கள்
தினகரன் வாரமஞ்சரியில்!
ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்
எழுதுகிறார்!
இன்றே உங்கள் பிரதிகளை
பதிவு செய்து கொள்ளுங்கள்

# Jurassic World விசேட காட்சியை பார்வையிடும் வாய்ப்பு செலான் டிக்கிரி சிறுவர்களுக்கு



செலான் வங்கியின் டிக்கிரி கணக்குதாரர்களுக்கு சவோய் 3D திரையரங்கில் 'Jurassic World – Dominion' விசேட காட்சியை பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. டிக்கிரி சிறுவர்களால் நிரம்பியிருந்த இந்த திரையரங்கில், தமது பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் இந்தத் திரைப்படத்தைக் கண்டு களிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

தற்போதைய சூழலில் சிறுவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட களிப்பூட்டும் அம்சங்களில் ஈடுபடும் வாய்ப்புகளே காணப்படுகின்றன. நெருக்கடியான வாழ்க்கைச் சூழலில் குடும்பத்தாருடன் இணைந்து நேரத்தை செலவிடுவதும் குறைந்துள்ளது. தமது பெற்றோருடன் மகிழ்ச்சிகரமாக பொழுதை செலவிடும் வாய்ப்பை சிறுவர்களுக்கு வழங்குவது செலான் டிக்கிரியின் நோக்காக அமைந்திருந்ததுடன், நாட்டில் காணப்படும் முன்னணி சிறுவர் சேமிப்புக் கணக்கை பேணுகின்றமைக்காக அவர்களுக்கு வெகுமதி வழங்குவதும் இலக்காகும்.

விறுவிறுப்பை மேலும் அதிகரிக்கும் வகையில், திரையரங்கில் சமூக ஊடக போட்டியொன்றை செலான் வங்கி ஏற்பாடு செய்திருந்தது. இதன் போது செலான் டிக்கிரி சிறார்களுக்கு அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த உருவமைப்புகளுடன் செல்ஃபி ஒன்றை எடுத்தை அதனை #TikiriMovies உடன் அப்லோட் செய்யுமாறு கோரப்பட்டிருந்தது. இதில் 10 வெற்றியாளர்களுக்கு டிக்கிரி அன்பளிப்புகள் அவர்களின் இருப்பிடத்துக்கு சென்று வழங்கப்பட்டிருந்தன.

சிறுவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதில் செலான் டிக்கிரி முன்னோடியாக அமைந்துள்ளதுடன், அவர்களின் கல்வி, ஆர்வம் மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு பல்வேறு அனுபவங்களை வழங்குவதாக அமைந்துள்ளது.

# Elephant House Super Heroes Academy க்கு டயலொக் அனுசரணை



இலங்கையர்களின் மிகவும் பிரியமான மற்றும் நம்பிக்கைக்குரிய ஐஸ்கிரீம் வர்த்தக நாமமான Elephant House Ice Cream மற்றும் இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆகியவை அண்மையில் பத்தரமுல்லை, Waters Edge இல் இலங்கையின் எதிர்கால சந்ததியினரின் திறமைகள் மற்றும் திறன்களுக்கான 'Elephant House SuperHeroes Academy Powered by Dialog' எனும் பயிற்சி பட்டறையினை அறிமுகப்படுத்தியது. இதற்கு டயலொக் அனுசரணை வழங்கியது.

டயலொக் அனுசரணை வழங்கும் Elephant House Super Heroes நடுவர் குழுவில் அங்கம் வகிக்கும் சிந்தனையாளரும் தொழிலதிபருமான யசஸ் ஹேவகே, மொரட்டுவ பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி லீலாங்க செனவிரத்ன மற்றும் அசேகா விஜேவர்தன ஆகியோர் இந்த செயலமர்வை வழிநடத்தினர். மற்றும் போட்டியாளர்களின் பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் திறமைகள் மற்றும் திறன்களை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த ஆலோசனைகளையும் வழங்கினார்கள். 'Super Talent', 'Super Innovator' மற்றும் 'Super Responsible' ஆகிய மூன்று பிரிவுகளையும் உள்ளடக்கிய பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய இந்த பயிலரங்கில் பிள்ளைகள் தங்கள் தனித்திறமைகளைப் பற்றி நன்கு புரிந்துகொள்வது மற்றும் அவர்களின் சிறந்த பலனைப் பெறுவது எப்படி என்பது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது.

டயலொக் அனுசரணை வழங்கும் Elephant House Super Heroes போட்டியானது, புதுமையான திறன்கள், திறமைகள் மற்றும் நிலையான வாழ்க்கைக்கான முயற்சிகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்ட நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் போட்டியாகும்.

டயலொக் அனுசரணை வழங்கும் Elephant House Super Heroes போட்டியானது இலங்கையில் உள்ள பிள்ளைகளின் கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகின்றதுடன் அவர்களின் கல்விக் கனவுகளை நனவாக்க உதவும் பல சலுகைகளையும் வழங்குகிறது.

# எதிர்கால பொறியியல் தலைவர்களை உருவாக்கும் 'Project Summit' தளத்தை ஆரம்பிக்கும் Sysco LABS



நிறுவனங்களுக்கிடையில் தொடர்ச்சியான அகற்றல் வசதிகளை வழங்குதல் மற்றும் வருங்காலத்தில் தயாராகவிருக்கும் புதிய பொறியியல் சந்ததியினரை ஊக்குவித்தல் எனும் நோக்கில் எதிர்கால பொறியியல் தலைவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள 'Project Summit' தளத்தை Sysco LABS Sri Lanka நிறுவனம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் இருந்து நேரடியாக வேலைக்கு உள்வாங்கப்படுபவர்கள் '4ஆவது தொழிற்புரட்சி தொழில்நுட்பத்தின்' (4IR) கீழ் வகைப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பக் கருத்துக்களைச் செயல்படுத்த உதவுவதற்கு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் Sysco LABS இன் Project Summit அமையும்.

டிஜிட்டல் புரட்சியை எதிர்கொள்வதற்கான சரியான திறன்களை வளர்த்துக் கொள்வதன் மூலம் இத்திட்டத்தில் பங்கேற்பவர்கள் செயற்கை நுண்ணறிவு, இயந்திர ரீதியான கற்றல், அதிவேக தொழில்நுட்பம் மற்றும் இணைய உலகம் போன்ற 4IR எண்ணக்கருக்களின் வெளிப்பாடு மற்றும் வழிகாட்டுதலைப் பெறுவார்கள். எதிர்கால பணியாளர்களில் Sysco LABS நிறுனம் முதலீடு செய்துவருவதுடன், தமது திறன்களை வெளிக்கொணரவும், எதிர்காலத்துக்கான தீர்வுகளை உருவாக்கவும் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு 4IR உதவியாக இருப்பதையும் இது நோக்காகக் கொண்டுள்ளது.

Project Summit ஆனது 4 வருட கற்றல் காலத்தைக் கொண்டிருப்பதுடன், இதில் பங்கெடுப்பவர்கள் ஆறு மாதங்களில் திட்டத்தை முடிக்க முடியும். இது அவர்களின் வாழ்க்கைப் பயணத்தை விரைவாக்குவதற்கு இயலுமான தாக்க உதவும். "தொடக்க நிலையைக் கற்றுக்கொள்ளுங்கள்" என்ற அடிப்படையில் 4IR செயல்படுத்தப்பட்ட தீர்வுகளை அடையாளம் கண்டு உருவாக்கவும், உற்பத்தித்திறன் அளவீடுகளை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் உதவும்.

# யுவதிகளின் மேம்பாட்டுக்கான Goal @ Home Activity என்ற நூல் வெளியீடு




கொவிட் பெருந்தொற்றின் தாக்கத்தினால் முடங்கியிருந்த பெண் பிள்ளைகளின் அன்றாட வாழ்வு மற்றும் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்துடன் சர்வ் (SERVE) நிறுவனம் பல்வேறு வாழ்க்கைத் திறன் செயற்பாடுகளை உள்ளடக்கிய Goal @Home Activity Book எனும் செயற்பாட்டு நூலொன்றை அச்சுவடிவிலும் ஒன்லைன் வடிவிலும் வெளியிடுகின்றது.

மேற்படி நூல் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மும்மொழியிலும் பிரசுரிக்கப்படுகின்றது. 1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சர்வ் நிறுவனம் சிறுவர்கள், இளம் சந்ததியினர் மற்றும் பெண்களின் நலன் சார்ந்து செயற்படும் இலங்கை சமூக சேவை நிறுவனமாகும்.

குறிப்பாக சிறுவர்கள், இளம் சந்ததியினர் மற்றும் பெண்களின் சமத்துவம் மற்றும் பெருமையை பாதுகாத்து மனிதநேயத்துடன் கூடிய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு இலங்கை நிறுவனமாக பங்களிப்பு வழங்குவதே சர்வ் நிறுவனத்தின் நோக்கமாகும். நெதர்லாந்து விமென்வின் அமைப்பு மற்றும் ஸ்டேன்டர்ட் சார்டட் மன்றத்தின் அனுசரணையுடன் இந்நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

www.lamun.org இணையத் தளத்துடன் இணைந்து இந்நூலின் செயற்பாடுகளை online முறையிலும் நிறைவுசெய்ய முடியும்.

மேலும்,எந்தவொரு பகுதியிலும் உள்ள 13 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பெண் பிள்ளைகளுக்கு இத்திட்டத்தில் இணைந்து இந்நூலை இலவசமாக கற்கமுடியும்.

பெண் பிள்ளைகளுக்கு தனித் தனியாகவும் பல்வேறு சமூக, சங்கங்கள் மற்றும் அமைப்புகள் ஊடாக குழுவாகவும் இந்நிகழ்ச்சியில் பதிவுசெய்ய முடியும். அதன்போது இச்செயற்பாடுகள் நூலின் அச்சுப் பிரதியொன்று வழங்கப்படுவதோடு அதனை வீட்டிலிருந்தவாறு தனியாகவும் கற்கமுடியும்.

# சிறுவர்களுக்காக அருணலு வெளிநாட்டு நாணய சேமிப்பு கணக்கை அறிமுகம் செய்துள்ள கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கி காலத்துக்கு ஏற்ற ஒரு வாய்ப்பாக சிறுவர்களுக்கான அருணலு வெளிநாட்டு நாணய சேமிப்பைக் கணக்கை அறிமுகம் செய்துள்ளது. அருணலு சிறுவர்களுக்கான வெளிநாட்டு நாணய சேமிப்புக் கணக்கு என்ற பெயரில் இது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.



இலங்கைப் பிரஜைகளாக இலங்கையில் வசிக்கும் சிறுவர்களுக்கு அல்லது வெளிநாடுகளில் குடிபெயர்ந்து வாழும் இலங்கையர்களின் இலங்கையில் பிறப்பு பதிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கு நான்கு வகையான வெளிநாட்டு நாயணங்களில் இந்த கணக்குகளைத் திறக்கலாம் என வங்கி அறிவித்துள்ளது.

அருணலு வெளிநாட்டு நாணய சிறுவர் சேமிப்புக் கணக்கை பிள்ளைகளின் பெற்றோர்கள், தாத்தா அல்லது பாட்டி அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர்கள் எந்தவொரு கொமர்ஷல் வங்கிக் கிளையிலும் திறக்கலாம். 15 வயதுக்கு குறைவான சிறுவர்களுக்கு ஆரம்ப கட்டமாக 50 டொலர்களை வைப்புச் செய்து அல்லது அதற்கு சமமான ஸ்டேர்லிங் பவுண், யூரோ அல்லது அவுஸ்திரேலிய டொலர் போன்ற ஏனைய நாணயத்தை வைப்புச் செய்து இந்த கணக்கைத் திறக்கலாம். குறிப்பிட்ட பிள்ளையின் 18வது பிறந்த நாளின் பின்னரே இந்தக் கணக்கில் உள்ள மொத்தத் தொகையையும் மீளப் பெறலாம்.

தமது பிள்ளைகளின் வெளிநாட்டு கல்வி போன்ற எதிர்கால செலவுகளைக் கருத்திற் கொண்டு பெற்றோருக்கு வெளிநாட்டுப் பணத்திலேயே சேமிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் நோக்கில் இந்த விஷேட திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் நாணய மதிப்பிறக்க ஆபத்தில் இருந்து பாதுகாக்க பெரும் வகையில் இது உதவியாக அமைந்துள்ளது.

இந்தக் கணக்கில் ஏற்றுக் கொள்ளப்படும் பணம் பெற்றோரிடம் அல்லது தாத்தா பாட்டி அல்லது சட்ட ரீதியான பாதுகாவலரிடம் இருந்து கிடைத்த வரவாகப் பதிவு செய்யப்படும்.

இவர்களின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் இருந்து இந்தக் கணக்கிற்கு நிதி மாற்றமாகவும் உரிய தொகையை வைப்பிடலாம்.

# தனது இரு சக்கர வண்டி டயர்களை இந்திய போட்டி உற்பத்திகளோடு ஒப்பிட்டுள்ள சியெட்



சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் அதன் சில மோட்டார் சைக்கிள் டயர்களை தொடர்ச்சியாக தீவிரமான பல பரிசோதனைகளுக்கு உட்படுத்தி உள்ளது. இரண்டு பிரதான போட்டி வர்த்தகச் சின்னங்களோடு நடத்தப்பட்ட இந்தப் பரிசோதனைகள் தற்போது முடிவடைந்துள்ளன. இந்த வர்த்தகச் சின்னங்களில் ஒன்று இலங்கையையும் மற்றையது இந்தியாவையும் சேர்ந்தது.

இந்தக் குறிப்பிடத்தக்கப் பயிற்சி இந்தியாவின் இந்தோர் நகரில் உள்ள தேசிய வாகன பரிசோதனைகள மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள் கட்டமைப்புத் திட்டத்துக்குரிய அதி நவீன வாகன பரிசோதனைத் தளம் மற்றும் சியெட் இந்தியாவின் கூட்டாண்மை ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (சுரூனு) ஹலோய் வளாகத்திலும் இடம்பெற்றது என இந் நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கையின் முன்னணி மோட்டார் சைக்கிள் வகையில் இருந்து பொருத்தமான டயர்கள் மற்றும் இந்தியாவிலிருந்து முன்னணி வர்த்தகச் சின்ன டயர்கள் மற்றும் இலங்கை சியெட்டில் தயாரிக்கப்பட்ட ஐந்து வகை மோட்டார் சைக்கிள் டயர்கள் பன்முக பெறுமான தெரிவுகளின் படி, ஸ்திரப்பாடு, ஓட்டும் வசதி, நேர்கோட்டு ஸ்திரப்பாடு, வளைவுகள், கையாளல் வரையறை, பிறேக் ஸ்திரப்பாடு, ஈரம் மற்றும் உலர் நிலைகள், குறியீட்டு மற்றும் தூரம் ஆகிய பிரிவுகளில் இந்தப் பரிசோதனைகள் இடம்பெற்றன.

இறுதி சோதனைகளில் சியெட் 140/7017 Zoom XL, 90/10010 Gripp X3, and 100/90 17 ஆகிய டயர்கள் ஒப்பீட்டுக்கு உற்படுத்தப்பட்ட ஏனைய வர்த்தக முத்திரை தயாரிப்புக்களை விட சில பிரிவுகளில் மிகச் சிறந்தவை என்பது கண்டறியப்பட்டது என சியெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து சியெட் களனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி தத்லானி கருத்து வெளியிடுகையில் "எமது மோட்டார் சைக்கிள் டயர் உற்பத்திகளை நாம் காலத்துக்கு காலம் தீவிர பரிசொதனைகளுக்கு உட்படுத்தி வருகின்றோம். அதற்கென நிர்மாணிக்கப்பட்டுள்ள ஓடு தளங்களில் இவை பரீட்சிக்கப்படுகின்றன. " என்று கூறினார்.

## Orient FD Plus:

# ஆயுள் காப்புறுதி, தீவிர நோய்ப்பாதுகாப்புடன் கூடிய நிலையான முதலீட்டுத் திட்டம்



ஜனசக்தி குழுமத்தின் உறுப்பு நிறுவனமும் முன்னணி நிதிச் சேவை வழங்குனருமான Orient Finance PLC, விசேட நிலையான வைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது ஆயுள் காப்புறுதி மற்றும் தீவிர நோய்க்கான பாதுகாப்புடனான நிலையான வைப்பீட்டு வசதியை வழங்குகிறது. மேலும், இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிதி நன்மைகளை சமூகத்திற்கு அறியப்படுத்துவதற்கும், அது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை நிறுவனத்தின் விற்பனைக் குழு மேற்கொண்டிருந்தது.

இந்த நிதித் தீர்வானது, நிதி நிலையான தன்மை மற்றும் மேம்பட்ட வாழ்க்கை பாதுகாப்பை வழங்குவதுடன், வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளவும் முடியுமானதாக காணப்படுகின்றது. இந்த விழிப்புணர்வு அமர்வுகளின் போது, வாடிக்கையாளர்கள் இத்திட்டத்தின் நன்மைகள் தொடர்பில் விவாதிக்கவும், அவர்களின் தே வைகளுக்கு ஏற்ப இந்த முதலீட்டுத் திட்டத்தைத் தனிப்பயனாக்கம் வாய்ப்பு வழ ங்கப்பட்டது. நிலையான வைப்புத்தொகை யின் மொத்த மதிப்பின் அடிப்படையில் திட்டத்தின் மதிப்பு தீர்மானிக்கப்படும் அதே வேளையில், தகுதிவாய்ந்த கணக்கு வைத்தி ருப்பவர்கள் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இணை வர்த்தகநாம காப்புறுதி அட்டையையும் பெறுவார்கள்.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் குறித்து, ஓரியண்ட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான கே.எம்.எம். ஜாபிர் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த சவாலான காலத்தில் எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த விசேட திட்டத்தை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

Orient FD Plus என்பது, ஒரு வகையான நிலையான வைப்புத் திட்டமாகும் என்பதுடன், இது ஒரு உத்தரவாதமான ஆயுள் காப்புறுதியையும் தீவிர நோய்ப் பாதுகாப்பையும் கொண்டுள்ளது என்றார்.

# படித்ததும் பகர்வதும் 104



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### கொள்ளை இலாபம்

கடந்த வாரம் எனது வாடிக்கையாளர் ஒருவர் கைப் பேசியில் என்னை தொடர்பு கொண்டு பேசினார் "சேர் பெற்றோல் வேண்டும் என்று கேட்டீர்கள் தானே ஒரு வரிடம்இருக்கிறதாம் ஒரு லீட்டர் 2600/= ரூபாவாம் வாங்கி தரட்டுமா?" என்று கேட்டார்.



எனது அத்தியாவசிய தேவை ஒன்றை பூர்த்தி செய்யும் ஆர்வத்தில் அவர் அப்படி கேட்டாலும் '70/= ரூபாபெற்றோலை ஐந்து மடங்குக்கும் அதிக விலையான 2600/= ரூபாவுக்குவிற்கிறார்களே!' என்று அதிர்ச்சியும்கவலையுமடைந்தேன். அத்தகைய கொள்ளை விலைக்கு வாங்குவதுமுறையல்ல என்று வாங்க மறுத்து விட்டேன். ஆனால் மற்றும் சிலர் ஒரு லீட்டர்பெற்றோலை 3000/= ரூபாய்க்கு வாங்கியுள்ளார்கள் என்பதையும் கேட்டு வியந்து போனேன். இத்தகைய கொள்ளை இலாப வியாபாரத்தில் யார் ஈடுபட்டாலும் அவர்கள் கண்டனத்துக்கு உரியவர்களே.

பல்வேறு காரணங்களால் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவது தவிர்க்க முடியாத விடயமாகும். இவற்றில் எரிபொருள், மருந்துப் பொருட்கள், உணவுப் பொருட்கள், குழந்தைகளுக்கான பால்மா போன்ற பலவும் அடங்குகின்றன. இவற்றுக்கு ஏற்படுகின்ற தட்டுப்பாட்டை பயன்படுத்தி அதிக விலைக்கு, அநியாய விலைக்கு அத்தியவசியப் பொருட்களை விற்பது என்பது மகா அட்டூழியமான, கொடூரமான, பாவமானசெயற்பாடாகும்.

மனித நேயம் மறந்த, மனிதாபிமற்ற இச்செயலை எல்லா சமயங்களும் எல்லா மார்க்கங்களும், தடை செய்தே உள்ளன. ஒழுக்க விழுமியங்களுக்கு மாற்றமான தார்மீக பண்புகளுக்கு முரணான இவ்வியாபாரம் சாபக்கேடான ஒரு செயல் என்றால் மிகையல்ல.

இப்போதையநாட்டின் பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு, அரிசி, பருப்பு, பால்மா, சீனி, மரக்கறி, பலவகைகள்உட்பட அன்றாட தேவைகளுக்குரிய பொருட்களை மிக அதிக விலையில் விற்பனை செய்து கொள்ளை இலாபம் ஈட்டுபவர்கள், மக்களின் துன்பங்களையும், துயரங்களையும், இன்னல்களையும், இடர்களையும் பற்றி சிந்தித்து கருணை உள்ளத்தோடு நீதமாகவும் நியாயமாகவும் மனிதாபிமானத்தோடு செயற்பட முன்வர வேண்டும். 'எந்தவொரு பொருளையும் நியாயமற்ற விலையில் விற்று அநியாயக்காரர்களாக மாட்டோம்' என உறுதி பூண வேண்டும் அல்லல்படுகின்ற மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இவ்விடயத்தையாவது செயல்படுத்த ஒவ்வொரு வியாபாரியும் உளஉறுதியோடு முன்வர வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

**வாழ்க்கையில் சோதனைகள் சகஜமே தம்பி**
**வருத்தங்கள்உள்ளத்தில் வேண்டாம் தம்பி**
**தோல்விகள் கண்டு நீ துவண்டிடாதே தம்பி**
**தோன்றாத் துணைகளுண்டு வெல்வாய் தம்பி**
**பேருயர் வெற்றிகள்தாம் உன் காலடியே வந்து விழும்**
**பாராட்டுறோம்! வாழ்த்துகிறோம்!!**

## பாராட்டுறோம்! வாழ்த்துகிறோம்!!

### ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க

இலங்கையின் 8வது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக ரணில்விக்ரமசிங்க பதவியேற்றுள்ளார். நாடளுமன்ற அங்கத்தவர்களால் வாக்களிக்கப்பட்டு வெற்றி பெற்ற முதல் ஜனாதிபதியாக இவர் சரித்திரத்தில் இடம் பிடிக்கிறார்.



1977களில் அரசியலில் ஈடுபட்டு,1977 நாடளுமன்ற தேர்தலில் பியகம தொகுதியில் வெற்றி பெற்று நாடாளுமன்ற அங்கத்தவரான இவர், தொடர்ச்சியாக 45 வருடங்கள் நாடாளுமன்ற அங்கத்தவராக இருகிறார். இளவயதிலேயே அமைச்சுப் பொறுப்பை ஏற்ற இவர் 1993ல் முதல் முறையாக பிரதமாரானார். அதன் பின் 2001ல், 2015 இல் இருமுறை, 2018, 2022 வருடங்களில் என ஆறு தடவைகள் இலங்கையின் பிரதமாராக பதவி வகித்துள்ளார். எனினும் ஒரு முறையேனும் தமது பதவிக்காலத்தை முழுமையாக பூர்த்தி செய்யும் வாய்ப்பு இவருக்குக் கிடைக்கவில்லை என்பது விசேடமாக குறிப்பிடத்தக்கது.

1994 இல் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்ரமசிங்க இன்று வரை 28 வருடங்களாக தொடர்ச்சியாக அப்பதவியை வகித்து வருகிறார். கடைசியாக நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி ஒரு ஆசனத்தையாவது வெற்றிகொள்ள வில்லை. ஆயினும் முழு இலங்கையிலும்பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் கிடைத்த ஒரே ஒரு ஆசனத்தின் மூலம் தொடர்ந்தும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக இருக்கும் இவர் நாடாளுமன்ற அங்கத்தவரானார். பல்வேறு சந்தர்பங்களிலும்தொடர்ச்சியாக வேறுபட்ட விமர்சனங்களுக்கு ஆளான போதிலும் துணிச்சலோடு தைரியத்தோடு தனது முடிவில் உறுதியாக இருந்து செயல்படும் ஒரு தனித்துவமான அரசியல்வாதியாக ரணில்விக்ரமசிங்க அறியப்படுகிறார்.

1999ல் முதன்முதலாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு 42.71 வீத வாக்குகளை பெற்ற இவர், 2005ல் போட்டியிட்டு 4,706,366 வாக்குகளை பெற்றார். மற்றும் சில ஜனாதிபதி தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் இவர் போட்டியிட வாய்ப்பு இருந்த போதிலும் சரத்பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாசவுக்கு இடமளிக்க வேண்டி ஏற்பட்டதனால் இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இவர் போட்டியிடவில்லை

மக்கள் வாக்குகளால் ஜனாதிபதி தேர்தலொன்றில் வெற்றிபெறும் வாய்ப்பு இவருக்கு கிடைக்காவிட்டாலும்,இப்பொழுது நாடாளுமன்றத்தில் 8வது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நடைபெற்ற தேர்தலில், அளிக்கப்பட 223 வாக்குகளில் 134 வாக்குகளை பெற்று 52 மேலதிகவாக்குகளால் வெற்றி பெற்று, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் எஞ்சியுள்ள ஜனாதிபதி பதவிக்காலத்துக்கு ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதும், அரசியல் கொந்தளிப்பை தனித்து மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஆட்சி அமைப்பதும், மக்களது அபிலாஷைகளை மிக அவசரமாக நிறைவேற் றுவதும்,நாட்டில் சமாதானம் சக வாழ்வை ஏற்படுத்தி உலகில் இலங்கையின் பெயரை உயர்வடைய செய்வதும்இவர் மீதுள்ள பாரிய சவால்களாகும்.

இலங்கையின் 8வது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ரணில் விக்ரமசிங்கவை பாராட்டுவதோடு அவரது பதவிக்காலத்தில் இப்பாரிய சவால்களை வென்று நாடு சுபீட்சமடைய செயல்படவும் வாழ்த்துகிறோம்!

## புது வரவு

### 'அபுல்கலாம்' ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா வாழ்வும் பணியும்

ஒவ்வொரு ஊரிலும் பல்வேறு ஆற்றல்கள் நிறைந்த, மக்கள் நலனுக்காக சேவைகள் செய்கின்ற,தனித்துவ மிக்க ஆளுமைகள் சிலர் இருக்கவே செய்கின்றனர். அவர்கள் உயிரோடுஇருக்கும்போதும், மரணித்த பின்னரும் மக்களால் மதிக்கப்படுகின்றனர்,போற்றப்படுகின்றனர். அத்தகையவர்களில்ஒருவர்தான் மருதமுனை மண்ணின் மைந்தன், 'அபுல்கலாம்' எனும்சிறப்புப் பெயர்பெற்ற காலஞ்சென்ற ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா.

அவரைப்பற்றி அவரது குடுபத்தைச் சேர்ந்த இளம் சட்டத்தரணி றுடானி ஸாஹிர், தொகுத்து வெளியிட்டுள்ள 'வாழ்க்கை சரிதை நூல்தான் 'அபுல்கலாம்' ஐ.எம்.எஸ்.எம். பழீல்மௌலானவாழ்வும்பணியும்.



"மர்ஹூம் மௌலானா பன்முக ஆளுமை கொண்ட ஒரு கல்விமான் மட்டுமல்ல. ஓர் ஆத்மீகப்பெரியார் என்பதையும் நான் புரிந்து கொண்டேன். செல்லும் இடங்களிலெல்லாம் 'ஆளிடைத் தொடர்புகளை' உருவாக்கி மக்களை தன் வயப்படுத்தி, தன்னிசைவாக்கும் காந்தசக்தியுடைய மனிதராக (Charismatic Person) அவரை என்னால் மதிப்பீடு செய்ய முடிகின்றது." என மௌலானா பற்றி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளர், ஏ. பீ. எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

நூலின் நாயகன் பற்றியும்,இந்நூல் பற்றியும்,பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ், தனது அணிந்துரையில், "மௌலானா ஒரு நல்லாசிரியர், மூத்த கல்விமான், சமூக சேவையாளர், சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். மருதமுனை மக்கள் பெருமை கொள்ளக்கூடிய ஆளுமையாகத் திகழ்ந்தவர். பழீல் மௌலானா அவரை நினைவு கூர்ந்து வெளியிடப்படும் இந்த நூல் எதிர்காலச்சந்ததியினருக்கும் பயனுள்ளதாகவே அமையும். நாட்டிற்கும் சமூகத்திற்கும்சேவையாற்றி கல்விச்சேவைகளிலும் தம்மை அர்பணித்தவர்களை நினைவு கூர்வது மிகப் பெரிய சமூகப் பணியாகும்." என்று குறிப்பிடுகிறார். மௌலானா பற்றிய பல்வேறு படங்கள் இந்நூலை மேலும் அலங்கரிக்கின்றன.

நூல்: 'அபுல்கலாம்' ஐ.எம்.எஸ்.எம். பழீல்மௌலானா வாழ்வும்பணியும், ஆசிரியர்: சட்டத்தரணி றுடானிஸாஹிர், முதற்பதிப்பு:ஏப்ரல் 2021, பக்கங்கள்: xxxiv +228, வெளியீடு:பழீல்மௌலானபவுண்டேஷன், மருதமுனை, தொடர்புகளுக்கு: 0777008894,


## சிந்தனை செய் மனமே

### "நான் வாழை அல்ல! சவுக்குமரம்!"

நகைச்சுவை நடிகர் நாகேஷ் அவர்களின், தன்னம்பிக்கை மிக்க அருமையான வார்த்தைகள்..!

"நியாயமாக உங்களுக்கு வரவேண்டிய நல்ல பெயர் மற்றவர்களுக்குச் செல்லும் போது உங்களுக்கு எப்படி இருக்கும்?" வானொலிப்பேட்டியொன்றின்போது நகைச்சுவை நடிகர் நாகேஷிடம் இப்படி கேட்கப்பட்டது. அதற்கு அவர் அளித்த பின்வரும் பதில் ஒவ்வொருவரதும் தன்னம்பிக்கைக்கு டாணிக்கான, அருமையான வார்த்தைகள்.

"நான் கவலையே படமாட்டேன் சார்.ஒரு கட்டடம் கட்டும் போது,சவுக்கு மரத்தை முக்கியமாவச்சு சாரம் கட்டி,குறுக்குப்பலகைகள் போட்டு,அதன் மேல பல சித்தாள்கள் நின்னு,கைக்குக் கை கல் மாறி கட்டடம் உயர்ந்து கொண்டே போய் அது முடிந்த பிறகு, அந்தக் கட்டிடத்துக்கு வர்ணஜால வித்தைகள் எல்லாம் அடிச்சு,



கீழே இறங்கும் போது ஒவ்வொரு சவுக்கு மரமாக அவிழ்த்துக் கொண்டே வருவார்கள் . கட்டடம் முடிந்து, கிரகப்பிரவேச தினத்தன்று, கட்டடம் கட்டுவதற்கு எது முக்கிய காரணமாக இருந்ததோ, அந்தச் சவுக்கு மரத்தை யார் கண்ணிலும் படாமல் பின்னால், எங்கயோ மறைத்து வைத்துவிட்டு,வேறெங்கேயோ வளர்ந்த வாழை மரத்தை முன்னால் நட்டு கிரகப்பிரவேசம் நடத்தி அனைவரையும் வரவேற்பார்கள்."

"அத்தனை பெருமையும் வாழை மரத்துக்குப் போய் விடும்.இதில் உள்ள உண்மை என்ன தெரியுமா? அந்த வாழை மரம் மூன்று நாள் வாழ்க்கை தான் வாழும். பின் ஆடுமாடுகள்மேயும்.குழந்தைகள் பிய்த்தெடுப்பார்கள். பிறகு குப்பை வண்டியிலேதான் போய்ச் சேரும்."

"எங்கோ மூலையில் மறைந்து கிடக்கிறதே அந்தச் சவுக்கு மரம் கண்ணீர் விடுவதில்லை. அடுத்த கட்டடம் கட்டுவதற்கு ஏணியாக தயாரான நிலையில், என்றும்சிரித்துக் கொண்டே காத்திருக்கும்!"

இவ்வாறு விளக்கமளித்த நடிகர் நாகேஷ், இப்படி முடித்தார், "நான் வாழை அல்ல! சவுக்குமரம்!!"

## நலமே வாழ்வோம்

### எச்சரிக்கை! மீண்டும் கொரோனா!!

இலங்கையில் மீண்டும் கொவிட்19 தொற்று பரவக்கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாக தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.தற்போது, நாளாந்தம் 30 முதல் 40 பேருக்கு இடைப்பட்ட நோயாளர்கள் அடையாளங் காணப்படுகின்றனர்.

இலங்கையின் மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை இப்போது 664,572ஐ விடவும் அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஒற்றை இலக்கத்தில் காணப்பட்ட தொற்றாளர் எண்ணிக்கை இப்போது 50க்கும் மேல் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 4 வாரங்களாக உலகளாவிய ரீதியாக கொவிட்19 நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது. ஒமைக்ரோன் திரிபுக்கு மேலதிகமாக புதிய உப திரிபுகளும் சில நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் வேகமாக பரவும் வல்லமையையும் கொண்டுள்ளன.

இதனால் மக்கள் கொரோனா எனும் கொவிட்19 பற்றி அலட்சியமாக இருந்துவிடாமாவ் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின்நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும்பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப்(WhatsApp): 0777314207

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

# திருவள்ளுவத்தில் இயக்குதல் (Directing/ Commanding)



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 16

Harold Koontz and Cyril O' Donnell, J.L. Massie, Urwick and Brech, G.R. Terry, Ernest Dale, Theo Haimann போன்ற முகாமைத்துவ அறிஞர்களின் கருத்துக்களின்படி இயக்குதல் என்பது ஒரு நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்குவதாகும். பொதுவாக இது உயர் மட்ட முகாமையாளர்களினாலேயே செய்யப்படுகிறது. அதாவது இயக்குதல் என்பதனை நிறுவனத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பணியாளர்கள் என்ன செய்ய வேண்டும் எங்கே செய்ய வேண்டும் எப்படிச் செய்ய வேண்டும் எவற்றை எல்லாம் செய்யலாம் எவற்றை எல்லாம் செய்யக் கூடாது என்று முகாமையாளர் அறிவுறுத்துதல் என்று கொள்ளலாம். இன்னும் கூறுவதாக இருந்தால் இயக்குதல் என்பது நிறுவனம் ஒன்றின் பணியாளர்கள் அதன் இலக்குகளை விரைவாகவும் வினைத்திறனுடனும் அடைவதற்காக குறுகிய, நீண்ட கால நோக்கில் எவ்வாறு வேலை செய்யலாம் என்பது தொடர்பாக நிறுவன முகாமையாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகளின் தொகுப்பு என்று கொள்ளலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட அறிஞர்களின் முகாமைத்துவ கருத்துக்களின் படி ஒரு நிறுவனத்தில் இயக்குதல் அல்லது கொண்டு செலுத்தல் அல்லது கட்டளையிடல் அல்லது வழிப்படுத்தல் என்பது முகாமைத்துவத்தின் எல்லாமட்டங்களிலும் காணப்படும். தலைமைத்துவம் (Leadership ), தொடர்பாடல் ( Communication), ஊக்கப்படுத்தல் (Motivation)மற்றும் மேற்பார்வை செய்தல் ( Supervision) ஊக்கப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதாக இயக்குதல் உள்ளது. ஒரு முகாமையாளர் மேலே சொல்லப்பட்ட செயற்பாடுகளைச் சரியான முறையில் செயற்படுத்தும்போது நிறுவனத்தின் சூழலானது (Organizational climate) நன்றாக அமைந்து ஊழியர்களின் தேவைகள் அவர்களின் விருப்புகள் வெறுப்புகள் கருத்துகள் என்பன உள்வாங்கப்பட்டு பணியாளர்களின் வேலைத்தரம் உயர்த்தப்படுவதன் மூலம் நிறுவனம் வெற்றிகரமாக இயங்கும் .

கட்டுப்படுத்தலை ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் வெற்றிகரமாகச் செய்யவேண்டும் என்றால் அவரிடம் புத்தக அறிவை விட அனுபவ அறிவு முக்கியமாக இருக்க வேண்டும். அப்போதுதான் தனியாள்களின் இயலுமைகளை, அறிவு, திறன், மனப்பாங்குகளை இனம்கண்டு சூழ்நிலைகளுக்கேற்ற அறிவுறுத்தல்களை வழங்கி பணியாளர்களை வழிப்படுத்த முடியும். இதனை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகிறார்.



**"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்துஇயற்கை அறிந்து செயல்" (குறள் 637)**

இங்கு ஒருவர் நூலறிவால் பல்வேறு செயல்களையும் செய்யும் வகைகளை அறிந்திருந்த போதிலும் கூட உலகத்தின் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்துமாறு செய்யவேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

அதாவது முகாமையாளர் எவ்வளவு படித்தவராக இருந்தாலும் நிறுவனத்தின் சூழலை (Organizational Climate) அறிந்து அதற்கேற்ற வகையில் அனுபவத்தின் அடிப்படையில் பணியாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி வழிகாட்ட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். பணியாளர்களை இயக்குகின்ற பணியில் உள்ள முகாமையாளர் தன்னைச் சுற்றி தனது நிறுவனத்தில் என்ன நடக்கின்றது என்பது தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும். அவை தொர்பாக அறிந்து கொள்ள வேண்டும் அவதானமாக இருக்க வேண்டும் அப்போதுதான் தனது பணியினைச் செவ்வனே செய்யமுடியும். இதனைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாகச் சொல்கிறார்.

**"எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்**
**வல்லறிதல் வேந்தன் தொழில்"( குறள் 582)**

எல்லாரிடத்திலும் நிகழ்கின்ற எல்லாவற்றையும் எப்பொழுதும் விரைந்து அறிதல் வேந்தன் கடமை என்பது இந்தக்குறளின் பொருள். அதாவது தனது பணியாளர்கள் எல்லோரிடத்திலும் என்னென்னவெல்லாம் நடக்கின்றது எப்பொழுதேல்லாம் நடக்கின்றது என அறிய வேண்டியது முகாமையாளரின் கடமையாகும் என்கிறார் திருவள்ளுவர்.

எல்லாப்பணியாளர்களிடமும் நிகழ்பவை எல்லாவற்றையும் எல்லாக் காலத்திலும் விரைந்து அறிந்து கொள்ளல் முகாமையாளரின் கடமை என்பதனையே திருவள்ளுவர் வல்லறிதல் என்கிறார். குறிப்பாக எல்லார்க்கும் என்ற சொல்லாடல் மூலம் திருவள்ளுவர் நிறுவனத்தோடு தொடர்புபட்ட சகலரையும் கருதுகிறார் என்றும் கொள்ள முடியும். அதாவது நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள், போட்டியாளர்கள் மற்றும் அந்த நிறுவனத்தோடு தொடர்புடைய யாவரையும் திருவள்ளுவர் கருதுவதன் மூலம் முகாமையாளர் தனியே தனது பணியாளர்கள் என்ன செய்கிறார்கள் என்ன கருதுகிறார்கள் என்று மட்டும் அவதானிப்பதை விட்டு விட்டு சகலரையும் அவதானிக்க வேண்டும் என்று கூறுகிறார் .

இங்கு திருவள்ளுவர் எல்லாம் நிகழ்பவை என்று கூறுவதன் மூலம் எல்லா நேரத்திலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் நிறுவனத்தில் நடைபெறும் அனைத்துச் செயல்களையும் கருதுகிறார் என்பதனால் முகாமையாளர் இவை தொடர்பாகக் கூடிய அவதானம் செலுத்த வேண்டும்.

அதாவது நிறுவனத்துடன் தொடர்புபட்ட அனைவரினதும் சொல் தொடர்பாகச் செயல் தொடர்பாக முகாமையாளர் விழிப்பாக இருக்க வேண்டும் அப்போதுதான் இயக்குதல் என்ற செயற்பாட்டை சிறப்பாகச் செய்ய முடியும் என்கிறார் திருவள்ளுவர்.

எனவே முகாமையாளர் நிறுவனத்தில் நடக்கின்ற அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் செய்திகளைத் திரட்டி முன்கூட்டியே அறிந்து நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் இதுவே அவரது தொழில் என்பதை திருவள்ளுவர் இவ் ஈரடியின் மூலம் விளக்குகிறார்.

இவ்வாறு முகாமையாளர்வெற்றிகரமாக் தனது இயக்குதல் தொழிலைச் செய்ய வேண்டுமாயின் அவரிடம் தேவையான ஆளணி, நிதி, இயந்திரங்கள், இடம், வாடிக்கையாளர், ஆலோசகர்கள், தெளிவான இலக்கு மற்றும் வேலைத்திட்டம் என்பன கண்டிப்பாக இருக்க வேண்டும். இதனை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார் .

**"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு".(குறள்381)**

படை, குடி ,கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்று கூறப்படும் ஆறு அங்கங்களையும் உடையவனே அரசருள் ஆண் சிங்கம் போன்றவன் என்கிறார் திருவள்ளுவர்.

அதாவது ஆற்றல் மிகுந்த படைகள், அறிவு நிறைந்த குடிமக்கள், குறைவற்ற மூலவளம் (கூழ்), எந்தக் குறையுமில்லாத அமைச்சு, முறிபடாத நட்பு, எவராலும் மோதியழிக்க முடியாத பாதுகாப்பு அரண்கள் ஆகிய ஆறு சிறப்புகளும் உடைய அரசனே அரசர்களுக்கிடையே எல்லாம் ஆண் சிங்கம் போன்ற அரசனாவான் என்கிறார் திருவள்ளுவர் .

எவ்வாறு படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்று கூறப்படும் ஆறு அங்கங்களையும் உடையவன் சிறந்த அரசனோ அதேபோல் ஒரு நிறுவனத்தில் தேவையான பணியாளர் (படை) தேவையான மக்கள் அல்லது வாடிக்கையாளர் (குடி) தேவையான நிதி மற்றும் ஏனைய வளங்கள் (கூழ் ) தேவையான ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்கள் (அமைச்சு) தேவையான உதவிகளை செய்வோர் அல்லது அடுத்த நிலையிலுள்ள முகாமையாளர்கள் (நட்பு) தேவையான இலக்கு மற்றும் இடம் (அரண்) என்பவற்றை உடைய முகாமையாளர்கள் எப்போதும் வெற்றிகரமானவர்கள்.

அவர்களால் மட்டுமே சிறப்பாக பணியாளர்களை இயக்கமுடியும் என்ற உண்மையை திருவள்ளுவர் இங்கு உரைக்கின்றார்.

மங்கையர் முற்றம்

# மன அழுத்தத்தால் உண்டாகும் சருமப் பிரச்சினைகள்

வாழ்க்கை எவ்வளவு எக்ஸைட்டிங்காக இருக்கிறதோ அவ்வளவு மன அழுத்தத்தையும் கொண்டிருக்கிறது. வேலையில் இருக்கும் அழுத்தம், வீட்டை கவனிப்பது, தினமும் செய்ய வேண்டிய விஷயங்களின் பட்டியல் என்று பலவற்றை நம் மனதில் வைத்துக் கொண்டு வாழ்க்கை நகர்கிறது.

மன அழுத்தம் என்பது ஒருவரது உடலில் பல பிரச்சினைகள் எளிதில் வர காரணமாக இருக்கும். தற்போது நிறைய மக்கள் பல்வேறு உடல்நல பிரச்சினையால் அவஸ்தைப்படுவதற்கு இது தான் காரணம். இதனால் உடலில் மட்டுமின்றி, சருமத்திலும் பல பிரச்சினைகளை உண்டாக்கும்.

மன அழுத்தம் மற்றும் நரம்பு பதற்றம் அதிகரிக்கும் போது, சரும அரிப்பு பிரச்சினையைத் தூண்டும். நீங்கள் அதிகமான அளவில் அழுத்தத்தில் இருக்கும்போது, முகத்தில் பருக்களும் உருவாகும். இதற்கு ஹோர்மோன் கோர்டிசோல் காரணம். மன அழுத்தம் அதிகரிக்கும் போது, தூக்கமின்மை ஏற்பட்டு, அதன் காரணமாக கருவளையங்கள் ஏற்படும். முகத்தில் இரத்தோட்டம் குறைந்து, அதனால் கண்களைச் சுற்றி கருவளையங்கள் ஏற்படும்.

இதன் காரணமாக ஏற்படும் சரும பிரச்சினைகளில் இருந்து விடுபட இந்த



குறிப்புகளை சரியாக பின்பற்றினால் நல்ல பலனைப் பெறலாம்.

**துளசி டோனர்:** உலர் துளசி இலைகள் – ஒரு கைப்பிடி, வெந்நீர் – 1 கப்,

**செய்முறை:** உலர் துளசி இலைகலை மசித்து, 1 கோப்பை நெந்நீரில கலந்து கொள்ளவும். இந்த கலைவை ஆறியவுடன் இலைகளை எடுத்துவிட்டு நீரை ஸ்பிரே போத்தலில் ஊற்றி, உங்கள் சருமம் மீது தெளித்துக்கொள்ளவும். தினமும் முகம் கழுவும் முன், இந்த டோனரை முகம் முழுவதும் பரவும் வகையில் பஞ்சு கொண்டு துடைத்துக்கொள்ளவும். பரு உள்ளவர்களுக்கு இது மிகவும் நல்லது. துளசி கிருமி நாசினியாக செயல்பட்டு கிருமிகளை நீக்குகிறது. சருமத்தையும் மேம்படுத்துகிறது.

மன அழுத்தம் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற காரணங்களால் சருமத்தின் ஈரப்பதத்தை உறிஞ்சலாம். இதற்கு மொய்ஸ்சரைசர் சிறந்த தீர்வு. இது ஈரப்பதத்தை காக்கிறது. சுருக்கங்களுக்கான தற்காலிக பில்லர்களாக செயற்பட்டு சருமத்திற்கு மென்மையை அளிக்கிறது.

**அவகாடோ தேன் மொய்ஸ்சரைசர்:** பிரெஷ் கிரீம் – 3 ஸ்பூன், அவகாடோ – பாதி அளவு, தேன் – 1 தே.கரண்டி

அவகாடோ பிரஷ் கிரீம் மற்றும் தேன் ஆகியவற்றை மிக்ஸியில் போட்டு மா பதத்தில் அரைத்துக்கொள்ள வேண்டும். இதை முகத்தில் பூசி, 25 நிமிடங்கள் உலர வைத்து, அதன் பின்னர் வெதுவெதுப்பான நீரில் கழுவவும்.

இந்த மொய்ஸ்சரைசரை பூசி 25 நிமிடங்கள் காத்திருக்கும் நேரத்தில் கண்கள் மீது வெள்ளரி துண்டுகளை வைத்துக்கொள்ளவும். அல்லது பன்னீரில் நனைத்த பஞ்சை வைத்துக்கொள்ளவும்.

மொய்ஸ்சரைசர் வயதாகும் தன்மைக்கு எதிரானது. இது சருமத்தில் ஈரப்பதத்தை தக்க வைத்துக் கொள்ளும்.

**மன அழுத்தம் உடலில் மட்டுமின்றி, சருமத்திலும் பல பிரச்சினைகளை உண்டாக்கும். மன அழுத்தம் மற்றும் நரம்பு பதற்றம் அதிகரிக்கும் போது, சரும அரிப்பு பிரச்சினையைத் தூண்டும். நீங்கள் அதிகமான அளவில் அழுத்தத்தில் இருக்கும்போது, முகத்தில் பருக்களும் உருவாகும்**

# அற்புத மருந்தாகும் அன்னாசிப்பூ

அன்னாசிப் பூவை பயன்படுத்தி பல வியாதிகளுக்கு மருந்து தயாரிக்கப்படுகிறது. இந்த அன்னாசிப் பூவின் மூலம் மாதவிலக்கை சரிசெய்யக்கூடிய மருந்து தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்:** அன்னாசிப்பூ, பெருங்காயம், பனை வெல்லம்.

**தயாரிக்கும் முறை:** முதலில் ஒரு பாத்திரத்தில் நீர் விட்டு கொதிக்க வைத்து அதில் சிறிதளவு பெருங்காயப்பொடி, பனை வெல்லம் மற்றும் இளம் சூட்டில் வறுத்து எடுத்த அன்னாசிப் பூ பொடி இவை அனைத்தையும் சேர்த்து நன்றாக கொதிக்க விட வேண்டும்.

பின்பு இதை வடித்து எடுத்து, தினமும் காலையில் அருந்தி வந்தால் தடைப்பட்ட மாதவிலக்கு சீரற்ற மாதவிலக்கு போன்ற பிரச்சினைகள் குணமாகும். வைரஸ் தொற்றால் ஏற்படும் காய்ச்சல் சளி உடல் வலியையும் போக்கும்.

அன்னாசிப்பூ, இஞ்சி, சீரகம் மற்றும் பனங்கற்கண்டு இவற்றை ஒரு பாத்திரத்தில் நீர்விட்டு 1 தே.க அண்ணாச்சி பூ பொடி, 1/2 தே.க நறுக்கிய இஞ்சி, 1/4 தே.க சீரகம், சிறிதளவு பனங்கற்கண்டு சேர்த்து நன்றாக கொதிக்க விட வேண்டும்.

இவை நன்றாக கொதித்து ஆறியதும் அதை வடிகட்டி வைத்துக் கொண்டு காய்ச்சல் ஏற்படும் பொழுது மாலை வேளைகளில் குடித்து வந்தால் சளி, உடல் வலி ஆகியவை விரைவில் குணமாகிவிடும். பருவநிலை மாற்றத்தால் உண்டாகும் தொற்றுகளை நீக்கும்.



Ladies Fashion



# பெண்களை பாதிக்கும் வெரிகோஸ்



வெரிகோஸ் வெயின்ஸ் என்பது நரம்பு சுருட்டி கொள்ளும் ஒரு வகை நோய். இது ஆண்களை விட பெண்களை அதிகம் பாதிக்கிறது. பெண்களுக்கு சுரக்கும் ஹோர்மோன்கள் தான் இந்த பிரச்சினை ஏற்படுவதற்கு முக்கியக் காரணமாக அமைகிறது. 30 வயதுக்கு மேல் 70 வயது வரை உள்ள பெண்களுக்கு இந்நோய் ஏற்படுகிறது. கால் நரம்பு சுற்றிக் கொள்ளும் பிரச்சினை என்பது கால்களில் உள்ள நரம்புகள் புடைத்துக் கொள்வதாகும்.

இதயம் தான் உடல் உறுப்புக்கள் அத்தனைக்கும் ஒக்ஸிஜன் நிறைந்த இரத்தத்தை அனுப்புகிறது. இதற்கு கால் நரம்புகளில் உள்ள வால்வுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவை பழுதடைந்தால் நரம்புகளில் அடைப்பு ஏற்பட்டு, அவை கால்களிலேயே தங்கி விடும். தலையிலிருந்து, கால் வரைக்கும் இந்த இரத்தத்தை கொண்டு போகும் இரத்தக் குழாய்களுக்கு வெயின்ஸ் என்று சொல்வார்கள்.

கார்பன் டை ஆக்ஸைடு கலந்த இரத்தத்தை திரும்பவும் இதயத்துக்கு கொண்டு வருவது இந்த வெயின்ஸ் தான். இப்படி இரத்தம் இதயத்துக்கு போக கால் தசைகளும் உதவி செய்யும். அப்படிப் போகும் பொழுது, கால்களில் உள்ள நாளங்கள் வீங்கி, புடைப்பதால் இரத்த நாளங்களில் உள்ள வால்வுகள் பலவீனமாக இருக்கும் பொழுது வெரிகோஸ் வெயின்ஸ் வரலாம்.

உடல்பருமனாக உள்ளவர்கள், கர்ப்பிணி பெண்கள், அதிலும் குறிப்பாக அதிக குழந்தைகள் பெறும் தாய்மார்கள், மெனோபாஸ் காலத்தை அண்மித்தவர்கள் ஆகியோருக்கு இந்தப் பிரச்சினை இருக்கும்.

இதனால், பரம்பரை ரீதியாகவும் குறிப்பிட்ட பெண்கள் பாதிக்கப்படுவார்கள். இதை தடுப்பது மிகவும் கடினமானது. காரணம் மனிதர்கள் கால்களில் தானே நடக்கிறோம்? இருப்பினும் இந்நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை சிலர் முன் கூட்டியே நடவடிக்கை எடுப்பதன் மூலம் தடுக்க முடியும்.

வருமுன் தவிர்ப்பது தான் இதற்கான முதற்படி. அதனால் அனைவருக்கும் உடற்பயிற்சி மிக முக்கியம். இது தவிர உடல் எடையைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், நீண்ட நேரம் நின்றபடியே பணிபுரிவதைத் தவிர்ப்பது, நார்ச்சத்து நிறைந்த உணவு வகைகளை அதிகம் உண்பது. கால்களில் எப்போதும் ஸ்டொக்கிங்ஸ் உபயோகிப்பது நல்லது.

மேலும், ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு மருந்து கொடுத்து குணப்படுத்தலாம். முதலில் சுருண்ட நரம்புகளை முற்றிலுமாக பழைய நிலைக்குக் கொண்டு செல்லவோ, குணப்படுத்தவோ முடியாது.

ஊசி மூலம் குணப்படுத்துதல் ஸ்கெலரோதெரபி என்று பெயர். ஆனால் இந்த முறையை பின்பற்றினால் நீண்ட நாட்கள் பின்பற்ற வேண்டும். இடையில் நிறுத்தினால் முழுமையான பயன் கிடைக்காது. அறுவை சிகிச்சை முறையிலும் இந்நோயை குணப்படுத்தலாம்.

பழுதடைந்த நரம்புகளில் லேசர் ஃபிளமென்ட் மூலம் அடைப்பது நவீன முறையாகும். இந்த சிகிச்சை முறையில் சில தீமைகளும் உள்ளன. லேசர் சிகிச்சை மூலம் வெளியாகும் அதிகபட்ச வெப்பம், கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும்.

ரேடியோ அலை சிகிச்சை (Radio Frequency Ablation RFA) இப்புதிய முறை பரவலான வரவேற்பைப் பெற்றுள்ளது. காரணம் இந்த சிகிச்சை முறையில் வலி மிகக் குறைந்த அளவில் இருக்கும். மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறாமல், வெளிநோயாளர் சிகிச்சையே போதுமானது.

# ஷெம்பூ தலைக்கு மட்டுமல்ல வீட்டு உபயோகத்திற்கும் சிறந்தது

நாம் தலைக்கு பயன்படுத்தும் ஷெம்பூவில் சில செயற்கை இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த இரசாயனங்கள் நம் தலையை மட்டும் சுத்தம் செய்வதோடு மட்டுமல்லாமல், நம் வீட்டில் இருக்கும் பொருட்களையும் சுத்தம் செய்யவும் பயன்படுத்தலாம்.

★ வீடு துடைக்க லைசோல் இல்லாத நேரத்தில் நீங்கள் பயன்படுத்தும் ஷெம்பூ அரை பெக்கெட்டுடன் அரை பெக்கெட் தண்ணீர் சேர்த்து தண்ணீரை குலுக்கி விடாமல் மொப்பை மெதுவாக உள்ளே நுழைத்து, பிழிந்த பின்னர் துடைத்து பாருங்கள், வீடு வாசமாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

★ அடிக்கடி கைகளை கழுவ வேண்டும் என்பதற்காக ஹேண்ட் வொஷ் வாங்கி வைப்பது உண்டு. ஹேண்ட் வொஷ் இல்லாத சமயங்களில் அல்லது ஹேண்ட் வொஷ் பயன்படுத்த முடியாதவர்கள் ஏதாவது ஒரு காலியான ஹேண்ட் வாஷ் போத்தலில் முக்கால் அளவிற்கு தண்ணீர் எடுத்து கொள்ளுங்கள். அதனுடன் அரை பெக்கெட் ஷெம்பூவை கலந்து குலுக்கி வைத்துக் கொள்ளுங்கள். இதை ஒரு வாரம் வரை பயன்படுத்தலாம்.

★ நம் தலைமுடி பளபளப்பாக இருக்க ஷெம்பூவில் இரசாயனங்கள் கலக்கப்படுகின்றன. இந்த கலவை நம் வீட்டில் இருக்கும் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை சுத்தம் செய்வதற்கு மிகவும் உபயோகமாக இருக்கும். கண்ணாடி பொருட்கள் அல்லது முகம் பார்க்கும் கண்ணாடியை சுத்தம் செய்வதற்கு ஷெம்பூ கலந்த ஸ்பிரே பயன்படுத்தலாம். ஸ்ப்ரே போத்தலில் ஷெம்பூவை ஊற்றி கலந்து வைத்துக் கொண்டு ஃப்ரிட்ஜ், மிக்ஸி, வொஷிங் மெஷின், கிரைண்டர், டிவியின் மேற்புறம் போன்றவற்றை கூட ஸ்பிரே செய்து சுத்தமான துணியில் துடைத்து எடுத்தால் பளிச் பளிச்சென்று மின்னும்.

★ நிறம் மங்கி அழுக்காக இருக்கும் தங்கம் மற்றும் வெள்ளி நகைகளுக்கு ஒரு துளி ஷெம்பூ கையில் போட்டுக் கொண்டு நகைகளை அலசி, ஒரு பழைய டூத் பிரஷ் கொண்டு லேசாக தேய்த்தால் புதிது போல மின்ன ஆரம்பிக்கும். நகைகள் மட்டுமல்ல தலைவார பயன்படுத்தும் சீப்பை கூட இந்த முறையில் நீங்கள் சுத்தம் செய்யலாம்.



# மருதாணியில் இத்தனை நன்மைகளா?

மருதாணி இலையில் இருந்து பெறப்பட்ட மருதாணி எண்ணெய்யை தலைக்கு அடிக்கடி தேய்த்து வந்தால் உடல் உஷ்ணத்தை தணித்து, நரம்புகளை குளிர்ச்சியாக்கி தூக்கமின்மை பிரச்சினை நீங்குகிறது.


மருதாணி இலைகளை அரைத்து கைகளில் இட்டுக்கொள்வதால் கைகளில் இருக்கும் முரட்டு தன்மை நீங்கும். மன அழுத்தங்களை குறைக்கும். மருதாணியை விரல்களின் நகங்களின் மீது வைத்துக் கொள்வதால் நகசுத்து பாதிப்பு ஏற்படாமல் தடுக்கும்.

இதயத்திற்கு இரத்தத்தை கொண்டு செல்லும் இரத்த நாளங்களில் இரத்தம் கட்டிக்கொள்ளும் நிலை ஏற்படாமல் தடுக்கும் ஆற்றல் மருதாணி இலைகளுக்கு உண்டு. இதயம் சம்பந்தமான நோய்கள் ஏற்படக்கூடாது என நினைப்பவர்கள் மருதாணி இலை தண்ணீரை பருகி வருவது நல்லது.

மருதாணி இலைகளை நன்கு அரைத்து தலைவலி ஏற்படும் போது நெற்றியில் தடவி வந்தால் எப்படிப்பட்ட தலைவலி பிரச்சினைகளும் தீரும். மருதாணியை உள்ளங்கை மற்றும் பாதத்தில் வைப்பதால் அதில் உள்ள குளிர்ச்சி தன்மை உடல் சூட்டை குறைக்கிறது. இதனால் உடல் வெப்பத்தால் ஏற்படும் தோல் நோய்கள், வயிற்று உபாதைகள் போன்றவை கட்டுப்படுத்தப்படுகிறது.

மருதாணி இலைகளை நீரில் ஊறவைத்து, வாய் கொப்பளித்து வந்தால் தொண்டை கரகரப்பு, தொண்டைக் கம்மல் குணமாகும். மருதாணிப் பூவினை ஒரு துணியில் சுற்றி, தலைமாட்டில் வைத்துப் படுத்தால் தூக்கம் நன்றாக வரும்.






## மேஷம்

மிதுன ராசியில் சுக்ர சஞ்சாரம் காரணமாக தனவரவு தாராளமாகும். பிள்ளைகளுக்கு படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புக்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறும்.

## ரிஷபம்

மிதுன ராசியில் சுக்ர சஞ்சாரம் காரணமாக பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழிலை விரிவுபடுத்த முயற்சிப்பீர்கள். உத்தியோகத்தில் ஊதியம் மற்றும் உயர் பதவி கிடைக்க வழி பிறக்கும். வழக்குகளில் சாதகமான சூழ்நிலை உருவாகும். ஜீவன ஸ்தானாதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். புகழ்மிக்கவர்களை கொண்டு காரியங்களை சாதிப்பீர்கள். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும்.

## மிதுனம்

மிதுன ராசியான உங்கள் ராசிக்கு பஞ்சம விரையாதிபதியான சுக்கிரன் சஞ்சரித்து உள்ளார். எனவே பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். பின்னணியாக இருக்கும் சில உறவுகளுக்கு நீங்கள் செலவு செய்ய நேரிடும். பிள்ளைகளின் கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசை பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் சாதகமாகும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் வீடு வாகனம் வாங்க சலுகைகள் கேட்டு விண்ணப்பித்தால் அது கைகூடும்.

## கடகம்

மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 4 ,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் விரய ஸ்தானத்திற்கு வரும் பொழுது அங்குள்ள புதனோடு புத சுக்ர யோகத்தை உருவாக்குகிறார். எனவே ஆதாயம் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. பணிபுரிபவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். உத்தியோக உயர்வு கிடைக்கும்.

## சிம்மம்

உங்கள் ராசிக்கு 3 ,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான அவர் மிதுனத்துக்கு வரும் போது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். வீடு வாங்கும் அல்லது கட்டும் முயற்சி கைகூடும். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகத்துக்கு அழைப்புகள் வரலாம். இல்லத்தில் மங்கல ஓசை மற்றும் மழையின் ஓசை கேட்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். வீண் பழிகளில் இருந்து விடுபடுவீர்கள் .

## கன்னி

மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரித்துள்ளார். 9க்கு அதிபதி 10ல் சஞ்சரிக்கும் இந்த நேரம் ஒரு பொற்காலம் தான். தொழில்களில் கிளைத்தொழில் செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சுபச்செலவுகள் அதிகரிக்கும். உறவினர்களுக்குள் ஏற்பட்ட உரசல்கள் மாறும். குடும்பத்தில் மற்ற உறுப்பினர்களுக்கும் வேலை கிடைத்து வருமானம் பெருகும்.

## துலாம்

மிதுன ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு அதிபதியான சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இக்காலம் ஒரு இனிய காலமாகும். நினைத்தது நிறைவேறும் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். அதிலும் புதன் தன் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். அலுவலகத்தில் எதிர்பார்த்து காத்திருந்த சலுகைகள் கிடைக்கும். தேங்கியிருக்கும் காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும்.

## விருச்சிகம்

மிதுன ராசியில் சுக்கிர சஞ்சாரம் காரணமாக தொழில் வளம் சிறப்பாக இருக்கும். செல்வநிலை உயரும் புதிய தொழில் தொடங்குவதற்கு தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சுயதொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள். பழைய நகைகளை கொடுத்து புதிய நகைகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கொடுக்கும் விதத்தில் பல நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

## தனுசு

மிதுன ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு லாப அதிபதியான சுக்கிரன் 7ல் வரும்பொழுது பகை கிரகமாக இருந்தாலும் பலன் கொடுக்கும். எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியங்கள் பலவும் செய்து முடிப்பீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டு கொண்டு வரும் வாய்ப்பு கிட்டும். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. பெண் வழி பிரச்சினைகள் அகலும். உத்தியோகத்தில் பணி நிரந்தரமாகும்.

## மகரம்

மிதுன ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். பஞ்சமாதிபதி 6ல் வரும் இந்த நேரம் பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும். நகைகள் வாங்குவதில் ஆர்வம் செலுத்துவீர்கள். உறவினர்களும் நண்பர்களும் ஆதரவாக இருப்பார். மனக் குழப்பம் அகலும். வியாபாரத்தில் பற்று, வரவு கணிசமாக உயரும். கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடை பெறவில்லை என்ற கவலை அகலும்.

## கும்பம்

மிதுன ராசியில் சுக்கிர சஞ்சாரம் காரணமாக அரசு வழி அனுகூலம் உண்டு. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். அதிகாரிகளின் அன்புக்கு பாத்திரமாகி உத்தியோகத்தில் உயர்ந்த நிலையை காண்பீர்கள். சக ஊழியர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

## மீனம்

மிதுன ராசியில் சுக்கிரன் சஞ்சரித்து உள்ளார். அட்டமஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் சுகஸ்தானத்தில் வரும் இந்த நேரம் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். குடும்பத்தில் மருத்துவச் செலவு வரலாம். தொழில் வளர்ச்சி ஏற்படும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே திரும்பி வரக் கூடும். பொதுவாழ்வில் வீண்பழிகள் வரலாம். இக்காலத்தில் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது.

# தத்தளிக்கும் சிறார்களுக்காக வாழ்நாளை அர்ப்பணிக்க தயார்

## – எஸ்.ஓ.எஸ். அன்னை றோஸ்மலர்



தாய்ப் பாசத்துக்காக ஏங்கித்தவிக்கும் சிறார்களுக்கு உன்னதமான தாய்ப் பாசத்தை வழங்குவதற்கான மகத்தான அரிய வாய்ப்பு தனக்கு கிட்டியுள்ளதாக, எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தில் அன்னையாக பணியாற்றும் ஆரோக்கியநாதர் றோஸ்மலர் தெரிவித்துள்ளார்.

தங்களது பெற்றோரின் அரவணைப்பின்றி தத்தளித்துக்கொண்டிருந்த 24 சிறார்களுக்கு தான் அன்னையாக இருந்து, அவர்களுக்கு தாய்ப்பாசத்தை வழங்கி ஆளாக்கியுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

தாய்ப்பாசத்தை வழங்கி உன்னதமான சேவையாற்றும் வாய்ப்புக் கூட, அச்சிறார்களினால் தனக்குக் கிட்டியுள்ளதாகவும், அவர் கூறினார்.

சமூகத்தில் எதிர்பாராதவிதமான சூழ்நிலைகளினால் பெற்றோரை இழந்து தத்தளிக்கும் சிறார்களையும் குடும்ப சூழ்நிலைகளினால் உரிய பெற்றோரினால் அரவணைக்க முடியாத சிறார்களையும் ஒன்றுசேர ஒரே குடையின் கீழ் அரவணைத்து உன்னதமான சேவையாற்றும் கிராமமாக எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமம் உள்ளது.

இந்த எஸ்.ஓ.எஸ். கிராமத்தின் யாழ்ப்பாணக் கிளையில் சேவையாற்றுபவரான பலாலியைச் சேர்ந்த 49 வயதுடைய றோஸ்மலர் தனது சேவை பற்றி தினகரன் வாரமஞ்சரி வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கின்றார்....

யாழ்ப்பாணம், பலாலியைச் சேர்ந்த எனக்கு, யுத்த சூழ்நிலை காரணமாக க.பொ.த. சாதாரணதரம் வரையே பாடசாலைக் கல்வியைத் தொடர முடிந்தது. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது ஊரில் நிலவிய யுத்த சூழ்நிலையைத் தொடர்ந்து, நாம் உடைமைகள் அனைத்தையும் இழந்து இடப்பெயர்வுக்கு உள்ளாகியதோடு, எமது குடும்பமும் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் நிலைமைக்கு தள்ளப்பட்டது. இந்நிலையில், மேற்கொண்டு எனது பாடசாலைக் கல்வியை தொடர முடியாத சூழ்நிலை ஏற்பட்டதோடு, திருமண வாழ்க்கையும் எனக்கு அமையவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் தனிமையில் எனது வாழ்நாளை தொலைத்துவிடக் கூடாதெனவும், சமூகத்துக்கு ஏதாவதொரு வகையில் சேவையாற்ற வேண்டுமெனவும் எண்ணினேன். அப்போது எனது 29ஆவது வயதில் முதியோருக்கு சேவையாற்ற வேண்டுமென்று எண்ணிய எனக்கு, எதிர்பாராத திருப்புமுனையாக சமூகத்தில் தத்தளிக்கும் சிறார்களுக்குச் சேவையாற்றும் பாக்கியம் கிட்டியது என்கின்றார் அவர்.

இந்நிலையில், கடந்த 2011ஆம் ஆண்டு முதல் எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் சேவையாற்றும் பாக்கியம் எனக்கு கிட்டியது. அச்சேவையில் இணைந்து இவ்வருடத்துடன் சுமார் 11 வருடங்களாகின்றன என்கின்றார் அவர்.

ஒவ்வொரு சிறார்களும் வெவ்வேறுப்பட்ட இடங்களிலிருந்து வெவ்வேறுப்பட்ட குடும்ப சூழ்நிலைகளிலிருந்து வருவதோடு மாத்திரமின்றி, அவர்கள் வெவ்வேறுபட்ட மனநிலைகளைக் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறு என்னிடம் ஒப்படைக்கப்படும் சிறார்களுக்கு முதலில் தாய் ஸ்தானத்திலிருந்து தாய்ப்பாசத்தை வழங்குகின்றேன். இதனைத் தொடர்ந்து அச்சிறார்களை ஒரே குடும்பக் கட்டமைப்புக்குள் கொண்டுவரும் வகையில், அச்சிறார்களின் தனிப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றேன் என்கின்றார் அவர்.

எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் ஏற்கெனவே இணைந்துள்ள சிறார்களுடன், புதிதாக வரும் சிறார்களை மெது மெதுவாக இணைக்கின்றேன்.

என்னிடம் ஒப்படைக்கப்படும் சிறார்களுக்கு, நான் ஓர் அன்னையாக இருந்து நேரடியாகச் சொல்லி வளப்படுத்துவதற்கு அப்பால், அச்சிறார்கள் எமது எஸ்.ஓ.எஸ். கிராமத்திலுள்ள ஏனைய சிறார்களுடன் சேர்ந்து பழகுவதால் அவர்களை நல்லதொரு பண்பட்ட கட்டமைப்புக்குள் இலகுவில் கொண்டுவர முடிவதோடு, இது வெற்றிகரமாகவும் அமைகின்றது என்கின்றார் அவர்.

எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் வைத்து பராமரிப்பதற்காக ஒப்படைக்கப்படும் சிறார்களை, அன்னையர்களாகிய எம்மிடம் ஒப்படைக்கும்போது, 3 கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

அவையாவன, சிறார்களின் பண்பட்ட பழக்கவழக்கம், அவர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம், கல்வி ஆகியவற்றோடு, அவர்கள் சமூகத்தில் நற்பிரஜைகளாக திகழ வேண்டும் என்பனவேயாகும். இம்மூன்று கோரிக்கைகளையும் நாம் கவனத்திற்கொண்டு, அச்சிறார்களை வளர்த்து ஆளாக்குவதே எம் கண் முன்னால் காணப்படும் பாரிய சவாலாகும்.

இச்சவாலை நான் சாதகமாக ஏற்றுக்கொண்டு, குறித்த 3 கோரிக்கைகளையும் பின்பற்றி, என்னிடம் ஒப்படைக்கப்பட்ட சிறார்களை சமூகத்தில் நற்பிரஜைகளாகவும் இணைத்துள்ளேன் என்கின்றார் அவர்.

மேலும், எமது எஸ்.ஓ.எஸ். அமைப்பின் நிபந்தனைக்கமைய ஓர் அன்னையின் வகிபாகமானது 60 வயதுவரையேயாகும். இருந்தபோதிலும் அவ் 60 வயதிற்கு அப்பால் பணியாற்றும் பாக்கியம் எனக்கு கிட்டினால், சமூகத்தில் தத்தளிக்கும் சிறார்களுக்காக எனது வாழ்நாளை அர்ப்பணித்து சேவையாற்ற நான் தயாராகவுள்ளேன் என்கின்றார் அவர்.

திருமண வாழ்க்கை எனக்கு அமையவில்லை என்று நான் சோர்ந்து போகவில்லை. நான் பெண்ணாக இருந்துகொண்டு சமூகத்தில் உன்னதமான சேவையாற்றி என்னை அர்ப்பணிப்பதற்கு எத்தனையோ வழிகள் உள்ளன என்பதை உணர்ந்துகொண்டேன்.

அவ்வாறான உன்னதமான சேவைகளில் ஒன்றே மழலைச் செல்வங்களை அன்புடன் அரவணைப்பது. தற்போது அச்சேவையாற்றி நான் மனத்திருப்தி அடைகின்றேன்.

தாய்மையானது, நாம் பிள்ளைகளை பிரசவித்து வளர்ப்பதில் மாத்திரம் அடங்கிவிடவில்லை. அதற்கும் அப்பால், யாரோ பிரசவித்த சிறார்களை எமது பிள்ளைகளாக அரவணைத்து அவர்களை சமூகத்தில் நற்பிரஜைகளாக ஆளாக்குவதிலும் உன்னதமான தாய்மை தங்கியுள்ளது. இங்குதான் தாய்மை, பெண்மை மதிக்கப்படுவதோடு, பூரணத்துவமும் அடைகின்றது என்கின்றார் அவர்.

## தற்போதைய சூழ்நிலையில் பெற்றோரால் பராமரிக்க முடியாத சிறார்களை பொறுப்பேற்க நாம் தயாராகவுள்ளோம்

### - திவாகர் ரட்னதுரை



திவாகர் ரட்ணதுரை

எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமமானது 3 எழுத்துகளைக் கொண்டதாக ஒஸ்ரியாவில் 1949ஆம் ஆண்டில், அதாவது இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர், பெற்றோரை இழந்து தனது சகோதரியால் பராமரித்து வளர்க்கப்பட்டவரான கலாநிதி ஹேர்மன் மைனர் என்பவரினால் தொடங்கப்பட்டதோடு, தற்போது 138 நாடுகளில் அதன் கிளைகளைக் விஸ்தரித்துள்ளது எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமம்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பாதிப்புற்ற சிறுவர்களை மையமாகக் கொண்டே அப்போது இந்த எஸ்.ஓ.எஸ். கிராமம், கலாநிதி ஹேர்மன் மைனரினால் தொடங்கப்பட்டதாக, இலங்கைக்கான எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தின் தேசிய இயக்குநர் திவாகர் ரட்னதுரை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கையிலும் எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமமானது 6 இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. 198ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசாங்கத்தின் அனுமதியுடன் 15 ஏக்கர் இட வசதியுடன் பிலியந்தலையில் அதன் தலைமைக் காரியாலயம் உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நுவரெலியா, காலி, அநுராதபுரம், மொணராகலை, யாழ்ப்பாணத்திலும் எஸ்.ஓ.எஸ். கிராமம் அதன் கிளைகளைக் பரப்பியது.

அத்தோடு, பெற்றோரால் பராமரிக்கப்பட முடியாத சிறார்களையும் கவனத்திற்கொண்டு குடும்ப வலுவூட்டல் திட்டத்தை, மேற்கண்ட 6 இடங்கள் உட்பட காலியின் பெரலியவிலும், மாத்தறையின் கந்தரவிலும், முல்லைத்தீவின் மல்லாவியிலும் எஸ்.ஓ.எஸ். கிராமம் மூலமாக மேற்கொள்கின்றோம்.

மேலும், எமது சேவைகளில் Vocational Training Centres ஐயும் நடத்துவதோடு, இந்நிலையங்களானவை மொனராகலை, பண்டாரவளையின் மல்பொத, அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ளன. இந்நிலையங்களில் எஸ்.ஓ.எஸ். கிராம சிறார்களுக்கு மாத்திரமின்றி, வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள ஏனைய சிறார்களுக்கும் இலவச பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதனை விடவும், கல்வியமைச்சின் அனுமதியுடன் சுமார் 1,000 சிறார்கள், க.பொ.த. உயர்தரம்வரை கல்வி கற்கும் வகையில், ஹேர்மன் மைனர் எனும் பாடசாலை பிலியந்தலையில் இயங்குவதோடு, இச்சிறார்களுக்காக சுகாதார அமைச்சுடன் இணைந்து பிலியந்தலையில் சுகாதார நிலையமொன்றையும் நடத்துகின்றோம்.

இலங்கையில் எஸ்.ஓ.எஸ். கிராமமானது, சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டு, அதன் கோட்பாட்டுக்கமைய இயங்கி வருகின்றது. சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு பிரிவின் மூலமாக நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, இச்சிறார்கள், எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

இந்நிலையில், இச்சிறார்களின் உரிமைகளுக்கு பாதுகாப்பளித்து, சிறார்களை பராமரிப்பதோடு, அவர்களின் இனம், மதம், மொழி போன்ற விடயங்களுக்கும் எஸ்.ஓ.எஸ். கிராமம் மதிப்பளிக்கின்றது.

தாய்ப்பாசத்துடன் கூடிய உயரிய பாதுகாப்பை சிறார்களுக்கு வழங்குவதோடு, அவர்களின் சுகாதாரம், கல்வியில் கூடிய கவனம் செலுத்துகின்றோம். கல்வியை பொறுத்தவரையில், எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் இருக்கும் சிறார்கள் ஒவ்வொருவரும், குறைந்தபட்சம் என்.வி.கியூ. 3 தரத் தகைமையாவது பெற்றிருக்க வேண்டுமென்பதோடு, மேற்படிப்புகளை தொடரும் சிறார்களுக்கும் முன்னுரிமை வழங்கின்றோம்.

தாய், தந்தையரை இழந்த சிறார்களையும் இன்னோரன்ன குடும்ப சூழ்நிலைகளினால் பெற்றோரினால் கைவிடப்பட்ட சிறார்களையும் நாம் பொறுப்பேற்றுக்கொண்டு பராமரிக்கின்றோம்.

அத்தோடு, பெற்றோரால் பராமரிக்கப்பட முடியாத சூழ்நிலையிலுள்ள சிறார்களுக்கும் குடும்ப வலுவூட்டல், திட்டத்தின் மூலம் எஸ்.ஓ.எஸ். கிராமம் உதவிக் கரம் நீட்டுகின்றது.

பொதுவாக, பிரசவிக்கப்பட்ட குழந்தைகளிலிருந்து 10 வயதுக்குட்பட்ட சிறார்களை நாம் பொறுப்பேற்கின்றோம்.

இருந்தபோதிலும், ஒரு குடும்பத்தில் ஒரே சகோதரர்கள் இருக்கும் பட்சத்தில், அச்சகோதரர்களில் ஒருவருக்கு சற்று வயது கூடினாலும், அச்சகோதரர்களைப் பிரிக்காது நாம் பொறுப்பேற்கின்றோம். அதேநேரம் ஆண், பெண் எனும் பாகுபாடும் சிறார்கள் மத்தியில் காட்டாமலும் ஒரே குடும்பக் கட்டமைப்பின் கீழ் அச்சிறார்களை நாம் வளர்க்கின்றோம்.

பெண் சிறார்களை பொறுத்தவரையில் 18 வயதுவரையே தங்களது எஸ்.ஓ.எஸ். கிராம அன்னையுடன் தங்கியிருக்கலாம். அதன் பின்னர் அவர்கள் எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பெண்கள் விடுதியில் தங்கியிருந்து சமூகத்தில் இணைய முடியும்.

ஆண் சிறார்களை பொறுத்தவரையில் தங்களது எஸ்.ஓ.எஸ். கிராம அன்னையுடன் 14 வயதுவரை தங்கியிருந்து, அதன் பின்னர் Youth Boys Home இல் இணைய முடியும். அங்கு அவர்கள் தமது 18 வயதை பூர்த்தி செய்து, சமூகத்தில் இணைய முடியும்.

எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் தங்கியிருக்கும் சிறார்களின் வயதெல்லையானது 18ஆக இருந்தபோதிலும், அப்பதினெட்டு வயதுக்குப் பின்னரும் அவர்கள் பாதுகாப்புக்காக எம்முடன் தங்க விரும்பும் பட்சத்தில், அவர்கள் சமூகத்தில் இணையும்வரை நாம் அவர்களுக்கு பாதுகாப்பு வசதி வழங்குகின்றோம்.

இலங்கையில் எஸ்.ஓ.எஸ். கிராமம் தொடங்கிய காலகட்டத்தில் ஓர் அன்னையிடம் 10 சிறார்களை பராமரிப்புக்காக ஒப்படைத்தோம். அச்சிறார்களை மேலும் சிறந்த அணுகுமுறையுடன் கையாளும் வகையில், தற்போது ஓர் அன்னையிடம் 8 சிறார்களை ஒப்படைக்கின்றோம்.

இக்கிராமத்தில் அன்னையரும் தங்களது சிறார்களை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். சிறார்களும் தங்களது அன்னையரை விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

மேலும், ஏதோவொரு காரணத்தினால் மண வாழ்க்கையில் இணையாத 30 வயது முதல் 45 வயதுக்கிடைப்பட்ட பெண்களையே எமது எஸ்.ஓ.எஸ். கிராம அன்னையராக தெரிவு செய்கின்றோம். 2 வருடகாலத்திற்கு ஓர் அன்னைக்குரிய என்.வி.கியூ. 4 தரத்தைக் கொண்ட பயிற்சியை வழங்குவதோடு, அவர்களுக்கு முதல் 3 மாதங்களுக்கு கொடுப்பனவு வழங்கின்றோம். இதன் பின்னர் ETF, EPF உடன் சம்பளம் வழங்குவதோடு, அவர்களது 60 வயது பூர்த்தியைத் தொடர்ந்து ஓய்வூதியத்தோடு, சேவை அடிப்படையில் கொடுப்பனவும் வழங்கின்றோம்.

எமது பயிற்சியில் தேர்ச்சி பெறுபவர்களை அன்னையாக்குவதோடு, அப்பயிற்சியில் சற்று பின்தங்கி தேர்ச்சி பெறுபவர்களை சிற்றன்னையாக்குகின்றோம். இத்தாய்மார்கள் தங்களது 60 வயதை பூர்த்தி செய்யும் பட்சத்தில், அவர்கள் வேறிடங்களுக்கு செல்லாத வகையில், எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் அவர்களுக்கு நிரந்தர தங்குமிட வசதியையும் ஏற்படுத்திக்கொடுக்கின்றோம். இதன் பின்னர், அவர்கள் சிறார்களுக்கு அம்மம்மாவாக செயற்படும் வகிபாகத்துடன் காணப்படுகின்றார்களார் எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது எமது நாட்டில் நிலவும் இக்கட்டான சூழ்நிலையில், தங்களது பிள்ளைகளை பராமரிக்க முடியாது கஷ்டப்படும் பெற்றோர், அப்பிள்ளைகளை எம்மிடம் ஒப்படைக்கும் பட்சத்தில், அவர்களை பொறுப்பேற்க நாம் தயாராகவுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.



ஆர்.சுகந்தினி ...✍

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

01. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் 2022.09.01 திகதியிலிருந்து 2023.08.31 ஆம் திகதி வரை தொடர்ந்து ஒருவருட காலத்திற்கு **வாயு சீராக்கி உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு சேவை வழங்குவதற்காக** நிபுணத்துவத் திறன் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றது.

02. கீழ்க் குறிப்பிட்ட பிரதேசங்களில் காணப்படும் நிலையங்களுக்கு சேவை வழங்கப்பட வேண்டும்.

 அ. தலைமை காரியாலயம் 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.

 ஆ. அலைவரிசை கண்காணிப்பு நிலையம், கதிரான

 இ. அலைவரிசை கண்காணிப்பு நிலையம், ஹந்தான

 ஈ. பலதரப்பட்ட இயக்கங்களை கொண்ட தொலைக்காட்சி மற்றும் தொலைத்தொடர்புகள் கோபுரங்களை கொண்டுள்ள நிலையம், கொக்குவில்

03. இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்வதுடன் மனு ஆவணங்களை பரீட்சிக்கவும் முடியும். (தொலைபேசி இலக்கங்கள் : 011-2674304)

04. தகுதிவாய்ந்த நிறுவனங்கள் மனு ஆவணங்களை மீளச்செலுத்தப்படாத ரூ.2,000.00 கட்டணத்தினை செலுத்தி 2022.07.25 ஆம் திகதி முதல் 2022.08.16 வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் மு.ப. 09.00 - பி.ப.03.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும்.

05. மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **91 கலண்டர் நாட்கள்** வரை மனுக்கள் செல்லுபடியாகும். டெண்டர் மனுக்களை சரியான முறையில் பூரணப்படுத்தி பிரதியை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2022.08.17 ஆம் திகதி பி.ப.02.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் தரைதளத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வாயு சீராக்கி உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு சேவை வழங்குவதற்கான விலைமனுக்கோரல் (2022.09.01-2023.08.31)"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

தலைவர்,
கொள்முதல் குழு,
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8
தொ.பே. இல : 0112 689345 பெக்ஸ் இல : 0112 689355

---

# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு
# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

## அலுவலக கட்டிடமொன்றை/வீட்டை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக் கோரல் – கண்டி

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் மத்திய மாகாண அலுவலகத்தை நடத்திச் செல்வதற்காக தகைமையான கட்டிடங்கள்/ வீடுகளை கண்டி புறநகர் பிரதேசங்களில் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக விடுக்கப்படும் திறந்த விலைமனுக்கோரல்.

**கட்டிடம் சம்பந்தமாக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்**

1. இக் கட்டிடம்/வீடு கிட்டத்தட்ட 5000 - 10000 சது அடி அளவான இட வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. இக்கட்டிடம் மாதாந்த குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டியதுடன் இதற்காக முற்பணம் செலுத்தப்பட மாட்டாது (Key money)
3. இக்கட்டிடம் பொது போக்குவரத்து வசதிகளைப் பாவித்து இலகுவாக அடையக் கூடிய கண்டி நகரிற்கு மிக அருகில் உள்ள வர்த்தக மயமான பிரதேசத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
4. குறைந்த பட்சம் கிட்டத்தட்ட 05 வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடிய இடவசதிகள் இருத்தல் வேண்டும்
5. மூன்று சுற்று மின் வழங்கலுடன் ஒதுக்கப்பட்ட மின் மீட்டரொன்று இருத்தல் வேண்டும். அத்துடன் மின்சாரம் தடைப்படும் சந்தர்ப்பங்களில் பாவிப்பதற்கு மின் பிறப்பாக்கி இயந்திரமொன்று இருத்தல் மேலதிக தகைமையாகும்.
6. நேரடி நீர்க்குழாய் இணைப்புடன் ஒதுக்கப்பட்ட நீர் மீட்டரொன்று இருப்பதுடன் கட்டிடத்திற்கு 2000L அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் நீரை களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடிய நீர் தாங்கி/ தாங்கிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
7. நிலையான தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
8. பிரதான மின் விநியோகப் பலகையுடன் மின் கட்டுப்பாட்டு அமைப்பு மின் விசிறிகள் மற்றும் ஏனைய துணைப்பாகங்களை கொண்டிருத்தல் வேண்டும்.
9. கட்டிடம் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்பு கட்டிடம் முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2 வாரத்திற்குள் பெற்றுக் கொள்ளும் தகைமையில் இருத்தல் வேண்டும்.
10. சேவையை பெற்றுக் கொள்ள வருகை தரும் சேவை பெறுநர்கள் 10 பேருக்கு (குறைந்த பட்சம்) ஒரே முறையில் அமர்ந்து தமது அலுவலக சேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய இடவசதி கட்டிடத்திற்குள் இருத்தல் வேண்டும்.
11. ஒரு வருடத்திற்கு கிட்டியதாக 30 பயிற்சியாளர்களுக்கு வகுப்புக்கள் நடாத்தக்கூடிய 400 சதுர அடி அளவான விரிவுரை மண்டபங்கள் 02 இருத்தல் வேண்டும்.
12. ஒரு வருடத்திற்கு கிட்டியதாக 50 நபர்களுக்கு கூட்டம் நடத்தக் கூடிய கிட்டத்தட்ட 500 சதுர அடி அளவான மண்டபம் இருத்தல் வேண்டும்.
13. கழிவுநீர் மற்றும் மலக் கழிவுகளை அகற்றும் முறையாகத் தயாரிக்கப்பட்ட கட்டிடமாக இருத்தல் வேண்டும்
14. ஊழியர்குழாம் மற்றும் வெளியாட்களுக்கு பாவிக்கக் கூடியதாக குறித்த தரத்திலான குறைந்தபட்சம் 02 மலசலகூடத்துடன் அதி கூடியதாக 06 மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும்.
15. அறைகளைப் பிரித்தல் மற்றும் கணனி விடயங்களுக்கு வலையமைப்பிற்கு உற்படுத்தும் விடயங்கள் பணியகத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
16. அலுவலகங்களை நடத்திச் செல்வதனால் குறித்த கட்டிடம் அமைந்துள்ள பிரதேசத்தை சுற்றியுள்ள குடியிறுப்பாளருக்கு எந்த இடஞ்சலும் கொடுக்காத இடமாக இருத்தல் வேண்டும்.
17. காற்று சீராக்கி அமைப்பு பொருத்தப்பட்டிருப்பது மேலதிக தகைமையாகும்.
18. அதிகாரிகளுக்கான விடுதி வசதிகளை பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் ஒதுக்கப்பட்ட இரு அறைகள் அல்லது பல அறைகள் மலசல கூட வசதிகளுடன் கட்டிடத்திற்குள் அமைந்துள்ள மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்ட உள் நுழைவு கதவு இருத்தல் அல்லது இந்த வளாகத்திலேயே இதற்காக கட்டிடமொன்றை அமைத்தல் மேலதிக தகைமையாகும்.
19. வரி வழங்குநர்களால் குறிக்கப்பட்டுள்ள மாதாந்த குத்தகைத் தொகை அரச மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைவாக கொடுப்பனவுகள் வழங்கப்படும். (குறைந்தபட்ச தொகை)
20. அரச மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கும் வரை உடன்படும் தொகை நிபந்தனைகளுக்கு உற்பட்டு செலுத்தப்படும்

**கட்டிட உரிமையாளரால் இங்கு குறிப்பிடப்படும் ஆவணங்களின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்**

- விலைமனுப் பத்திரத்துடன் பணியகம் வழங்கும் கேள்வி ஆவணம்
- மாதாந்த குத்தகை தொகையை குறிப்பிட்டு கட்டிட உரிமையாளரின் கையொப்பம் மற்றும் தொலைபேசி இலக்கத்துடன் சமர்ப்பிக்கப்படும் கடிதம்
- குத்தகையுடன் சம்பந்தப்பட்ட சொத்தின் நிரந்தர முகவரி
- கட்டிட உரிமையாளர் உரித்துரிமை பெற்றுக்கொண்ட உறுதியின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்று மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட விபரங்கள்
- சொத்துடன் சம்பந்தப்பட்ட வரைபடம்
- உறுதி செய்யப்பட்ட அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம்
 (குறித்த கட்டிட வரைபடம் A4 அளவில் அல்லது A3 அளவிற்கு சிறிதாக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட போட்டோப் பிரதியாக இருத்தல் வேண்டும்)
- குத்தகை தாரரின் பெயர்/முகவரி/தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் அதன் தெளிவான புகைப்பட பிரதி
- அநுகூலச் சான்றிதழ்
- கடந்த 06 மாத காலத்திற்குள் பெற்றுக் கொண்ட மின்சாரம், தொலைபேசி, வரிக்கட்டணம் போன்ற சிட்டைகளின் பிரதிகள்
- குத்தகைக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் குறித்த சொத்திற்காக உரித்துரிமை அறிக்கை உறுதியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் அதனை பிரதேசத்தின் சட்டத்தரணியொருவர் மூலம் தயாரிக்கப்பட்டு இறுதியில் அவரது பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- குத்தகைக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்தல் சொத்து சம்பந்தமாக தனிப்பட்ட உரிமை மாத்திரம் இல்லாத சந்தர்ப்பத்தில் அதாவது குறித்த சொத்தின் முதல் உரிமையாளர் இலங்கை குடியரசாகும் போது (சுவர்ண பூமி/ஜயபூமி/வழங்கல் பத்திரம்) 30 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகள் போன்றவை) குறித்த பிரதேச செயலாளரின் அனுமதியுடனான கடிதத்துடன் சமர்ப்பித்தல் அவசியமானது.

இது பற்றி கீழ்க்காணும் தொலைபேசி இலக்கம் ஊடாக மாத்திரம் தெளிவுபடுத்தி கொள்ளல் வேண்டும் எனவும் இடைத்தரகர் அல்லது வேறு எந்த அதிகாரியொருவர் வெளி நபர்களுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ளல் இக்கேள்வி நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்.

பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல. 234இல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரதியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 16.08.2022 திகதி மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் உள்ளிடல் வேண்டும். உங்களது விண்ணப்பத்தை உள்ளிடும் உறையின் இடது பக்க மூலையில் 'கட்டிடங்களை வாடகை அடிப்படையில்/குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தல் கண்டி PR/02/04-01(53) என்று குறிப்பிடுதல் வேண்டும்.

ஏதேனும் விண்ணப்பத்தை நிராகரிக்கும் அல்லது ஏற்றுக் கொள்ளும் உரிமை பணியகத்தின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். அரச மதிப்பீட்டாளரின் அறிக்கைக்கு உற்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் மீளளிக்கப்படாத ரூபா 1000.00 தொகையை இலங்கை வங்கியின் 0000001650 பணியக கணக்கில் வைப்புச் செய்து பற்றுச்சீட்டை சமர்ப்பித்து இல. 18, ஹீரஸ்ஸகல வீதி, முல்கம்பொல, கண்டி முகவரியில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கிளை அலுவலகத்தில் 2022.07.25 முதல் 2022.08.15 வரை அலுவலக நேரங்களில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொ.பே./பெக்ஸ்: 2880550/2887585**
**இணையதளம்: www.slbfe.lk**

அக்கரையில் மான்புற
இக்கரையில் கைகோர்ப்பு

---

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

---

## சாரதி மற்றும் சாரதி உதவியாளர் வெற்றிடம்

கொழும்பில் அமைந்துள்ள முதல்தர போக்குவரத்து மற்றும் சுங்கத் தீர்வை விடயங்கள் மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு பிரைம் மூவர் மற்றும் 10 சக்கரத்திற்கு துறைமுக அனுபவமுள்ள சாரதி மற்றும் சாரதி உதவியாளர் தேவை. தங்குமிட வசதி உண்டு.

076-5435332/0777-890633 அழையுங்கள்

---

## சிறு தோட்டத்துக்கு தொழிலாளர் தேவை

நோட்டத்துறை

புத்தளம், நாகவில்லு 1 1/2 ஏக்கர் சிறு தோட்டத்துக்கு தொழிலாளர் தேவை. திருமணமான தம்பதியினர் விரும்பத்தக்கது. (வயது 40-50) தங்குமிட வசதியுண்டு.

தொடர்புகளுக்கு 0751613689

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு
## கல்வி அமைச்சு
## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

**சர்வதேச ஒத்துழைப்பிற்கான கொரிய முகவராண்மையின் (சஒகொமு) மானியத்தின் கீழ் இரத்தினபுரி, மருதானை, மாத்தறை மற்றும் இரத்மலான தொழில்நுட்ப கல்லூரிகளில் CAD ஆய்வுகூட புனர்நிர்மாணம், கைமுறையாக வரைதல் ஆய்வுகூடம் மற்றும் குழாய் வேலைகள் வேலைத்தளங்கள் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**

1. இலங்கையிலுள்ள தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் நிர்மாண கற்கை நெறிகளுக்காக திறன் கட்டிட செயற்றிட்ட ஆகுசெலவிற்காக 4 மில்லியன் அ.ஐ.டொலரை சர்வதேச ஒத்துழைப்பிற்கான கொரிய முகவராண்மையிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது மானியமொன்றை பெற்றுள்ளதுடன் இந்த மானிய பெறுகைகளின் பகுதியொன்றை தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் CAD ஆய்வுகூட புனர்நிர்மாணம், கைமுறையாக வரைதல் ஆய்வுகூடம் மற்றும் குழாய் வேலைகளுக்கான ஒப்பந்தங்களுக்கான பணக்கொடுப்பனவுகளுக்கு செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. பின்வரும் அட்டவணையிலுள்ளவாறு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தில் திருத்தங்கள் மற்றும் புதுப்பித்தல்கள் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, த.பெட்டி 557, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள கொள்வனவுக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் CIDA பதிவுத் தரத்தை பூர்த்தி செய்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

| விலைமனு இல. | பணிப் பெயர் | பெசேவ நீங்கலாக மில்லியன் ரூபாவில் வேலையின் மதிப்பீடு செய்யப் பட்டுள்ள ஆகுசெலவு | தேவைப் படும் CIDA தரம் | விலைமனுப் பிணை தொகை (ரூபாவில்) | ஒப்பந்த கால எல்லை | மீளளிக்கப் படாத ஆவணக் கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப் பிணை செல்லுபடியாகும் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரியில் சஒகொமு இன் கீழ் CAD ஆய்வுகூட புதுப்பித்தலுக்காக மர மாடியை வழங்கல் மற்றும் நிறுவுதல், DTET/09/01/38/R-15/2022/KOICA | 13.44 | சி-6 மற்றும் சி-5 | 200,000.00 | 04 வாரங்கள் | 5,000.00 | 2022.11.29ஆம் திகதி வரையும். |
| 02. | இரத்தினபுரி தொழில்நுட்பவியல் கல்லூரியில் சஒகொமு இன் கீழ் CAD ஆய்வுகூட புதுப்பித்தல், கைமுறை வரைதல் ஆய்வுகூடம் மற்றும் குழாய் வேலைத்தளம். DTET/09/01/39/R-18/2022/KOICA | 48.72 | சி-5 மற்றும் சி-4 | 730,000.00 | 20 வாரங்கள் | 12,000.00 | 2023.01.10ஆம் திகதி வரையும் |
| 03. | இரத்மலான தொழில்நுட்பக் கல்லூரியில் சஒகொமு இன் கீழ் CAD ஆய்வுகூட புதுப்பித்தல், கைமுறை வரைதல் ஆய்வுகூடம் மற்றும் குழாய் வேலைத்தளம். DTET/09/01/23/R-16/2022/KOICA | 49.13 | சி-5 மற்றும் சி-4 | 730,000.00 | 20 வாரங்கள் | 12,000.00 | 2023.01.10ஆம் திகதி வரையும் |
| 04. | இரத்மலான தொழில்நுட்பக் கல்லூரியில் சஒகொமு இன் கீழ் CAD ஆய்வுகூட புதுப்பித்தல், கைமுறை வரைதல் ஆய்வுகூடம் மற்றும் குழாய் வேலைத்தளம். DTET/09/01/18/R-17/2022/KOICA | 40.30 | சி-5 மற்றும் சி-4 | 600,000.00 | 20 வாரங்கள் | 10,000.00 | 2023.01.10 ஆம் திகதி வரையும் |

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, த.பெட்டி 557, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்கள உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு பிரிவின் பிரதான பொறியியலாளரிடமிருந்து (தொலைபேசி: 011-2348894, 011-2348897, 96) பெற்று, அதே அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளவாறு 2022 ஜூலை 25 ஆம் திகதியிலிருந்து 2022 ஓகஸ்ட் 15 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு பிரிவின் பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பு முறைமையானது இந்த திணைக்களத்தின் நிதிப் பிரிவின் சிறாப்பரின் கருமபீடத்தில் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென தெளிவாக அவ்வுறைகளின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுப் பெயரானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்படல் வேண்டும். விலைமனுவானது பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த.பெட்டி 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10 என முகவரியிடப்பட்டு 2022 ஓகஸ்ட் 16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, த.பெட்டி 557, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் 1 ஆம் மாடி, உட்கட்டமைப்பின் சிவில் பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் மேலேயுள்ள முகவரியின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் 2 ஆம் மாடியின் மாநாட்டு மண்டபத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் சிவில் பொறியிலாளரின் அலுவலகத்தில் 2022.08.08 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.
9. அனைத்து விலைமனுக்களும் மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்றுள்ள புகழ் வாய்ந்த வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்டதும் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, த.பெட்டி 557, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்கள சிறாப்பரின் கருமபீடத்தில் மீளளிக்கப்படும் ரொக்கப்பண வைப்பில் அமைந்துள்ளதாகவிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள கொள்வனவுக் குழு,**
**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,**
**த.பெட்டி 557, ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10.**
**இணையதளம்:** www.dtet.gov.lk

---

Daily News Classifieds, the Housewives' companion

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 21

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 07 | | 08 | | | 09 |
| | 10 | 11 | 12 | | 13 |
| | 14 | 15 | 16 | 17 | |
| 18 | | | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | | 25 | 26 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) எமது நாட்டின் மிகப் பழமையான தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த சின்னம் இதுவாகும். மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள இந்தப் புராதன சின்னமானது, பௌத்த மக்களின் பிரதான வழிபாட்டுத் தளமாகும்.
(10) எமது பெற்றோரின் தாயாரை மாத்திரமன்றி, வயது முதிர்ந்த பெண்களையும் மரியாதையின் நிமித்தம் இவ்வாறு உறவுமுறை சொல்லி அழைப்பது எமது வழக்கம்.
(14) மாணவர்களாகிய நீங்கள் எழுதுகின்ற ஆக்கம் இது. குறித்த தலைப்பு ஒன்றின் கீழ் எழுதுவது. (தலைகீழான சொல்)
(19) வீதிகள் ஓரிடத்தில் சந்திக்கின்ற இடம்.
(22) எமது அன்றாட சமையலின்போது கறிகளுக்கும் மற்றும் தேநீருக்கும் சுவையூட்டியாகப் பயன்படுத்தப்படுவது. செடிவகைத் தாவரமொன்றின் வேர்த்தண்டுப் பகுதி. (தலைகீழான சொல்)
(25) நாம் அன்றாடம் பயணம் செய்கின்ற வீதியை இவ்வாறும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(01) மரத்தின் ஒத்தபொருள் சொல் இது.
(03) குழந்தையை உறங்க வைப்பதற்கு தாயார் பாடுகின்ற பாடல் இது. அக்காலத்தில் கிராமியப் பாடல்கள் போன்று தொன்றுதொட்டு இப்பாடல்கள் பாடப்பட்டு வந்தன. இன்றைய நவீன காலத்தில் இப்பாடல்கள் அருகிச் சென்றுவிட்டன.
(06) அனைத்து வசதிகளும் நிறைந்த மாபெரும் வாசஸ்தல கட்டடத்தை இவ்வாறு குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(10) நாம் உணவுக்குப் பயன்படுத்துகின்ற கடல் மீன்களில் ஒரு இனம் இது.
(12) கறி சமைப்பதற்குப் பயன்படுத்துகின்ற பாத்திரம் இது. (தலைகீழான சொல்)
(17) கிழிந்த, பழைய ஆடையைக் குறிக்கும் சொல். கிழிந்த ஆடையானாலும், அது சுத்தமாக இருக்க வேண்டுமென்ற பொருளில் பழமொழியொன்றும் உள்ளது.
(18) மீனை நன்றாக உலர வைத்துப் பதப்படுத்தி பெறப்படுவது.
(21) அரைப்பங்கு என்ற பொருள் தரும் சொல். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 20

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) தீக்கோழி (08) குரு (14) கங்கை
(17) கருவாடு (21) இலை (23) கத்தி

**மேலிருந்து கீழ்**

(01) தீமை (03) கோடை (05) முருங்கை
(10) இருட்டு (11) கடுகதி (17) கலை

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 19

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**மு. முமேஷிகா,**
தரம் 09, இரத்தினபுரி கலைமகள் தமிழ் வித்தியாலயம்,
இரத்தினபுரி.

**இரண்டாம் பரிசு**
**டி. தனுஷ்கர்,**
குளோபல் சர்வதேச பாடசாலை,
மட்டக்குளிய,
கொழும்பு 15.


**மூன்றாம் பரிசு**
**ஆர். லோஷனா காயத்திரி,**
தரம் 05, மா/பாக்கியம் தேசியக்கல்லூரி,
இல : 1/2, தெஹிபிடிய,
வறகாமுற, உக்குவளை.

### பாராட்டு பெறுவோர்

**1. நாதிர் நூரி,**
தரம் 08, அல் அஸ்ஹர் மகா வித்தியாலயம்,
திஹாரிய.
**2. எம்.ஏ.எப். அலீனா,**
தரம் 07 B, க/ பதியுத்தீன் மகளிர் வித்தியாலயம்,
98A, சுஜாதா லேன்,
நம்புக்கன வீதி, மடிகேகலகெதர.
**3. எம்.ஏ.எம். உமர்,**
தரம் 06E, கே/ ஸாஹிரா தேசிய பாடசாலை,
78, தக்கியா வீதி, மாவனல்ல.
**4. நி. இலக்கியாநாட்சி,**
தரம் 06, கொ/ சைவமங்கையர் வித்தியாலயம்,
கொழும்பு 06.
**5. எம்.எம்.எம். அப்ராஸ்,**
தரம் 04A, ஸாஹிரா தேசிய பாடசாலை,
வரக்காமுற, உக்குவளை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 21
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

***தெளிவுரை :***
*முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும்; முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்து விடும்.*

## எமது நாளாந்த கடமைகள்

எமது நாளாந்த கடமைகள் எமது வாழ்விற்கு மிகவும் அத்தியாவசியமானவையாகும். எமது நாளாந்த கடமைகளை நாம் சரிவர செய்து முடிக்க வேண்டும்.

அவற்றுள் சில

★ **தினமும் அதிகாலையில் எழுந்து பல் துலக்கிக் குளிக்க வேண்டும்.**
★ **காலையில் எமது சுறுசுறுப்பிற்காக தியானச்செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.**
★ **எமது காலைக்கடன்களை முடிக்க வேண்டும்.**
★ **எமது காலை உணவை உண்டபின் பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாகுதல்.**
★ **உரிய நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்லல்.**

இவற்றை சரிவரச்செய்து வந்தால் எமது வாழ்வில் நாம் முன்னேறலாம்.

**சி. அனன்யா,**
**கிருலப்பனை.**

## திருவள்ளுவர்

திருவள்ளுவர் தமிழ் புலவர்களுள் ஒருவராவார். இவர் திருக்குறள் எனும் நூலை இயற்றியுள்ளார். திருக்குறள் 1330 குறட்பாக்களைக் கொண்டது. 133 அதிகாரங்களை உடையது.

ஒரு அதிகாரத்தில் பத்து பாக்கள் உள்ளன. அறத்துப்பால். பொருட்பால். காமத்துப்பால் எனும் முப்பால் கொண்ட நூலாகும். திருவள்ளுவர் தமிழ்நாட்டில் உள்ள மயிலாப்பூரில் வாழ்ந்தவராவார்.

இவரது கருத்துக்கள் உலக மக்கள் அனைவருக்கும் ஏற்றதாகும். திருவள்ளுவரின் திருக்குறள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர் மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். இவரை செந்நாப்போதர், வள்ளுவர், பொய்யா மொழிப்புலவர், ஐயன் என்றெல்லாம் அழைப்பர்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடியுள்ளார்

**சுஸ்மிதன் ஆனந்தன்,**
**நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,**
**நோர்வூட்.**

## இவ்வார மழலை



உ. அனீந்திகா
உதயச்சந்திரன் / சுபாங்கினி
தெரணியகல

## சூரிய குடும்பம்

சூரியனையும், அதனைச் சுற்றியுள்ள கோள்களையும் சூரியக் குடும்பம் என அழைக்கின்றனர். சூரியக் குடும்பத்தில் எட்டு கோள்கள் உள்ளன. இந்த எட்டு பெரிய கோள்களும், புளூட்டோ உட்பட சிறிய கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன.

கோள்களை கிரகங்கள் என்றும் சூரியனை விண்மீன், நெருப்புக்கோளம் என்றும் அழைக்கின்றனர். சூரியன் அதிக வெப்பம் கொண்டுள்ளது. என்றாலும் அதன் துணையின்றி உலகில் உயிரினங்கள் வாழ முடியாது. கோள்கள் அனைத்தும் சூரியனை ஒரு மையமாகக் கொண்டு வெவ்வேறு நீள் வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன. பூமியிலிருந்து வெகு



தொலைவில் இருக்கும் சூரியனை மிகப்பெரிய வெப்பப்பந்து என்று குறிப்பிட வேண்டும்.

### சூரியனை சுற்றிவரும் கோள்கள்

**புதன்**

சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள் புதன். இதுவே சூரிய குடும்பத்தில் முதல் கோளாகும். மேற்கில் இருந்து கிழக்காகத் தன்னைத்தானே விரைவாக சுற்றி வருகிறது. இதற்கு துணைக் கோள்கள் கிடையாது. 88 நாட்களுக்குள்ளாக சூரியனை சுற்றி வந்து விடுகிறது.

**வெள்ளி**

அதிக அளவில் ஒளிரும் வெள்ளிக்கோளை பூமியிலிருந்து அதிகாலையில் பார்க்க முடியும். இது சூரியனை கிழக்கு மேற்காகச் சுற்றி வருகிறது. இது சூரிய குடும்பத்தின் இரண்டாவது கோள். சூரியனிடமிருந்து 10 கோடி கிலோ மீட்டருக்கு அப்பால் சுற்றி வருகிறது.

**பூமி**

மனிதர்களின் இருப்பிடமாக திகழும் பூமிதான் மூன்றாவது கோள். சூரிய குடும்பத்தில் காற்று, நீர் போன்றவை சூழப்பட்டு உயிரினங்கள் வசிக்கக்கூடிய கோளாக பூமி மட்டுமே கருதப்படுகிறது. திடமான கோளாக திகழும் பூமியைச் சுற்றி காற்று மண்டலம் உள்ளது. அதில் உயிரினங்கள் வாழ்வதற்கு தேவையான ஒட்சிசன் நிறைந்து இருப்பதால் புவியில் மனிதர்கள் மற்றும் பல உயிரினங்கள் வாழமுடிகிறது. எனவே தான் பூமி ஒரு உயிர்கோள் என புகழப்படுகிறது. இது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சூரியனைச் சுற்றி வருகிறது. பூமியை மையமாக கொண்டு சந்திரன் துணைக் கோளாக சுழல்கிறது. சூரியனை ஒருமுறைச் சுற்றி வர பூமி 365 நாட்கள் எடுத்துக்கொள்கிறது.

**செவ்வாய்**

சூரியக் குடும்பத்தின் நான்காவது கோள் செவ்வாய். பூமி மற்றும் வெள்ளி ஆகிய இரண்டோடு ஒப்பிடுமிடத்து மிகச்சிறிய கிரகமாக உள்ளது. சிவப்பு நிறமுடையதால் செவ்வாய் எனப் பெயர் பெற்றது. பூமியின் அளவில் பாதியாக இருக்கும் இது மேற்கில் இருந்து கிழக்காகத் தன்னைத்தானே சுற்றுகிறது.

செவ்வாய்க்கு இரண்டு துணைக்கோள் உண்டு. இதில் மனிதன் வாழ்வதற்கான சூழல் இருக்கிறதா என உலக நாடுகள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இது சூரியனைச் சுற்றி வர 687 நாட்கள் ஆகிறது.

**வியாழன்**

சூரிய குடும்பத்தில் மிகப்பெரிய கோளான வியாழன் ஐந்தாவது இடத்தில் சூரியனை சுற்றி வருகிறது. இக்கோளில் பெரிய சிவப்பு வட்டம் உள்ளது. இதனை பெரிய வாயுக் கோள் எனவும் அழைக்கின்றனர். இது சூரியனை மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வலம் வருகிறது. 63 துணைக்கோள்கள் உடைய இக்கோள் சூரியனை சுற்றி வர சுமார் 11 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது.

**சனி**

ஆறாவது இடத்தில் உள்ள இந்த சனிக் கோளைச் சுற்றி பெரிய வளையங்கள் உள்ளன. நுண்கற்கள், தூசு, பனி போன்றவற்றை கொண்ட தொகுதிதான் வளையம் போலத் தோற்றமளிக்கிறது. மேற்கில் இருந்து கிழக்கு நோக்கிச் சுழலும் சனிக் கோளுக்கு 60 துணைக் கோள்கள் உள்ளன. சனிக்கோள் சூரியனை சுற்றி வர சுமார் 29 ஆண்டுகளுக்கு மேல்ஆகிறது.

**யுரேனஸ்**

சூரியக் குடும்பத்தின் ஏழாவது கோளான யுரேனஸை சுற்றி வாயுக்களால் ஆன வளையங்கள் காணப்படுகின்றன. இது குளிர்ச்சியான கோள். இதற்கு 27 துணைக் கோள்கள் உள்ளன. இதில் டைட்டானியா, ஒபேரான், அம்பிரியல், ஏரியல் மற்றும் மிராண்டா ஆகிய கோள்கள் மிகப்பெரிய கோள்களாகும். இது சூரியனை சுற்றிவர 84 ஆண்டுகள் ஆகின்றன.

**நெப்டியூன்**

எட்டாவது கோள் தான் நெப்டியூன். இக்கோளைச் சுற்றியும் வாயு வளையங்கள் உள்ளன. இது மேற்கில் இருந்து கிழக்காக சூரியனை தன்னைத்தானே சுற்றி வரும். இதற்கு 13 துணைக் கோள்கள். மேகங்கள் சூழ்ந்து நீலம் கலந்த பச்சை நிறத்தில் காணப்படும் இக்கோள் சூரியனைச் சுற்றிவர சுமார் 160 ஆண்டுகளுக்கு மேலாகிறது.

**புளூட்டோ**

ஒன்பதாவது கோளாகக் கருதப்பட்ட புளூட்டோவில், கோளுக்குரிய பண்புகள் இல்லாததால் குறுங்கோள் என புதிதாக வகைப்படுத்தியுள்ளனர். 1930ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட புளூட்டோ, சிறுசிறு கற்கள், பெரும்பாறைகள், வன்பொருட்கள் ஆகியவற்றை கொண்டு உருவானதாக கருதப்படுகிறது. இதுபோன்று இன்னும் பல குறுங்கோள்களும் உள்ளதாக ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**ஆர். ராஹினி,**
**வெளிமடை.**

## ஆண்டுகளும் விழாக்களும்

01ம் ஆண்டு நிறைவு - காகித விழா
02ம் ஆண்டு நிறைவு - பருத்தி விழா
03ம் ஆண்டு நிறைவு - தோல் விழா
04ம் ஆண்டு நிறைவு - மலர் மற்றும் பழ விழா
05ம் ஆண்டு நிறைவு - மர விழா
06ம் ஆண்டு நிறைவு - சர்க்கரை கற்கண்டு/ இனிப்பு விழா
07ம் ஆண்டு நிறைவு - செம்பு விழா
08ம் ஆண்டு நிறைவு - வெண்கல விழா
09ம் ஆண்டு நிறைவு - மண்கலச விழா
10ம் ஆண்டு நிறைவு - தகர விழா
11ம் ஆண்டு நிறைவு - எஃகு விழா
12 ம் ஆண்டு நிறைவு - லினன் விழா
13 ம் ஆண்டு நிறைவு - பின்னல் விழா
14 ம் ஆண்டு நிறைவு - தந்த விழா
15ம் ஆண்டு நிறைவு - படிக விழா
20ம் ஆண்டு நிறைவு - பீங்கான் விழா
25ம் ஆண்டு நிறைவு - வெள்ளி விழா
30ம் ஆண்டு நிறைவு - முத்து விழா
40ம் ஆண்டு நிறைவு - மாணிக்க விழா
45ம் ஆண்டு நிறைவு - இரத்தின விழா
50ம் ஆண்டு நிறைவு - பொன் விழா
55ம் ஆண்டு நிறைவு - மரகத விழா
60ம் ஆண்டு நிறைவு - வைர விழா, மணி விழா
75ம் ஆண்டு நிறைவு - பவள விழா
80ம் ஆண்டு நிறைவு - அமுத விழா
100ம் ஆண்டு நிறைவு - நூற்றாண்டு விழா

**ம. தனுஷானி,**
தரம் 09, புனித பத்திரிசியார் கல்லூரி,
தலவாக்கலை.

## அரிய பொதுத் தகவல்கள்

நீரை அருந்தாத நீர் வாழ் உயிரினம் எது? **டொல்பின்**
உலகில் அதிகூடிய விஷத்தன்மை வாய்ந்த மீன் இனம் எது? **ஸ்டான் பிஷ்**
தலையில் இதயத்தைக் கொண்டுள்ள உயிரினம் எது? **இறால்**
மீன்கள் இல்லாத ஆறு? **ஜோர்டான் ஆறு**
கண்கள் இல்லாத உயிரினம் எது? **மண்புழு**
மனிதன் சிரிப்பதனைப் போன்று குரல் எழுப்பும் பறவை எது? **குக்கு பெர்ரா**
தனது உடம்பினை விட நீளம் கூடிய நாக்கை கொண்ட விலங்கு எது? **பச்சோந்தி**
ஆபிரிக்கா கண்டத்தில் மட்டும் பரவலாக வாழும் விலங்கு எது? **வரிக்குதிரை**
இரண்டு இரைப்பைகளைக் கொண்ட பிராணி எது? **தேனீ**

**நி. இலக்கியா நாட்சி**
கொ/ சைவமங்கையர் வித்தியாலயம், கொழும்பு 06.






**ம. முமேஷிகா,**
தரம் 09,
இரத்தினபுரி கலைமகள் தமிழ் வித்தியாலயம்,
இரத்தினபுரி.



**டி. தனுஷ்கர்,**
தரம் 06, குளோபல் சர்வதேச பாடசாலை,
கொழும்பு 15.



**பி. சதுர்ஷன்,**
தரம் 07,
மொ/ஸ்ரீ சன்முகா தமிழ் மகா வித்தியாலயம்,
மொனறாகலை.



**கி. மௌளநேஷ்,**
அமிர்தகளி,
மட்டக்களப்பு.


# இயலாமை அரசியலிலிருந்து சிறுபான்மை மீள்வது எப்போது?

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்த வாக்களிப்பில், வெளியாகிய பல சங்கதிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் அரசியல் வியூகங்களை வரவேற்றிருக்கிறது. கட்சித் தலைமைகளின் உத்தரவு ஒரு புறமிருக்க, தற்போதைய யதார்த்தம் என்னவென்பதில் இந்த எம்.பிக்கள் தெளிவாக இருந்துள்ளனர். இதனால்தான், அதிக கட்சிகள் ஆதரித்தவரால்கூட வெற்றிபெற முடியவில்லை.



தலைமைகள் தீர்மானித்தாலும் எம்.பிக்கள் அவற்றுக்கு கட்டுப்படாது யதார்த்தத்தை சிந்தித்துள்ளனர். அதற்காக கட்சித் தலைமைகள் எடுத்த தீர்மானங்கள் தவறென்பதுமில்லை. பொருத்தமான தீர்மானங்களாக இருந்தாலும் பொருந்தாத நேரத்தில் இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. புதிய ஜனாதிபதியின் உரையிலிருந்துதான் இந்த முடிவுக்கு வர முடிகிறது. சகல கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கமும், ஒத்துழைப்பும்தான் நாட்டின் நெருக்கடியைத் தீர்க்கும் என்பதில் அவர் தெளிவாக இருந்தார். இவரிடம் இந்த தெளிவு இருந்ததால்தான், கட்சிகளின் உத்தரவுகளை மீறி எம்.பிக்கள் வாக்களித்திருப்பதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி வெற்றிடத்துக்கு பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்ட வாக்கெடுப்பில், கட்சிகள் சிலதின் தலைமைகள் நல்ல படிப்பினைகளை பெற்றிருக்கும். அரசியல் போட்டி அல்லது பழிவாங்கலில் ஈடுபடுவதற்கான நேரம் இதுவல்ல என்பதையே, தலைமைகளின் உத்தரவை மீறிய எம்.பிக்கள் உணர்த்தியுள்ளனர். நாட்டிற்கு அவசரமாகத் தேவைப்படுகின்ற சர்வதேச உதவிகளை விரைவாக கொண்டுவரக்கூடிய ஆளுமையைத்தான் பாராளுமன்றம் தெரிந்திருக்கிறது. இந்தத் தெரிவில் தலைமைகளுக்கு இல்லாத தெளிவுகளா இந்த எம்.பிக்களிடம் இருந்தன? இந்தக் கேள்விக்கு தேர்தலில் எதிர்த்தவர்கள் பின்னர், ராஜபக்ஷக்களின் அமைச்சரவையில் ஒடி வந்து இணைந்த வரலாறுகளை பதிலாகத் தருகின்றது.



எனவே, புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஏற்கனவே விரும்பியதைப் போன்று சர்வகட்சி அரசாங்கத்துக்கு இணங்கி, போட்டியின்றி ஒருவரை பாராளுமன்றத்தில் தெரிந்திருக்கலாம். அவ்வாறு தெரிந்திருந்தால் எஞ்சியுள்ள காலங்களில் பழிவாங்கல் இல்லாத, பாரபட்சம் காட்டாத அரசியல் கலாசாரம் உருவாகியிருக்கும். இந்தக் கலாசாரத்தையே எமது நாடு இன்று வேண்டி நிற்கிறது. நாற்பது வருடங்கள் பழமைவாய்ந்த நமது நாட்டின் அரசியலமைப்பை மாற்றுவதற்கான சிறந்த சூழலையும் இந்தக் கலாசாரம் ஏற்படுத்தியிருக்கலாம்! பரவாயில்லை, புதிய ஜனாதிபதி இன்னும் அதே மனநிலையில் அதாவது, போட்டிநிலவும், கழுத்தறுப்புச் செய்யும், பழிவாங்கும் மனநிலையை மேலோங்கச் செய்யும் அரசியலை ஒழிக்கவே ஆசைப்படுகிறார். இதற்காகத்தான், எதிர்த்து வாக்களித்த கட்சிகள் மற்றும் எம்.பிக்களிடம் ஒத்துழைப்பையும் கோரி, அமைச்சரவையில் இணையுமாறு அழைப்பும் விடுக்கப்பட்டிருக்கிறது.

மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்படும் போதுதான், பிரதமர் அல்லது ஜனாதிபதி பதவிகளை வகிக்க விரும்புவதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை விடாப்பிடியாக இருக்கிறது. இது அக்கட்சி இன்னும் போட்டி அரசியலை விரும்புவதையே வெளிப்படுத்துகிறது. மக்களுக்குத்தானே ஆட்சி, அவர்களை வழிப்படுத்தத்தானே நிர்வாகம் மற்றும் சட்டங்கள். நாடு இப்போது சென்றுள்ள அதலபாதாள நெருக்கடிக்குள் தேர்தலை நடாத்தவா நேரம் அல்லது நிதியா நம்மிடம் இருக்கிறது? இதற்காகத்தான், பாராளுமன்றத்துக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களால்தானே தெரிவு செய்யப்பட்டனர். அவ்வாறானவர்கள் பாராளுமன்றத்தில் ஒரு ஜனாதிபதியை தெரிவு செய்வதால் ஜனநாயகத்துக்கு என்ன ஆபத்து? எனவே, இந்த வாக்களிப்பில் போட்டி அரசியலே விரும்பப்பட்டிருக்கிறது. இந்த விருப்பத்தின் பிடியிலிருந்து சில சிறுபான்மைத் தலைமைகளால் விடுபட முடியவில்லை. இதனால், யதார்த்தம் எதிர்க்கப்பட்டிருக்கிறது. எந்த நிபந்தனைகளும் இல்லாமல் இணங்கிச்சென்றதுதான் இதிலுள்ள கவலை.

தமிழ், முஸ்லிம் ஒற்றுமைகள் பற்றிப்பேசும் அல்லது வலியுறுத்தும் சிறுபான்மை தலைமைகள் ஒரேயணியில் நின்றது ஆறுதலாக இருந்தாலும், வேட்பாளருடன் எட்டப்பட்ட விடயங்கள் தனித்தனியாக இடம்பெற்றிருப்பதை அவதானித்தால், பொதுவெளியில் (வடக்கு, கிழக்கு) இணையும் சாத்தியம் இருக்கவில்லை என்பது இரட்டிப்புக் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், ஈ.பி.டி.பி, இ.தொ.கா மற்றும் தேசிய காங்கிரஸும் அளவீடுகளைச் சரியாகச் செய்திருப்பது தமிழ் பேசுவோருக்குச் சந்தோஷம்தான்.

சுஐப் எம்.காசிம்...

# புதிய ஜனாதிபதியின் வருகை மாற்றங்களை கொண்டு வரும்

## யாழ். மக்களின் நம்பிக்கை







புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் வட புலத்து மக்கள் இப் புதிய நிலையை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதை அறியும் வகையில் சிலரை சந்தித்தோம்.

முதலாவதாக நாம் சந்தித்தவர் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சுற்றுலா வாடகை வாகன சாரதியான செ. நிரேஸ்.

புதிய ஜனாதிபதி காலி முகத்திடல் போராட்டக்காரங்கள் முன்வைக்கும் மாற்றங்களை பிரதி பலிக்கும் வகையிலான உடனடி சிறிய அமைச்சரவை அமைக்க வேண்டும். மேலும் உடனடியாக சாத்தியமாகக் கூடிய சில கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும். தனது 50 வருட அரசியல் அனுபவத்தின் மூலம் பெற்றுக்கொண்ட சர்வதேச உறவுகளை பயன்படுத்தி பொருளாதார மறு சீர்ரமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ள அவர் பாராளுமன்றத்தை சுயாதீனமாக செயல்பட வைத்தல் வேண்டும்.

அத்துடன் அரசு துறையில் அரசியல் ரீதியான நியமனங்களுக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைத்து அரசாங்க அலுவலகங்களை வினைத்திறன் கொண்டவையாக மாற்றி அமைக்க வேண்டும். இவற்றை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நடாத்தினால் சிறப்பாக இருக்கும்.

அடுத்ததாக சமூக செயற்பாட்டாளராக உள்ள சுப்பிரமணியம் பிரபாவை சந்தித்து பேசினோம்.

புதிய ஜனாதிபதியின் வருகையினால் பொருளாதார ரீதியாக உடனடி மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. போராட்ட அணியை வலுவிழக்கச் செய்ய வேண்டுமானால் வரிசைகளுக்கு தீர்வு காணவேண்டியது அவசியம்.

அத்தியாவசியமான எரிபொருள், எரிவாயு பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு கிடைத்தாக வேண்டும். அடுத்தது பொருள் விலையேற்றம். அதை குறைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம்.

அடுத்து வரப்போகும் புதிய அமைச்சரவையை வைத்துத்தான் அரசியல் ரீதியிலான அடுத்த நகர்வை கணிக்க முடியும். அதற்கு இடையில் எரிபொருள், எரிவாயு, பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்டவற்றுக்கு புதிய ஜனாதிபதி தீர்வு காண்பார் என எதிர்பார்க்கிறேன் என்றார் பிரபா.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த யோ.எ. ரவீந்திரனிடம் பேசினோம்.

புதிய ஜனாதிபதி, இலங்கையில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும்

அதேவேளை, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதி விசாரணையை துரிதப்படுத்தவேண்டும்

இறுதி யுத்தத்தில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் நீதி விசாரணை நியாயமான முறையில் முன்னெடுக்கப்படவேண்டும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை கண்டறிய ஆணைக்குழு நிறுவப்பட்டு மூன்று மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

முன்னைய ஆட்சியில் கொண்டுவரப்பட்ட துறைமுக நகர் (போட்சிட்டி) போன்ற கடன் அடிப்படையிலான அபிவிருத்தி திட்டங்கள் நிறுத்தப்படவேண்டும். என எதிர்பார்க்கிறேன். இது தொடர்பில் புதிய ஜனாதிபதி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## புதிய ஜனாதிபதி தொடர்பாக மக்கள் கருத்து

இனிமேல் பல நாடுகள் கடன் கொடுப்பதற்கு முன்வரலாம். கடன் செலுத்தப்பட வேண்டும் என்பதற்காக இலங்கையின் பெறுமதிமிக்க நிலப்பகுதிகள் அந்நியருக்கு தாரை வார்க்கப்படக் கூடாது.

மக்களை சாந்தப்படுத்த சிறிய அளவிலான விலைக்குறைப்புகள் இடம்பெறும். இது தொடர்பில் புதிய ஜனாதிபதி எவ்வாறான அணுகுமுறையை கடைப்பிடிக்க போகின்றார் என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் என்பது இவர் கருத்தாக இருந்தது.

முச்சக்கர வண்டி சாரதியான கே.சுதா என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாம் எமது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கிறோம். தற்போது வெளிநாட்டில் இருந்து பல புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்திற்கு தமது உறவினர்களை காண்பதற்காக வந்துள்ளனர்.

இந்த கால பகுதி தாம் எமக்கு வருமானம் அதிகமாக கிடைக்கும் காலமாகும். ஆனால் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாம் சவாரிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளோம். எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்பாக நாட்கணக்கில் தூங்கி நான்கு, ஐந்து லீட்டர் பெட்ரோலையே பெற முடிகிறது. அதனை கொண்டு நாம் முச்சக்கர வண்டி ஓடி உழைப்பதானால், எமக்கு வருமானம் கட்டுப்படியாவதில்லை.

அதனால் நான் முச்சக்கர வண்டியை எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக எரிபொருளுக்காக நிறுத்தி விட்டு மேசன் வேலைக்கு செல்கிறேன். மாலையில் வந்து முச்சக்கர வண்டிக்கு பாதுகாப்பாக முச்சக்கர வண்டியில் தூங்குகிறேன். அதனால் தூக்கம் தொலைந்து பல நாட்கள் ஆகிவிட்டன.

இவ்வாறான நெருக்கடியில் வாழ்வாதாரத்தை இழந்து பொருளாதார நெருக்கடிகளுக்குள் வாழ்ந்து வருகிறோம். முன்னர் இருந்த ஜனாதிபதியினால் தான் நாம் இந்த நிலைமைக்கு வந்தோம் .

புதிய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க பழுத்த அரசியல் அனுபவம் உள்ளவர். அவருக்கு பல நாடுகளுடன் தொடர்புகள் இருக்கும். அதனூடாக பல நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என நம்புகிறேன்.

தற்போது எமக்கு உடனடியாக எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடுகளை நீக்கி, தடையற்ற மின்சாரமும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் விலைவாசிகளை குறைத்து நியாய விலைகளில் பொருட்களை பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய ஜனாதிபதியால் என்ன மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும் என்பது இவர் கூற்று.



இவ்வாறாக யாழ்ப்பாணத்து மக்கள் புதிய ஜனாதிபதியின் வருகை மாற்றங்களை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றார்கள்.

மயூரப்பிரியன்...

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வளர்ச்சியில் மற்றுமொரு மைக்கல்



## இருதய விசேட வைத்திய நிபுணராக டாக்டர் எம்.ஏ.நெளஸாத் அலி நியமனம்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு இருதய விசேட வைத்திய நிபுணராக டாக்டர் எம். ஏ. நெளஸாத் அலி முதல் முறையாக சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். தென்கிழக்கு பிராந்திய மக்களிடையே அதிகளவாக காணப்படும் தொற்றா நோய்களுள் இருதய நோய், மாரடைப்பு மற்றும் உயர் குருதியமுக்கம் காணப்படுகின்றது. திடீர் மாரடைப்புகளால் இளவயது மரணங்கள் தினமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கான முறையான சிகிச்சைகளை உடனடியாகவும் உயர்தரத்திலும் வழங்க இருதய விசேட வைத்திய நிபுணர் நெளஸாத் அலியின் இந்த புதிய நியமனம் கிழக்குப் பிராந்திய மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இருதய நோய்க்கான சிகிச்சையை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

இந்நிகழ்வில் ஏனைய சுகாதார நிறுவனத் தலைவர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



இலங்கை பல் சமயக்கருத்தாடல் நிலையச் சகவாழ்வுச்சங்கத்தின் ஏற்பாட்டில் தேசியரீதியில் சமூகப்பணிகளை ஆற்றிய 36 பேருக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் யாழ்ப்பாணம் கோண்டாவில் இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் கலாநிதி யோ. யூட்நிமலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தி. சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக ஈசற்றி ஆங்கிலக் கல்லூரியின் தலைவர் ஜெ. றஜீவன், கிருபா லேணர்ஸ் தொழிலதிபர் அ.கிருபாகரன் உள்ளிட்டவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் விருதுகளையும் வழங்கினர். தேசிய ரீதியில் சமூக செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் மதபோதகர்கள், சமூகசேவையாளர், ஊடவியலாளர்கள், கலைஞர், படப்பிடிப்பாளர் போன்ற பிரிவுகளில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தி ஆசிரியர் ஸ்ரீ நாகவாணி ராஜா இதன்போது 'தேசகீர்த்தி மற்றும் சமூக திலகம்' பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பயிற்சி நிலையத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக அக்கரைப்பற்று மாநகர சபையின் முழுப்பங்கேற்புடன் ஒழுங்குசெய்யப்பட்ட "அபாய பாதுகாப்பு மற்றும் வெளியேற்றம் தொடர்பான செயன் முறைப்பயிற்சி" யொன்று சென்றவாரம் அக்கரைப்பற்று "எய்ம்ஸ் இன்டர்நேஷனல்"(AIMS INTERNATIONAL) கல்விநிறுவன வளாகத்தில் நடைபெற்றது. கல்வி நிறுவனத் தின் ஏற்பாட்டில் கற்கைகள் பணிப்பாளர் எம்..ஏ. தஷ்ரீபின் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மாநகர சபை தீயணைப்பு பிரிவு ஊழியர்கள் தீ அனர்த்தத்தின்போது கையாளவேண்டிய முறைகள் பற்றிய செயன்முறைப் பயிற்சியின் போதும், அனர்த்த முகாமைத்துவ பயிற்சி நிலையலயத்தின் பிரதிப்பணிப்பாளர் எம்.எ.சீ. ரியாஸ் உரையாற்றும் போதும் எடுக்கப்பட்ட படங்களை மேலே காண்க. *(படங்கள்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)*

இலங்கைக்கான இந்திய துணை உயர் ஸ்தானிகர் டாக்டர். டி. வெங்கடேஷ்வரன் கர்நாடக மாநில ஆளுநரான தாவர் சந்த் கெலாட்டை அண்மையில் சந்தித்தார். இந்த சந்திப்பில், புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநருக்கு தனது பாராட்டுக்களை அவர் தெரிவித்ததுடன் இலங்கையை ஆதரிப்பதற்கு சாத்தியமான வழிகள் குறித்து கலந்துரையாடினார். இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் தலைநகரான பெங்களூரில் இலங்கை தகவல்தொழில்நுட்ப புத்திஜீவிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க ஆளுநர் ஒப்புக்கொண்டார்.





வீரமுனை ஸ்ரீசிந்தா யாத்திரைப் பிள்ளையார் ஆலய உற்சவத்தில் வீரமுனை குருசாமி ஐயர் அறநெறிப் பாடசாலை மற்றும் திருஞானசம்பந்தர் அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியர் கௌரவ பாராட்டுப் பத்திரமும் ஞாபகார்த்த சின்னமும் வழங்குவதையும் ஆலய குரு மற்றும் அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர் குருபீடாதிபதியினால் பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.





நுவரெலியா விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 100 வருடங்கள் பூர்த்தி விழா கழகத்தின் தலைவர் அருணசாந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் முன்னாள் நுவரெலியா மாநகர முதல்வரும் தற்போதைய மாநகரசபை எதிர்கட்சி தலைவருமான மஹிந்த தொடம்பேகமகே, நுவரெலியா மாவட்ட உதவிச் செயலாளர் திருமதி போதிமான, மாநகரசபை உறுப்பினர் என்.பி.சீ. தஹாநாயக்க, நுவரெலியா சிரேஷ்ட அத்தியட்சகர் உடுகமசூரிய உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன் போது நுவரெலியா லயன்ஸ் கழகத்தினர் விளையாட்டுக் கழகத்திற்கு குடிநீர்த்தாங்கியொன்றை அன்பளிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. *(படம்: நூரளையூரான்)*

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 ஜூலை 24 ஞாயிற்றுக்கிழமை
கிழக்கிலங்கையில் உதித்த
கலை, இலக்கிய
சக்கரவர்த்தினி றுத்றா

# வீட்டு வாசல் கூரையில்!



**இன்றைய** துருக்கி நாட்டில் இருக்கும் கட்டால் ஹுயுக் என்ற பண்டைய நகர் எகிப்து பிரமீடு, கிரேக்கம் அளவுக்கு பிரபலம் இல்லை. ஆனால் இந்த நகர் பிரமீடுகளை விடவும் பழைய நகரங்களில் ஒன்று. உலகின் மிகப் பழைய நகரங்களில் ஒன்று என்று கூறலாம்.

இதில் விசித்திரம் என்னவென்றால் இந்த நகருக்கு வீதிகளே இல்லை. வீடுகள் எல்லாம் ஒட்டி ஒட்டி கட்டப்பட்டிருக்கும். பார்க்க சரியாக தேன்கூடு போல இருக்கும்.

அப்படி என்றால் மக்கள் எப்படி நடமாடுகிறார்கள் என்று தானே கேட்கிறீர்கள். எல்லோருமே கூரையால் தான் வெளியே வருவார்கள்.

வீட்டுக்குள் செல்வதற்கு கூரையில் இருந்து ஏணி வைக்கப்பட்டிருக்கும். வீட்டு வாசல் கூரையில் தான் இருக்கும்.



# உலகை அரை நூற்றாண்டு ஏமாற்றிய கில்லாடி

**ஆரம்பத்தில்** பிளோரிடா கடற்கரையில் தான் அந்த இராட்சத பாதத் சுவடுகள் தெரிந்தன. 1948 ஆம் ஆண்டு முதலில் தென்பட்ட மணலில் அழுத்தமாக பதியப்பட்ட அந்த சுவடுகள் பல்வேறு இடங்களிலும் தெரிய ஆரம்பித்தது. மூன்று வீரல்கள் இருக்கின்றன. ஒரு முதலையின் பாதச் சுவடு என்று பலரும் நம்பினார்கள். இல்லையில்லை அது இராட்சத கடல் ஆமை என்று சிலர் கூறினார்கள். பத்திரிகைகளில் எல்லாம் இந்தச் செய்து ஆராய்ச்சிக் கட்டுரையாகக் கூட வர ஆரம்பித்தது. அதில் இயற்கை ஆர்வலர் இவான் சான்டர்சன் சொன்ன விளக்கம் தான் பெரிதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது 15 அடி பென்குயினின் பாதச் சுவடாம். அதன் வாழ்விடம் இழந்ததால் இப்படி புளோரிடா பக்கம் வந்திருக்கிறதாம். மகா ஜனங்கள் உண்மையிலேயே அதை நம்பினார்கள். ஒருநாள் இரண்டு நாள் அல்ல கிட்டத்தட்டக் அரை நூற்றாண்டுகள் அந்த இராட்சத பென்குயினைத் தேடி சல்லடை போட்டார்கள்.
கடைசியில் 1988 ஆம் ஆண்டு உள்ளூர் குரும்புக்காரரான டோனி சிக்னோரினி அந்த மர்ம முடிச்சை அவிழ்த்தார். தனது நண்பருடன் சேர்ந்து இந்த ஏமாற்று வேலையைச் செய்து உலகையே நம்ப வைத்ததாக அவர் ஒப்புக் கொண்டார். அந்த இரு நண்பர்களும் இரும்பால் செய்யப்பட்ட பாதங்களை கட்டிக் கொண்டு கடற்ரைகளில் நடந்து அங்கு சுவடுகளை பதித்திருக்கிறார்கள். அதுவே இந்த உலக மகா புரளிக்குக் காரணம்.

# உண்மையான "அனைத்துண்ணி"

**பூமியில்** சைவமாக இருக்கலாம் இல்லை அசைவமாக இருக்கலாம்; ஆனால், மைக்கல் லூடிடோவாக இருக்க முடியாது. பிரான்ஸ் நாட்டைச் சேந்த இவரின் செல்லப் பெயரே "அனைத்தும் உண்ணி". அவரால் கண்ணாடி, இரும்பு, இரப்பர், பலகை என்று எல்லா பொருட்களையும் சாப்பிட முடியும். அவரது சமிபாட்டு தொகுதியும் அதற்கு ஏற்ப தடிப்பமாக இருப்பதாக ஆராய்ச்சி செய்த மருத்துவர்கள் சொல்கிறார்கள்.



பதினாறு வயதிலேயே கண்ணாடித் துண்டுகளை சாப்பிட ஆரம்பித்த அவர் எல்லாவற்றையும் சாப்பிடும் அளவுக்கு வளர்ந்துவிட்டார். தனது வாழ்நாளில் அவர் 18 சைக்கிள்கள், ஏழு தொலைக்காட்சி பெட்டிகள், இரண்டு படுக்கைகள், பதினைந்து தள்ளு வண்டிகள், ஒரு கணினி, ஒரு சவப்பெட்டி, ஆறு மின்விளக்கு கொத்துகளை சாப்பிட்டிருக்கிறார்.



உலோகப் பொருட்களை சிறு துண்டுகளாக நொறுக்கி அதனை கனிம எண்ணெய்யுடன் சேர்த்து சாப்பிவது தான் லூடிடோவின் வழக்கம்.

இதன் உச்சகட்டமாக அவர் ஒரு சிறிய ரக விமானம் ஒன்றை முழுசாக சாப்பிட்டிருக்கிறார். அதற்கு அவர் இரண்டு ஆண்டுகள் எடுத்துக் கொண்டார்.

1959 தொடக்கம் 1997ம் ஆண்டு வரை அவர் சுமார் ஒன்பது தொன் இரும்பை சாப்பிட்டிருப்பதாக கணிக்கப்படுகிறது. இதனைப் பார்த்த கின்னஸ் புத்தகம் உலகின் விசித்திரமான உணவுப் பழக்கம் கொண்டவர் என்று அவரை கௌரவித்தது.

2007 ஆம் ஆண்டு தனது 57 ஆவது வயதில் அவர் மரணித்தார். ஆனால் அவரது உணவுப் பழக்கத்திற்கும் மரணத்திற்கு எந்த தொடர்பும் இல்லை என்று கூறப்பட்டது.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# போபால் அனர்த்தம் சொல்லும் பாடம்



**இந்தியாவின்** மத்திய பிரதேஷ் மாநிலத்தின் போபால் நகரில் இருக்கும் பூச்சிக் கொல்லி ஆலையில் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி ஏற்பட்ட நச்சுவாயு கசிவில் உயிரிழந்தவர்கள் 8,000ஐ தாண்டியிருக்கலாம் என்பது கணிப்பு. இரவு உறங்கிக் கொண்டிருந்தவர்களைத் தான் இந்த நச்சு வாயு தாக்கியது. உலகில் ஏற்பட்ட மிக மோசமான தொழிற்துறை அனர்த்தமாக இதனைக் கூறலாம். அனர்த்தத்திற்கு பின்னர் அதற்குக் காரணமான நிறுவனம் அந்த ஆலையை மூடிவிட்டு மூட்டை முடிச்சுகளை கட்டிக்கொண்டு சாதாரணமாகப் போய்விட்டது. ஆனால் நச்சுவாயு நகரின் சுற்றுச் சூழலை மோசமாக பாதித்ததோடு குடிமக்களுக்கு பெரும் சுகாதார பிரச்சினையை ஏற்படுத்தியது. பிறப்புக் குறைபாடுகள், நாட்பட்ட நோய்கள், உடற் குறைபாடுகள் இந்த ஆலையுடன் தொடர்புபட்டவை. இவ்வாறாக ஐந்தரை இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டார்கள். இந்த நச்சு வாயு கசிவை தடுப்பதில் குறித்த பூச்சிக் கொல்லி ஆலை அலட்சியமாக இருந்தது விசாரணையில் தெரிய வந்தது. அந்த நிறுவனம் 3 பில்லியன் டொலர் இழப்பீடு வழங்குதவாக கூறியபோதும் இந்திய அரசுக்கு 475 மில்லியன் டொலர் தொகையை கொடுத்து அலாக்காக தப்பிவிட்டது. இத்தனைக்கும் இந்த அனர்த்தத்திற்கு காரணமான அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட டோ இரசாயன கம்பனிக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான இழப்பீடு வழங்குவது பெரிய காரிமாக இருந்திருக்காது. அந்த இரசாயண ஆலையை சுத்தப்படுத்துவதைக் கூட அந்த நிறுவனம் மறுத்தது. ஆனால் ஒரே ஒரு வதந்தியால் அந்த நிறுவனம் அரை மணி நேரத்திற்குள் பெரும் இழப்பை சந்தித்தது விதி. 2004 ஆம் ஆண்டு டோ நிறுவனத்தின் பேச்சாளர் என்று கூறிக்கொண்ட ஒருவர் பி.பி.சி தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்தார். அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமது நிறுவனம் 12 பில்லியன் டொலர் இழப்பீடு கொடுப்பதாக அறிவித்தார். அந்த போலியான அறிவிப்பு வெளியாகி அடுத்த 23 நிமிடங்களில் டோ நிறுவன பங்குகள் அதலபாதாளத்திற்கு சரிந்தன. அந்த நிறுவனத்திற்கு அதனால் ஏற்பட்ட இழப்பு 4 பில்லியன் டொலர்.



# விமானங்களின் டயர்களில் இவ்வளவு ரகசியங்களா?



விமானங்கள் வானத்தில் பறப்பவை என்றாலும், take off செய்யவும், லேண்ட் ஆகவும், ரன்வேயில் பயணம் செய்யவும் டயர்கள் அவசியம். ஆனால் வழக்கமான ஆட்டோமொபைல்களுக்கான டயர்கள் விமானங்களில் பயன்படுத்தப்படுவதில்லை. விமானங்களின் எடை மிகவும் அதிகம் என்பதால், ஹெவிட்யூட்டி டயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விமானங்களின் டயர்கள் பல்வேறு விதமான வெப்பநிலைகளை தாக்குபிடிக்க வேண்டும். 10 ஆயிரம் மீட்டர் உயரத்தில் பறக்கும்போது மைனஸ் 60 டிகிரி செல்சியஸ் என்ற மிகவும் குளிரான சூழல் இருக்கும். அதே நேரத்தில் உலகின் வெப்பமான பிராந்தியங்களில் தரையிறங்கும்போது, மிகவும் கடுமையான வெயில் இருக்கும்.

இதுபோன்ற பல்வேறு விதமான



வெப்ப நிலைகளை தாக்கு பிடிக்கும் வகையில், விமானங்களின் டயர்கள் விசேஷமாக தயாரிக்கப்படுகின்றன. விமானங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் டயர்களில் ஏராளமான சுவாரஸ்யங்கள் மறைந்துள்ளன. அவை என்னென்ன? என்பதை இந்த செய்தியில் தொகுத்து வழங்கியுள்ளோம். இந்த தகவல்கள் உங்களை ஆச்சரியப்படுத்தலாம். வழக்கமான ஆட்டோமொபைல்களில் பயன்படுத்தப்படும் டயர்களில் இருக்கும் Tread Pattern உடன் ஒப்பிடும்போது விமானங்களில் பயன்படுத்தப்படும் டயர்களின் Tread Pattern வித்தியாசமானது. மிக பலமாக காற்று வீசும் சமயங்களில், ஸ்திரத்தன்மையை அதிகரிப்பதற்காக, விமானங்களுக்கான டயர் உற்பத்தியாளர்களால் விசேஷ த்ரெட் பேட்டர்ன் பயன்படுத்தப்படுகிறது.

டயர்களுக்கும், ஓடுபாதைக்கும் இடையே ட்ராக்ஸனை (Traction) உருவாக்குவதற்கு இந்த உதவி செய்கிறது. இதனால் காற்று பலமாக வீசும் சமயங்களில், விமானத்தின் இயக்கம் குறைக்கப்படுகிறது. அத்துடன் Hydroplaning அபாயத்தையும், இந்த வலுவான Tread Patternகுறைக்கிறது.

ரன்வே ஈரமாக இருந்தால் ஹைட்ரோபிளானிங் ஏற்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. ஹைட்ரோபிளானிங் ஏற்பட்டால் விமானம் ரன்வேயில் கட்டுப்பாட்டை இழந்து, சறுக்கி சென்று விபத்தில் சிக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன. கடந்த காலங்களில் ஹைட்ரோபிளானிங் காரணமாக கார்கள் பல முறை விபத்துக்களில் சிக்கியுள்ளன.

ஆனால் விமானம் ஹைட்ரோபிளானிங் அபாயத்தில் சிக்குவதற்கான வாய்ப்புகளை, அதனுடைய டயர்களின் வலுவான Tread Pattern குறைக்கிறது. இதன் மூலம் பயணிகள் உள்பட அனைவரின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகிறது. ஹைட்ரோபிளானிங் என்பது Aquaplaning என்ற பெயராலும் அறியப்படுகிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்க விஷயம் ஆகும்.

பொதுவாக வழக்கமான ஆட்டோமொபைல்களின் டயர்களில் சாதாரண காற்றுதான் நிரப்பப்படும். ஆனால் விமானங்களின் டயர்களில் நைட்ரஜன் வாயு (Nitrogen Gas) நிரப்பப்படுகிறது (வழக்கமான ஆட்டோமொபைல்களின் டயர்களிலும் தற்போது நைட்ரஜன் வாயு நிரப்பப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை).

கடந்த காலங்களில் சில விமானங்களில் Oxygen நிரப்பப்பட்ட டயர்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் Oxygen பயன்பாடு டயர் வெடிப்புகளுக்கு காரணமாக இருந்தது. இது விமானங்களின் டயர்களில் Oxygenனை தவிர்க்க காரணமாக அமைந்தது. ஆனால் நைட்ரஜன் விமானங்களுக்கு பாதுகாப்பான ஆப்ஷனாக பார்க்கப்படுகிறது.

ஏனெனில் நைட்ரஜன் 'இன்னெர்ட்' (Inert) வாயுவாக கருதப்படுகிறது. அதாவது செயலற்ற வாயு என்று கூறலாம். இது மற்ற கெமிக்கல்களுடன் வினைபுரியாது. எனவே நைட்ரஜனுக்கு எரியக்கூடிய பண்புகளும் இல்லை.

எனவேதான் விமானங்களின் டயர்களில் நைட்ரஜனை நிரப்புவது பாதுகாப்பாக ஒன்றாக கருதப்படுகிறது.

பொதுவாக 120 முதல் 400 லேண்டிங்குகள் செய்யப்பட்ட பின்னர் விமானத்தின் டயர்கள் மாற்றப்படும். ஆனால் விமானத்தின் மாடல், ரன்வே, வானிலை மற்றும் பைலட் போன்ற பல்வேறு காரணிகளை பொறுத்து இந்த எண்ணிக்கை மாறுபடும் என்பது குறிப்பிடத்தக்கது. 120 முதல் 400 லேண்டிங்குகள் என்பது பொதுவான எண்ணிக்கையாகும்.

சந்தையில் பல்வேறு வகையான விமான டயர்கள் கிடைக்கின்றன. ஆனால் விமானங்களுக்கான டயர்களின் உற்பத்தியை பொறுத்தவரையில் குட்இயர் (Goodyear), மிச்செலின் (Michelin), டன்லூப் (Dunlop) மற்றும் பிரிட்ஜ்ஸ்டோன் (Bridgestone) போன்ற நிறுவனங்கள்தான் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

மேற்கண்ட நிறுவனங்கள் வழக்கமான ஆட்டோமொபைல்களுக்கும் டயர்களை தயாரிக்கின்றன.


## செந்தூர மழலைச் செல்வங்கள்



ஆதித்தன் பிரசாத், ஆதிரியன் பிரசாத், Belgium

உங்கள் மழலைகளின்
படங்களை இந்த
வட்ஸ் அப் புக்கு அனுப்பவும்
0773124543

## செந்தூர மழலைச் செல்வங்கள்


Aadhavika reena
(Rajiv- Dusha)


வாழைச்சேனை
உமைஸ் - அஸ்மினா
**அஹமட் ஹம்தி** (2 வயது)
13.07.2022.


Shasmin
Irakkamam


Mega dharana
age 5
( Ramesh - Ushanthani)


SRI EMAN
(SIR ANU - KALAI SRI)

# கிராமத்து மண்வாசனை கமழும் கதைகளுக்கு பூச்சூடிய படைப்பாளி



வரலாற்றை எழுதும் போது கி.மு.கி.பி,என்று குறிப்பிடுவது வழக்கம்.தமிழ்த்திரையின் வரலாற்றை எழுதும் போது பாரதிராஜாவின் "பதினாறு வயதினிலே"படத்திற்கு முன்,பின் என எழுதும் ஓர் பதிவிற்கு காரணமானவர் பாரதிராஜா.ஸ்டுடியோவுக்கு உள்ளே செட் போட்டு முடங்கி கிடந்த தமிழ் சினிமாவை, கிராமத்து மண்வாசனையை நுகர வைத்தவர் பாரதிராஜா. 1941ஆம் ஆண்டு ஜுலை 17 ம் திகதி தமிழ் நாடு தேனி மாவட்டம் "அல்லிநகரம்" எனும் ஊரில் பெரியமாயத்தேவர்,மீனாட்சியம்மாள்(கருத்தம்மா)தம்பதிகளுக்கு 5 வது மகனாக பிறந்தார்.

இயற்பெயர் "சின்னச்சாமி" பள்ளிப்படிப்புக்கும் இவருக்கும் தூரம் அதிகம்.சிறு வயதிலிருந்தே, சதா சர்வ காலமும் இவரது சிந்தனை எல்லாம் சினிமா, நாடகம் என்று தான் ஊறிக்கிடக்கும்.

எங்காவது ஓர் காட்டுக்குள் சென்று விட்டு பாடசாலை மணி அடித்ததும் வீட்டுக்குள் சென்று விடுவது இவரது வழக்கம். பாரதிராஜாவுக்கு சினிமா மோகம் வரக்காரணம் அவரது பள்ளி வாத்தியார் ராமலிங்கம் ஆவார். பள்ளிப்பாடங்களை பாரதிராஜாவை விட்டு வாசிக்கச் சொல்வாராம்.இவரும்,பராசக்தி, மனோகரா,வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற வசனங்களை சிவாஜி பேசியதைப் போல் வாசிப்பாராம்.

இதனால் ராமலிங்க வாத்தியார் இவர் மீது அலாதி பிரியம் கொண்டிருந்தார் .ஒரு சமயம் ஓர் நாடகத்தை எழுதி இயக்கும் வாய்பை வாத்தியார் இவருக்கு வழங்கவே,அந்நாடகம் பள்ளியில் பிரமாதமாக பேசப்பட்டது. ராமலிங்கம் வாத்தியார் சினிமாவில் நீ பெரிய ஆளாக உயர்வாய் என அப்போது ஆசீர்வாதம் வழங்கினார். காலப்போக்கில் அவரின் ஆசீர்வாதம் பலித்தது.படிப்பிற்கு பின் சுகாதார அதிகாரியாக அரசுப் பணியில் பணியாற்றினார்.

அந்நேரத்தில் "பண்ணைபுரம்" என்ற ஊருக்கு பணி நிமித்தமாக சென்ற வேளையில் ராசையா என்ற இளையராஜா, பாஸ்கர், கங்கை அமரன், போன்ற இசை ஆர்வலர்களின் நட்பு கிடைக்கவே, இவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து நாடகம், பாட்டு என பொழுதுகளை கழித்தனர். இவர்களில் முதன் முதலாக சென்னை வந்தவர் பாரதிராஜா, முதலில் புட்டண்ணாகனகல், புல்லையா,கிருஷ்ணன் நாயர்,ஜெகந்நாதன் போன்ற இயக்குனர்களிடம் உதவியாளராக பணியாற்றினார்.

அப்போது புட்டண்ணா கனகல் இயக்கத்தில் "ஏவிஎம் ராஜன் வாணிஸ்ரீ நடித்த "இருளும் ஒளியும்" படம் தயாராகிற நேரத்தில் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் நட்பும் கிடைத்தது. இவர்களின் உதவியுடன் "ஊர் சிரிக்கிறது","சும்மா ஒரு கதை" ஆகிய நாடகங்களை மேடையேற்றி நாடக சினிமா உலகிற்கு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார் பாரதிராஜா.

வானொலி நாடகங்களிலும் தன் பங்களிப்பை வழங்கினார். பின் ஓர் நாள் நடிகர் திலகம் சிவாஜி கணேசனை சந்தித்துப் பேசினார். தான்,சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் சென்னை வந்ததாக சிவாஜியிடம் கூற அதற்கு சிவாஜி உங்கள் ஊரில் கண்ணாடியே இல்லையா என பாரதிராஜாவைப் பார்த்து விளையாட்டாக கிண்டலடித்தார்.

இவரது திறமை மீது நம்பிக்கை கொண்டு தயாரிப்பாளர் எஸ்.ஏ ராஜ்கண்ணு கறுப்பு வெள்ளையில் "மயில்"என்ற படத்தை இயக்கும் பொறுப்பை பாரதிராஜாவிற்கு வழங்கினார்.பின்னர் இப்படம் "பதினாறு வயதினிலே "என தலைப்பு மாற்றப்பட்டு கமல்ஹாசன், ரஜினிகாந்த், ஸ்ரீதேவி நடிப்பில் வண்ணத்தில் எடுக்கப்பட்டது.பெரும் பொருளாதாரச் சிக்கலுக்கு மத்தியில் இப்படம் தயாரானது.

இப்போது கோடிக்கணக்கில் பணம் வாங்கும் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் இப்படத்திற்கு வாங்கிய தொகை வெறும் 3000/=ரூபா,அதிலும் 500/=பாக்கி.

இப்படத்தை விநியோகஸ்தர்கள் யாருமே வாங்காத நிலையில் தயாரிப்பாளர் எஸ்.ஏ.ராஜ்கண்ணு அவர்களே படத்தை வெளியிட்டார்.படம் வசூலை வாரிக்கொட்டியது.

பாரதிராஜா ஒரே படத்தின் மூலம் புகழின் உச்சிக்கு சென்றார்.

இப்படத்திற்கு ஆனந்த விகடன் கொடுத்த மதிப்பெண் 62 சதவீதமாகும்,ஒரு படத்தின் விமர்சனத்திற்கு ஆனந்த விகடன் கொடுத்த அதிக பட்ச மதிப்பெண் இப்படத்திற்குத்தான் என தமிழ் சினிமாவில் ஓர் சாதனை உண்டு. இளையராஜாவின் இசையில் இப்படத்தில் இடம்பெற்ற அத்தனை பாடல்களும் பட்டி தொட்டி எங்கும் ஒலித்தது.

மயிலு, சப்பாணி, பரட்டை போன்ற பாத்திரங்கள் பெரிதாக பேசப்பட்டன. பாக்யராஜ், மனோபாலா, மணிவண்ணன், போன்றோர் இவரது சினிமா பாசறையில் பயின்ற கலைஞர்களே.இதே வேகத்தில் மீண்டும் கிராமத்து காதல் கதையாக "கிழக்கே போகும் ரயில் "படத்தை சுதாகர், ராதிகா ஜோடியை அறிமுகமாக கொண்டு எடுத்து வாகை சூடினார் பாரதிராஜா.

கமல்,ஸ்ரீதேவி ஜோடியை மீண்டும் "சிவப்பு ரோஜா "படத்தில் இணைத்து இன்னொரு வெற்றியையும் கொடுத்தார்.

பின், தன் சிஷ்யன் பாக்யராஜை கதாநாயகனாக கொண்டு இவரது இயக்கத்தில் வந்த புதிய பரிணாமம் படைத்த "புதிய வார்ப்புகள்"அமோக வெற்றி கண்ட படம்.இதையடுத்து வந்த "நிறம் மாறாத பூக்கள்"இவரது அடுத்த வெற்றி அத்தியாயம். இவருக்கு திருஷ்டி போல் அமைந்தது "நிழல்கள்"படம்.

அருமையான மணிவண்ணனின் கதை வியாபார ரீதியில் தோல்வியை சந்தித்தது.இப்படத்தில் தான் கவிப்பேரரசு வைரமுத்து" பொன் மாலைப்பொழுது "என்ற பாடல் வாயிலாக அறிமுகமானார் .

மீண்டும் ஓர் மணிவண்ணனின் கதையை "அலைகள் ஓய்வதில்லை "எனக்கொடுத்து அமோக வெற்றி கண்டு இந்திய சினிமாவில் ஜாம்பவான் ஆனார் பாரதிராஜா. இளையராஜாவின் இசையில் இப்படத்தில் இடம் பெற்ற அத்தனை பாடல்களும் தமிழை உணர்ந்த நெஞ்சங்களில் அலை பாய்ந்தது.

கார்த்திக், ராதா ஜோடி அறிமுகமாகி ஒரே படத்தின் மூலம் புகழ் பெற்றனர். பின் இளையராஜா இசையில் இவரது இயக்கத்தில் இசையையும்,பரதத்தையும் ஒன்றிணை

த்த படம் "காதல் ஓவியம் "என்ன காரணத்தினாலோ பெரிதாக பேசப்படவில்லல.

ஆனால் இப்படத்தின் எல்லாப் பாடல்களுமே பிரமாதமாக அமைந்தது. பாடகர் தீபன் சக்கரவர்த்திக்கு பேர் வாங்கிக் கொடுத்த படம்.மீண்டும் கிராமத்து காற்றை உள் வாங்கும் முயற்சியில் சாதாரண வளையல் வியாபாரம் செய்த பாண்டியனை கதாநாயகனாகவும் உன்னி மேரி என்ற கேரளக்கிளியான ரேவதியை கதையின் நாயகியாகக் கொண்டு இவர் இயக்கிய மற்றொரு அமோக வெற்றி படம் "மண்வாசணை"நடிகை காந்திமதியினுள் இருந்த உணர்வு பூர்வ நடிப்பை வெளிக்கொண்டு வந்த மண்மணம் மாறாத கிராமத்தோவியம்

"மண்வாசணை ".இதே ஜோடியைக் கொண்டு, பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக "புதுமைப்பெண்"படத்தை இயக்கி மீண்டும் ஓர் வெற்றிப்பரிசை அளித்தார். சிவாஜியின் "வாழ்க்கை " படமும்,"புதுமைப்பெண்ணும்"ஒன்றாக வெளிவந்து, "வாழ்க்கையை"முந்தியது பாரதிராஜாவின் "புதுமைப்பெண்".சிவாஜியின் பாராட்டுக்குரியவர் ஆனார் பாரதிராஜா. பின் கமல் இரட்டை வேடமேற்று வசூலில் சாதனை புரிந்த "ஒரு கைதியின் டயரி "ஹிந்தி சினிமா வரை பாரதிராஜா வின் பெரும் புகழை ஏந்திச்சென்றது. இப்படத்தை பார்த்த ஹிந்தி சூப்பர் ஸ்டார் அமித்தாப்பச்சன் கமல் நடித்த இருவேடங்களிலும் நடித்தார். ஹிந்தியிலும் இப்படம் அமோக வெற்றி, இதன் பிறகு தமிழ் சினிமா ஓர் புதிய பரிணாமத்தைக் கண்டு வியந்தது,ஆம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் என்ற இமயமும், இயக்குனர் பாரதிராஜா என்ற இமயமும் இணைந்து "தமிழ்த்திரை காவியமாக "முதல் மரியாதை "என்ற ஓர் உன்னத படைப்பினை திரையோவிமாக வழங்கினார்கள்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



ரன்னிங் ரேஸ்ல எவ்வளவுதான் கால் வேகமாக ஓடினாலும் பரிசு கைக்குத்தான் கிடைக்கும்.



ஏன் உங்க மாப்பிள்ளை எப்ப உங்க வீட்டுக்கு வந்தாலும் ராத்திரி மட்டும் தங்கவே மாட்டேங்கிறாரு?

அவரு எங்க வீட்டுல தலைவச்சுப் படுக்க மாட்டேன்னு ஒரு தடவை சண்டையில சொல்லிட்டாரு...



என்ன சார்? ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் அப்படீங்கறிங்க, சாப்பாட்ல கல் இருக்கே?

ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ங்கிறதுக்காக வைரக் கல்லா சார் போட முடியும்?



எப்போ பார்த்தாலும் மரத்து மேல் ஏறி உக்கார்ந்திருக்காரே யார் இவர்?

இவர் தாங்க எங்க கிளை செயலாளர்.



என்னனங்க! கல்யாணப் பொண்ணுக்கு கழுத்துல, இடுப்புல, கைலன்னு எல்லா இடத்திலேயும் பூவிலேயே அலங்காரம் பண்ணி இருக்கீங்க?

நீங்கதானே பொன் வைக்கிற இடத்துல பூவை வைங்கன்னு சொன்னீங்க.



உங்க கடிகாரம் ஓடாதா?
நான் தான் அதை கையில் கட்டியிருக்கேனே.




பொலிஸ்காரர் அடிச்ச உடனே அந்த ஆளுக்கு பேச்சே வர்லைங்க ஏன்?
ஊமைக்காயம் பட்டுடுத்தாம்.



தண்ணீரை தண்ணினு சொல்லலாம்! ஆனா பன்னீரை பன்னினு சொல்ல முடியுமா?



அவர் வாரிய தலைவரா!
ஆமாம், பல பேர் காலை வாரிய தலைவர்!




உங்க மகன் சிகரெட் பிடிக்கிறானே! உங்களுக்கு தெரியுமா?
எனக்கு சிகரெட் பிடிக்க தெரியாதுங்க!

ஏன் பாத்ரூம் கதவை திறந்து வச்சுகிட்டே குளிக்கிற?

அப்பதான் யாராவது எட்டிப் பார்த்தா தெரியும்!

# GA ஆகி மட்டு மக்களுக்கு சேவையாற்ற விரும்பும் கலை, இலக்கிய தாரகை றுத்றா



## கலைத்துறையில் உச்சம் தொட நினைக்கும் கிழக்கிலங்கையின் மின்னும் பரத நாட்டியத் திலகம்

களுதாவளை என்பது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி கிராமசேவகர் பிரிவில் தென் மண்முனை எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓர் ஊராகும்.

கிழக்கிலங்கையின் களுதாவளைப் பகுதியில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் ஒருங்கே இயற்கையாக அமையப் பெற்ற திருத்தலம் களுதாவளைப் பிள்ளையார் கோயில் ஆகும்.

தொன்மைவாய்ந்த இக்கிராமத்தில் வெற்றிலைச் சடங்கு செய்வதற்காக வேடுவ குலத் தலைவன் 'களுவன்' களுதாவளையின் வடமேற்கு மூலையில் ஆறும் சுனையும் அழகிய வயலும் சூழ்ந்த மணல் மேட்டில் பற்றைக் காடுகளை வெட்டி அகற்றி இவ்வாலயத்தை அமைத்தான். 'களுவன்' வணங்கிய இந்த இடத்தை 'களுதேவாலயம்' என்று அழைத்தார்கள். கதிர்காம யாத்திரிகர் இருவர் இவ்விடத்தில் தங்கி ஆவரை மரத்தண்டையில் நாகம்மை இருப்பதைக் கண்டு சுனையில் நீராடி திரிலிங்க பூசை செய்தனர். அப்போது நிலமட்டத்தில் சுயம்புலிங்கம் ஒன்றைக் கண்டு அதனை தம்முடன் எடுத்துச் செல்ல எத்தனித்த போது சிவலிங்கம் சலம் வரையில் நீண்டு சென்றது. சுயம்புலிங்கம் அடியார்களுக்கு அற்புதங் காட்டியது.

இவ்வாறான சிறப்புப் பெற்ற களுதாவளையில் இருந்து ஒரு இளம் பெண், கலை, இலக்கியம், நடனம் என பல்வேறு துறைகளில் தனது திறமைகளை காட்டி முன்னேறி வருகின்றார். யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட இவர், களனி பல்கலைக் கழகத்தில் புவியியல் விசேட பிரிவில் (Geography Special) படித்து வருகின்றார்.



பக்தி பூர்வமான குடும்பத்தில் பிறந்த இவர், பக்தியில் சிறந்த விளங்குவதுடன் சிறுவயது முதல் (அதாவது 9 வயது 10 வயது முதல்) ஆலயங்களில் இடம்பெறும் கூத்துக்களில் பங்கேற்று தனது திறமையை வெளிகாட்டி வந்துள்ளார்.



மட்டக்களப்பு பாரம்பரியத்தில் கூத்துக்கலை சிறந்த இடத்தைப் பெற்று வருவதுடன், இந்தக் கலையில் இவர் இன்று சிறந்து விளங்கி வருகிறார்.

இவர் "கலிகாலன்" என்ற குறும்படத்தில் நடித்ததன் மூலம் சினிமாத்துறைக்குள் பிரவேசித்தார். "கலிகாலன்" படத்தைப் பார்த்துத் தான் நடிப்பு மீது இவருக்கு தீவிர ஆர்வமே வந்ததாக இவர் மகிழ்ச்சியுடன் கூறினார். இது நிறைந்த சினிமா அனுபவத்தை அள்ளித்தந்த அழகிய படம் என்று கூறுகின்றார்.

இவரது தந்தை இவருக்கு 2 வயதாக இருக்கும்போதே மாரடைப்பால் இறைவனடி சேர்ந்து விட்டார். இவரது தாயார் ஒரு ஆசிரியை.

அவர் மட்/களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார்.




இவரது வளர்ச்சிக்கு இவரது தாயார் பெரும் துணையாக இருப்பது போல் இவருடைய பெரியப்பாவின் மகன் அதாவது இவரது அண்ணன் தாயாருக்கு அடுத்ததாக பெரும் உதவியாக இருக்கிறார். இவர் நடித்த இரண்டாவது குறும்படம் "போடியார்". முதலாவது குறும்படம் "கலிகாலன்" ஆகும். "கலிகாலனை" பார்த்த பின் தான் நடிப்பில் ஆர்வமே வந்ததாக இவர் கூறுகிறார். அவருடன் உரையாடியதில் கிடைத்த தகவல்களை இனி உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

**குடும்பத்தில நீங்க மட்டும் தானா?**

ஓம்... ஒரே பிள்ளை.

**குறும்படங்களில் நடிப்பதற்கு அம்மா மறுப்பு தெரிவிக்கவில்லையா?**

ஒரு போதும் இல்லை...

**அம்மாவைப் பற்றிக் கூறுவதாக இருந்தால்....!**

எனக்கு எப்பவுமே எல்லாத் துறையிலேயும் சாதிக்க வேண்டும். கலையில சாதனை பண்ண வேண்டும் என்று மோட்டிவேட் பண்ணுவாங்க... "எனக்குள்ளே" படம் நடிச்சபோது எனக்கு ஒரு அழகான கைக் கடிகாரத்தைப் பரிசா தந்தவங்க... (Face Book இல அந்த போட்டோ இருக்கு).

நான் நடனம், சங்கீதம் ஆகிய கலைத்துறைகளில் தேர்ச்சி பெற்றவள். இந்தியாவைச் சேர்ந்த என்னோட குரு கொழும்புல இருக்குறப்போ படித்தேன். கதக், குச்சிப்புடி, பரதம் மூன்றுமே அவங்க தான் படிப்பிச்சாங்க.

**குருவின் பெயர் என்ன?**

என்னோட குரு Vipithavismaya (Kerala, India).

**உங்களை ஊக்கப்படுத்தியவர்கள் யார்?**

என்னோட அம்மா, சொந்தங்கள், நண்பர்கள் தான் ஊக்குவிச்சவங்க.. என்னோட பெரிய பலமே என்னோட சொந்தங்கள் தான்.

**குறும்படம் நடிக்க எப்படி தெரிவானீர்கள்?**

ஒடிசன் மூலமாகத்தான் படத்திற்குத் தெரிவானேன்.

**நீங்கள் மிகவும் பக்தி பூர்வமான பெண் போல தெரிகிறதே...?**

ஓம், நான் ரொம்ப பக்தியானவள்....













ஆன்மீகம் சம்பந்தமான நூல்கள் நிறையவே படிச்சிருக்கிறேன். இதுக்காகவே Youtube Channel உம் வைச்சிருக்கிறேன். தமிழ், ஆங்கிலம், மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகள் நன்றாகத் தெரியும்.

சிங்களம் கொஞ்சம் பேச வராது... கலை மட்டும் இல்லாம விவசாயத்திலேயும், சமூகப்பணிகளிலேயும் ஈடுபடுகின்றேன்... படிப்பு முடிந்த பிறகு நற்பணி மன்றம் உருவாக்க விரும்புகின்றேன். அடுத்த வருடம் என்னோட முதல் நாவலை வெளியிட இருக்கிறேன். நாவலுக்கான பணிகள் நடந்துகொண்டு இருக்கின்றன.

**நாவலின் பெயர் என்ன?**

"வெள்ளிடி" விரைவில் அட்டைப்படம் வெளியிடுவேன்.

**உங்களுக்கு சிறுகதைகள் எழுதும் ஆற்றல் உள்ளது போல..?**

ஓம், நையாண்டியான சிறுகதைகள் எழுதுவதில் ஆர்வம் இருக்கிறது. எழுதிய சிறுகதைகள் பல உள்ளன... எப்படி வெளியிடுவது பத்திரிகையில் காட்சிப்படுத்துவது என்று தெரியாமல் பூட்டப்பட்டு கிடக்கு.

நீங்க படித்த பாடசாலை பற்றிய விபரங்களை கூறுங்களேன்.

மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயத்தில் நான் ஆரம்ப கல்வியைத் தொடர்ந்தேன்... பின் மட்/களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் இடைநிலை கற்று இறுதியாக உயர் கல்வியை மட்/களுதாவளை மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலையில்) பயின்றதுடன் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்தேன்.

உங்களை குறுஞ்சினிமாவிற்கு அறிமுகம் செய்தவர்... "குறுந்திரைச் செம்மல்" Kodees Waran ji. அவர் ஒரு சிறந்த மனிதர்.

**O/L பரீட்சை எழுதிய பின் என்ன செய்தீங்கள்?**

கொழும்பில் அனிமேசன், வீடியோ எடிட்டிங், போன்ற கோஸ்களில் நேரத்தை செலவு செய்தேன். இவை என்னுடைய youtube channel க்கு மிகவும் உதவியாக இருந்தது.

**உங்களுடைய ஆளுமையை எவ்வாறு விருத்தி செய்து கொண்டீங்கள்?**

Cooperative Board of Director ஆக வந்த பின் என்னுடைய நிர்வாகத் திறனை வளர்க்க முடிந்தது.

**இது எவ்வளவு காலம்?**

2 வருடமாக கடமையாற்றுகிறேன்.

**உங்களுடைய இலட்சியம் என்ன?**

Batticaloa GA (அரசாங்க அதிபர்) ஆக வேண்டும். அதுதான் என்னோட கனவு. என்னோட பிறந்த இடத்துக்கு நான் சேவை செய்ய விரும்புகிறேன்.

**பரதநாட்டியத் துறையில் அல்லது கலைத்துறையில் சாதிக்க விருப்பம் இல்லையா?**

இல்லாமல் இருக்குமா,,,? உச்சம் தொடும் எண்ணமும் அதற்கான முயற்சியிலும் உள்ளேன்.

சிறுமிகளுக்கு கற்பித்துக் கொண்டு இருக்கின்றேன்...கலை எனக்காக. என் இலட்சிய கனவு மட்டக்களப்பு மக்களுக்காக சேவை செய்ய வேண்டும் என்பதே ஆகும்.

நான் கலை, கல்வி இரண்டினையும் சமநிலைப்படுத்தி ஒன்றாக பயணிக்கிறேன்... ஓர் விடயத்தை மட்டுமே எட்டுவது இலட்சியம் எனும் எழுதப்படாத கோட்பாடாகும்.

இது என்னால் தகர்க்கப்படும் என்று நம்புகிறேன். என்னை வழிபடுத்துவோருக்கும் என்னுடைய நண்பர்களுக்கும் மிக்க நன்றி...இது என்னோடைய முதல் பேட்டி... உங்களால் மீண்டும் அறிமுகமாகிறேன்.... ரொம்ப சந்தோசமா இருக்கு.. மிக்க நன்றி சேர்....!



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

ஆர்.ராஜா.
தியத்தலாவ.

### விஜய்யின் 'வாரிசு' பிரெஞ்சு மொழி படத்தின் தழு வலா!

**கேள்வி:** விஜய்யின் 'வாரிசு' படம் ஒரு பிரெஞ்சு மொழிப் படத்தின் தழுவலா மே... இது பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?

**பதில்:** ஆமாம்.இந்தப் படத்தின் கதை பிரெஞ்சு மொழியில் வெளியான 'லார்கோ வின்ச்' எனும் திரைப்படத்தின் தழுவல் என தகவல் வெளியாகியிருக்கிறது. இயக்குநர் வம்சி ஏற்கனவே பிரெஞ்சு மொழியில்தான் வெளியான திரைப்படத்தின் உரிமையை வாங்கி 'தோழா' எனும் பெயரில் படைப் பொன்றை இயக்கினார். அதனால் அவர் மீண்டும் மற்றொரு பிரெஞ்சு மொழித் திரைப் படத்திலிருந்து கதையைத் தழுவி' வாரிசு' 'படத்தின் திரைக்கதையை உரு வாக்கி இருப்பதாக தகவல்கள் வெளியா னது. இணையத்தில் வெளியான இந்த தகவல்களை படக் குழுவினர் உறுதிப் படுத்த வில்லை. மேலும்,"இது போன்ற தகவல்கள் தவறானவை"என இப்படத்தின் பாடலாசிரிய ரும், தமிழ்ப் பதிப்பின் வசனகர்த்தாவுமான விவேக் தன்னுடைய இணையப் பக்கத்தில் பதிவிட்டிருக்கிறார்.

இதன்மூலம் விஜயின் 'வாரிசு' கதை பிரெஞ்சு மொழி படத்திலிருந்து தழுவி எடுக்கப்பட்டது எடுக்கப்பட்டதல்ல என்பது உறுதியாகி இருக்கிறது.

எம்.மலர் ராணி
கொழும்பு13

**கேள்வி:**: ஒரு நடிகை படத்தில் நடிப் பதுடன், நடிக நடிகையர்களுக்கு நடிப்பு பயிற்சியும் கொடுக்கிறாராமே. அந்த நடிகை யைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

**பதில்:** இயக்குநர் கார்த்திக் சுப்பு ராஜ் இயக்கத்தில் எஸ்.ஜே.சூர்யா நாயக னாக நடித்து வெளியாகி வெற்றி பெற்ற 'இறைவி' படத்தில் அழுத்தமனான வேடத் தில் நடித்ததன். மூலம் ரசிகர்களிடத்தில் பிரபலமானவர் நடிகை பூஜா தேவார்யா. அதனைத் தொடர்ந்து 'குற்றமே தண்ட னை',வெள்ளைப்பூக்கள்', அயோக்யா' ஆகிய படங்களில் நடித்த இவர், அதன் பிறகு படங்களில் நடிப்பதுடன் திரைப் படங்களில் நடிக்கும் நடிகர் நடிகைகளுக்கு நடிப்பை சொல்லிக் கொடுக்கும் பயிற்சி யாளராக அவதாரம் எடுத்திருக்கிறார்.இது தொடர்பாக அவர் பேசுகையில் "பால்ய பிராயத்தில் இருந்தே கலை நிகழ்ச்சிகளின் மீது எனக்கு தனி ஈர்ப்பு உண்டு.மேடையில் ஒரு நடிகர் எப்படி நடிக்கிறார் என்பதை அவதானிப்பேன். அதன் பிறகு வீட்டுக்கு திரும்பி வந்து ,வேறு எப்படிஎல்லாம் அதனை நடிக்க இயலும்என்று கண்ணாடி முன் நின்று பயிற்சி செய்வேன்.



பாடசாலை படிப்பு முடிந்ததும் வளர்சியடைந்து வரும் நாடகக் குழுக்களில் பங்கு பற்றி நடிக் கத் தொடங்கினேன். அதன் பிறகு திரைப் படங்களிலும் நடித்தேன். இதன் போது எனக்கு கிடைத்த மற்ற வர்களுடன் பகிர்ந்து கொண்ட போது"நீ தொழில் முறை யிலான நடிப்பை கற்பிக்கும் பயிற்சி யாளராக பணியை நீ தொடங்கலாமே" என்று நண்பர்கள் கேட்டபோது அதனை ஏற்றுக் கொண்டேன். கமல் ஹாசனின் 'விக்ரம்' படத்தில் படக் குழுவினருக்கு நடிப்பு பயிற்சி சொல்லிக். கொடுக்கும் பயிற்சியா ளராக பணியாற்றினேன். குறிப்பாக மக்கள் செல்வன் விஜய் சேது பதியை வில்லன் சந் தானமாக எப்படி தோற்றமளிக்க வேண்டும் என்பது குறித்து அவரிடம் சில குறிப்புக



ளைக் கொடுத்து படிக்கச் சொன்னேன். அவரும் அதனை ஏற்றுக் கொண்டு நடித்து, ரசிகர்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறார். இது என்னுடைய பணிக்கு கிடைத்த மன நிறைவாக கருதுகிறேன்"என்றார் நடிகை தேவார்யா

ஆர்.ஆர். குமார்
தியத்தலாவ.

**கேள்வி:** மீண்டும் இயக்குனர் பாலாவின் படத்தில் நடிக்கிறாராமே நடிகர் சூர்யா?

**பதில்:** ஆமாம்...'சூரரைப் போற்று' ,'ஜெய் பீம்' ஆகிய இரண்டு திரைப்படங் களுக்குப் பிறகு சர்வதேச அளவிலான நட்சத்திரமாக உயர்ந்திருக்கிறார் நடிகர் சூர்யா. இவருக்கு நடிகர் என்ற அடையா ளத்தை உண்டாக்கி வணிக ரீதியிலான வெற்றியையும் ஏற்படுத்தி கலை உலக பயணத்தில் 'நந்தா' படத்தின் மூலம் திருப்பு முனையை ஏற்படுத்தியவர் இயக் குநர் பாலா. அவரது இயக்கத்தில் 'பிதா மகன்' படத்தில் நடித்து தன் நடிப்புத் திறமையை நிரூபித்த சூர்யா, மீண்டும் அவருடன் இணைந்து பணியாற்றும் படத்திற்கு 'வணங்கான்' என பெயரிடப் பட்டிருக்கிறது. இதற்கான டைட்டில் சுக்குடன் கூடிய அறிவிப்பை குருநா தரான பாலாவின் பிறந்த நாளன்று வெளியிட்டு அவருக்கு மரியாதை செய்து இருக்கிறார் சூர்யா. இந்தப் படத்தின் அடுத்த கட்ட படப்பிடிப்பு கோவாவில் ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருக்கி றது. இதன் காரணமாக பாலா சூர்யா கூட்டணி குறித்து வெளியான எதிர்மறை விமர்ச னங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டிருக்கிறது. 'வணங்கான்' படத்தில் சூர்யா விற்கு ஜோடியாக நடிகை கீர்த்தி ஷெட்டி நடித்து வருகிறார்.

எம்.மலர் ராணி
கொழும்பு13.

**கேள்வி:** 'அசுரன்' படத்தில் நாயகியாக நடித்த அம்மு அபிராமி இப்போது ஏதாவது படங்களில் நடித் துக் கொண்டிருக்கி றாரா ?

**பதில்:** இது பற்றி அவர் என்ன சொல்லு கிறார் என்று கேளுங்க ளேன்."இ யக்குநர் மணி பாரதி என்னை சந்தித்து 'பேட்டரி' படத்தின் கதையை விவரித்தார். கதையை கேட்டதும் நடிக்க ஒப்புக் கொண்டேன். ஏனெனில் அறிமுக நாயக னான செங்குட்டுவனுடன் குலுமணாலி எனும் இந்தியாவின் அடர்ந்த பனி பிரதே சத்தில் எனக்கும் நாயகனுக்கும் காதல் கனவு பாடல் ஒன்று உள்ளது.படத்தின் கதை வைத்தியசாலைகளில் நடைபெறும் குற்ற செயல்களை மையப்படுத்தியது என்றாலும் , பொழுது போக்கு அம்சங்க ளும் இடம் பெற்றிருப்பதால் ரசிகர்களுக்கு இந்த திரைப்படம் பிடிக்கும் "என்றார் நடிகை அம்மு அபிராமி.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.



# விஜய்க்கு ஜோடியானால் வேறலெவல்

கேரள நடிகையான மாளவிகா மோகனன் தமிழில் பேட்ட, மாஸ்டர் மற்றும் மாறன் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

பாலிவுட்டிலும் சில படங்களில் நடித்து வரும் மாளவிகா மோகனனை அங்குள்ள ரசிகர்கள் அவரை மாஸ்டர் ஹீரோயின் என்றே அடையாளம் காண்பதாக சமீபத்தில் அவர் அளித்துள்ள பேட்டி விஜய் ரசிகர்களை உற்சாகப்படுத்தி உள்ளது.

மேலும், நடிகர் விஜய்க்கு ஹீரோயின் ஆகி விட்டால் போதும், ரசிகர்களின் கொண்டாட்டமும் கவனிப்பும் வேற லெவலில் இருப்பதாக பேசி உள்ளார்.

மலையாள ஒளிப்பதிவாளர் கே.யூ. மோகனனின் மகளான மாளவிகா மோகனன் கடந்த 2013ம் ஆண்டு துல்கர் சல்மான் நடிப்பில் வெளியான பட்டம் போலே படத்தின் மூலம் ஹீரோயினாக அறிமுகமானார். நானு மாட்டு வரலக்ஷ்மி படத்தின் மூலம் கன்னட திரையுலகில் அறிமுகமானார். பிரபல இயக்குநர் மஜித் மஜிதி இயக்கத்தில் இந்தியில் வெளியான பியோண்ட் தி கிள வுட்ஸ் படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமான இவர், 2019ம் ஆண்டு ரஜினி நடிப்பில் வெளியான பேட்ட படத்தின் மூலம் தமிழ் சினிமாவிலும் அறி முகமானார்.

ரஜினிகாந்தின் பேட்ட, விஜய்யின் மாஸ்டர் மற்றும் தனுஷின் மாறன் என தொடர்ந்து தமிழில் 3 படங்களில் நடித்திருந்தாலும், மாளவிகா மோகனனை இன்னமும் ரசிகர்கள் மாஸ்டர் ஹீரோயின் என்றே அழைத்து வருகின்றனர். நடிகர் விஜய்க்கு ஜோடியாக மாளவிகா மோகனன் லோகேஷ் கனகராஜ் இயக் கத்தில் நடித்த நிலையில், அவரது இன்ஸ்டாகிராம் பக்கத்தை ஏகப்பட்ட விஜய் ரசிகர்கள் ஃபாலோ செய்தது குறிப்பிடத்தக்கது.

யுத்ரா எனும் இந்தி படத்தில் நடித்து வரும் மாளவிகா மோகனன் சமீபத் தில் அளித்த பேட்டியில், நார்த் இந்தியாவுல ஒரு குக் கிராமத்திற்கு நானும் எங்க அம்மாவும் சென்றிருந்தோம். அங்கே உள்ள சில ரசிகர்கள் என்னை பார்த்து நீங்க மாஸ்டர் ஹீரோயின் தானேன்னு கேட்டாங்க, இந்தியில் நான் ஏற்கனவே பியோண்ட் தி கிளவுட்ஸ் படத்தில் நடித்தாலும், மாஸ்டர் ஹீரோயின் என்றே என்னை ரசிகர்கள் அடையாளம் கண்ட நிலையில், தான் விஜய் சாரின் ரீச் எந்தளவுக்கு இருக்கிறது என்பதை புரிந்து கொண்டேன்.

விஜய்க்கு ஜோடியாக யார் நடித்தாலும், அவர்களை அவரது ரசிகர்கள் ட்ரீட் செய்யும் விதமே வேறலெவல் தான். மாஸ்டர் படம் வெளியாவதற்கு முன்பாகவும், வெளியான பின்னரும் விஜய் ரசிகர்கள் கொடுத்த ரெஸ்பெக்ட், அவர்கள் கொண்டாடிய விதமெல்லாம் எப்போதுமே மறக்க முடியாது. லோகேஷ் இயக்கத்தில் மாஸ்டர் படத்தில் விஜய் கூட நடிக்க எனக்கு கிடைச்ச வாய்ப்பு ரொம்ப பெரிய வாய்ப்பு என அந்த பேட்டியில் ஓப்ப னாக பேசி உள்ளார் மாளவிகா மோகனன்.

# இரவின் நிழலில் இப்படி நடித்தது ஏன்?

சினிமாவில் புதுப்புது முயற்சிகளை செய்து, அதில் வெற்றியும் கண்டவர் பார்த்திபன். இவரின் இயக்கத்தில் தற்போது வெளியாகி இருக்கும் வியக்கத்தக்க படம் தான் இரவின் நிழல். உலகின் முதல் நான் லீனியர் சிங்கிள் ஷாட் படமாக இதனை எடுத்துள்ளார் பார்த்திபன். இப்படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ளார். இப்படம் இன்று உலகமெங்கும் பிரம்மாண்டமாக ரிலீசாகி உள்ளது.

இரவின் நிழலில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளவர் பிரிகிடா. ஆஹா கல்யாணம் வெப்சீரிஸில் 'பவி டீச்சர்' கதாபாத்தி ரத்தில் நடித்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் இவர். பிரிகிடா 'இரவின் நிழல்' படம் குறித்து அளித்துள்ள பேட்டி இணையத்தில் வைரலாகி வருகிறது.இப்படத்தில் உதவி இயக்குனராக பணியாற்ற சென்ற பிரிகிடாவிற்கு ஹீரோயின் சான்ஸ் கொடுத்து ஆச்சர்யப்ப டுத்தி இருக்கிறார் பார்த்திபன்.

இப்படத்தில் நிர்வாணமாக ஒரு காட்சியில் நடித்துள்ளார் பிரிகிடா. அவ்வாறு நடித்தது ஏன் என்பது குறித்து சமீபத்திய பேட் டியில் அவர் கூறியுள்ளார்.

அதன்படி, படத்தின் என்னுடைய கதாபாத்திரத்திற்கு அப்படி ஒரு காட்சி தேவைப்பட்டது. இதைப் பார்த்தி பன் சார் என்னிடம் சொன்ன போது, இதை எப்படி பெற்றோரிடம் சொல்லி புரிய வைப்பது என்பது எனக்கு சற்று நெருடலாக இருந்தது.

சேலை அணிந்து சென்றாலே சரியாக இருக்கிறதா? என பல முறை சரி செய்யும் பெண் தான் நான். ஆனால், அந்த கதாபாத்திரம் ரொம்பவே புனிதமானது. அதற்கு அப்படியொரு விஷயம் நடக்கும் போது, அந்த கோலத் தில் இருந்தால் தான் சரியாக இருக்கும் என பார்த்திபன் சார் புரிய வைத்தார். ஆனால், இதை என் பெற்றொர்களி டம் எப்படி சொல்வது என்பது எனக்கு பெரிய நெருட லாக இருந்தது.

இதையடுத்து நானும், பார்த்திபன் சாரும் எடுத் துக்கூறியதும், எனது பெற்றோர் அவ்வாறு நடிக்க சம்மதித்தனர். அதன்பின்னர் தான் அந்தக் காட்சியை எடுத்து முடித்தோம். படத்தில் பார்க்கும் போது அது கவர்ச்சியாக தெரியாது, பலரையும் அது ஆச்சர்யத்தில் ஆழ்த்தும். அதில் உள்ள புனிதம் மட்டுமே தெரியும் என விளக்கம் அளித்துள்ளார் பிரிகிடா.



# கவர்ச்சியில் கலக்கும் யாஷிகா ஆனந்த்

பிக் பாஸ் நிகழ்ச்சிக்கு பிறகு பல்வேறு படங்களில் நடித்து வரும் இவர் சமூக வலை யதள பக்கங்களிலும் கவர்ச்சியான போட்டோக்களை வெளி யிட்டு வருகிறார். 'இருட்டு அறையில் முரட்டு குத்து' படத்தில் கவர்ச் சியாக நடித்ததன் மூலம் மிகவும் பிரபலமானவர், யாஷிகா ஆனந்த். அடுத்தடுத்த படங்களிலும் கவர்ச்சியாக நடித்து பேசப்பட்டார். பட வாய்ப்புகளும் குவிந்து வந்தன. இந்தநிலையில் எதிர்பாராத கார் விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்தார். பல மாதங்கள் ஆஸ்பத்திரியி லேயே சிகிச்சை பெற்று தற்போது பழைய நிலைக்குத் திரும்பி இருக் கிறார். மீண்டும் படங்களில் நடித்து வருகிறார். யாஷிகா ஆனந்த் சமூக வலைதளங்களில் அவ்வப்போது தனது கவர்ச்சி படங்களை வெளியிடு வது வழக்கம். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற நேரத்தில் அவர் சமூக வலைதளங்களில் ரசிகர்களுடன் கலந்துரையாட மட்டுமே செய்தார். பெரிதாக படங்கள் எதையும் அவர் வெளியிடவில்லை. தற்போது யாஷிகா தனது கலக்கல் கவர்ச்சி புகைப்படங்களை மீண்டும் வெளியிட தொடங்கி இருக்கிறார். இதனால் ரசிகர்களும் குஷியாகி இருக்கிறார்கள். 'இப்போது தான் கண்கள் பளிச்சென தெரிகிறது', என்று சந்தோஷத்தில் கருத்துக்களை பதி விட்டு வருகிறார்கள். மீண்டும் ரசிகர்களின் வாழ்த்து மழையில் நனைவதால் யாஷிகா உற்சாகம் அடைந்திருக்கிறார்.



# கார்த்தி படத்தில் இருந்து விஜய் சேதுபதி விலகல்





ராஜூ முருகன் இயக்கத்தில் கார்த்தியின் புதிய படத்தில் இருந்து கால்ஷீட் இல்லாத காரணத்தால் விஜய் சேதுபதி விலகி விட்டார். தமிழ் சினிமாவில் முன்னணி கதாநாயகனான கார்த்தி நடித்த 'விருமன்', 'பொன் னியின் செல்வன்', 'சர்தார்' ஆகிய படங்கள் அடுத்தடுத்து வெளிவர தயாராக இருக்கின்றன. இதைத்தொடர்ந்து ராஜு முருகன் இயக்கத்தில் ஒரு புதிய படத்தில் கார்த்தி நடிக்க இருக்கிறார்.

இந்த படத்தில் வில்லனாக நடிக்க விஜய் சேதுபதி ஒப்பந் தம் செய்யப்பட்டிருந்தார். இப்போது கால்ஷீட் இல்லாத காரணத்தால் இந்த படத்தில் இருந்து விஜய் சேதுபதி விலகி விட்டார். வில்லன் நடிகருக்கான தேடலில் படக்கு முவினர் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

# உடல் நிலையை உணர்த்தும் நகங்கள்



**பத்து விரல் பூவழகு, பாதம் தங்க தேரழகு**

பலர் முகத்தை அழகாக்கிக் கொள்வதில் நிறைய கவனம் செலுத்துவார்கள். ஆனால் நகங்களை கவனிக்காமலே விட்டுவிடுவார்கள். அகத்தின் அழகு முகத்தில் தெரிவது போல, உடல்நிலையை நாம் நகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

பல்வேறு பிரச்சினைகளை நகம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. உடலில் ஏற்படும் ஒவ்வொரு பாதிப்பிற்கும் ஒவ்வொரு விதமான பிரச்சினைகளை நகம் காட்டுகிறது.

உடல்நிலையில் ஏற்படும் சில தற்காலிக பாதிப்புகளினால், நகங்களின் வளர்ச்சியில் கூட மாற்றங்களை ஏற்படுத்தும். நகங்களை சுத்தமாகவும், சரியான அளவில் வெட்டி விடுவதும் ஒவ்வொருவரும் நமது உடல் ஆரோக்கியத்திற்காக செய்யும் செயலாகும்.

ஒருவரது உடலில் இரும்புச் சத்துக் குறைவாக இருப்பின், நகங்கள் உடைவது அல்லது பட்டையாக விரிந்து வளர்வதன் மூலம் அறியலாம். சிலருக்கு நகங்களில் மேடு பள்ளங்கள் ஏற்பட்டிருக்கும். இதுவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டையே காட்டுகிறது.

நகம் கடிக்கும் பழக்கம் நம்மில் பலருக்கு இருக்கலாம். எப்போதாவது மனக்கவலை ஏற்படும் போது நகம் கடிப்பது ஒரு சிலர். ஆனால் எப்போதும் நகத்தை தேடித் தேடி கடிப்பது சிலருக்கு பழக்கமாகவே இருக்கிறது. மருதாணி இலைகளை அரைத்து வைக்கப்படும் மருதாணி விரல் நகங்களுக்கு நல்ல பயனை அளிக்கிறது.

சிலர் அடிக்கடி நகப்பூச்சை பயன்படுத்துவார்கள். இது மிகவும் தவறு. மாதத்தில் ஓரிரு நாட்களாவது நகங்கள் காற்றோட்டத்தில் இருக்க வேண்டும். அப்போதுதான் அதன் உண்மையான தன்மையை நாம் அறிய முடியும்.

# மூக்குத்தி முத்தழகு மூணாம்பிறை பொட்டழகு



பெண்கள் என்றாலே அழகுதான். இதிலும் அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில் அவர்கள் தன் உடலில் தங்கம் அணிந்து அழகேற்றுகின்றனர். இதனால் தங்கத்தால் அவர்கள் அழகா? இல்லை அவர்களால் தங்கத்துக்கு அழகா? என்று சொல்ல முடியாது.

அந்த காலம் முதல் இந்த காலம் வரை பெண்கள் அனைவரும் காது குத்துவது இயல்பு. ஆனால் மூக்கு குத்தும் பழக்கம் நாளடைவில் குறைந்து வருகிறது. அப்படி மூக்கு குத்துவது என்று முடிவு எடுத்தாலும், எந்தப் பக்கத்தில் மூக்கு குத்துவது, இடதா? அல்லது வலதா? என்ற குழப்பமும் நீடிக்கிறது.

மூக்கு குத்துவது இந்தியர்களின் வழக்கமாகும். அதிலும் இந்துகள் அதிகமானோர் பின்பற்றுகின்றனர். ஒரு பெண் திருமணமானவள் மற்றும் திருமணத்துக்கு தயாராக உள்ளாள் என்பதை குறிக்கவும் மூக்கு குத்துகின்றாள். வழக்கத்தில் வட இந்திய பெண்கள் மூக்கின் இடதுப் பக்கத்திலும், தென்னிந்திய பெண்கள் மூக்கின் வலப்பக்கத்திலும் மூக்கு குத்துகின்றனர்.

மூக்கு குத்துவதற்கு சிறந்த பக்கம் இடதுப்பக்கம்தான். ஏனெனில் பெண்ணின் இனப்பெருக்க உறுப்புகள் மூக்கின் இடதுப்பக்கத்தோடு தொடர்புடையதாக ஆயுர்வேதம் கூறுகிறது. இதனால் பிரசவக்காலத்தில் வலிகுறைந்தும் எளிதாகவும் குழந்தைப் பிறக்கும் என்பது ஐதீகம். அதோடு மாதவிடாய் பிரச்சினைகளும் தீரும்.

பெண்கள் பொதுவாக இடது பக்கம் படுப்பது நன்று.

இடதுப் பக்கம் மூக்கு குத்தும் போது அவர்களால் சாதரணமாக படுக்க முடியாது. மூக்குத்தி குத்தும். இதனால் அவர்கள் வலதுப் பக்கத்தில் மூக்கு குத்துகின்றனர்.

# வதனம் வண்ணமயமாக மின்ன வேணுமா?

**வானம் விட்டு மண்ணில் வந்தாள் நிலவல்ல பெண்ணழகு!**



மனிதர்கள் 30 வயது கடந்தவுடன் முகத்தில் சுருக்கம் தாண்டவம் ஆடத் தொடங்கிவிடும். இது ஆண்கள், பெண்கள் என இரு பாலினருக்கும் வருகின்ற முக்கிய ஒன்றாகும். எது விட்டாலும் சுருக்கம் நம்மை விடாது. சருமத்தின் சுருக்கத்தை நீக்கி என்றும் இளமை ததும்ப வாழ வேண்டுமா?? அப்போ தோடம்பழ பவுடர் பயன்படுத்துங்கள். தோடம் பழங்களில் விட்டமின் சி, கல்சியம் போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளன. இதனை தினமும் சாப்பிட்டால் உடல் ஆரோக்கியம் மேன்மை அடையும். தோடம் பழத்தை காட்டிலும் அதனின் மேல் உள்ள தோள்களில் சத்து அதிகம். தோள்களில் முகத்தை பொலிவு செய்யக் கூடிய சத்து அதிகம் உள்ளது. சரி வாங்க தோடம் பழ தூள் செய்வது குறித்தும் அதனை எப்படி, எவ்வாறு பயன்படுத்துவது குறித்தும் பார்க்கலாம்.

முதலில் தோடம் பழ தோலை வெயிலில் நன்றாக காய வைத்து கொள்ளவும். காய்ந்த தோலை மிக்சியில் அரைத்து துாளாக்கிக் கொள்ளவும். இந்த துாளை வைத்து வீட்டிலே பேஸ் மாஸ்க் போடலாம்..

**தேவையான பொருட்கள்:**

தோடம் பழ துாள் 2 தேக்கரண்டி. தேன் 1 தேக்கரண்டி. எலுமிச்சை சாறு 2 தேக்கரண்டி.

**செய்முறை:** ஒரு கப்பில் முகத்திற்குத் தேவையான தோடம்பழ பவுடரை எடுத்து கொள்ளவும். பிறகு அதில் தேன்,எலுமிச்சை சாறு ஆகியவற்றை சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும். இந்த மாஸ்க் அணிவதற்கு முன்பு முகத்தை தூய நீரால் கழுவிக் கொள்ளவும். சிலருக்கு முகம் மட்டும் பொலிவாக இருக்கும். ஆனால் கழுத்து கருகருன்னு கருப்பாக இருக்கும். இதனை தவிர்க்க இந்த பேஸ் மாஸ்க்கை முகம் மற்றும் கழுத்திற்கு போட்டு 20 நிமிடம் ஊற வைக்கவும். பின்னர் முகத்தை கழுவினால் முகம் பொலிவடையும்.

# தொப்பை தொலைய...

**வலை வீசும் கண்ணழகு, வளைந்தாடும் இடையழகு**

தினமும் பயிற்சி செய்தால், தொப்பை தானாகக் குறைந்துவிடும். ஃபிட்டான வயிற்றுப் பகுதி வந்துவிடும். தொப்பையைக் குறைப்பதற்கான பயிற்சிகள் இங்கே.. தரையில் குப்புறப் படுக்க வேண்டும். கைகளை முன்புறம் தரையில் பதிக்க வேண்டும். இப்போது, கைகளை ஊன்றியபடி தலை மற்றும் மேல் உடலை உயர்த்தி, மெதுவாக மூச்சை இழுத்து விட வேண்டும். பின்னர் பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும். இதை மூன்று முறை செய்ய வேண்டும்.

முதுகுத்தண்டு நேராகும். கை, நெஞ்சு, வயிற்றுப் பகுதியில் உள்ள தசைகள் இறுக்கமாகும். உடல் முழுவதும் சீரான ரத்த ஓட்டம் பரவும். தரையில் கால்களை நேராக நீட்டிப் படுக்க வேண்டும். கால் முட்டியை மடக்கி வைக்க வேண்டும். தலை மற்றும் மேல் உடலை உயர்த்தி, கைகளால் முட்டியைத் தொட வேண்டும். இந்த நிலையில் சில விநாடிகள் இருந்துவிட்டு, பழையநிலைக்குத் திரும்ப வேண்டும். இப்படி, மூன்று முறை செய்ய வேண்டும். தரையில் கால்களை நீட்டி நேராகப் படுக்க வேண்டும். கைகளை இடுப்புக்குப் பின்புறமாகக் கீழே வைக்க வேண்டும். இப்போது, கால்களை சற்று அகட்டியபடி 45 டிகிரியில் ஒரே சீராகத் துாக்கி, சில விநாடிகள் அதேநிலையில் இருக்க வேண்டும். பின்னர், பழையநிலைக்குத் திரும்பலாம். இதை மூன்று முறை செய்யலாம். தரையில் கால்களை நீட்டி நேராகப் படுக்க வேண்டும். கைகளை பக்கவாட்டில் தரையில் பதிக்க வேண்டும். இப்போது கால்களை 90 டிகிரி கோணத்தில் உயர்த்தி, ஐந்து விநாடிகள் அப்படியே இருந்துவிட்டு, இயல்புநிலைக்குத் திரும்பலாம். இதை மூன்று முறை செய்ய வேண்டும்.



# செல்ஃபி உலா



Dusha, Gayathri, Dharshana, kanth, Arun




செல்லத்துரை கலையன்பன், மாவிட்டபுரம்




Stella, Rani



Rajani Suresh



Aruniya



A.Raviraj



Kamsica Mahadevan



S.Danendran (Art Director)



Satheesh Sathiswaaran



Rahini Kumaran



Sivakumar




Rasalingam Danaraj



S.N. Nadarajah

## வழிகாட்டுங்கள்


பாடசாலை செல்வதற்கு பேருந்துக்கு வழிகாட்டுங்கள்





## நிறம் தீட்டுங்கள்




## நேரத்தைக் கணித்து எழுதுங்கள்



## 08 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



கீழ் உள்ள கட்டங்களை வெட்டி பொருத்தமான இடத்தில் ஒட்டுங்கள்





## நான் ரொம்ப பிஸி...



இம்மண்ணிலே பிறக்கும் ஒவ்வொரு குழந்தைகளும் ஏதோ ஒரு திறமைகளுடன் பிறக்கின்றது. அத் திறமைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்து மெருகூட்டுவதில் பெற்றோரின் பொறுப்பு அளப்பரியது. அந்தவகையில் மாவனல்லை சேர்ந்த நௌபல் ஹசீம், சிப்னா ஹாரிஸ் தம்பதியினரின் 5

வருட தவிப்பிற்கு இறைவனால் வழங்கப்பட்ட அருட் கொடையே சாரா ஹானி . 1 8 மாதங்களிலே 150 க்கும் மேற்பட்ட உலக நாடுகள், உலக நாடுகளின் தலைவர்கள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றைஅடையாளம் காட்டும் அபார திறமைகொண்டிருந்தார் சாரா ஹானி. இவரின் திறமைகளுக்கு அங்கிகாரமாக World record இரண்டும் Asia Book of Record ஒன்றும் கிடைத்தது.இரண்டு வயதும் இரண்டு மாதமும் இருக்கின்ற போதே வாசிப்புத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்துள்ளார். ITN 'அடபட்டம்' நிகழ்சியில் கலந்து கொண்டு மனித உள்ளுறுப்புக்கள், கோள்கள், அளக்ககூடிய கருவிகள் மற்றும் தலைவர்களை மிகச் சரியாக அடையாளம் காட்டினார். இதனின்

தொடராக அமெரிக்காவினால் நடாத்தப்பட்டபோட்டியொன்றில் பங்கு பற்ற பெற்றோரால் ஊக்கப்படுத்தி தூண்டப்பட்டார். விஞ்ஞானத்தை தழுவியதாக காணப்பட்ட இந்தப்போட்டியில் தரம் 1 இல் கற்கும் மாணவர்களுடன் போட்டியிட்டு அந்த மாணவர்களுள் முதலாவதாக 89 புள்ளிகளைப் பெற்று சாதனையை நிலைநாட்டியுள்ளார் சாரா ஹானி.அதுமட்டுமல்லாது பேச்சுத்துறையி லும் ஆர்வம் கொண்ட குழந்தை சாரா

ஹானி பேச்சுத்துறை சார்ந்த போட்டியிலும் கலந்து கொண்டு நூற்றுக் நூறு புள்ளிகளைப் பெற்று தனக்காக சிறந்த அடையாளத்தை

உருவாக்கி தனக்கான அங்கீகாரத்தையும் பெற்றுள்ளார்.இது மாத்திரமல்லாது இந்தியாவின் குழந்தை மேதைகள் எனும் விருதிற்கு

தான் செய்த சிறந்த சாதனைகள் மூலம் நூறு சாதனைக்குழந்தைகளுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு குழந்தை மேதை

எனும் விருதை இந்தியாவின் பிரதமர் மோடி அவர்களினால் பெற்றுக் கொண்ட சாதனை நௌபல் ஹசீம், சிப்னா ஹாரிஸ் தம்பதியினரின் குழந்தை சாரா ஹானியைச்சாரும்.

*Women icon Young life time achiever award winning* விருதிற்கும் தெரிவு செய்யப்பட்டு அந்த விருதிற்கும் தகுதியான ஒரு குழந்தையாக இடம்பிடித்துள்ளார்.3 வயதாக இருக்கும் போதே சர்வதேசஅளவிலான போட்டிகளில் ஆறு ஏழு வயது மாணவர்களுடன் கலந்துகொண்டு தனது திறமையை வெளிப்படுத்தி ஒரு சாதனைக் குழந்தையாகவும் உலகளாவிய பதிவுகளில் இடம் பெறும் குழந்தையாகவும் காணப்படுகிறார் சாரா ஹானி.முடியாதது என்று எதுவும் இல்லை நீ முயற்சிக்காத வரை என்பதற்கு குழந்தை சாரா ஹானி சிறந்த ஒரு எடுத்துக்காட்டாகவும் சிறந்த முன்னுதாரணமாகவும் காணப்படுகிறார். அதை விட மிக முக்கியமாக இந்தக் குழந்தையை ஊக்கப்படுத்தி ஒரு சாதனைக்குழந்தையாக மாற்றிய பெற்றோரின் தூண்டுதலும் தியாகங்களும் நிகரற்றது. இவ்வாறான சிறந்த சாதனைக் குழந்தைகள் உருவாக்கப்படுவது அந்த குழந்தையைச் சுற்றியுள்ள சூழலும் அந்தக்குழந்தை வளர்க்கப்படுகின்ற விதத்திலுமே காணப்படுகிறது. சிறந்த அடைவையும் வெற்றியையும் பெற்றுக்கொள்ள வயது என்ற ஒன்று தடையில்லை முயற்சியும்

தன்னம்பிக்கையும் இருந்தால் சிறந்த ஒரு சாதனையாளராக உருவாக முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக திகழும் சாரா

ஹானி எதிர்காலத்திலும் இன்னும் பல நல்லஅடைவுகளையும் வெற்றிகளையும் அடைந்து கொள்ள வேண்டும் என்று வாழ்த்துவதோடு சிறந்த சாதனைக் குழந்தைகளை உருவாகுவது அவர்கள் பெற்றோர்களினால் அவர்கள் வளர்க்கப்படும் விதத்திலே உள்ளது .சாரா ஹானி போன்ற சிறந்த சாதனைக்

குழந்தைகளை ஒவ்வொரு பெற்றோரும் உருவாக்கி வழிநடாத்திட சாரா ஹானியின் பெற்றோரின் முயற்சி சிறந்த ஒரு உதாரணமாகும்.

(குறிப்பு இதற்கு முன்னரும் செந்தூரம் இவர் பற்றி சிலாகித்து எழுதியிருந்தது. அவரும் மேலும் சாதனை படைக்க வாழ்த்துகிறோம்.

# நிகரில்லா திறமைகளினால் உலக அளவில் சாதனை படைத்து வரும்

# சிறுமி சாரா ஹானி

**இவரின் திறைமைகளுக்கு அங்கீகாரமாக World record இரண்டும் Asia Book of Record விருது ஒன்றும் கிடைத்துள்ளது**





தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
[illegible]@gmail.com

# கவிதையில் ஒளிபாய்ச்சும் திறனாய்வு வெளி

ஒரு கவிதைப் பிரதி வெளிவரும்போது அது பற்றி எந்தளவு பேசப்படுகிறது, எவ்வாறு பேசப்படுகிறது, எவரெல்லாம் பேசுகின்றனர் என்பதெல்லாம் நூலின் அகப்பெறுமதியை வலுவூட்டும் புறப்பெறுமதிதான்.

ஈழத்தில் இந்தப் பேசுமுறை அல்லது பேச்சுக்குத் தேர்ந்தெடுக்கும் பிரதி குறித்த நேர்த்தியான ஒரு போக்கு இருப்பதாக அல்லது அவ்வாறு இருப்பதில் ஒழுங்கின்மை இருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது. ஒருவகை அணி நிலை அல்லது சார்புத் தன்மை மேலோங்கும் தன்மையானது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல. இப்போக்கு கனதியான பிரதிகளை இருட்டடித்து விடும் என்பதற்கு அப்பால் கனதியற்ற பிரதிகள் ஈழத்துக் கவிதைப் போக்கின் எல்லைகளை நிர்ணயிப்பவையாகவும் மாறிவிடும் ஆபத்தும் உண்டு.

எனவே பிரதி குறித்த பேச்சாளர்கள் வரும் பிரதிகள் பற்றிய தேடலும் நேர்த்தியான பார்வையும் சார்பு நிலையற்ற அல்லது சார்பு நிலையில் பொதுத் தெரிவைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்த பொதுத்தளத்தில் அல்லது சார்பற்ற நிலையில் வரும் பிரதி மீதான கருத்தாடல் ஆரோக்கியமாக அமையும்போது திறனாய்வு எழுநிலை தோன்றும். உண்மையில் இலக்கியத்தின் உயிர்ப்பு அல்லது நிலைத்தன்மையென்பது திறனாய்வுக் கலையின் பாற்பட்டதுமாகும். ஆனால் இன்று எழுதுகளங்கள் விரிந்த சூழலில் அல்லது சமூக வலையில் மிக அதிகமாக அதேவேளை மேலோட்டமான ஒரு மேய்ச்சல் இடம் பெற்று விடுகிறது. இதுவே திறனாய்வின் உச்சமெனவும் கொண்டாடவும் படுகிறது. மேம்போக்கான திறனாய்வு எழுத்தாளரின் அதீத தோற்றமும் மேற்சொன்ன ஆரோக்கியமின்மைக்குக் காரணமாகி விடுகிற ஆபத்துமுண்டு.

எனவேதான் பிரதிகளின் மீதான தேடலும் தேடலாளரின் திறனாய்வு மேம்பட்ட பார்வையும் பிரதி முகத்தை முகமற்றுப் போதலில் இருந்து பாதுகாக்கும். இன்னொரு வகையில் ஆரோக்கிய எழுத்துப் புலத்தின் மீது ஒளி பரப்பும்.



முல்லை முஸ்ரிபா

# ஔவன் கவிதை

## ஒளியின் முகம்



உயிர் துடித்துக் கிடந்தது இரவு
நொதிய நொதிய
வழிகிறது
பெருந்துயரத்தின் அதீத சொற்கள்
கடுகடுத்த இருளில்
கொடூர முகத்தைச் சிதைக்கவென
எழுந்தன தீராக்குரல்கள்

குரல்களில் திசை
குரல்களில் விசை

குரல்களில் முகிழும் ஏழுதசாப்தத்தின்
ஏக்கப் பெருந் திரட்சி

இருபத்தேழாயிரத்துப் பத்து ராத்திரிகளின்
பின்னிரவொன்றில்
கொடூரம்
தன் முகத்தைப் புதைத்திற்று

விடிந்தபோது
சூரியனின் ஒற்றைக்கதிரில் அப்பிக் கிடந்தன
அதீதத்தின் குரல்களும் ஒளியின் முகங்களும்

# அரூப வெளி

நான் வெளியாகிறேன். அரூப வெளி. உள்ளுமற்ற புறமுமற்ற மேலுமற்ற கீழுமற்ற வெளி. வெட்பமும் தட்பமும் வேறுபாடற்ற வெளி. சினமும் சாந்தமும் மகிழ்வும் துயருமென உணர்வற்ற வெளி. நீலமும் பச்சையும் சிவப்பும் மஞ்சளும் கறுப்பும் வெள்ளையும் பிறவும் கலந்திராத நிறமுள்ள வெளி.

ஆனால் என் வெளிக்குள் முகங்கள் இருக்கின்றன. இதயங்கள் இருக்கின்றன. இதயத்துடிப்புகள் இருக்கின்றன. கைகள் வெறுங் கைகள். கால்கள் கடுக்க நின்றலையும் வரிசைகள் சலனப் படமாக வெளிக்குள் அலைகின்றன.

இப்படியொரு பெரு வெளியாக நான் எப்படி மாறிப்போனேன். என் கண்களை என்னால் நம்ப முடிவதில்லை. என் காதுகளை என்னாலே கேட்க முடியவில்லை.



நான் உணர்விலிருக்கிறேனா? இல்லை. உணர்வற்ற பிணமாக மாறிவிட்டேனா? எனது வெளியில் வானம் தெரியவில்லை தூரத்தே தெரியும் விடிவெள்ளி இல்லை. பூரணநிலவின் பூரித்த குளிரொளி முகமும் இல்லை. சூரியன் வருவானா என்று தேடுகிறேன். என் தேடலொரு நப்பாசை.

கால்களூன்ற முடிவதில்லை, நிலமில்லை, கடலில்லை, குளமில்லை, வயலில்லை. இந்த வெளிக்குள் எப்படி வந்தேன். எப்போது வந்தேன் எதனால் வந்தேன்.

நான் வெறும் வெளியானதற்கு நானே தான் காரணியாம். வெளிக்கு வெளியேயிருந்து ஒரு கருங்குரல் கேட்கிறது. ஒரு இருட்டும் நீள்கிறது. அதன் நகங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முகத்தைத் தின்ற கறை, ரத்தக்கறை...

என்னளவில் கறைபட்டிடக் கூடாதென்ற வெறும் பிரார்த்தனை என்னுள் முளைக்கிறது. அது விருட்ஷமாகி நிழலாகுமென்றொரு கனவு நீள்கிறது...... என் வெளிக்குள் அலையும் முகங்களை உசாவுகிறேன். ஒவ்வொரு முகத்தின் இழைகளிலும் ஆயிரமாயிரம் துயர் என்று எழுதிவைத்திருக்கிறது காலம். காலத்திடம் என் வெளியை கையளித்து விட்டு நான் தப்ப விரும்புகிறேன். எப்படித் தப்ப..... அத்தனை இதயங்களின் துடிப்பும் அத்தனை விழிகளின் எதிர்பார்ப்பும் எனது வெளியில் நிறைகின்றன.....

என் அதிகத்துள் உறைந்து கிடக்கும் நினைவுகள் மெல்லமெல்ல உயிர்க்கத் தொடங்குகின்றன. நான் ரூப வெளியாகிறேன்.

-பொன்மீரா

# ஊமக்காச்சி 05

சின்ன வயசில் எனக்குள் மிதந்த சொற்றொடரிது. எனக்கு முன்னால் பென்சில், பேனா, கவராயம், டோர்ச்லைற், வீட்டுத்திறப்பு, ஸ்கூட் றைவர், ஐஸ்கிரீம் கோன்....எல்லாம் மைக் டெஸ்டிங் வன்...ரூ... த்ரீ....தான்.

காணும் பொருளெல்லாம் மைக் ஆகிவிட நான் அறிவிப்பாளனாகி விடுவேன். இவற்றினூடாகக் குரல் வெளிப்படாது என்பது தெரிந்திருந்தும் என் ஆத்மாவுக்குள் மிதந்த அறிவிப்பு என்கிற கலை இப்படித்தான் துளிரத்தொடங்கியது.

மாமர வளவுக்குள் பனைமட்டைக் காரோட்டியபடி எனவன்ஸ் பண்ணித்திருந்த எட்டாம், ஒன்பதாம் பருவத்து ஞாபகங்கள் கூட வைகாசிக் காற்றாய் எனக்குள் வீசுகிறது. ஜெஸீமாவிலோ, சிவஜோதியிலோ பட விளம்பர அறிவிப்புக்கார் ஊரூராக வீதிவீதியாக வரும் காற்றில் சினிமாப் பாட்டு மணக்கும். அதனிடையே தாழிப்பு வாசனையாக கம்பீரமான அறிவிப்பாளர் குரல் வரும். கே.எஸ்.ராஜாவின் திரை விருந்தில் கேட்கும் குரல் போல.... எனக்குள் குரலோடும். நானும் காருக்குப் பின்னால் நோட்டிஸ் எடுக்கவும், அறிவிப்பு எடுக்கவுமாக ஓடுவேன்.

மாமர வளவுக்குள் பனைமட்டைக்காரில் தேர்தல் கால பிரசார வாடையை அப்படியே பிரதி செய்வேன். திருவிழாக் கொண்டாட்டங்களை நேர்முகம் செய்வேன். மீலாது விழா ஊர்வலத்தில் கொடியசைத்தது போல உற்சாக அறிவிப்பில் பூரிப்பேன். சித்திரைப் புத்தாண்டு சைக்கிளோட்டத்தை சைக்கிள் வேகத்திற்கேற்ப கூவுவேன். இப்படி இப்படியே அனுபவம் என் அறிவிப்பு ஆசையையும் ஆற்றலையும் மெருகேற்றி வந்திருக்கிறது.

ஒலிபரப்பின் ஆர்வம் அலாதியானது.பால்பேணிகளை தங்கூசியின் முனைகளில் கட்டி தூரத்தூர நின்று போன் பேசுவது போல் அறிவிப்பின் ஒலியைக் கடத்தியிருக்கிறேன். பத்தாம்,பதினோராம் வகுப்புக்காலத்தில் இனங்காணப்பட்ட அறிவிப்பாளனானேன். மாணவர் மன்றத்தில் நிகழ்ச்சித் தொகுப்பு,நாடக முன்னோட்டம், ஊர் பெருநாள் மேடைகளில் அறிவிப்புஎன ஞாபகத்திலொட்டியுள்ளது அறிவிப்பாளனென்ற அனுபவம்.

தரம் பதினொன்று படிக்கும் காலத்தில் வுஏ அறிமுகமான காலத்தில் ஊர்களிலே விடிய விடிய வீடியோ காட்டும் கலாசாரம் வளர்ந்தது.எங்கள1Oரில் நடமாடும் வீடியோ தியேட்டர் பலரும் நடத்தினர்.அருள் அதில் தீவிரம்.ஒழுங்கையொழுங்கையாக விளம்பரிப்பு செய்து இரவில் ஒரு மைதானத்திலோ வளவிலோ படங்கு மறைப்புக் கட்டிப் பாட்டுப்போட்டு மூன்று, நான்கு படங்கள் காட்சியாகும். புதிய புதிய படங்கள்...பார்க்கப்பெருங்கூட்டம். அருளின் காசுப்பை நிரம்பும்.



ஒருநாள் அவனது அறிவிப்பாளர் வரவில்லைப்போலும். என்னைக்கேட்டான்.கற்கண்டாய் மனசு இனித்தது.காரில் ஏறினேன்....கமலஹாசனின் ஏதுஜேக்கேலியே,ரஜனியின் ஏணிப்படிகள்,சிவாஜியின் பாசமலர்.....எனது குரலில் பட விளம்பர அழைப்பு. ஊரூராய்க் காரோடிக் குரலும் அடைத்தது. மாலையில் வீடியோ படக்காட்சி தொடங்கியபோது நான் நண்பர்களோடு போனேன். ஆனால் அருள் என்னை யாரென்றே மறந்து விட்டானோ அல்லது தெரியாதது போல் போனானோ தெரியவில்லை.ஒரு பிறீ டிக்கட் கூட கிடைக்கவில்லை. நப்பாசை தோற்றுப்போனது.

எனினுமென்ன எனக்குளொரு அறிவிப்பாளர் வளர்ந்தான். ஏ.எல் படித்தபோது வித்தியானந்தாவிலே பெருமைதானத்தில் என் அறிவிப்பு குரல் இருந்தது.பின்பு ஆசிரியரான பின்பு பாடசாலைகளின் இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி அழைப்பிதழ்களில் அறிவிப்பு என்கிற இடத்தில் என் பெயர் இருக்கும்.முழுநாளும் மைதானத்தை அறிவிப்புக்கட்டுப்பாட்டிலும் கரகோச ஆரவாரத்திலும் மிதக்கவிடுவோம்.இடைவேளையில் இடம்பெறும் உடற்பயிற்சிக்கண்காட்சிக்கு ஒரு கலைத்துவ உணர்வைக்காதுகளுக்கு அளிக்கும் முறையை அறிமுகப்படுத்தினோம்.தாளலயத்துக்கேற்ப அறிவிப்பு கண்காட்சிக்கு மேலும் அழகுசேர்க்கும்.

அரங்குகளை அறிவுக்களஞ்சிய மேடைகளாலும், விவாத மேடைகளாலும் மெருகேற்றினோம்.

இப்படித்தான் எனக்குளொரு அறிவிப்பாளர் வளர்ந்து கொண்டிருந்தான்.

அந்த வளர்ச்சியின் பிந்திய பரிமாணமாக...பிந்திய வரவாக எஸ்.எல்.பி.சி. க்குள் நுழைந்தேன். ஆங்கும் இலக்கிய மஞ்சரி, கவித சாளரம், நூலாரம் என சில காலம் இலக்கிய அறிவிப்பு செய்தேன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேசிய சேவை நேரம் 10 மணி 30 நிமிடம். இத்துடன் தேசிய சேவையின் இன்றைய நிகழ்ச்சிகள் நிறைவுபெறுகின்றன.விடியும் பொழுது நம் எல்லார் மனங்களிலும் பிரகாசமாய் விடியட்டும் பிரார்த்தனைகளோடு விடைகொள்கிறோம். நேயர்களுக்கு வணக்கம்.

# குறும்பா, ஹைக்கூ, லிமரிக்கூ, தன்முனைக் கவிதைகள்:
## சில அறிமுகக் குறிப்புகள்

(கடந்தவாரத் தொடர்)

குறும்பாவில் தமிழகக் கவிஞர்கள் அதிகம் ஈடுபாடு கொண்டதாகத் தெரியவில்லை. இலங்கையிலும் கூட குறும்பா எழுது வோர் சிலரே.

மஹாகவியின் பின்னர், எழுபதுகளில் எம் எச்எம் . ஷம்ஸ், ,கலைவாதி கலீல், ஜவாத் மரைக்கார், போன்றோர் குறும்பாக்கள் எழுதுவதில் கவனஞ் செலுத்தியுள்ளனர்.

எழுபதுகளில் குறும்பா எழுதுவதில் அதிகம் அக்கறை காட்டியவராகவும், இளங்கவிஞர்களை குறும்பாத்துறையில் வளர்த்துவிட பத்திரிகைகளில் வசதி செய்து கொடுத்தவராகவும் எம்.எச். எம் .ஷம்ஸ் கணிப்புப் பெற்றிருக்கிறார்.

50 குறும்பாக்களை கொண்ட ,"காசா லேசா" என்ற பெயரில் அவரால் தொகுத்தெடுக்கப் பட்ட அவருடைய குறும்பாக்கள் நூலுருப் பெறாமல் போனது நமது துரதிஷ்டம். தொடர்ந்து,

கொக்கூர் கிழான், குறிஞ்சி தென்னவன்,சிவசேகரன் (இலண்டன் பனிமலரில் எழுதியவர்), ஏ.பீர்முகம்மது என்று சிலர் குறும்பாக்களை அவ்வப்போது எழுதியுள்ளனர். அல்அசூமத் பூபாளத்தில் குறும்பாக்களை எழுதியுள்ளதோடு குறும்பாவின் வடிவ மாற்றம் கருதிய குறிப்புகளையும் எழுதியுள்ளார்.எண்பதுகளில் குறும்பாவில் அதிக அக்கறை காட்டியவராக அவரைக் குறிப்பிட முடியும். அவருடைய யாப்பியலுரை நூலிலும் "வரவுப்பா"வடிவமாக குறும்பாவைக் குறிப்பிட்டு விபரித்துள்ளார்.தீரன் நௌசாத் தூதுவில் குறும்பாக்களை எழுதியவர்.

தொடர்ந்து ,குறும்பாக்களை எழுதியும், பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டும் நீட்சி, விரிவு தொடர்பான குறிப்புகளை எழுதியும் வருபவராக பாலமுனை பாறூக் குறிப்பிடப்படுகின்றார்.

**நூல்கள்**

சிவபாலன் நகை
எஸ்.ஜலாலுத்தீன் சுடுகின்ற மலர்கள்.
ஜே. வஹாப்தீன்
வெட்டுக்கற்கள
பாலமுனை பாறூக் குறும்பாக்கள்
மு.தயாளன் குறும்பாக்கள்.
சிவசேகரன் ஒரு கூடைக் குறும்பூ

இலங்கையில் குறும்பாக்களை எழுதி வருபவர்களாக இன்னும் சிலர் மேலெழுந்துள்ளனர். இவர்களில் சிலர் தொடர்ந்தும்,சிலர் அத்தி பூத்தாற்போல் அவ்வப்போதும் எழுதிவருகின்றனர்.

ஏஎம்எம் அலி,கிண்ணியா அமீர் அலி,அஷ்பா அஸ்ரப்அலி,மெய்யன் நடராஜ்,மதியன்பன்,எம் எல்எம்.அன்சார், எம்.பீ.சிராஜுதீன்,அக்கரையூர் அப்துல் குத்தூஸ், ஜின்னா ஷரிபுத்தீன்,வில்லூர் பாரதி, அபூ அப்கான், அச்சுமுகம்மது இஸ்மாயில், எழுகவி,கிராமத்தான் கலீபா, என்று சிலர் இக்குறிப்புகளை எழுதும் போது நினைவில் வருகின்றனர். கும்பலங்கையில் இருந்து ஒரு பெண் கவிஞர் 1983 காலப் பகுதியில் குறும்பா எழுதியிருப்பதாக அல்அசூமத் குறிப்பின் மூலமாக தெரிய வருகின்றது. பெயர் தெரியவில்லை (தெரிந்தவர்கள் அதுபற்றி விபரங்களைத் தந்தால் சேர்த்துக் கொள்ளலாம்)

இனி,ஹைக்கூ பற்றிப் பார்ப்போம்.

**ஹைக்கூ( Haiku)**

சின்னதாக இருக்கும் பெரிய
அற்புதம் ஹைக்கூ..
ஜென் தத்துவம்.யப்பானிய
கவிதை வடிவம்.பாஷோவால் அறிமுகம்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரால் 1916ல் சுதேச மித்திரனில் எழுதிய கட்டுரை மூலமாக தமிழுக்கு அறிமுகம்.சுஜாதா,அப்துல்ரகுமான்,தமிழன்பன், அமரன், முனைவர்ரமேஷ்,க.நா.கல்யாணசுந்தரம, பாலகிருஷ்ணன்,அனுராஜ், இளையபாரதி, என்று இவர்களோடு சேர்ந்த ஒரு பெரும் ஹைக்கூ படையே தமிழ்நாட்டில் உண்டு.

3 வரி
575அசை
உவமை ,உருவகம் இல்லை
நேரடியாகக் கூறுவது
உணர்ச்சியை வெளிப்படையாக கூறாது
மின்னலென ஒரு
திருப்பத்தோடு
ஈற்றடி அமைதல்.
உண்மைத்தன்மை
மெல்லிய நகைச்சுவை.



பாலமுனை பாறூக்..


# ஆங்கில இலக்கிய உலகம் பெருமைப்படும் ஜோர்ஜ் பெர்னாட்ஷா

நோபல் பரிசை பெற்றுவிட்ட எவரும் தாம் ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்துவிட்டதாக நியாயமாக கர்வப்பட்டுக் கொள்ளலாம். அந்தளவுக்கு உலகப் பிரசித்தி பெற்ற நோபல் பரிசு தன்னைத் தேடி வந்தபோது அதை உதாசீனம் செய்தார் ஒருவர். அவர்தான் பெர்னாட்ஷா.

அயர்லாந்தின் டப்ளின் நகரில் 1856 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி ஜோர்ஜ் கார் ஷா – லூசிண்டா எலிசபெத் ஷா தம்பதியினருக்கு ஜோர்ஜ் பெர்னாட்ஷா பிறந்தார்.

பெர்னாட்ஷா சிறிது காலம் வெஸ்லியன் கொன்னேக்ஸியல் பாடசாலையில் படித்தார். அதன்பின்னர் Dublin English Scientific and Commercial Day School இல் தனது இறுதிக் கல்வியை முடித்தார். பத்து வயது நிறைவதற்குள் பைபிள் முதல் ஷேக்ஸ்பியரின் நாடகம் வரை நிறைய புத்தகங்களை வாசித்து முடித்திருந்தார்.

குடும்பம் வறுமை நிலையில் இருந்தபடியால் தொடர்ந்து படிக்கவில்லை. 16 ஆவது வயதிலேயே ஒரு பழத்தோட்டத்தில் கணக்காளராக பணியாற்றினார். குடிகார கணவருடன் பிரச்சினைப்பட்டு பெர்னாட்ஷாவின் தாயார் லண்டனுக்கு குடியேறினார். அதனைத் தொடர்ந்து பெர்னாட்ஷாவும் லண்டனுக்கு குடியேறினார். பெர்னாட்ஷா கல்வியில் ஈடுபாடு அதிகம் காட்டவில்லை. அவர் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை வாசிப்பதிலேயே கவனம் செலுத்தியதால் நாடகங்களை விமர்சனம் செய்யும் ஆற்றல் பெற்றிருந்தார். அதனால் த சண்டே ரிவியூ (The Sunday Review) என்ற வார இதழில் நாடகங்கள் பற்றிய விமர்சனங்களை எழுதி வந்தார். அதனைத் தொடர்ந்து தானே நாடகங்களை எழுதத் தலைப்பட்டார். சுமார் 50 நாடகங்களுக்கு மேல் எழுதினார். தனது நாடங்கங்களில் சமூக சீர்திருத்த நாடகங்கள், கேலி, நையாண்டி, நகைச்சுவை ஆகியவற்றை சரமாரியாக கலந்து கொடுத்தார். அவரது எழுத்தில் மட்டுமல்ல, நிஜ வாழ்க்கையிலும் அவர் நகைச்சுவையாகவும் நையாண்டியாகவும் சரளமாக பழகுவார்.



பெர்னாட்ஷா எழுதிய முதல் நாடகம் 1892 ஆம் ஆண்டு "Widower's Houses" (மனைவியை இழந்தோர் இல்லங்கள்) எனும் நாடகத்தை அரங்கேற்றினார். 50 இற்கும் மேற்பட்ட நாடகங்களை மேடை ஏற்றியிருக்கின்றார். இவரது நாடகங்கள் இங்கிலாந்தில் மாத்திரமின்றி அயர்லாந்து, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் மேடையேற்றப்பட்டு வெற்றி கண்டன. பெர்னாட்ஷா மேலும் ஐந்து நாவல்களையும் எழுதியுள்ளார்.

Major Barbera என்ற நாடகம் திரைப்படமாகவும் வெளிவந்தது. அவரது நாடகங்களில் புகழ் பெற்றது என கருதப்படும் Pygmalion என்ற நகைச்சுவை நாடகமானது My Fairy Lady என்ற பெயரில் திரைப்படமாக வந்து உலகமெங்கும் வெற்றி வாகை சூடியது. இத்திரைப்படம் கொழும்பில் திரையிடப்பட்டபோது தொடர்ந்து பல வாரங்கள் House Full ஆக காட்சியளித்தது.

1898 ஆம் ஆண்டு பெர்னாட்ஷா, சார்லட் பெய்ன் டவுன்செென்ட் (Charlotte Payne Townshend) என்ற ஐரிஸ் நாட்டு பணக்காரியை திருமணம் செய்தார்.

பெர்னாட்ஷா நாவல்கள் எழுதும் போதுகார்ல்மார்க்ஸின்எழுத்துக்களால் கவரப்பட்டு கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் சிந்தனைகள் அவரிடம் தோன்றின. இங்கிலாந்தில் சோஷலிச ஆட்சிமுறையை தோற்றுவிப்பதற்கு Fabian Society என்ற இயக்கத்தில் பிரதான உறுப்பினராக செயற்பட்டார். இந்த இயக்கமே தொழிற்கட்சியாக மாறியது.

பெர்னாட்ஷாவுக்கு 1925 ஆம் ஆண்டு இலக்கிய துறைக்கான நோபல் பரிசு கிடைத்தது. அவர் பரிசளிப்பு விழாவில் கலந்துகொள்ள மறுத்தது மட்டுமல்லாமல் பரிசுத் தொகை வீடு தேடி வந்தபோது அதனை அப்படியே இலக்கியப் பணிகளுக்காக கொடுத்துவிட்டார். பெர்னாட்ஷா பரிசு, கௌரவ பட்டம், பாராட்டு விழா, புகழுரை, கௌரவம் போன்றவைகளை விரும்புவதில்லை; அறவே வெறுத்தார். 1938 ஆம் ஆண்டு அவருக்கு ஒஸ்கார் விருதும் கிடைத்தது. இலக்கியத்திற்கான நோபல் பரிசு, ஒஸ்கார் விருது ஆகிய இரண்டும் பெற்ற ஒருவர் இவர் மாத்திரமே என்பது குறிப்பிடத்தக்கது. பெர்னாட்ஷாவின் வாழ்க்கையில் நடந்த சில சுவாரஷ்யமான சம்பவங்களாவன:

ஒல்லியான தோற்றமுடைய பெர்னாட்ஷாவைப் பார்த்து ஒருமுறை அவரது நண்பரும் சக எழுத்தாளருமான வெல்ஸ், "நம் நாட்டிற்கு வருபவர்கள் உம்மைப் பார்த்தால் இங்கிலாந்தில் பஞ்சம் வந்திருப்பதாக எண்ணுவார்கள்" என்று கிண்டலடித்தாராம். அதற்கு பெர்னாட்ஷா சற்றும் சளைக்காமல், "அந்தப் பஞ்சத்திற்கு யார் காரணம் என்பதும் உம்மைப் பார்த்தால் அவர்களுக்குப் புரியும்" என்றாராம். காரணம் வெல்ஸ் உடல் பருமனானவர்.

விருந்து நிகழ்ச்சி ஒன்றில் பெர்னாட்ஷாவை சந்தித்த ஓர் அழகிய நடிகை, "நீங்கள் பெரிய அறிவாளி; நான் சிறந்த அழகி. நாம் இருவரும் திருமணம் செய்துகொண்டால் என் அழகும் உங்கள் அறிவும் கொண்ட குழந்தை நமக்கு பிறக்குமல்லவா?" என்று கேட்டாராம். அதற்குப் புன்னகைத்துக் கொண்டே, "அந்தக் குழந்தை உங்களுடைய அறிவையும் என்னுடைய அழகையும் கொண்டு பிறந்துவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டாராம் பெர்னாட்ஷா.

பெர்னாட்ஷா ஒருமுறை அமெரிக்காவுக்கு சென்றிருந்தபோது மக்களவையில் கூட்டத்தில் பேச அவருக்கு அழைப்பு வந்தது. பேசத் தொடங்கிய பெர்னாட்ஷா, "இங்கிருப்பவர்களில் பாதி பேர் முட்டாள்கள்" என்றாராம். சினமடைந்த அவையினர் சொன்னதை மீட்டுக் கொள்ளுமாறு குரல் எழுப்பினர். அதற்கு பெர்னாட்ஷா அமைதியாக அவையினரைப் பார்த்து, "சரி, இங்கிருப்பவர்களில் பாதி பேர் புத்திசாலிகள்" என்றாராம் லாவகமாக. அவரது பேச்சுத் திறமையைப் பார்த்து அவை வியந்தது. சீனாக்காரர் ஒருவர் பெர்னாட்ஷாவைப் பார்க்க வந்தார். அவருக்கு பெர்னாட்ஷாவின் உதவியொன்று அவசரமாக தேவைப்பட்டது. இதன் காரணமாக பெர்னாட்ஷாவை அவ்வப்போது புகழ்ந்து கொண்டே இருந்தார். "உங்களுடைய உடம்பிலுள்ள உறுப்புக்கள் யாவும் மிகவும் கவர்ச்சியாக காணப்படுகின்றன. உங்களுடைய முகம், கண், மார்பு, கை, கால்கள்....." என்று அடுக்கிக் கொண்டே சென்றவரை பெர்னாட்ஷா தடுத்து நிறுத்தினார். "அது சரி, எனது பற்கள் எப்படி?" என்று கேட்டார். "உங்களுடைய பற்கள் அசைக்க முடியாத வலிமைமிக்க முத்துப் பற்கள்" என்றார் சீனாக்காரர். "மகிழ்ச்சி, இதை நீங்கள் நன்றாகப் பார்த்து ரசியுங்கள்" என்று கூறி தனது செயற்கைப் பல்செற்றை கழற்றி சீனாக்காரரின் கரத்தில் வைத்தாராம்.

ஒருநாள் பெர்னாட்ஷா ஒற்றையடிப் பாதை ஒன்றால் சென்று கொண்டிருந்தார். அவர் வருவதைப் பார்த்ததும் எதிர்ப்பக்கமாக வந்து கொண்டிருந்த ஒருவர் ஒதுங்கி நின்று வழிவிட்டார். பெர்னாட்ஷா அவனருகில் சென்றதும் "நான் முட்டாள்களுக்கு வழிவிடுவதில்லை" என்றார். உடனே அவன் பணிவாக "ஐயா, நான் விடுவதுண்டு" என்றான்.

பெர்னாட்ஷா ஒருமுறை அமெரிக்கா சென்றார். அங்கு அதிக நாட்கள் தங்காமல் விரைவில் திரும்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

இதை அறிந்துகொண்ட நிருபர்கள் அவரை சூழ்ந்து கொண்டனர். அத்துடன் கேள்விக் கணைகளையும் தொடக்கினார்கள். சலிக்காமல் பதில் கொடுத்தார் பெர்னாட்ஷா. நிருபர் ஒருவர் பெர்னாட்ஷாவை நோக்கி "நீங்கள் அமெரிக்காவில் எதை விரும்புகிறீர்கள்?" என்று கேட்டார். பெர்னாட்ஷா பெருமிதமாக, "உங்கள் நாட்டை விட்டு வெளியேறுவதை" என்றார்.

பெர்னாட்ஷா கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் ஆங்கில இலக்கிய நாடகத் துறையில் ஈடுபாடு உடையவராக இருந்தார். பெர்னாட்ஷா தனது 94 ஆவது வயதில் 1950 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி காலமானார்.



கலாபூஷணம்
பரீட் இக்பால்..., யாழ்ப்பாணம்



கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என். லோகேந்திரலிங்கத்தின் 50 ஆண்டு கால ஊடக மற்றும் இலக்கியப் பணிகளை பாராட்டும் நிகழ்வு கொழும்பு தமிழ் சங்கத்தில் அண்மையில் நடைபெற்றது. உடுவை எஸ். தில்லைநடராஜா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், கனடா உதயன் பத்திரிகையின் இலங்கை சிறப்பு இதழின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். இலங்கைப் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், இளைஞர்கள், கலைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சார்பில் லோகேந்தி ரலிங்கம் கௌரவிக்கப்பட்டார். இந்த வைபவத்தில் சிவஸ்ரீ வைத்தீஸ்வரகுருக்கள், மூத்த ஊடகவியலாளர் வி.தேவராஜ், சிரேஷ்ட எழுத்தாளர் கலாநிதி. சிவலிங்கம் சதீஷ்குமார், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜன், தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், இலங்கை வானொலியின் சிரேஷ்ட அறிவிப்பாளர் விசு கருணாநிதி உட்பட பலரும் கலந்து கொண்டனர். (படம்: கொழும்பு வடக்கு நிருபர்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.